CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விகடன் பிரசுரம்

ஐயம் போக்கும் ஆன்மிகம்

பாகம் 5

ப்ரம்மஸ்ரீ
சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

IYAM POKKUM ANMEEGAM
VOL-5

ஐயம் போக்கும் ஆன்மிகம்-5

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஐயம் போக்கும் ஆன்மிகம்

பாகம் 5



ப்ரம்மஸ்ரீ
சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

விகடன்
பிரசுரம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Title :
IYAM POKKUM ANMIGAM
(Volume 5)
© SESHADRINATHA SASTRIGAL
ISBN : 978-81-8476-316-4

விகடன் பிரசுரம்: 552

நூல் தலைப்பு:
ஐயம் போக்கும் ஆன்மிகம்
(பாகம் 5)

நூல் ஆசிரியர்:
© சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்
முதற்பதிப்பு : அக்டோபர், 2010

விலை : ரூ. 75

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: publications@vikatan.com

பதிப்பாளர்:	பா.சீனிவாசன்
ஆசிரியர்:	வீயெஸ்வி
முதன்மை பொறுப்பாசிரியர்:	பொன்ஸீ
தலைமை உதவி ஆசிரியர்கள்:	சா.இலாகுபாரதி, எஸ்.கோபால்
உதவி ஆசிரியர்கள்:	எம்.நாகமணி, கே.பாசுமணி, சிவராஜ்
முதன்மை வடிவமைப்பு:	மு.ராம்குமார்
தலைமை வடிவமைப்பு:	அ.அன்பழகன்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அறிவுத் தேடல்

மனிதனின் பரிணாம வளர்ச்சியில் அறிவுத் தேடல் முக்கிய இடத்தை வகிக்கிறது. மனிதனுக்குள் துளிர் விடும் சந்தேகங்கள்தான், வாழ்க்கையை வழிநடத்திச் செல்ல துணை புரிகிறது என்பதை சான்றோர் அனைவரும் அறிவர்.

வேதங்கள், புராணங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், வழிபாடு, சாஸ்திரத்தின் பின்னணி, வீட்டு விசேஷத்துக்கான வழிமுறைகள்... போன்றவற்றில் எழும் சந்தேகங்களுக்கு உரிய பதிலை நாமே தேடும்போதுதான் அறிவு தெளிவு பெறும்.

'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தின் அர்த்தம் என்ன? கர்ம யோகம், ஞான யோகம் இரண்டில் எது சிறந்தது? மனிதனின் உடலில் அவனது உயிர் எங்கே ஒளிந்து இருக்கிறது? மறுபிறவி என்பது உண்டா? -இதுபோன்ற ஆன்மிகம் தொடர்பான கேள்விகளுக்கு இந்த நூலில் பதில் கிடைக்கும்.

மனதில் எழும் சந்தேகங்களுக்கு, பதில் எங்கு பெறுவது; எப்படி பெறுவது என்று வாசகர்கள் தேடி அலையக்கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், சக்தி விகடன் இதழ்களில் வாசகர்களின் கேள்விகளுக்குத் தெளிவாக பதிலளித்து வருகிறார் ப்ரம்மஸ்ரீ சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்.

அப்படி வெளிவந்த கேள்வி-பதில் பகுதியைத் தொகுத்து, 'ஐயம் போக்கும் ஆன்மிகம்' எனும் தலைப்பில் ஏற்கெனவே நான்கு பாகங்கள் விகடன் பிரசுரத்தில் வெளியாகி, வாசகர்களிடம் சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளன. இது ஐந்தாவது பாகம்.

இந்தத் தொகுப்பும் ஆன்மிக வாசகர்களின் அறிவுத் தேடலுக்கு உறுதுணையாக இருக்கும் என நம்புகிறோம்!

-ஆசிரியர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மனத்தெளிவே எங்கள் நோக்கம்

கொள்கை, ஆணை அல்லது தகவல் - இவற்றை வெளியிடும்போது, அதை ஏற்க வேண்டியவர்களின் குறுகிய சிந்தனை வட்டத்தின் பிரதிபலிப்பில், மாறுபட்ட சந்தேகங்கள் எழும். அந்தச் சந்தேகங்களை முற்றிலும் அகற்றும்போது அவற்றுக்கு அங்கீகாரம் கிடைத்துவிடும்.

மனதின் போக்கு வரையறைக்கு உட்படாது. எதிர்விளைவை ஆராயாமல், எதிர்க்க வேண்டும் என்பதற்காக சந்தேகம் எழுப்பப்படும். அறியாமையிலும் சந்தேகம் எழும். வெளியிடுபவரால் ஏற்பட்ட பகையும் சிலசமயம் சந்தேகத்தை எழுப்பி எதிர்ப்பை வெளிக்காட்டும்.

எந்த நோக்கில் சந்தேகம் வந்தாலும், அதை முழுமையாக அகற்றி தெளிவுபடுத்தும் முறை சாஸ்திரங்களில் கையாளப்படுகிறது. முதலில் தகவல் உரைக்கப்படும். பிறகு, அதில் சந்தேகம் கிளப்பப்படும். பிறகு, தகவலுக்கு ஆதரவான வாதம் சான்றுகளோடு வெளியிடப்படும். அத்தனைக்கும் தகுந்த பதிலை அளித்து, தகவலின் நம்பிக்கைத் தன்மையை எல்லோரும் ஏற்கும்படி செய்துவிடும். *(விஷயோ விசய...)*

சாஸ்திரக் கோட்பாட்டின் சாயல்தான் இன்றைய கேள்வி-பதில் பகுதி. திருமணத்தில் 'பந்தல்கால் நடும் விழா' உண்டு. பந்தல்காலின் அளவுக்கு ஏற்ப ஆழமான குழி தோண்டப்படும். அந்தக் குழியில் பந்தல்காலை இறக்குவார்கள். திடமாக இருக்கும் பந்தல்காலை ஒரு பக்கம் சரிப்பார்கள். சரிக்கும்போது ஏற்படும் குழியின் இடைவெளியில் கல்லும் மண்ணும் போட்டுத் திணிப்பார்கள். பிறகு, மறுபக்கம் சரிப்பார்கள். அங்கு தென்படும் இடைவெளியிலும் கல்லைச் செருகி அழுத்துவார்கள். இப்படி, அசைத்து அசைத்து இடைவெளியை நிரப்பும்போது, அந்தப் பந்தல்கால் அசையாமல் நின்றுவிடும்.

இறக்கிய பந்தல்காலை அசைப்பது, அசையாமல் நிலைத்து இருக்கத்தான். அதுபோல், சந்தேகத்தைக் கிளப்பிக் கிளப்பி ஆட்டம் கண்ட தகவலை ஆடாமல் நிறுத்துவது ஆன்மிக நடைமுறை. இதை, 'தூணை அசையாமல் நிறுத்துவதுபோல்' என்று சாஸ்திரம் சொல்லும். *(ஸ்துரணாநிகனையாயேன்)*

தகவலின் நம்பிக்கையை உறுதிப்படுத்த, அதனால் ஏற்படும் மனத்தெளிவைப் பெற, கேள்வி வடிவிலான சந்தேகத்தை வரவேற்கிறது 'ஐயம் போக்கும் ஆன்மிகம்'. சந்தேகங்கள் இந்தப் பகுதியின் உயிரோட்டம். எங்கள் செயல்பாடு சிறக்க உங்கள் பணி தொடரட்டும்.

மனத்தெளிவே எங்கள் பணியின் நோக்கம்.

- சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேதம்

புராணம்

தர்ம சாஸ்திரம்

மனநலம்

உடல்நலம்

அன்றாட நடைமுறை

வழிபாட்டு முறைகள்

ஆகம விதிகள்

ஐதீகம்

சடங்கு

சம்பிரதாயம்

கலாசாரம்...



ஆகியவை பற்றி
உங்கள் கேள்விகளுக்கு
விடைகள் உள்ளே...

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கர்ம யோகம்... ஞான யோகம்... எது சிறந்தது?

கர்ம யோகம், ஞான யோகம் இரண்டில் எது சிறந்தது?

- ஜி.ஜெயராமன், கூந்தலூர்.

தாய்-தந்தை இருவரில் சிறந்தவர் யார்? ஹரி-சிவன் இவர்களில் உயர்ந்தவர் யார்? பணம் சம்பாதிக்க தேவையானது அறிவா? உழைப்பா? உங்களது கேள்வியும் இப்படித்தான் இருக்கிறது!



இரு கண்கள் - ஒரு பார்வை; இரு கைகள் - ஒரு செயல்பாடு; இரு கால்கள் - ஒரு நடை!

கர்ம யோகமும் ஞான யோகமும் இலக்கை அடைவதற்கான இரண்டு வழிகள். ஜனக மகாராஜா கர்ம யோகி. வியாச முனிவர் ஞான யோகி. இருவரும் பிறவிப் பயனைப் பெற்றனர். 'என் கடன் பணி செய்து கிடப்பதே!' என்கிற கர்ம யோகியும் உண்டு. எல்லாவற்றையும் துறந்து குகையில் தியானத்தில் ஆழ்ந்துவிடும் ஞான யோகியும் உண்டு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அர்ஜுனனுக்கு ஞானத்தை போதித்த கண்ணன், கர்மத்தையும் செய்யச் சொன்னான்.

'வேதம் பயின்று, வேள்வி மூலம் உலகுக்குச் சேவை செய்து, வேதப் பொருளுடன் இரண்டறக் கலந்து இன்பத்தில் ஆழ்ந்து விடலாம்!' என்கிறது 'மீமாம்சா' சாஸ்திரம். 'மீண்டும் மீண்டும் பிறப்பை தந்து நம்மை துன்பத்தில் ஆழ்த்தும் கர்மத்தைத் தொலைத்து ஞானம் பெற்று பரம்பொருளில் ஒன்றலாம்!' என்கிறது வேதாந்தம். 'உலகில் உள்ள பொருட்களின் உண்மையைப் புரிந்து கொண்டால், அறிவாளியாக மாறி ஆண்டவனில் லயிக்கலாம்!' என்று மற்றொரு சாஸ்திரம் சொல்கிறது.

'இயற்கையுடன் இணைந்த நீ, இயற்கையின் செயல்பாட்டில் துயரத்தை சந்திக்கிறாய். அதிலிருந்து அதாவது ப்ரகிருதியில் இருந்து விடுபடு. உனக்கு மோட்சம் உண்டு' - இதுவொரு சிந்தனை. 'மனதை, தவறான சிந்தனையில் இருந்து திருப்பினால், வீடுபேறு அடையலாம்!' என்பது மற்றுமொரு சிந்தனை. இப்படி சிந்தனைகள் பலவிதம். ஆனால், இலக்கு ஒன்றுதான். இதில் எந்த சிந்தனை சிறப்பு?!

எனவே, ஆராய்ச்சியில் ஈடுபடாமல், செயலில் இறங்குங்கள். உங்கள் மனம் எதை விரும்புகிறதோ அதைத் தேர்ந்தெடுங்கள். எது சிறப்பு? என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்.

பத்தாம் வகுப்பு பயிலும் மாணவன் நான். 'பிரம்மாவுக்கும் ஆயுள் உண்டு. ஒரு பிரம்மனின் ஆயுள் முடிந்ததும் ரோமச முனிவரின் மேனியில் இருந்து ஒரு முடி உதிரும்!' என்று சக்தி விகடனில் படித்திருக்கிறேன். பிரம்மன், படைக்கும் கடவுள். எனில், பிறப்பு - இறப்பற்ற கடவுளர்க்கும் 'ஆயுள்' கணக்கு உண்டா?

- மா.சபரி பிரசாத், கோவை-16.

நான்கு யுகங்களின் ஒரு சுற்று, இந்த உலகத்தின் ஆயுள். இப்படி, ஆயிரம் சுற்றுகள் முழுமை பெறுவது, பிரம்மனின் ஒரு பகல் பொழுது. இன்னும் ஆயிரம் சுற்றுகள் பூர்த்தியானால் பிரம்மனுக்கு 'ஒரு நாள்' முழுமை பெறும். இப்படி ஒரு கணக்கு புராணத்தில் உண்டு.

இதையே ஆதாரமாகக் கொள்ளலாம்; நம்பலாம். மாற்று விளக்கங்கள் ஆதாரமற்றவை. ஆயுள் முடிவடைகிறது என்றால், படைப்பின் ஆயுள் முடிகிறது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்றே பொருள்! பிரம்மாவுக்கு முடிவு இல்லை. எங்கும் நிறைந்த பரம்பொருள், படைப்புத் தொழிலை நிறைவேற்ற பிரம்மனின் வடிவத்தில் தோன்றியது.

அறுபது வயதில் ஒருவன் ஓய்வு பெறுகிறான் என்றால் அவன், வேலையில் இருந்து ஓய்வு பெறுகிறான்; வாழ்க்கையில் இருந்து அல்ல! அதுபோல், 'படைப்பு எனும் தொழிலில் இருந்து விடுபடுகிறான் பிரம்மன்!' என்றே நாம் பொருள் கொள்ள வேண்டும். ஒரு பிரம்மனின் காலம் முடிந்துவிட்டால், பரம்பொருள் வேறொரு வடிவில் படைப்பைத் தொடரும். அவருக்கும் 'பிரம்மன்' என்றே பெயர். ஒரு நிறுவனத்தின் இயக்குநர் ஓய்வு பெறுகிறார் எனில், வேறொருவர் அந்தப் பொறுப்பை ஏற்பார். அதுபோலவே பிரம்ம பதவியும். பரம்பொருளின் தொழிலை வைத்து வந்த பெயரே பிரம்மா!

சூக்தம் என்பது என்ன? 'ராஷ்ட்ர சூக்தம்' பற்றி எந்த வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது?

- எஸ்.சுப்பிரமணியன், கோயம்புத்தூர்-35.

தேவதைகளின் இயல்புகளை போற்றிப் புகழ்வது சூக்தம். தேவதைகளின் பெருமைகளை, செயல்பாடுகளை விவரிக்கும் சூக்தங்கள், எல்லா வேதங்களிலும் உண்டு. என்றாலும், இது ரிக் வேதத்தில் சிறப்பாகவும் தனிப் பகுதியாகவும் விளங்குகிறது.

ராஷ்ட்ர சூக்தம் என்பது, அரசன், அரசு, அரசுரிமை மற்றும் அதன் மாட்சி ஆகியன பற்றி விளக்குவது. ரிக், யஜுர், சாமம் மற்றும் அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களிலும் ராஷ்ட்ர சூக்தம் உள்ளது.

மறை ஓதுபவர்கள், தங்களது அன்றாட பணிகளை நாட்டுப் பாடலுடன் தொடங்குவர். அதில், 'அரசு ஸ்திரமாக இருக்கவும் அரசன் திறமையோடு விளங்கவும் இந்திரனும் அக்னியும் அருளட்டும். இந்திரன்- வலிமையையும், அக்னி- அரசை இயக்கும் திறனையும் அளிக்கட்டும். இந்திரனும் அக்னியும் இணைந்து இந்த ராஷ்ட்ரத்தைத் தாங்கட்டும் (*த்ருவம் த இந்திர: ச அக்னி: ச ராஷ்ட்ரம் தாரய தாம் த்ருவம்*)' என்று வேண்டுவர்.

'ஆதிகாலத்தில், மலைகளுக்கு றெக்கைகள் இருந்தனவாம். எனவே, மலைகள் அங்குமிங்கும் பறந்து சென்று மக்களுக்கு தொல்லைகள் கொடுத்தன. அவற்றின் றெக்கைகளை அழித்த இந்திரன், மலைகளை ஓரிடத்தில் நிலை பெறச் செய்தான்! ஓர் அரசனானவனும் இந்திரனைப் போல் செயல்பட்டு தமது அரசை நிலைநிறுத்த வேண்டும். தன்னைவிட பலம் கொண்ட எதிரிகளிடம் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும்' என்ற வேண்டுகோள், அந்த நாட்டுப் பாடலில் ஒலிக்கும். நாட்டின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வளமே மக்கள் வளத்துக்கு ஆதாரம். இதை ராஷ்ட்ர சூக்தத்தில் காணலாம்.

வேதங்கள் குறித்த சந்தேகங்களுக்கு, தகுந்த ஆசிரியரை (மறை ஓதுபவரை) அணுகி அவரிடம் நேரடியாக விளக்கங்கள் பெறுவதே சிறப்பு. வேதக் கல்வியை தபால் கல்வியாக மாற்றுவது தவறு!

ரமண மகரிஷி பிராமணரா? அவரது திருவுருவ படங்களைப் பார்த்தால் பூணூல் இல்லையே? ஸ்ரீரமணரை, ஸ்ரீஆதிசங்கரரின் மறு அவதாரம் என்கிறார்களே... ஏன்?

- கே.பாலசுப்பிரமணியன், கோவை-42.

'பிராமணருக்கு மட்டுமே பூணூல்!' என்ற தங்களது எண்ணம் தவறானது. முற்காலத்தில் வேதம் ஓதுவோர், அரசர்கள் மற்றும் வியாபாரிகள் ஆகியோர் பூணூல் அணிவது வழக்கம். காலப்போக்கில் பூணூல் சுமையை பலரும் இறக்கி வைத்துவிட்டனர்! பிராமணர்கள் மட்டுமே சுமக்கின்றனர்.





ஆதிசங்கரர் மற்றும் ரமண மகரிஷி ஆகியோருக்கு, அவர்களின் சிறு பிராயத்தில் பூணூல் இருந்தது; பின்னர் மறைந்துவிட்டது. 'ஆன்மாவைத் தெரிந்துகொள்!' என்றார் ஆதிசங்கரர். 'தான் யார்? என்பதை அறி!' என்றார் ரமணர். இந்த கொள்கை ஒற்றுமையால், ரமண மகரிஷியை பலரும் ஆதிசங்கரராகவே பார்த்தனர்.

'சட்டதிட்டத்துடன் அறத்தைச் செயல்படுத்த, பூணூல் தோளில் தொங்கிக்கொண்டிருக்க வேண்டும்!' என்கிறது தர்ம சாஸ்திரம்.

தன்னை, அதாவது ஆன்மாவை உணர்ந்தவனுக்குப் பூணூல் தேவையில்லை. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் பெற முப்பிரி நூல் தோளில் தொங்க வேண்டும். நான்காவதாக ஒன்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உண்டு. அது வீடுபேறு! இதை அடைந்தவனுக்கு முப்பிரி நூல் தேவை இல்லை.

ஆட்டோவில் ஏறி வீட்டுக்கு வந்ததும் ஆட்டோவை திருப்பி அனுப்பி விடுகிறோம். ஆற்றின் மறு கரையை அடைந்ததும் படகு தேவைப்படாது. வியாதி குணமானதும் மருத்துவர் தேவைப்படமாட்டார். தேர்வில் வெற்றி பெற்றதும் புத்தகங்களை ஒதுக்கி விடுகிறோம். அப்படித்தான் இதுவும்! அனைத்தும் துறந்தவன் பூணூலையும் துறக்கிறான்.

சுமங்கலிப் பிரார்த்தனை, சிராத்தம் போன்ற விசேஷ நாட்களில் உணவு மீதமானால், அதை என்ன செய்வது?

- கி.ச.சீனிவாசன், மும்பை-59.

சுமங்கலிப் பிரார்த்தனை என்பது சம்பிரதாயம். ஆனால், சிராத்தம் - தர்ம சாஸ்திரத்தின் கட்டளை.

சுமங்கலிப் பிரார்த்தனையை தர்ம சாஸ்திரம் வரவேற்கவில்லை. அதே நேரம், முன்னோர் கடைப்பிடித்த நடைமுறை. ஆதலால் இதை எதிர்க்கவும் இல்லை. சுமங்கலி பிரார்த்தனை அறத்துக்கு எதிரானது அல்ல என்பதால், நாமும் கடைப்பிடிக்கிறோம். படித்தவர்களது செயல்பாடு பயனுள்ளதாகவே இருக்கும் என்ற கோணத்தில் இதையும் நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த வைபவத்தின்போது உணவு மீதமானால், தங்கள் விருப்பப்படி என்ன செய்ய வேண்டுமோ செய்யுங்கள். இதற்கு, சாஸ்திரத்தை அணுக வேண்டிய அவசியமில்லை.

ஆனால், சிராத்தம் முற்றிலும் மாறுபட்டது. இது, நமது கடமை என்பதால், தர்ம சாஸ்திரத்தின்படியே செயல்பட வேண்டும்.

சிராத்தம் செய்த ஒருவன், 'சிராத்தத்தில் மிஞ்சியதை என்ன செய்வது?' என்று தன் முன்னோரிடம் கேட்டான். *(அன்னசேஷை: கிம் க்ரயதாம்)*. 'பங்காளிகளுடன் பகிர்ந்துகொள்' என்று பதில் வந்தது.

எனவே, சிராத்த உணவை பங்காளிகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். அன்றைய உணவு முன்னோர்களுக்காகவே தயாரிக்கப்பட்டது. அன்று மிச்சமாகும் உணவு நமக்குரியவை அல்ல; முன்னோருக்கு உரியது.

எனவே, அவர்களது அனுமதியைப் பெற்ற பின்னரே நாம் உணவை ஏற்க வேண்டும். மிச்சம் இருப்பதைப் பெற்றுக் கொண்டு கௌரவிக்க வேண்டும். இதையே சாஸ்திரமும் விரும்புகிறது. ஆகவே, சிராத்தத்தில் மிஞ்சிய உணவை முன்னோரது அனுமதியுடன், பங்காளிகளுக்கு பகிர்ந்து கொடுத்து, முன்னோர்களது அருளைப் பெற வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சுமங்கலிப் பிரார்த்தனை பூஜையை சந்தர்ப்ப சூழ்நிலையால், தவற விட்டாலும் எந்தக் கெடுதலும் இல்லை. ஆனால், சிராத்தத்தை தவற விடவே கூடாது!

எங்கு சென்றாலும் மூன்று பேராகச் செல்லக்கூடாது என்கிறார்களே... ஏன்?

- ஆர்.ஜானகி ரங்கநாதன், சென்னை-4.

ராமன், லட்சுமணன், சீதை - மூவரும் சேர்ந்து வனவாசம் சென்றனர். ராமன், லட்சுமணன், விஸ்வாமித்திரர் - மூவரும் வேள்விக்காக சேர்ந்து சென்றனர்.

தேவகி, வசுதேவர், கம்சன் ஆகிய மூவரும் தேரில் ஏறி புக்ககம் சென்றனர். படைத்தல், காத்தல், அழித்தல் - இந்த மூன்று செயல்களையும் மும்மூர்த்திகள் சேர்ந்தே செய்கின்றனர். அகர-உகர - மகரங்கள் மூன்றும் சேர்ந்து, பிரணவமாகிறது. கணவன்-மனைவி அவர்களின் கைக்குழந்தை மூவரும் சேர்ந்து பயணம் மேற்கொள்வர். அவர்களுக்கு எந்த விபரீதமும் நிகழாது. இப்படி, மூன்றாக - மூவராக சேர்ந்து செயல்படுவதால், நன்மையே விளைகிறது.

ஆக, மனம்தான் எல்லாவற்றுக்கும் காரணம். மனமானது, நல்லதை எண்ணும்போதே எதிர்வினையையும் நினைவுக்கு கொண்டு வந்துவிடும். படுவேகமாகப் பேருந்து பயணிப்பதை பார்ப்பவனுக்கு, 'இந்த பஸ் குப்புற கவிழ்ந்து விடுமோ' என்ற எண்ணம் தோன்றும். இதுபோலவே மூன்றைப் பற்றிய நினைப்பும்!



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'மூவராக சென்றால் ஏதேனும் விபரீதம் விளையுமோ!' என்ற எண்ணம் எழுவது இயல்பு. இந்த எண்ணம் தோன்றாமல் இருக்க, மன நெருடலை தவிர்ப்பதற்காக வேண்டுமானால் மூன்று பேராக செல்வதைத் தவிர்க்கலாம்.

வேலையில் முழு கவனம் இருப்பவனும், கடமையில் ஈடுபட்டவனும் மூன்றைப் பற்றி நினைக்கவோ கவலைப்படவோ மாட்டான். மனம் திடமாக இருந்தால், மூவர் சேர்ந்து போகலாம். மற்றபடி 'மூவராக செல்லக் கூடாது' என்பதெல்லாம் ஆதாரமற்ற நம்பிக்கை.

கோயில்களில், ஒருமுறை பயன்படுத்திய கற்பூரத்தை மீண்டும் பயன்படுத்தி தீபாராதனை காட்டலாமா?

- தீபா பாலச்சந்தர், மதுரை.



கூடாது. இறைவனுக்கு தீபாராதனை செய்யப்பட்ட கற்பூர தீபத்தை பக்தர்கள் தங்கள் கண்ணில் ஒற்றிக் கொண்டதும் அது நிர்மால்யமாகிவிடும். அடுத்ததாக புதிய கற்பூரத்தை ஏற்றியே தீபாராதனை செய்ய வேண்டும்.

இதுபோன்ற சில விஷயங்களுக்கு சட்டதிட்டங்கள் பயன்படாது. மனம் திருந்தினால்தான் உண்டு. வேலியே பயிரை மேய்வது நமது துரதிருஷ்டம். தெய்வ வழிபாட்டை நடைமுறைப் படுத்துபவர்களுக்கு அறமே மேலதிகாரி. கடவுளை வழிபட வந்த பக்தன், இதுபோன்ற தவறுகளைச் சுட்டிக்காட்டுவது வீண் செயல். கோயிலுக்குச் செல்பவன், மனதில் கடவுளை நினைக்காமல், வேறு விஷயங்களை ஆராய்ந்தால் வழிபாட்டின் பலனையே இழக்க நேரிடும்.

சில கோயில்களில்... பக்தர்களுக்கு அவசரம்; அர்ச்சகர்களுக்கு பரபரப்பு. புதிய கற்பூரத்தை எடுக்கக்கூட நேரமில்லை. ஆகவே, தவறு செய்ய நிர்பந்திக்கப்படுகிறார். எனவே, இது அனுதாபத்துக்கு உரிய செயல்; அவதூறான காரியம் அல்ல!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பெண்கள், தோப்புக்கரணம் போடலாமா?

கணபதி பூஜை முடிந்ததும், மஞ்சள் பிள்ளையாரை அல்லது பிள்ளையார் உருவச்சிலையை வடக்கு முகமாகத் தள்ளி வைக்க வேண்டும் என்கின்றனரே... ஏன்?

- மீனாட்சி விஸ்வநாதன், ஊட்டி.

அது மட்டுமா?!

திருமணத்தின்போது மணமகன் வடக்கே பார்த்து அமர வேண்டும். முன்னோரை வழிபடும்போதும் வடக்குப் பார்த்தே உட்கார வேண்டும். சுபகாரியங்களின்போது முப்பிரி நூல் (பூணூல்) வடக்கு (இடது) தோளில் தொங்க வேண்டும்.

வேள்வியின்போது, அதற்குரிய பொருட்களை வடக்கில் வைக்க வேண்டும். 'எனது உயர்வுக்காக தேவர்களை வழிபடுகிறேன்' என்று சங்கல்பித்த பிறகு, கையில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருக்கும் தர்ப்பை அல்லது அட்சதையை வடக்கில் போட வேண்டும். வழிபாடு நிறைவுற்றதும் எழுந்து வடக்கே நகர்ந்து செல்ல வேண்டும். பரதேசிக் கோல பயணத்தை வடக்கு நோக்கித் தொடர வேண்டும்.

வடக்கு முகமாக ஆசமனம் செய்ய வேண்டும். 'கயை' வடக்கில் இருக்கிறது. முன்னோர் ஆராதனையில் கயையை மனதில் இருத்தி, வடக்கில் சில அடிகள் எடுத்து வைப்பது உண்டு. உணவு பரிமாறும்போது, வடக்கில் முற்றுப்பெற வேண்டும். வடக்கு பக்கம் கால் நீட்டிப் படுக்க வேண்டும். இதனால் நமது சுகாதாரம் பாதுகாக்கப்படும். கால்மேல் கால் வைத்து உட்கார்ந்து வேதம் ஓத வேண்டும். அப்போது மேலே உள்ள கால், வடக்கு முகமாக இருக்க வேண்டும் என்கிறது சாஸ்திரம். இப்படி, வடக்கு திசைக்கு முக்கியத்துவம் தரும் விஷயங்கள் ஏராளம்!

புனித பூமியான காசி மற்றும் மேருமலை ஆகியன வடக்கில்தான் உள்ளன. 'அகில உலகத்துக்கும் வடக்கே இருப்பது மகா மேரு!' என்பது புராணக் கூற்று. திசையை அடையாளம் காட்ட ஓர் இயந்திரம் உண்டு. அதைச் சுழற்றினால், முடிவில் அதன் அம்பு குறி, வடக்கு நோக்கி நிற்கும். ஆக, வடக்கு திசையே மற்ற திசைகளை அறிமுகம் செய்கிறது!

'முன்னேற்றத்துக்கான செயல்பாடுகள் வடக்கில் முற்றுப் பெற வேண்டும்!' என்பது தர்ம சாஸ்திரத்தின் போதனை. எனவே, நமது முன்னேற்றம் தொடர... பூஜை முடிந்ததும் பிள்ளையாரை வடக்கே நகர்த்துவது சிறப்பு.

பிள்ளையாரை வழிபடும்போது, பெண்கள் தோப்புக்கரணம் போடலாமா?

- சி.சி.ரங்கநாதன், புது டெல்லி-57.

தோப்புக்கரணத்துக்கு ஆண், பெண் பாகுபாடு கிடையாது. கடவுளிடம் தன்னை எளியவனாகக் காட்டிக்கொண்டு, தனது தவறை மன்னித்து அருள வேண்டி செய்வதே தோப்புக்கரணம். விநாயகரை தியானிக்கும் மனம், வணங்க தேவையான கரங்கள் ஆகியன இருவரிடமும் உண்டு!

எனினும் பெண்கள்... அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, மென்மை போன்ற தகுதிகளை இழக்காமல் செயல்படுவது சிறப்பு. இவர்கள், தங்கள் மனதையும் உடல் உறுப்புகளையும் அளவுக்கு அதிகமாக வருத்திக் கொள்ளாமல் வழிபடுவது நல்லது. வழிபாட்டில் ஆண்களைப் போலவே தாங்களும் செயல்பட வேண்டும் என்ற கட்டாயம் பெண்களுக்குக் கிடையாது.

அவர்களது வழிபாட்டு முறையை எளிமையாக்கி இருக்கிறது தர்ம சாஸ்திரம். ஆண்களைப் போல், முழு உடலும் தரையில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

படும்படி விழுந்து, அஷ்டாங்க நமஸ்காரம் செய்யத் தேவையில்லை; பஞ்சாங்க நமஸ்காரம் செய்தாலே போதும். அவர்கள், மந்திரம் ஓதாமலேயே நிவேதனம் செய்யலாம்.

மந்திரங்களை சத்தமாகச் சொல்ல வேண்டும் என்ற கட்டாயம் இல்லை; மனதில் அசைபோட்டால் போதும். தலையைக் குட்டிக்கொண்டு வணங்க வேண்டாம்; கைகூப்பி வணங்கினால் போதும். கைகளால் காதைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போட வேண்டாம்; மனதால் வழிபட்டால் போதும் என்று தர்ம சாஸ்திரம் பரிந்துரைக்கும்.

வீம்புக்காக... குழந்தைகள் போல் அடம்பிடித்து, தோப்புக்கரணம் போடுவேன் என்றாலும் தவறில்லை; தாராளமாகச் செயல்படலாம். பெண்களுக்கு வழங்கும் சலுகை அல்ல இது; அவர்களின் மென்மைக்கு அளிக்கும் கௌரவம்.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மரணத்தை முன்கூட்டியே உணரலாமா?

- த.சத்தியநாராயணன், அயன்புரம்.

பீஷ்மர் தனது விருப்பப்படி மரணத்தைத் தழுவினார். உத்தராயன காலம் வரும் வரை, மரணத்தைத் தள்ளி வைத்தார். ஸ்ரீராமனின் பிரிவு, தனக்கு மரணத்தைத் தரும் என்பது தசரதருக்கு தெரியும். பரீக்ஷித்துக்கும், 'ஏழு நாட்கள் நிறைவுற்றதும் மரணம்!' என்று தெரியும்.

பிறப்பு உள்ளவனுக்கு இறப்பும் உண்டு. வேதம், நூறு வயது வாழ அருளுகிறது. ஜோதிடம், 120 வயது வரை வாழ்வளிக்கிறது. தர்ம சாஸ்திரம், மரணத்தை வெல்ல வழி சொல்கிறது.

'இறப்பு - பிறப்பு என்ற சுழலில் மாட்டிக்கொண்டு தவிக்காதே. அதிலிருந்து விடுபட வழி சொல்கிறேன், கேள்!' என்கிறார் ஆதிசங்கரர். 'படைப்பவனுக்கும் ஆயுள் எல்லை உண்டு' என்கிறது புராணம். விதை முளைத்து, வளர்ந்து, பூத்து, காய்த்து, பழுக்கிறது. பின்னர், வாடி மறைகிறது. இந்த நிலை மனிதனுக்கும் உண்டு. வளர்ச்சியின் முற்றுப்பெற்ற நிலையே மரணம். இது, காலத்தின் கட்டாயம்.

ஆயுர்வேதம், மரணத்தின் அறிகுறிகளை முன்கூட்டியே சுட்டிக்காட்டுகிறது. ஜோதிடம், மரண வேளையை வரையறுக்கிறது. உடலில் தோன்றும் பிணிகளும் மரண வேளையை நமக்குத் தெரியப்படுத்தும். படுக்கையில் விழுந்தவன், தனது உடலில் இருந்து ஒவ்வோர் அணுவும் தனித் தனியாகப் பிரிவதை உணர்வான். அடுத்து உயிர் பிரிந்துவிடும். குறிப்பிட்ட சில கனவுகள், பொருட்கள் இரண்டு இரண்டாகத் தென்படுவது, முன்னோர்களது பெயர்களைச் சொல்லிப் புலம்புவது, ஒன்றை மற்றொன்றாகப் பார்த்தல் முதலானவை மரணம் நெருங்குவதற்கான அறிகுறிகள் என்கிறது ஆயுர்வேதம். இதற்காக 'அரிஷ்டாத்யாயம்' என்ற பிரிவை அறிமுகம் செய்தது அது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'எனக்கு மரணம் இல்லை. நான் சிரஞ்ஜீவி என்ற எண்ணத்துடன் செயல்பட வேண்டும். அப்போது, நம் மனம் சஞ்சலத்தைத் தவிர்த்து, செயலில் ஈடுபட்டு சிறக்க வைக்கும்!' என்கிறது தர்ம சாஸ்திரம்.

ஆகவே, மரணத்தையே நினைத்துக் கொண்டிருக்காதீர்கள். அது வரும்போது வரட்டும்; மறந்துவிடுங்கள்!

ஒரு மாலைப் பொழுதில் நெமிலிச்சேரி ஸ்ரீஅகத்தீஸ்வரர் கோயிலுக்குச் சென்றேன். அங்கு, ஸ்ரீமகா கணபதியை தரிசித்துக்கொண்டிருந்தபோது, அவரின் நெற்றியில் இருந்த சந்தனம் பெயர்ந்து கீழே விழுந்தது. இது நல்ல சகுனமா?

- பி.வி.மீனாக்ஷிசுந்தரம், சென்னை-44.

காலையில் இடப்பட்ட சந்தனம், உலர்ந்துபோய் கீழே விழுந்திருக்கலாம். இதை சகுனமாகப் பார்ப்பது தவறு. சந்தனம் கீழே விழுவது தங்களது பார்வையில் படாமல் இருந்திருந்தால், தங்களின் மனம் கலக்கம் அடைந்திருக்காது.

காரணத்துடன் கூடிய நிகழ்வை, சகுனமாக ஏற்க முடியாது. கார்த்திகையில், வாசலில் தீபம் ஏற்றி வைப்போம். அது, காற்றடித்து அணைந்து போனால், சகுனம் என்போமா? காற்றடித்தால் அணையத்தான் செய்யும்!

கூட்ட நெரிசலில் கடவுளின் பிரசாதத்தை வாங்கும்போது, அது கீழே விழ வாய்ப்பு உண்டு. அதுபோல்... அடுப்பில் இருந்து எடுக்கும்போது, நிவேதனம் தவறி விழுந்துவிடலாம். பூஜைக்காக நாம் தேங்காய் உடைக்கும் போது, கை தவறி தேங்காய் தரையில் விழுவதுண்டு. இந்த அஜாக்கிரதைகளை சகுனத்தில் சேர்க்கக் கூடாது.

வெளியே கிளம்புகிறீர்கள். வாசலில் வந்து அண்ணாந்து பார்க்கும்போது, கண்ணில் கருடன் பறப்பது தென்பட்டால்...

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அது, சகுனம்! ஆக, எதிர்பாராமல் நிகழ்வதே சகுனம். எனவே, வீண் கற்பனைகளால் மனதை குழப்பிக்கொள்ளாமல், நிம்மதியாக இருங்கள்.

கடவுள் பக்தி அதிகமாக உள்ள நான், சந்தர்ப்பச் சூழலால் ஒரு திருமண வைபவத்தில் மாதவிலக்கான நாளில் கலந்து கொள்ளும்படி நேர்ந்துவிட்டது. அது தவறு என்று தெரிந்த பின், மிகுந்த மன உளைச்சலுக்கும் வேதனைக்கும் ஆளாகி உள்ளேன். நான் செய்த இந்தச் செயலுக்குத் தகுந்த பரிகாரம் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- ஸ்ரீநிதி, பெங்களூரு.

நிர்பந்தம் உங்களைக் கலந்துகொள்ள வைத்தது என்றால் தவறில்லை. நட்பு, பெரியோர்கள் பரிந்துரை, பிறரை திருப்திபடுத்துதல் - இப்படி செயற்கையான நிர்பந்தத்தைக் காரணம் காட்டக்கூடாது. எதிர்பாராமல் தெய்வீகமான விளைவுகளால் நிர்பந்தம் ஏற்பட்டால் தவறில்லை. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் நிர்பந்தங்களுக்கு இடம் அளிக்காமல் ஒதுங்கியிருக்க வேண்டும், அது முறை. மூன்று நாட்கள் ஓய்வெடுத்துக் கொள்ளும்படி பரிந்துரைத்தது தர்ம சாஸ்திரம். அதைக் கடைப்பிடித்தால் நிர்பந்தம் உங்களை சிக்க வைக்காது. நவீன வாழ்க்கையில் நாட்டம் இருந்தால் நெருடலும் இருக்காது. திரும்பவும் சிக்காதீர்கள். அதுதான் பரிகாரம்.

நீண்டதூரப் பயணம், உடல்நலக் குறைவு... இதுபோன்ற சூழலில் மானசீகமாக சந்தியாவந்தனம் செய்யலாமா?

- வி.சந்திரசேகரன், கூந்தலூர்.

செய்யலாம். தாங்கள் சந்தியாவந்தனம் செய்யத் தயாராக இருக்கிறீர்கள். மனமும் சந்தியாவந்தனம் செய்யத் துடிக்கிறது. ஆனால், உடல் நிலை ஒத்துழைக்கவில்லை. இதுபோன்ற தருணங்களில் மானசீகமாகச் செய்யலாம்; தவறில்லை.

பயண காலத்திலும் சந்தியாவந்தனம் செய்ய இயலாமல் போகலாம். அது, தங்களின் தவறல்ல.

பண்டைய நாட்களில், சந்தியாவந்தனம் போன்ற அனுஷ்டானங்களைத் தள்ளிப்போடும் அளவுக்கு பயணம் மேற்கொள்ளமாட்டோம். தற்போது, காலம் மாறிவிட்டது. சிந்தனையும் அப்படித்தான். அனுஷ்டான கடமைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் எண்ணம் போய்விட்டது. அலுவல்களை முடிக்கப் போதுமான நேரம் இல்லை. எனவே, சில கடமைகளைக் கைவிடுவது நிர்பந்தமாகிவிட்டது. ஆகையால், தங்களது விருப்பப்படி செய்யுங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஐயம் போக்கும் ஆன்மிகம்-5

சிவ-பார்வதியரை என் பெற்றோராகவே பாவித்து வழிபட்டவன் நான். ஆனால், பிறந்து சில நாட்களே ஆன எனது பேத்தி இறந்துவிட... அதன்பிறகு, என்னால் முழு ஈடுபாட்டுடன் பக்தி செலுத்த முடியவில்லை. எனினும், தெய்வம் இன்னும் தண்டித்துவிடுமோ என்ற பயத்தில், கடனுக்கு பூஜை செய்கிறேன். இது சரியா?

- காந்திமதி, சென்னை-20.



பேத்தியின் இழப்புக்கு தெய்வம் பொறுப்பல்ல. இந்தத் துயரத்துக்குக் காரணம் உங்களது கர்ம வினையே. பேத்தியின் கர்ம வினையும் ஒரு காரணம் எனலாம். இறைவனின் இயல்பு கொடுப்பதே; கெடுப்பது அல்ல. நாம் கொடுத்து வைத்தது நமக்குக் கிடைக்கும்.

'முற்பிறவியில் நாம் செய்த முயற்சிகள், இந்த பிறவியில் நடைமுறைப்படுத்தப்படும்!' என்கிறது தர்ம சாஸ்திரம். ஆக, விளையும் இன்ப - துன்பங்களுக்கு நாமே காரணம். கடவுளுக்கு, உங்கள் மீது எந்த பகையும் இல்லை. அவர், நடுநிலையாளன்; எல்லோருக்கும் உதவுபவர். எனவே, அவரிடம் உதவியை வேண்ட வேண்டும். துயரத்துக்கு கடவுளையும் இன்பத்துக்கு தன்னையும் காரணமாக நினைப்பது அறியாமை. 'நமது விருப்பங்களை பூர்த்தி செய்வதே கடவுளின் வேலை' என்று நினைப்பதும் தவறு. மனித இனம், இன்ப-துன்பங்களைச் சேர்த்து நுகர வேண்டும் என்பதே நியதி. இரண்டும் கலந்ததே வாழ்க்கை. ஆகவே, இரண்டையும் சமமாக ஏற்கும் பக்குவத்தை அடைய முயற்சியுங்கள்.

கோபத்தில் கடவுளைப் பழிக்க வேண்டாம்; மனம் கெட்டு விடும். கெட்ட மனம் தவறு செய்யும். தவறு, துயரத்தையே கொடுக்கும். எனவே, கடவுள் பணியில் ஈடுபட்டு மனத் தெளிவைப் பெறுங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மறுபிறவியை நம்பலாமா?

திருமணமாகாத பெண்கள் ஆஞ்சநேயரைத் தொட்டு வணங்கலாமா?

- க.சு.மணியன், பெரணமல்லூர்.

வணங்கலாம்! கண்ணனை, கோபியர்கள் அனைவரும் தொட்டு வணங்கினார்கள். அவர்களில் திருமணம் ஆகாதவர்களும் உண்டு.

'கண்ணா, உன் கால்களால் என் மார்பில் மிதி. உன் கால்களில் மிதிபட்டு, கொடூரமான விஷப்பாம்பு மடிந்துபோனதை நான் அறிவேன். எனது உள்ளத்திலும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் ஆகிய விஷங்கள் உள்ளன. நீ உதைத்தால் அவை அழிந்துவிடும்!' என்று மெய்மறந்த நிலையில் வேண்டுகிறாள் கோபிகை ஒருத்தி. ஆம்! கடவுள் பற்றிய எண்ணம் மனதில் எழும்போது, நம்மை நாம் மறப்போம். அந்த தருணத்தில்... ஆண் - பெண், கல்யாணமானவள் - ஆகாதவள் என்ற பாகுபாடுகள் தோன்றாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆஞ்சநேயரை வழிபடும்போதும் தன்னை மறந்து வழிபட வேண்டும். அப்போது, நெருடல் ஏற்படாது. நெருடல் தலை தூக்கினால், மனம் பக்குவப்படவில்லை என்றே பொருள்.

அவரை வழிபடும்போது, 'எனக்குத் திருமணம் ஆகவில்லை. ஓர் ஆடவனை எப்படித் தொடுவது?' என்ற எண்ணம் மனதில் வரக்கூடாது. தாய், தாரம், மகள் மூவரையும் அணைக்கிறான் ஓர் ஆடவன். தாயிடம் பாசம், தாரத்திடம் அன்பு, மகளிடம் வாத்ஸல்யம் என்ற பாகுபாடு உண்டு. ஆக, பக்தி உணர்வுடன் ஆஞ்சநேயரைத் தொட்டு வணங்கலாம்!

ஒரே உருவத்தில் ஏழு பேர், மறுபிறவி... இதையெல்லாம் நம்பலாமா?

- எம்.இனியா, விளமல்.

காக்கை உட்கார பனம்பழம் வீழ்ந்த கதையாக எங்காவது ஓர் இடத்தில் உருவ ஒற்றுமை நிகழலாம்!

செயற்கையான படைப்பில் உருவ ஒற்றுமையை நாம் கொண்டு வர முடியும். இயற்கையான படைப்பில் உருவ மாறுதல் இருக்கும். நீங்கள் குறிப்பிடுவதுபோல்... மேலெழுந்தவாரியாக ஒருவரைப் போன்று மற்றொருவர் தென்படலாம். அலசி ஆராய்ந்தால், அவர்களிடத்தில் சிறு சிறு மாறுபாடுகள் தென்படும். ரெட்டைக் குழந்தைகளிலும்கூட சிறு மாறுபாடுகள் இருக்கும். பெற்றோரின் மனதில் தோன்றும் எண்ணம் எப்படியோ அதன்படியே கருப்பையில் உருவாகும் குழந்தையின் உருவம் விளைவதுண்டு.



சர்க்கரை நோய், வழுக்கை, தோல் நோய்கள் முதலானவை தாத்தாவிடம் இருந்தால் பேரனுக்கும் வர வாய்ப்பு உண்டு என்கிறது மருத்துவம். நாமும் அதை ஒப்புக்கொள்கிறோம்! 'நாம் செய்த வினை மறு பிறவியில் நம்மைப் பற்றும்' என்பதையும் ஏற்கலாம், தவறில்லை.

'ஒருவன் முயற்சி செய்து அதன் பலனை அனுபவிக்கும் முன் இறந்துவிட்டால், குறிப்பிட்டப் பலனை அனுபவிக்க மறுபிறவி பயன்படுகிறது!' என்கிறது தர்ம

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சாஸ்திரம். பாப - புண்ணியச் செயல்களை வைத்து பிறவியின் தகுதியை வரையறுக்கிறது தர்ம சாஸ்திரம். ஸ்ரீஆதிசங்கரர், பிறப்பு - இறப்பு எனும் சுழலில் இருந்து விடுபட வழி சொல்கிறார். இதன் மூலம் மறுபிறவியை ஊர்ஜிதம் செய்கிறார் அவர்.

'பிறவியை வேரோடு அறுப்பதே மோட்சம்!' என்ற சிந்தனைக்கு தனிப் பெருமை உண்டு. 'கொடுத்து வைத்தவன்; சுக-போக வாழ்வு கிடைத்திருக்கிறது!', 'என்ன பாவம் செய்தானோ... இப்படியொரு துன்பத்தில் சிக்கித் தவிக்கிறான்!' என்பன போன்ற சொல் வழக்குகள் மறுபிறவியை மறைமுகமாக ஒப்புக்கொள்கின்றன.

ஜோதிடமும் ஒப்புக்கொள்ளும். இன்னும் சொல்லப்போனால்... மறுபிறவியை நம்பியே ஜோதிடம் செயல்படுகிறது. மறுபிறவி இல்லையெனில், ஜோதிடத்துக்கு வேலை இல்லை! தம்பதிகளைச் சேர்க்கும் தறுவாயில், பூர்வ ஜன்ம தொடர்பை சுட்டிக்காட்ட கிரக நிலைகளை வரையறுக்கிறது ஜோதிடம். 18 அறிவு நூல்களில் ஜோதிடமும் ஒன்று.

'சார்வாக மதம்' மறுபிறவியை மறுக்கிறது. உடலே ஆன்மா; உடலைத் தவிர மற்றொன்று இல்லை. உடல் அழியும்போது ஆன்மாவும் மறைகிறது. பிறகு, பிறப்பேதும் இல்லை!' என்பது அவர்களது வாதம்.

கண்ணால் பார்ப்பது மட்டுமே உண்மை. கடவுளைக் கண்ணால் பார்க்க இயலாது. ஆகவே, கடவுளில்லை என்ற வாதம் தங்களுக்குப் பிடித்திருந்தால், பின்பற்றுங்கள்! அல்லது உயர்ந்த சிந்தனையாளர்களது முடிவு தங்களுக்குப் பிடித்திருந்தால், அதை ஏற்கலாம். அவர்கள் மறுபிறவியை ஏற்றுக் கொண்டவர்கள்.

ஒற்றை பிராமணராக எதிரில் வருபவர், வேதம் படித்தவர் எனில், அவரை சகுனத் தடையாகக் கருதலாமா?

- என்.முத்துகிருஷ்ணன், கரூர்.

சகுனத் தடைதான்! சகுனத்தில் நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிடினும் இடையூறு நிகழும்.

ஆனால், சகுனத் தடையைக் கவனத்தில் கொள்ளாதவர்களுக்கு, 'நிகழும் இடையூறுகளுக்கு இதுதான் காரணம்' என்று தெரியாததால், மன நெருடல் ஏற்படாது. அவர்கள், வேறு ஏதேனும் ஒன்றை காரணமாகக் கருதி சமாதானம் ஆகிவிடுவார்கள்!

கோயில்களில், அர்ச்சகர் 'ப்ரோக்ஷணம்' செய்தபின் தரும் அபிஷேகத் தீர்த்தத்தை அருந்திய பிறகு, கையைத் தலையில் தடவிக் கொள்ளலாமா?

- சி.சி.ரங்கநாதன், புது டெல்லி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தீர்த்தத்தை உட்கொண்ட பிறகு, ஈரக் கையை துணியால் துடைக்கலாம். தீர்த்தத்தின் கௌரவத்தை மனதில் கொண்டு தலையில் துடைக்கிறார்கள். அது தேவையற்றது. அர்ச்சகர் 'ப்ரோக்ஷணம்' செய்யும்போதே தீர்த்தம் தலையில் பட்டு, உடல் சுத்தமாகிவிடும். உள்ளமும் சுத்தமாக வேண்டும் என்பதற்காக தீர்த்தத்தை உட்கொள்கிறோம். திரும்பவும் தலையில் தடவுவது தேவையற்றது.

'விசேஷங்களின்போது வீட்டு வாசலில் தோரணங்களாகக் கட்டப்படும் மாவிலை மற்றும் வேப்பிலைகள், கிருமி நாசினியாகவும் செயல்படுகின்றன!' என்று பெரியோர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், சில வீடுகளில்... பச்சைமிளகாய் - காய்ந்த மிளகாய்களை கட்டித் தொங்க விடுகின்றனரே... ஏன்?

– ஆர்.ஜானகி ரங்கநாதன், சென்னை-4.

மாவிலை மற்றும் வேப்பிலைகள், கிருமிநாசினி என்பதற்காக மட்டும் கட்டப்படுவதில்லை. அதில் பண்பாடும் அடங்கும்! சரி... மிளகாயில் மருத்துவ குணம் இல்லை என்று எப்படி முடிவு செய்தீர்கள்? மிளகாய் குறித்த தகவல் தங்களுக்குத் தெரியவில்லை என்பதால், இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள்... அப்படித்தானே?!

நீங்கள் எதிர்பார்ப்பது போல்... நமது செயல்பாடுகளுக்கு, மருத்துவச் சிறப்பு அல்லது விஞ்ஞான ரீதியான காரணங்கள் வேண்டும்தான்! ஆனால், அவை மட்டுமே போதுமானதல்ல; மனம் சார்ந்த பண்பாடே... நமது செயல்பாடுகளின் மையமாக இருக்க வேண்டும்.

முறைப்பெண், முறைமாப்பிள்ளை என்று உறவில் திருமணம் செய்து கொள்ளும் பழக்கம் நம்மில் உண்டு. இது, மருத்துவத்தின்படி விலக்கத் தக்கது. தர்ம சாஸ்திரமும் 'கூடாது!' என்றே சொல்கிறது. ஆனால் சிலர், இந்த வழக்கத்தை மரபாக வைத்துக் கடைப்பிடிப்பதும் உண்டு.

உங்கள் கவனத்துக்கு சில கேள்விகள்...

விசேஷ நாட்களில், வீட்டு வாசலில் கட்டப்படும் தோரணங்கள் ஒருநாள் மட்டும்தான்; நிரந்தரமாக இருக்காது. அந்த ஒரே நாளில் கிருமிகள் நிரந்தரமாக அழிந்துவிடுமா?! தற்போது காகிதத்திலும், பிளாஸ்டிக்கிலும் தோரணங்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கட்டுகிறோம். அவை கிருமிநாசினியா? ஸ்டிக்கர் கோலம், ஸ்டிக்கர் பொட்டு ஆகியவற்றில் விஞ்ஞான நன்மைகள் இருக்கிறதா என்ன?

ஆக... நமக்கு விருப்பமான விஷயங்கள் எனில், விளக்கம் எதுவுமின்றி ஏற்றுக்கொள்கிறோம். விருப்பமில்லாதவை எனில், அவற்றை விலக்குவதற்கு விளக்கம் தேடுகிறோம். இது தவறு! விஞ்ஞான விளக்கம் கிடைக்காதபட்சத்தில் அதை ஒதுக்கிவிடாமல், ஆராய வேண்டும்.

புராணங்கள் குறிப்பிடும் 'ஔதும்பர மரம்' தற்போது பூலோகத்தில் உள்ளதா?

- கூந்தலூர் வி.சந்திரசேகரன், கும்பகோணம்-1.

அத்தி மரமே 'ஔதும்பர மரம்' எனப்படும். இது, எல்லா இடங்களிலும் தென்படும். இந்த மரத்தின் காய் மட்டும் தென்படும்; பூ கண்ணுக்குப் புலப்படாது. மருத்துவ குணம் பொருந்திய இந்த மரத்தின் சிறப்புகளை ஆயுர்வேதம் விளக்குகிறது. வேள்வியில் நெய்யைச் சேர்க்க, அத்தி மரத்தால் ஆன அகப்பையைப் பயன்படுத்துவர். வேதம் அறிமுகம் செய்த மரம் என்று அத்தி மரத்துக்கு தனிச் சிறப்பு உண்டு.

கோயில்களில், பெண்கள் அங்கப் பிரதட்சணம் செய்யலாமா?

- எல்.ஆர்.சுந்தரேசன், மும்பை-71.

செய்யலாம். உருவ மாறுபாடுகளைத் தவிர, மற்றவற்றில் ஆண்-பெண் என்ற பாகுபாடு கிடையாது.

ஜோதிடம், பலன் சொல்ல ஆரம்பித்தது. முதலில் ஆண்களுக்கு பலன் சொன்ன ஜோதிடம், முடிவில்... 'இதுவரை ஆண்களுக்குச் சொன்ன பலன்கள், பெண்களுக்கும் பொருந்தும்!' என்று விளக்கியது. அடுத்து... 'இனி, பெண்களுக்கு மட்டும் பொருந்தும் பலன்களைக் கூறுகிறேன்' என்று ஆரம்பித்தது.

உலகவியல் செயல்பாடுகளைப் பொறுத்தவரை, ஆண் - பெண் பாகுபாடு தர்ம சாஸ்திரத்தில் இல்லை. பக்தி செலுத்துவதில் பிரகலாதனும் உண்டு; மீராவும் உண்டு. யானை, பாம்பு போன்ற (ஆறறிவு அற்ற) உயிர்களும் ஆண்டவனை நெருங்க இயலும் என்கின்றன புராணங்கள். பக்தியின் செயல்பாட்டை வரையறுப்பது மனம். சபரியும், கண்ணப்ப நாயனாரும் தாங்கள் ருசி பார்த்த பொருளை ஆண்டவனுக்கு அளித்து மகிழ்ந்தனர் என்ற தகவல் உண்டு. ஆகவே, பக்தி மேலிடும்போது பாகுபாடு மறைந்துவிடும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எனினும், பெண்மையின் இயல்பு மென்மை. ஆதலால், கடினமான செயல்பாடுகளில் அவர்களைச் சேர்க்க அன்றைய சமுதாயம் தயங்கியது. பயணத்தின்போது கனமான பொருட்களை கணவன் சுமப்பான். மனைவி, தண்ணீர் கூஜா போன்ற பளுவற்ற பொருட்களை சுமப்பாள். ஏர் பிடித்து உழுதல், விறகு வெட்டுதல், கிணறு தோண்டுவது மற்றும் மரம் ஏறுதல் உள்ளிட்ட கடினமான வேலைகள் ஆண்களிடம் இருக்கும். நாற்று நடுதல், செங்கல் மற்றும் கலவை சுமப்பது போன்ற இலகுவான வேலைகளைப் பெண்களுக்கு ஒதுக்குவர். இந்தப் பாகுபாடு நல்லெண்ணத்தின் வெளிப்பாடே!

பிரார்த்தனைகளிலும் அப்படியே. மக்களது விருப்பத்தைப் பொறுத்தே, பிரார்த்தனைகள் பல வடிவங்களில் தென்படலாம். ஆனால், அவற்றின் பலன்களில் மாறுபாடு இருக்காது. சுகாதாரம் மற்றும் தர்ம சாஸ்திரத்தின் அடிப்படையில் நமது பிரார்த்தனைகளை தேர்வு செய்ய வேண்டுமே தவிர, உரிமையை நிலைநாட்டும் நோக்கில் தேர்வு செய்யக்கூடாது.

நமது கலாசாரம் பெண்மையைப் போற்றுவது. ஆகவே, எதில் உரிமை கிடைத்தால் பெண்மைக்குப் பெருமையோ அதுபோன்ற விஷயங்களில் அடம்பிடிப்பது அழகு.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்!' என்பார்கள். ஆனால், வீட்டின் எதிரிலேயே... தினமும் கோபுர தரிசனம் செய்தும் பிள்ளைப் பேறு இல்லாத எனது குறை அகலவில்லையே... ஏன்?

- கு.ராஜவேணி, ஆற்காடு.

கோபுர தரிசனம் துன்பத்தை அகற்றும். பிள்ளைப் பேறு அளிக்கும் என்று சொல்ல முடியாது! கோபுர தரிசனத்துக்கும், துன்பத்தில் இருந்து விடுபடுவதற்கும் நேரடித் தொடர்பு இல்லை.

கோபுர தரிசனம், கோயிலுக்குள் குடியிருக்கும் இறைவனை நினைவூட்டும். இறை சிந்தனை, அலைபாயும் நம் மனதை அமைதிப்படுத்தும். இதனால் ஒருமுகப்படும் மனம், தனது சொந்த முயற்சியில் துன்பத்தை அகற்ற வேண்டும். துன்பத்தை வரவழைக்கும் மனம், அதை வெளியேற்றவும் முயற்சிக்க வேண்டும்.

விஷயத்தை உள்வாங்குவது மனம். அதை, அலசி ஆராய்வது புத்தி. இவற்றை நமக்கு அளித்தவர் இறைவன். இந்த இரண்டின் மூலமும் செயல்பட்டு முன்னேற அவர் அருள் புரிவார். அதாவது, இறைவனைப் பற்றிய நினைவு, மனதை ஒருமுகப்படுத்தி செயல்பாட்டைச் சிறக்கச் செய்யும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



நமது அற நூல்கள், இறை வழிபாட்டின் பலனை மிகைப்படுத்திச் சொல்கின்றன. காரணம்... அப்போதுதான் நமக்கு வழிபாட்டில் ஈடுபாடு கூடும்! கோபுர தரிசனமும் அப்படியே! எனவே, 'நாம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். கடவுள், நம்மைக் காப்பாற்றுவதைக் கடமையாகவே கருதி செயல்படுவார்!' என்று நினைக்கக்கூடாது. தர்ம சாஸ்திரம் சொல்லும் வழியில் செயல்பட்டு, உதவிக்கு அவரை அழைத்தால், நிச்சயம் இறையருள் கிடைக்கும்.

இறைவனிடத்தில் பூரண நம்பிக்கை வைத்து செயல்படும் பக்குவம் நமக்கு வரவில்லை. பிரகலாதனின் மனநிலையை பெற்றவருக்கே அது சாத்தியம். இந்த நிலையைத் தாங்களும் எட்டியிருந்தால், கோபுர தரிசனம் ஒன்றே போதும்; தங்களின் துன்பம் அகலும். ஆகவே, உங்களின் கடமையை முடித்துக்கொண்டு உரிமையை எதிர்பாருங்கள். நிச்சயமாகக் கிடைக்கும்!

வைவஸ்வத மன்வந்தரம், யுகம், கல்பம் - இவற்றில் எது அதிக வருடங்களைக் கொண்டது? மொத்தம் எவ்வளவு மன்வந்தரங்கள், கல்பங்கள் உள்ளன?

- கே.கிஷோர், ஈரோடு-1.

பதினெட்டு புராணங்களில் ஏதேனும் ஒன்றைப் புரட்டிப் பாருங்கள், பதில் கிடைக்கும். காலத்தின் அளவுகளை விளக்கும் பகுதி, புராணங்களின் இலக்கணமாக சொல்லப்பட்டிருக்கிறது.

ரூபாய் - பைசா, கிராம் - சவரன், கிலோகிராம், கிலோ மீட்டர் மற்றும் படி-ஆழாக்கு... இவற்றின் அட்டவணையை, கேள்விக்கு இடமளிக்காமல் நாமாகவே படித்துத் தெரிந்து கொள்வது இல்லையா? அதுபோல, நேரம் கிடைக்கும்போது புராணங்களையும் புரட்டிப் பாருங்கள்; பதில் கிடைக்கும்!

ஆரம்பமும் முடிவும் காண முடியாத காலத்தை, அடி-முடி அறிய முடியாத ஆண்டவனுக்கு ஒப்பாகப் பார்க்கிறது *காலவிதான சாஸ்திரம்*. நாம் பிறப்பதற்கு முன்பே இருக்கும் காலம், நாம் பிறந்ததும் நம்மோடு ஒட்டிக்கொள்ளும். நாம் இறந்த பிறகும் காலம் தொடர்கிறது. கதிரவனின் தாக்கத்தால் பொருட்களில் தென்படும் மாற்றத்தின் அளவே (வேளை), காலத்தின் ஆதாரம் என்கிறது வேதம். *(தஸ்யா: பாகவிசேஷேண ஸ்ம்ருதம் கால விசேஷணம்)*

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கண்ணுக்குப் புலப்படாத காலத்தை எப்படிக் கணக்கிடுவது? முதல் குடிமகனின் மூப்பை வைத்து ஒரு கணக்கை அறிமுகம் செய்தது ஸனாதனம். 'சிறுமை, இளமை, முதுமை எல்லாம் காலத்தின் கோலம். எல்லா உயிரினங்களின் வாழ்நாளை விடவும் படைப்பவனின் வாழ்நாள் மிக அதிகம்' என்கிறது அது.

ஆயிரம் 'நான்கு யுகங்கள்' - அவரது பகல். இதன் இரு மடங்கு, படைப்பவனுக்கு ஒரு நாள். இதை அடிப்படையாக வைத்து படைப்பவனுக்குரிய ஒரு வருடத்தைக் கணக்கிடுவர். இந்த வருடங்கள் நூறு நிறைவு பெறும்போது, அவரது ஆயுள் பூர்த்தியாகும் என்றொரு தகவல் உண்டு *(சதுர்யுக ஸஹஸ்ராணி ப்ரம்மணோ தினமுச்யதே)*. வேதம், புராணம், இதிகாசம், தர்சனம், தர்க்கம், ஆயுர்வேதம், ஜோதிடம் போன்றவற்றைக் கையாண்ட சிந்தனையாளர்களது படைப்புகளில் காலத்தைப் பற்றிய விளக்கம் இருக்கும் *(பரிணாம: கால:...)*. வழக்கமான சடங்குகள் சிலவற்றில், முதலில் காலத்தை சுட்டிக்காட்டுவது உண்டு. அர்ச்சகர், நமது பெயருடன் காலத்தையும் குறிப்பிடுவதைப் பார்த்திருப்போம்.

பிரம்மனின் ஆயுளில் ஒரு பகுதி நிறைவு பெற்று, அடுத்த 2-வது பகுதியின் துவக்கம்... அதில் முதல் வருடம், முதல் மாதம், முதல் பட்சம், முதல் நாள், இந்த நாளின் 2-வது யாமம், 3-வது முகூர்த்தம், ச்வேத வராஹ கல்பம், வைவஸ்வத மன்வந்தரம், 28-வது கலியுகம், இந்த யுகத்தின் முதல் காலாண்டு, இந்தக் காலாண்டில் சக வருடம், சூரியன், சந்திரன், நட்சத்திரம், நாள் ஆகியவற்றைக் குறிப்பிடுவர்.

அது மட்டுமா? இவற்றின் சுழற்சியில் விளைந்த 60 வருடங்களில்- ஸர்வதாரி, அதில் அயனம், ருது, மாதம், பட்சம், வாரம், நாள், நட்சத்திரம், யோகம், கரணம், அந்த வேளை (நொடி)... இவற்றையும், இதற்கு மேல் பிரிக்க இயலாத பகுதியாக உள்ள காலத்தையும் குறிப்பிடுவது உண்டு. *(ப்ரம்மண: த்விதீயபரார்தே...)*

பிரம்மனின் முதல் படைப்பு, அதையொட்டி பிற்பாடு தோன்றியவர்களின் படைப்பு, அரச குல பரம்பரைகள், 'மன்வந்தரம்' போன்ற தகவல்கள் அத்தனையும் புராணங்களின் இலக்கணமாகக் கூறப்பட்டிருக்கிறது. *(சர்க: சப்ரதி சர்க: ச வம்சோ மன்வந்தராணி ச)* வருடம், மாதம், பட்சம், வாரம், நாள், நாழிகை, வினாழிகை, கலை, விகலை; மணி, நிமிடம், நொடி; படி, ஆழாக்கு, உழக்கு; அங்குலம், அடி, மீட்டர் இவற்றின் அளவைப் புரிந்துகொள்ள 'அட்டவணைகள்' இருக்கும்.

சப்த கல்பத்ருமம், வாசஸ்பத்யம் போன்ற சமஸ்கிருத அகராதிகளில், கல்பம், மன்வந்தரம், யுகம் என்ற தலைப்பின் கீழ்... காலம் குறித்த தகவல்கள் மற்றும் அதன் அளவுகள் எண்ணாலும், எழுத்தாலும் துல்லியமாக விளக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைத் தெரிந்துகொள்வது சிறப்பு!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பெண்கள், காயத்ரி மந்திரம் சொல்லலாமா?

தினமும், அதிகாலை எழுந்து குளித்து, வாசலில் நீர் தெளித்து கோலமிட்டு, அதில் இரு அகல்விளக்குகள் ஏற்றி வைப்பதுடன் வீட்டிலும் குத்துவிளக்கு ஏற்றி வழிபடுகிறேன். ஆனால், வீட்டில் மற்றவர்கள் உறங்கிக்கொண்டிருக்கும் வேளையில், விளக்கு ஏற்றக்கூடாது என்கிறார்கள் சிலர். அப்படியா?

- வி.ஜெயலட்சுமி, மதுரை.

நீங்கள், உங்களது கடமையைச் செய்வதில் தவறேதும் இல்லை. கடமையைச் செய்யும்போது, இதுபோல் வரும் எதிர்ப்பைப் புறக்கணியுங்கள்.

அதிகாலை என்பது உறங்கும் வேளை அல்ல. அப்படி உறங்குபவர்களே தவறு செய்கின்றனர். அவர்கள் திருந்த வேண்டும். 'உடல் ஆரோக்கியம் தொடர அதிகாலை உறக்கத்தைத் தவிர்க்க வேண்டும்!' என்கிறது ஆயுர்வேதம். தங்களது செயலைப் பார்த்து, அவர்களது தவறை உணர வேண்டும்; அதிகாலையில் விழிக்க வேண்டும். கடமையைத் தொடருங்கள். அவர்கள் திருந்துவார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பெண்கள் காயத்ரி மந்திரம் ஜபிக்கலாமா?

- ஆர்.பிருந்தா ரமணி, மதுரை-20.

சில பட்டப் படிப்புகளுக்குத் தனித்தேர்வு உண்டு; தேர்ச்சி பெற்றவர்களுக்கே இடம் கிடைக்கும். அதேபோல், குறிப்பிட்ட துறையில் பணி புரியவும் சிறப்புத் தேர்வுகள் எழுத வேண்டும். சிலர், வேலைவாய்ப்புக்காகவும் தேர்வு எழுதுவர். இதுபோன்ற தேர்வுகளில் எல்லோரும் கலந்துகொள்ள மாட்டார்கள். எவருக்குத் தேவையோ அவர்கள் மட்டுமே கலந்து கொள்வார்கள்!

அதேபோல, வேதக் கல்வி பயில்வதற்கான தனித் தேர்வே காயத்ரி மந்திர உபதேசம். இதை தினமும் ஓதுபவருக்கு வேதக் கல்வியில் இடம் உண்டு.

வேதம் பயில சில சட்ட திட்டங்களைச் சொல்கிறது வேதம். அதையும் பின்பற்ற வேண்டும். வேதம் வேண்டும் - காயத்ரியும் வேண்டும் என்றால், அதன் சட்டதிட்டத்தையும் மதிக்க வேண்டும். பயனற்ற செயலில் எவரும் இறங்கமாட்டார்கள். நீங்களும் பயன் கருதியே இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள். வேதம் படிப்பதால் பலன் உண்டு. ஆனால், பொருளாதார ரீதியாக எந்தப் பலனையும் அது தராது!

பேச்சு, கருத்து மற்றும் எழுத்து சுதந்திரம் உள்ள இந்த நாளில் தங்களது விருப்பப்படி எதையும் செய்யலாம்! கிளி, காயத்ரியைச் சொல்கிறது. ஒலிநாடா காயத்ரியை உச்சரிக்கிறது. இப்படி, கடைச்சரக்காக மாறிய பிறகு, 'ஜபிக்கலாமா?' என்ற கேள்விக்கே இடமில்லை!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ரீரமணர், காஞ்சி மகா ஸ்வாமிகள் போன்ற முக்தி பெற்ற மகான்கள், மீண்டும் பூமியில் பிறக்க மாட்டார்களா?

- எஸ்.செல்வம், திருச்சி.

ஆறாத் துயரில் இருந்து அறவே அகன்ற நிலையே முக்தி. இதை அடைந்தவர்கள் ரமண மகரிஷியும், காஞ்சி மகா ஸ்வாமிகளும்! விடுதலை அடைந்தவரை திரும்பவும் சிறையில் அடைக்க வேண்டுமா?

உலக வாழ்வில், அங்கும் இங்குமாகத் தென்படும் இன்பம், மின்னல்போல் மறைந்துவிடுகிறது; நாம் விரும்பினாலும் அது நிலைப்பதில்லை. வேப்பம் பழத்திலும் ஓர் அசட்டு இனிப்பு உண்டு. ஆனால், கசப்பு சுவையே அதிகம். எனினும் பறவைகள், இனிப்புக்காகவே அந்தப் பழத்தை அணுகும். உலக வாழ்விலும் இன்பத்தைவிட துன்பமே அதிகம். இதை உணர்ந்து, துன்பத்திலிருந்து விடுபடுவதற்கான வழியைச் சொன்னார்கள் மகான்கள். அத்துடன் துன்பக்கடலைத் தாண்டி, நிலைத்த இன்பத்தில் மகிழ்ந்து உதாரண புருஷர்களாகவும் விளங்கினார்கள்.

'கர்ம வினைப் பயனாக தாயின் கருவறையில் தோன்றினேன். அங்கு துயரத்தை உணர்ந்தேன். கருப்பையில் ஒரு பக்கம் மலம், மறுபக்கம் புழு - பூச்சிகள். அடங்கி ஒடுங்கி இருக்க வேண்டிய சூழல். அத்துடன், அடிவயிற்றில் இருக்கும் சூடு, கருப்பையில் பரவி என்னை தகிக்கிறது. இப்படியொரு கர்ப்பவாசம் எனக்கு வேண்டவே வேண்டாம். கடவுளே! என்னைக் கரையேற்று' என்று தனது அனுபவத்தை வெளியிடுகிறார் ஆதிசங்கரர். தான்





Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உணர்ந்த துன்பம், பிறரையும் ஆட்கொள்ளக்கூடாது என்கிற எண்ணத்தில் பிறவியற்ற நிலையை அதாவது, முக்தியை அடைய நமக்கும் வழிகாட்டுகிறார் அவர் *(ஆ)தௌ கர்ம ப்ரசங்காத் புனரபி ஜனனம்).*

பள்ளத்தில் சிக்கியவனை மீட்க எண்ணிய ஒருவன், தனது கையை நீட்டினான். பள்ளத்தில் இருந்தவன் அவனையும் இழுத்து பள்ளத்தில் வீழ்த்தினானாம்! இதைப் போன்றதுதான், மகான்கள் மீண்டும் பூலோகத்தில் பிறக்க வேண்டும் என நினைப்பதுவும்!

தெளிவான மனதில் தத்துவ விளக்கம் பதியும். தெளிவற்ற மனம் விளக்கத்தை ஏற்காது.

காட்டில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவனை சிங்கம் துரத்தியது. பயந்து ஓடியவன் ஒரு மரத்தில் ஏறினான். அந்த மரத்தின் கிளையில் பாம்பு ஒன்று படமெடுத்து நின்றது. ஆபத்தான இந்த நிலையிலும் அந்த மனிதன்... மரக்கிளையில் தொங்கும் தேனடையில் கசிந்த தேனைப் பருக ஆசைப்பட்டானாம்!

இன்றைய மனிதர்களின் நிலையும் இப்படித்தான். உலக சுக-போகங்களில் மூழ்கிய மனம் அதில் இருந்து வெளிவர விரும்பாது. மீண்டும் மீண்டும் துயரத்தில் தள்ளப்பட்டாலும், துளியளவே கிடைக்கும் இன்பத்தை நினைத்துச் செயல்படும்.

'துயரத்தில் இருந்து விடுதலை!' என்பதே நிரந்தரமான இன்பம். இதை அடைந்தவன் திரும்பவும் பிறப்பு - இறப்பு எனும் சூழலில் மாட்டிக்கொள்ள மாட்டான். எனவே, நீங்கள் விரும்பினாலும், மகான்கள் மறுபிறவியை ஏற்கமாட்டார்கள். மறுபிறவிக்குக் காரணமான கர்ம வினைகள் அழிந்துவிட்டதால், அவர்களே விரும்பினாலும்கூட, மறுபிறவி கிடைக்காது!

ஸ்ரீராமர் மற்றும் ஸ்ரீகிருஷ்ணர் ஆகியோரது ஜாதகங்கள் மற்றும் வாஸ்து பகவானின் படம் போன்றவற்றை வீட்டு பூஜையறையில் வைக்கலாமா?

- என்.ராமச்சந்திரன், பெங்களூரு-93.

ஜனனமும் மரணமும் உள்ளவர்களுக்கு மட்டும்தான் ஜாதகம் உண்டு. ஒருவரது பிறப்புக்குக் காரணமான முற்பிறவியின் கர்மவினையைத் தெரிந்துகொள்ள ஜாதகம் உதவும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஸ்ரீராமரும் ஸ்ரீகிருஷ்ணரும் கடவுளின் அவதாரங்கள். இவர்களுக்கு ஜாதகம் தேவையில்லை. இவர்கள், தங்களது வாழ்க்கை விளைவுகளை தாங்களே ஏற்படுத்திக் கொண்டனர்; முன்பே திட்டமிட்டுச் செயல்படுத்தினர். இவர்களுக்கு ஜாதகம் சொல்வதும், பலன்கள் சொல்வதும், ஜோதிடக் கோட்பாட்டுக்கு எதிரானது. ஜாதகத்தை பூஜைப் பொருளாக மாற்றக்கூடாது.

வாஸ்து பகவானை, பூஜையில் வைத்துதான் வணங்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. காரணம் - நாம் நடமாடும் பூமியில் வாஸ்து பகவான் இருக்கிறார். காலையில் பூமியை வணங்கும்போது அவரையும் சேர்த்தே வணங்கிவிடுவோம். பூமியில் அவர் ஒன்றி இருக்கிறார்.

சிலருக்குத் திருமணம் உரிய காலத்தில் நடக்காமல் தள்ளிப் போகிறதே, ஏன்?

- ஜி.ஜெயராமன், கூந்தலூர்.

முற்காலத்தில், காலம் கடந்த திருமணம் மிக அரிது. காரணம்... அப்போது, திருமண பொறுப்பு பெற்றோரிடம் இருந்தது. குலம், பண்பு ஆகியவற்றுக்கே முன்னுரிமை தரப்பட்டது. கூட்டுக் குடும்ப வாழ்க்கை, குடும்ப வாழ்வில் பற்று, ஆரோக்கியமான பொருளாதாரம், உறவு முறையில் வரன் பார்ப்பது போன்ற விஷயங்கள், உரிய காலத்தில் திருமணம் நடந்தேற ஒத்துழைத்தன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தவிர, அப்போதைய திருமணத்தில், தாம்பத்தியத்தின் சிறப்பு, கலாசாரம், சமுதாயக் கட்டுப்பாடு, பரிணாம வளர்ச்சி, அறத்தின் பரிந்துரை ஆகியன முக்கியத்துவம் பெற்றிருந்தன.

இன்று, சிந்தனை மாறிவிட்டது. மாற்றுக் கலாசாரத்தின் மீது மோகம் வந்துவிட்டது. பெற்றோர்களது உரிமை பறிக்கப்பட்டு விட்டது. இளைஞர்கள், பெற்றோரைத் தவிர்த்து தாங்களே திருமண முடிவுகளை எடுக்கின்றனர். இதை, தங்களது உரிமையாகக் கருதுகிறார்கள்!

தவிர, இன்றைய திருமணங்கள் அழகு, படிப்பு, வேலை மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை முன்வைத்தே நிகழ்கின்றன. இவற்றில் மட்டுமே ஏற்படும் திருப்தி, சிலருக்கு... அவர்களது திருமணத் தேர்வையே சிக்கலாக்கிவிடுகிறது. இதற்கு, அனுபவக் குறைபாடும் ஒரு காரணம் என்று சொல்லலாம்!

இன்னும் சிலர், திருமணத்தை வாழ்க்கையாகப் பார்க்காமல், வாழ்வின் ஒரு பகுதியாக மட்டுமே பார்க்கின்றனர். இதனாலும் திருமணத்தில் தாமதம் ஏற்படுகிறது. 'திருமணம் என்பது பெரும் சுமை; திருமணம் செய்துகொண்டால் நம் சுதந்திரம் பறிபோய்விடும்!' என்று பயப்படுபவர்களும் உண்டு.

இன்னும் சிலருக்கு, தங்களது அளவுக்கு மீறிய எதிர்பார்ப்புகளால் திருமணம் தள்ளிப்போகிறது. அதிக படிப்பு, நல்ல வேலை, கைநிறைய சம்பளம், வீடு-வாகனம் அனைத்தும் அமைந்தபின் திருமணம் செய்துகொள்ளலாம் என்று நினைப்பவர்களும் உண்டு.

சிலர், 'தகுதிக்கு இணையான துணை வேண்டும்!' என்று மனதில் ஒரு வரைபடம் வைத்துக்கொண்டு தேடி அலைவதாலும் திருமணம் தள்ளிப்போகிறது. இவர்கள், தங்களது வயது ஏறுவதையோ இளமை குன்றுவதையோ அறிவதே இல்லை. காலம் கடந்த உணவும், காலம் கடந்த உறவும் ஒப்புக்கு மட்டுமே இருக்கும் என்பதை இவர்கள் உணர வேண்டும்.



முற்காலத்தில் நமது பண்பாடு நிர்ணயித்த திருமண வயதை-காலத்தை, இன்று படிப்பு, வேலை, பொருளாதாரம் மற்றும் அழகு ஆகியவையே நிர்ணயிக்கின்றன.

இவை அனைத்திலும் தன்னிறைவு அல்லது திருப்தி ஏற்பட போதுமான

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காலம் தேவைப்படுவதால், திருமணமும் தள்ளிப் போகிறது. தவிர, ஜாதகத்தின் பரிந்துரைப்படி திருமணத்தை நிர்ணயிப்பவர்களும் உள்ளனர்.

குழந்தையைப் பள்ளியில் சேர்ப்பது, கல்லூரிக்கு அனுப்புவது, நல்ல வேலையில் சேர்வது ஆகியவற்றுக்கு ஜாதகத்தின் பரிந்துரையை ஏற்று, காலத்தைத் தள்ளிப்போடுவதில்லை. ஆனால், திருமணத்தை மட்டும் தள்ளிப்போடுகிறார்கள்.

திருமணம் தாமதமாவதற்கு ஜோதிடமும் கடவுளும் பொறுப்பல்ல. சிந்தனை மாற்றமே இத்தனை சிக்கலுக்கும் காரணம். நாம் வாழப் பிறந்தவர்கள். இதைப் புரிந்து செயல்பட வேண்டும்.

உடல் ஊனம் என்பது, இறைவன் அளித்த தண்டனையாக நான் கருதுகிறேன். இது குறித்து உங்கள் கருத்து!

- த.சத்தியநாராயணன், அயன்புரம்.

இறைவன், முழுமையானவன்; பரிபூரணன். அவன் ஊனத்தை அளிக்கமாட்டான். நமது கர்ம வினையே, நமக்குத் தண்டனை தருகிறது.

'பெற்றோரது சுக்கில சோணிதத்தில் தென்படும் குறைவு ஊனத்துக்குக் காரணமாகலாம்!' என்கிறது ஆயுர்வேதம்.

'முற்பிறவியில் செய்த வினையே ஊனம் வாயிலாக துன்பத்தைத் தரும்' என்பது தர்ம சாஸ்திரத்தின் கருத்து.



கர்ம விபாகம் எனும் நூல், 'குறிப்பிட்ட ஊனத்துக்கு குறிப்பிட்ட பாவச் செயல்களே காரணம்!' என்கிறது. பாவச் செயல்கள், உடலுறுப்புகளை ஆட்கொண்டு துயரத்தை உணர வைக்கும் என்று வேதம் சொல்லும்.

நமது துயரத்துக்கு நமது செயல்பாடுகளே காரணம். ஊனமும் அப்படியே! பார்வை இல்லாதவருக்கு, நல்ல பார்வை உள்ள குழந்தையும், உடல் ஊனமுற்றவருக்கு, ஊனம் இல்லாத- ஆரோக்கியமான குழந்தையும் உண்டு. வாய் பேச முடியாத தம்பதியரின் குழந்தை நன்றாகப் பேசும்! ஒருவர் ஊனமுற்றவராக இருந்தாலும் அவரது சுக்கிலம் குறை இல்லாமல் இருந்தால், அவரின் குழந்தையிடம் ஊனம் இருக்காது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ராமர் கட்டிய பாலத்தை அவரே அழித்துவிட்டாரா?

எனக்கு, திருப்பதிக்குச் சென்று ஏழுமலையானை தரிசிக்க ஆசை. ஆனால், 'எங்கள் குடும்ப வழக்கப்படி திருப்பதிக்குச் செல்லக்கூடாது' என்கிறார்கள்.

'ஏன் அப்படி?' என்று விசாரித்ததில், 'எங்கள் மூதாதையர், திருப்பதி ஏழுமலையானுக்குச் செலுத்த வேண்டிய நேர்த்திக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கடனை செலுத்த முடியாமல் போனதால், தற்போதும் திருப்பதிக்குச் செல்லக்கூடாது!' என்கிறார்கள்.

நான் என்ன செய்வது? ஏதேனும் பரிகாரம் செய்துவிட்டு திருப்பதிக்குச் சென்று வரலாமா?

- கி.ரகுராமன், சேலம்-8.

நேர்த்திக்கடனை செலுத்த முடியாமல் போனது என்பதற்காக, அந்தக் கடவுளை அறவே புறக்கணிப்பது தவறு.

மனம் ஒருமுறை தவறிழைக்கும். அதற்கு சூழலும் ஒரு காரணம். உங்கள் மூதாதையர் விஷயத்திலும் அப்படித்தான். அந்தக் கடவுளையே அணுகி மன்னிப்புக் கோரினால், தவறு மறைந்துவிடும். தொடர்ந்து, நீங்கள் கடைப்பிடிக்கும் நேர்த்திக் கடனில் ஏற்படும் தடங்கல்களையும் அவர் அகற்றிவிடுவார்.

எங்கும் நிறைந்த கடவுளை, குறிப்பிட்ட இடத்தில் குடியிருத்தி வழிபடுவது நமது மரபு. ஏழுமலையானிடம் நமக்கு இருக்கும் தனி ஈர்ப்பு, அவனை குலதெய்வமாகப் பார்க்க வைக்கிறது. தவறு செய்த பிள்ளைகள் தாய் - தந்தையை அணுகுவதுபோல், எந்தத் தயக்கமும் இல்லாமல் அந்த இறைவனை அணுகுவது சிறப்பு.

தாங்கள் திருப்பதி சென்று முன்னோர் செய்த தவறுகளை அழித்துவிடுங்கள். அவன் அநாத ரட்சகன், ஏழைப் பங்காளன்! மன்னிப்பது அவன் இயல்பு! எனவே, சந்தோஷமாக திருப்பதிக்குச் சென்று வாருங்கள்.

பூக்களைப் பிய்த்து, அவற்றின் இதழ்களைக் கொண்டு ஸ்வாமி படங்களுக்கு அர்ச்சனை செய்யலாமா?

- மாலதி சந்திரசேகர், பெங்களூரு-34.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'பூ மென்மை, நினது திருப்பாதங்களும் மென்மை, எனது இதயம் மென்மை. விருப்பம் - பக்தி கலந்த மென்மையான இதயத்தை, பூக்களின் வாயிலாக தங்களது பாதத்தில் சேர்த்து விட்டேன்!' என்ற எண்ணத்துடன் அர்ச்சனை செய்ய வேண்டும். மனம் பக்தியில் மட்டுமே மூழ்கியிருந்தால் இதுபோன்ற ஆராய்ச்சியில் ஈடுபடாது.

சாமந்தி, துளிர்க்கும் சாமந்தி, சங்க புஷ்பம், தெச்சிப்பூ, பாரிஜாதம் போன்ற மலர்களை, இதழ்களாகக் கிள்ளாமல் அர்ச்சனையில் பயன்படுத்த வேண்டும். தாமரை, செம்பருத்தி, தாழம்பூ ஆகியவற்றை இதழ்களாக மாற்றுவதில் தவறில்லை.

பூக்கள் தட்டுப்பாடாக இருக்கும் சூழ்நிலையில், அவற்றைப் பிய்த்துப் பயன்படுத்தத் தோன்றும். பூக்கள் தீர்ந்துபோனால் அட்சதையைப் பயன்படுத்தலாம். அதுவும் தீர்ந்துவிட்டால், குங்குமம் பயன்படுத்தலாம்.

எதுவும் இல்லையெனில், பக்தியுடன் பகவான் நாமத்தை மட்டும் கூறி அர்ச்சிக்கலாம்; தவறில்லை. அதற்காக, செயற்கையான தட்டுப்பாட்டை வரவழைக்கக் கூடாது. ஈடுபாடு இருந்தால், தட்டுப்பாடு முளைக்காது.

கோயில் தூண்கள் மற்றும் சிறு சிறு தெய்வங்களின் பாதங்களில், பக்தர்கள் கொட்டி வைத்திருக்கும் குங்குமம், மஞ்சள் பொடி போன்றவற்றை எடுத்து நெற்றியில் இட்டுக்கொள்ளலாமா? இதனால் அவர்களது பிரச்னைகள்-பாவங்கள் நம்மைத் தொடருமா?

- ஆர்.பிருந்தா ரமணி, மதுரை-20.

பிரச்னைகள் அவரவர் மனதில் தோன்றுவது. அதற்கும் கடவுள் பிரசாதத்துக்கும் தொடர்பு இல்லை.

சிலர், வேண்டுதல் நிமித்தமாக இறைவனுக்கு சர்க்கரைப் பொங்கல் படைப்பார்கள். அதை விநியோகிக்கவும் செய்வார்கள். உடனே, 'அவர்கள் தங்கள் பிரச்னைகளை சர்க்கரைப் பொங்கல் வாயிலாக பகிர்ந்தளிக்கிறார்கள்!' என்று சொல்ல முடியுமா?!

பிரச்னையில் சிக்கும் மனம், இறைவனுக்கு பிரசாதம் படைத்து ஆராதனை செய்ததும், 'அவன் அருளால் அனைத்தும் நலமாகும்' என்று ஆறுதல் அடையும்.

பாவம் தீர கங்கையில் நீராடுகிறோம். உடனே நமது பாவங்கள்... அடுத்து நீராட வருபவனை பற்றிக்கொள்ளும் என்று கூற முடியுமா? அது அறியாமை அல்லவா?

உப்பு கலந்த நீரை உறிஞ்சி, மேகமாக மாற்றுகிறான் ஆதவன். மழை பொழியும்போது தித்திப்பான நீர் கிடைக்கும். ஆதவனின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கதிர் பட்டு, அதன் மாசு முற்றிலும் அகன்றுவிடும். அதுபோல், கடவுளின் கண் பட்டு பிரச்னைகள் மறைந்துவிடுகின்றன.

பிறகு எப்படி, அந்த பிரச்னைகள் மஞ்சளிலும் குங்குமத்திலும் ஒட்டிக்கொள்ளும்?! தங்கள் மனம் தடுமாறுகிறது. மாற்றிக் கொள்ளுங்கள்.

நெற்றியில் வைத்துக்கொண்ட பிறகு, மீதி இருக்கும் பிரசாதத்தை என்ன செய்வது என்று அறியாமல், கடவுளின் பாதத்தில் கொட்டுகிறார்கள் சிலர். அதை, வேறு வழியில் பயன்படுத்துவதை அபசாரம் என்று எண்ணத் தோன்றும். அந்தப் பிரசாதத்தை மற்றவர் ஏற்றுக்கொள்வதில் தவறு இல்லை.

பெருமாள் கோயில் வழிபாட்டின்போது கன்னத்தில் போட்டுக்கொள்வது தவறு என்கிறார்களே... அப்படியா?

- ஆர்.இராஜேஸ்வரி, எரகுடி.

ஆகமங்களே வழிபாட்டு முறைகளை பரிந்துரைக்கின்றன. பக்தர்களது செயல்பாடுகள் வெறும் சம்பிரதாயமே. பக்தியின் அடிப்படையில் அவர்களது செயல்பாடுகள் ஏற்கத் தக்கவை. சம்பிரதாயத்தின் மாறுபாடு இலக்கைப் பாதிக்காது. எனவே, தங்கள் விருப்பப்படி செயல்படலாம்.

ஸ்ரீராமநாமம் காதில் விழுந்ததும், கைகளைத் தலைக்கு மேல் தூக்கி வணங்குவாராம் அனுமார்! அதுபோல், கன்னத்தில் போட்டுக்கொள்வதும் பக்தியின் வெளிப்பாடு!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தவறிழைத்தவன், 'தப்பு தப்பு' என்று கன்னத்தில் போட்டுக் கொள்வான். பேரழகைப் பார்த்த பூரிப்பில், கன்னத்தில் கைவைத்து பிரமிப்பதும் உண்டு. மனதில் தோன்றும் எண்ணங்களின் வெளிப்பாடு அது.

சில பக்தர்களுக்கு பெருமாளிடம் ஈர்ப்பு. சிலருக்கு, ஈசனிடம் ஈர்ப்பு. இன்னும் சிலர் முருகனை வழிபடுவார்கள். அம்பாளை பரம்பொருளாகப் பார்ப்பவர்களும் உண்டு. 'வடிவங்கள் வேறு; பரம்பொருள் ஒன்று!' என்று வேதம் சொல்லும்.

எனவே, தங்களுக்குப் பிடித்தமான தெய்வங்களை, மனதுக்குப் பிடித்த வழியில் வழிபடுவதில் தவறில்லை. வழிபாட்டு முறைகளில் ஆராய்ச்சியைத் தவிருங்கள். மனதை ஒருநிலைப்படுத்தி வணங்கப் பழகுங்கள்.

***கு**ங்குமம், விபூதி ஆகியவற்றை நெற்றியில் இடும்போது, முதலில் விபூதியைப் பூசிவிட்டு அதன்கீழ் குங்குமம் தரிக்க வேண்டுமா அல்லது குங்குமத்தின் கீழ் விபூதியைப் பூச வேண்டுமா?*

- என்.ராமச்சந்திரன், பெங்களூரு-93.

நெற்றியில் விபூதி பூசும்போது, சுட்டு விரல், நடு விரல் மற்றும் மோதிர விரல் ஆகிய மூன்று விரல்களால்... மூன்று கோடுகளாக இடமிருந்து வலமாக பூச வேண்டும். குங்குமத்தை இரு புருவங்களின் மத்தியில் வைத்துக்கொள்ளலாம்.

சம்பிரதாயத்தை ஒட்டி... முதலில் எதை வைப்பது என்பதை முடிவு செய்யலாம். நெற்றியில் திலகம் வேண்டும். விபூதி, திருமண், கோபி போன்றவற்றை நெற்றியில் இடுவது குறித்து சிறந்த நடைமுறைகள் உண்டு. அதைப் பின்பற்ற வேண்டும்.

கோயிலில் வழங்கப்படும் சந்தனம், குங்குமம் போன்ற பிரசாதங்களை புருவ மத்தியில் மட்டும் வைத்தால் போதுமானது.

விருப்பப்படி நெற்றியில் இட்டுக்கொள்வதை சாஸ்திரம் எதிர்க்காது. எனினும், உரிய நியதிகளை பின்பற்றுவது சிறப்பு.

***பி**ல்லி - சூனியம் ஏதும் இல்லை என்பதே தங்களின் ரத்தினச் சுருக்கமான பதில்! ஆனால், கந்தசஷ்டி கவசத்தில், 'பில்லி சூனியம் பெரும் பகை அகல...' என்றொரு வரி வருகிறதே?!*

- கமல்மணி, திருச்சி-2.

ஒருவருக்கு மன நோய். மருத்துவர்கள் எவ்வளவோ முயன்றும் அதற்கான காரணத்தை அறிய முடியவில்லை. இந்தச் சூழலில் பில்லி - சூனியத்தை சுட்டிக்காட்டி காரணத் தேடுதலுக்கு முற்றுப்புள்ளி வைப்பது உண்டு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தப்பான உணவு முறைகள், தவறான சிந்தனைகள், காலத்தின் மாறுபாடு போன்றவை பிணிகள் ஏற்படக் காரணமாக இருக்கலாம். ஆனால், இவற்றில் ஒன்றுகூட இல்லாமல் பிணி தென்படுகிறது எனில், அதற்குக் காரணம் கர்ம வினையே என்பது ஆயுர்வேதத்தின் கருத்து.

காரணம் இல்லாமல் காரியம் நிகழாது. இங்கு காரியம்... அதாவது, பிணி இருக்கிறது. அதற்குக் காரணமும் நிச்சயம் இருக்க வேண்டும். மன நோய் ஏற்படும் அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் காரணங்களாக பயம், ஆச்சரியம், அருவருப்பு போன்றவற்றைச் சொல்லலாம். இவற்றின் தாக்கம், மனதைப் பாதிக்கும். அது பிணியாக மாறும்.

கொடூரமான - பயப்பட வைக்கும் உருவத்தைப் பார்த்த குழந்தை அலறிவிடும். அதற்கு ஜுரம்கூட வந்துவிடும்! பயத்தின் தாக்கம் மனதில் புகும். ஆனால், அது நமக்குத் தெரியாது.

இப்படி, வெளியிலிருந்து வரும் எதிரிடையான தாக்கம், மனதை தாக்கும். அவற்றுக்குக் காரணம் புலப்படாததால், பில்லி-சூனியத்தைக் காரணமாக்கிவிடுவதும் உண்டு. பாமரர்களில் வேரூன்றிய சில நம்பிக்கைகளை அகற்றுவது கடினம். அவற்றை அகற்ற முற்படுவதைவிட, அதற்கு உகந்த பரிகாரத்தில் ஈடுபட்டு, விடை காண்பது எளிது.

நாம் பிணியில் இருந்து விடுபட வேண்டும். காரணத்தை ஆராய்வதில் காலம் கடத்தாமல், அதற்கு உகந்த மருத்துவத்தால் வெற்றி காண்பது அழகு.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பாலன் தேவராயர் தனது பாட்டில் (கந்தசஷ்டி கவசத்தில்) அப்படிக் குறிப்பிட்டதில் தவறில்லை.

பெரும்பாலான மக்களுக்கு அதில் அசையாத நம்பிக்கை இருப்பதால், அவர்களது போக்கில் - அவர்களுக்குப் பழக்கப்பட்ட பெயரில் சுட்டிக்காட்டுவதில் தவறு இல்லை.

'இல்லாத ஒன்று மாயை. அதைக் குறிப்பிட்டு அதை அகற்றுகிறேன்!' என்று சொல்வதுண்டு. சாஸ்திரங்களுக்குப் புறம்பான நம்பிக்கைகள் ஏராளம். அவற்றுள் பில்லி - சூனியமும் ஒன்று.

பாகவத புராணத்திலிருந்து நரகாசுரனின் மகன் பகதத்தன் என்று தெரிகிறது. அவனின் தாய்... அதாவது, நரகாசுரனின் பட்டத்தரசியின் பெயர் என்ன?

- சின்னஞ்சிறுகோபு, மயிலாடுதுறை.

விதர்ப்ப தேசத்து இளவரசி 'மாயா' நரகாசுரனின் பட்டத்தரசி. பகதத்தனின் தாய்.

ஸ்ரீராமன் கட்டிய (சேது) பாலத்தை... இலங்கையில் இருந்து திரும்பும்போது, அவரே அழித்துவிட்டதாகச் சொல்கிறார்களே... அப்படியா?

- சம்பந்தம்.

தவறான தகவலை வைத்து கேள்வி எழுப்புகிறீர்கள். 'சேதுவில் நீராடுவதும், சேது தரிசனமும் சிறப்பு' என்கின்றன புராணங்கள். நாம் செய்த தவறுகளுக்குப் பரிகாரமாக சேது தரிசனம் சொல்லப்பட்டிருக்கிறது.

தனுஷ்கோடியை கடல்கொண்டது அனைவருக்கும் தெரியும். நீரில் மூழ்கியிருக்கும் பாலத்தை அழித்துவிட்டதாகச் சொல்வது பொருந்தாது.

மண்ணில் உருவான லிங்க வடிவம் அப்படியே நிலைத்துவிட்டது. ஸ்ரீராமனின் கைப்பட்டதும் அதற்கு சிரஞ்ஜீவித்வம் வந்து விட்டது. அதுபோல், ஸ்ரீராமனின் பார்வையில் உருவான (சேது) பாலமும் இன்றும் கடலுக்கடியில் உண்டு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விகடன் பிரசுரம்



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆறு, குளக்கரையில் விநாயகர் எழுந்தருளியது ஏன்?

என் தாத்தாவுக்கு 105 வயது. 'நூறு வயதானால் புதிதாகப் பிறந்ததுபோல்... ஆகையால், அவருக்கு புனருபநயனம் செய்ய வேண்டும்' என்கிறார் எங்கள் சாஸ்திரிகள். இதுகுறித்து, தங்களது விளக்கத்தை வேண்டுகிறேன்!

- ப்ரியா ரவிசங்கர், புது டெல்லி-57.

புனருபநயனத்துக்கு, வயதை ஒரு காரணமாக தர்ம சாஸ்திரம் சொல்லவில்லை. தனிப்பிறவி எடுத்த த்விஜனுக்கு அதாவது இரட்டைப் பிறவி பெற்றவருக்கு (100 வயதைக் கடந்தவனுக்கு) புனருபநயனம் மூலம் மூன்றாவது பிறவியை நுழைத்தால், அவனது தனிப்பிறவி பெருமை அழிந்துவிடும்.

ஆதாரமற்ற தகவல்களை வைத்துச் செயல்படுவது தவறு. தங்களுக்குத் தகவல் தந்த சாஸ்திரிகளிடம் தகுந்த சான்றைப் பெற்று தெளிவு பெறுங்கள். 'எதைச் செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது என்பதற்கு தர்ம சாஸ்திரமே சான்று!' என்ற ஸ்ரீகண்ணனின் வாக்கை நினைவுகூர்ந்தால், மனம் சந்தேகத்தில் இருந்து விடுபடும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பெரும்பாலான ஊர்களில், ஆறு மற்றும் குளக்கரையில்தான் ஸ்ரீவிநாயகப் பெருமான் எழுந்தருளியுள்ளார். இதற்கான காரணம் என்ன?

- ஏ.வெங்கட்ராமன், மயிலாடுதுறை-1.

'**பா**ர்வதிதேவி, நீராடும் வேளையில் தனது பாதுகாப்புக்காக ஒரு புதல்வனைத் தோற்றுவித்தாள். அவரே நாம் வணங்கும் பிள்ளையார்' என்கிறது சிவபுராணம். எனவே, அவர் நீர்நிலைகளின் கரையில் எழுந்தருளியிருப்பது சிறப்பு. 'முதல் படைப்பு நீர்!' என்கிறது வேதம் *(ஆபோவா இத மக்ரே ஸலிலமாஸீத்)*. பரம்பொருளில் முதல் தோற்றம் பிள்ளையார். முதலும் முதல்வனும் அருகருகே இருப்பது சிறப்புதானே!

சைதன்யமும் ஜடப்பொருளும் சேரும்போது... அதாவது, சிவனும் பார்வதியும் சேரும்போது புதுப்பொருள் ஒன்று தோன்றும். அப்படித் தோன்றியவரே முழுமுதற் கடவுளான பிள்ளையார். நீரில் அத்தனை தேவதைகளும் குடிகொண்டுள்ளன என்று வேதம் கூறும் *(ஆபோவை ஸர்வா தேவதா:)* அத்தனை ஜீவராசிகளது மொத்த உருவம் பிள்ளையார். மனித ரூபமும் விலங்கு ரூபமும் இணைந்த வடிவானவர். எல்லா உயிரினங்களும் தன்னுள் அடக்கம் என்பதைச் சொல்லாமல் சொல்கிறார்.

மனிதன் வேள்வியில் பங்கு பெறுகிறான். யானைக்கும் அதில் பங்கு உண்டு *(ஹிமவ தோஹஸ்தீ)*. கழுத்துக்குக் கீழே- மாயை; தலை - பரம்பொருள் என்று பிரபஞ்சத்துடன் விளங்கும் பரம்பொருளாக ஸ்ரீவிநாயகரைப் பார்க்கிறது புராணம் *(கண்டாதோ மாயயா யுக்தம் மஸ்தகம் பிரம்ம வாசகம்)*.

அறிவுப் புலன்கள் கழுத்துக்கு மேலும், செயல் புலன்கள் உடலிலும் இருக்கும். வேதம் சொல்லும் கர்ம காண்டம் மற்றும் ஞான காண்டம் என்ற பிரிவுகளே உடலும், தலையுமாகக்



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காட்சியளிக்கின்றன. வேதத்தின் கடைசிப் பகுதி உபநிடதம். அதற்கு, 'வேத சிரஸ்' என்று பெயர். இது, அளவிலும் கருத்தாழத்திலும் மிகப் பெரியது. இதை சுட்டிக்காட்ட யானைத் தலையுடன் பிள்ளையார் காட்சியளிப்பது பொருந்தும். உடல் செயல்பட தலையும்; தலை செயல்பட உடலும் வேண்டும். அதாவது உழைப்பும் (செயல் புலன்களும்) வேண்டும்; அறிவும் (அறிவுப் புலன்கள்) வேண்டும். காலையில் நீராடியதும், நமது உழைப்பும் அறிவும் சிறப்புற்று விளங்க ஸ்ரீவிநாயகரைப் பணிவது சிறப்பு. அதற்கேற்ப நீர்நிலைகளின் அருகில் அமர்ந்து நமக்காகக் காத்திருக்கிறார் அவர்.

அரசமரம் வேள்விக்குப் பயன்படும். மும்மூர்த்திகளின் மொத்த உருவம் அது *(மூலதோ பிரம்ம ரூபாய மத்யதோ விஷ்ணு ரூபிணே. அக்ரத: சிவரூபாய விருக்ஷ ராஜா யதே நம:)*. 'முத்தொழிலுக்கும் நானே பொறுப்பு!' என்பதுபோல் அதன் அடியில் அமர்ந்து அருள்பாலிக்கிறார் பிள்ளையார். நீராடியவுடன் முதல் வேலையாக ஸ்ரீவிநாயகரை வலம் வந்து தலையில் குட்டிக்கொள்ள வேண்டும். வலம் வருவது நமது உழைப்பைச் சிறப்பிக்க. தலையில் குட்டிக்கொள்வது நமது சிந்தனையைச் சிறப்பிக்க. ஆம், நமது அடிப்படைத் தேவையை முழுமையாக அளிப்பவர் பிள்ளையார்!

நெருப்பில் தோன்றிய முருகன், சரவணப் பொய்கையில் உருப்பெற்றார். நீரில் தோன்றிய தாமரையில் பிரம்மன் வீற்றிருக்கிறார். பாற்கடலை இருப்பிடமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார் ஸ்ரீமந் நாராயணன். மலையில் இருந்தாலும், தலையில் கங்கையைச் சுமக்கிறார் ஈசன். இந்த தெய்வங்கள் அனைவருமே படைப்புக்கு ஆதாரமான நீருடன் இணைந்திருப்பவர்கள். மும்மூர்த்திகளை, அவர்களது இருப்பிடம் சென்று வணங்குவது சிரமம். ஆனால், மும்மூர்த்திகளின் இணைப்புடன் விளங்கும் மோதகப்பிரியனை வணங்குவது சுலபம். கருணைகூர்ந்து நாம் நீராடும் இடத்துக்கே வந்து அருள் பாலிப்பது அவரது தனிச்சிறப்பு.

ஆட்டைப் போல் உணவு உட்கொள்ள வேண்டும். யானை போல் நீராட வேண்டும் என்று சொல்வதுண்டு *(அஜவத்*

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சர்வணம் குர்யாத் கஜவத் ஸ்னானமாசரேத்).

தாவரங்களை உணவாக ஏற்கும் யானை, கையால் (துதிக்கையால்) உணவை எடுத்து உட்கொள்ளும். மனிதனும் அப்படியே! இந்த தகவலையும் உணர்த்துகிறது கணபதியின் யானை முகம்!

'மோதகம்' என்றால், 'சந்தோஷம்' என்று பொருள். அதைக் கையில் ஏந்தி, தம்மை அடிபணிபவர்களுக்கு அளிக்கிறார் பிள்ளையார். மோதகத்துக்கு உள்ளே இனிப்பான 'பூர்ணம்' உண்டு. தம்மிடம் அடைக்கலம் தேடி வருவோருக்கு பூர்ணத்தை அதாவது முழுமையை அளிக்கிறார் என்றும் சொல்லலாம். இத்தகைய சிறப்புகள் வாய்ந்த பிள்ளையாரை, நாம் நீராடியவுடன் வணங்க வேண்டும் என்று நம் முன்னோர்கள் எண்ணினார்கள். அதன் விளைவு... ஆற்றங்கரையிலும் குளத்தங்கரையிலும் அவரது திருவுருவம் அருள்பாலிக்கிறது.

பிள்ளையார் சதுர்த்தியை ஒட்டி, சுத்தமான மண்ணில் விநாயகர் உருவம் செய்து, வழிபாட்டுக்குப் பிறகு நீர்நிலைகளில் கரைத்து விடுவோம். விநாயகரின் உருவம் அமைக்க உதவுவது நீர். அதேபோல்... நீரில் அனைத்து தேவதைகளும் குடிகொண்டிருப்பதால், விநாயகரை நீரில் கரைப்பது தகும். 'அவர், தனது இருப்பிடத்தை அடைந்தார்!' என்பதே இதன் தாத்பரியம்! மண் பிள்ளையார் மட்டுமல்ல, மஞ்சள் பிள்ளையாரையும்... வழிபாடுகள் முடிந்தபிறகு நீரில் கரைப்பது உண்டு.

ஆற்றில் இருந்து சாளக்கிராமத்தைப் பெறுகிறோம். கோயில் உற்சவங்களில் ஆராட்டு, அதாவது நீர்நிலைகளில் நீராடச் செய்வது உண்டு. மண் அல்லாத இறை உருவங்களை நீராட்டி எடுத்து வருவதுண்டு. ஆனால், பிள்ளையார் மட்டும் மண்ணில் தோன்றி நீரில் கலக்கிறார். மண் பொருட்கள் நீரில் கலப்பது சிறப்பு. பாலிகைகளை நீரில் கரைத்து விடுவோம். உடல், பஞ்சபூதங்களில் பிருதிவி (மண்) அம்சமானது. அதன் அடையாளமான எலும்பை நீரில் கரைப்பது மரபு. வேள்வியும் நீராடலில் முற்றுப்பெறும். இதை, 'அவ பிருதஸ்நானம்' என்பர்.

குடமுழுக்கின்போது, நீரில் தங்கும் இறை சாந்நித்தியம் சிலைகளில் ஒன்றிவிடும். அன்றாடம் மண்ணால் லிங்க வடிவம் அமைத்து, வழிபட்ட பிறகு, நீரில் கரைப்பது உண்டு. மறை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஓதுபவர்கள் காலைக் கடனை துவக்கும்போது (அதிகாலை நீராடும் வேளையில்) தனது பவித்ர விரலால், *ஓம் ஸ்ரீகேசவாய நம:* என்று எழுதுவார். இதில் உள்ள பிரணவத்தில் பிள்ளையார் உறைந்திருக்கிறார்.

ஓங்காரத்தின் உட்பொருள் அவர். 'சூடு' என்ற இயல்பு, நெருப்பை விட்டு விலகாது. 'குளிர்ச்சி' தண்ணீரை விட்டு விலகாது. அதுபோல, 'ஓம்' என்ற பிரணவமும் பரம்பொருளை விட்டு விலகாது. பிள்ளையாரும் நீரோடு ஒன்றியிருப்பார். ஆகையால் அவரை நீர் நிலைகளின் அருகில் வைத்து வணங்குவது சிறப்பு.

மனிதனின் உடலில் அவனது உயிர் எங்கே ஒளிந்து இருக்கிறது?

- த.சத்தியநாராயணன், அயன்புரம்.

பாலில் - நெய், தேனில் - இனிப்பு, பூவில் - வாசம்... இவை கண்ணுக்குப் புலப்படாது. ஆனால், இவற்றை உணர முடியும். காற்று கண்ணுக்குப் புலப்படாது. செடி-கொடிகளும் இலைகளும் அசையும்போது அதை உணர்கிறோம். அதுபோல, உடல் இயங்கும்போது உயிரை உணர்கிறோம்.



பிராணன் அதாவது உயிர், நமது உடலில் ஐந்து இடங்களில் தங்கி நம்மை இயக்குகிறது. பிராணனே உடலை சுத்தப்படுத்தி இயங்க வைக்கிறது. அபானன், கழிவுப் பொருட்களை வெளியே தள்ளுகிறது. மூச்சு விடுவதையும், கண் இமைப்பதையும் போல பிராணனும் அபானனும் அனிச்சையாகச் செயல்படுவன. அவற்றின் செயல்பாடுகளே உயிர் இருப்பதற்கான அடையாளம்.

'பிராணனும் அபானனும் என்னை மரணத்திலிருந்து காப்பாற்றட்டும்' என்றொரு வேண்டுகோள், வேதத்தில் உண்டு. ஆக, பிராணன் - அபானன் ஆகியவற்றின் அளவான இயக்கம் உயிர். அவை தாறுமாறாக மாறினால் உயிர் பிரிந்துவிடும்.

நீராடிய பிறகுதான் கோயிலுக்குச் செல்ல வேண்டுமா?

- க.சு.மணியன், பெரணமல்லூர்.

ஊண்- உறக்கமும் இல்லாதவன் பொழுது புலர்ந்ததும் நீராடுகிறான். ஈசனின் தலையில் கங்கை உண்டு. ஆனாலும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கருவறையைத் திறந்ததும் அவனுக்கு நீராடல் உண்டு. அவன் நித்ய சுத்தன். அவனும் காலைப் பொழுதில் நீராட வேண்டும் என்று ஆகமம் சொல்லும்.

உண்டு உறங்குபவர்கள் நாம். காலையில் நம் உடலில் இருக்கும் 9 துவாரங்களில் இருந்தும் கழிவுகள் வெளியேறும். அப்போது நீராடினால், உடல் சுத்தமாகும். நித்யசுத்தனை, சுத்தமாக இருந்து வணங்க வேண்டும் அல்லவா? தவிர, கோயிலுக்குச் செல்வதற்காக மட்டுமல்ல...நமது சுகாதாரத்தை எண்ணி நீராட வேண்டும்.

வெறுமனே வாயை மட்டும் கொப்பளித்துவிட்டு காபி அருந்தக் கூடாது. நீராடிய பிறகே எதையும் உட்கொள்ள வேண்டும். தவறான நடைமுறைகளைப் பின்பற்றிப் பழக்கப்பட்டவர்களுக்கு சிரமமாக இருக்கும். எனினும், மூக்கிலும் காதிலும், ரோமக் கால்களிலும் கழிவுகளை வைத்துக்கொண்டு எப்படி காபி அருந்துவது? சிந்தித்துப் பாருங்கள்!

அன்றாடம் எழுந்தவுடன் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்று நீராடல். கோயிலுக்குப் போனாலும் போகாவிட்டாலும் கட்டாயம் நீராட வேண்டும். கோயிலுக்குப் போகும் முன் நீராடிச் செல்லுங்கள் உடல் சுத்தமாகும்; கோயிலில் அவனைத் தரிசிப்பதால் உள்ளமும் சுத்தமாகும்.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'சிவன் சொத்து குலம் நாசம்' என்கிறார்கள். எனில், அம்மன் மற்றும் பெருமாள் கோயில்களின் சொத்தை அபகரிப்பதில் தவறில்லையா? 'சிவன் சொத்து' என்று குறிப்பிட்டுச் சொல்வதன் அர்த்தம் என்ன?

- பூ.சீனிவாசன், சென்னை-26.

'திருமணமாகாத மங்கை அவள்! அவள் கையைப் பிடித்து இழுப்பது தவறு!' என்று சொன்னால்... உடனே, 'திருமணமான மங்கையை, கையைப் பிடித்து இழுக்கலாம்' என்று பொருள் கொள்ள முடியுமா? 'இங்கு எச்சில் துப்பாதே!' என்று எழுதியிருப்பார்கள். அதற்காக, மற்ற இடங்களில் எச்சில் துப்பலாம் என்று அர்த்தமாகுமா?

கோயில் சொத்தை அபகரிப்பது தவறு. அதில்... அம்மன் கோயில், பெருமாள் கோயில் என்றெல்லாம் பாகுபாடு கிடையாது. தர்ம சாஸ்திரம், பிறரது சொத்தை அபகரிப்பதை பாவமாகக் கருதும் *(பரத்ரவ்யாபஹரணம்)*. நமது மனம் தவறிழைக்கக்கூடாது என்பதற்காக... நீங்கள் சொல்வது போன்ற சில வாக்கியங்களை மிக அழுத்தமாக முன்னோர்கள் சொல்லி வைத்தனர். எனவே, எந்தக் கோயில் சொத்தை அபகரித்தாலும் குலம் நாசம்தான்! தவறு செய்த மனம், தவறான வழியில் சென்று குல நாசத்தை சந்திக்கும்.

தியாகத்துக்கு முன்னுரிமை அளிக்கும் வடிவம் சிவலிங்கம்; பக்தர்களுக்குப் பற்றற்ற நிலையை ஊட்டுவது. அவரிடம் வருபவன் பற்றற்று இருக்க வேண்டும். அவரின் அடியார்களுக்கு, பற்று மிகுதியால்



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பொருளைக் கவரும் எண்ணம் வரக்கூடாது. அப்படி வந்தால், குலமே அழியும் என்று எச்சரிக்கையாகவும் அந்த வாக்கியத்தை எடுத்துக்கொள்ளலாம்.

ஈட்டிய பொருளை, தேவைப்படுபவர்களுக்குப் பகிர்ந்தளிப்பது நல்லறம். தன்னிடம் உள்ள அனைத்தையும் பிறருக்கு அளிப்பவன் ஈசன். அவனது பொருளைக் களவாடுவது பாவம் என்பதால், அந்தச் சொற்றொடர் அர்த்தம் மிகுந்ததாகத் திகழ்கிறது.

அஷ்டபதி பஜனையை பொருளுணர்ந்து சரியான உச்சரிப்புடன் பாடுபவர்கள் மிகக் குறைவு. சிலர், அஷ்டபதி பாடல்களைத் தவறான உச்சரிப்புடன் பாடுகிறார்கள். இதைத் தடுப்பது எப்படி?

- எல்.சத்யா, குடந்தை-1.

பொருள் உணர்ந்து சரியான உச்சரிப்புடன் பாடுவதே சிறப்பு. சம்ஸ்கிருத மொழியில் இருப்பது அஷ்டபதி. தற்காலத்தில் சம்ஸ்கிருதம் பயின்றவர்கள் மிகக் குறைவு. மொழியில் பரிச்சயமில்லாதவர்களிடம் உச்சரிப்பு மாறுபடுவது இயல்பு. ஆனால், அவர்கள் மனம் சரியாக உச்சரிப்பதாகவே எண்ணும்.

இந்தி பேசுபவன் தமிழில் பேசும்போது, உச்சரிப்பு மாறுபடும். ஆனால், அதன் கருத்து நமக்குப் புரியும். உச்சரிப்பில் கவனம் செலுத்தும்படி நிர்பந்தித்தால், பாட்டு சிதறிவிடும். பாடல், அதன் இலக்கணத்துடன் அமைய வேண்டும். பாடுவதற்காகவே ஏற்பட்டது அந்த சாகித்யம். மொழியின் உச்சரிப்பை உணர்ந்து பாடுவதுதான் சிறப்பு. ராகத்தின் இலக்கணத்துடன் பாடும் தறுவாயில்... சில நேரம் சாகித்தியத்தில் இருக்கும் வார்த்தைகள் பொருளற்ற முறையில் பிரிந்துவிடும். ஆனால், பாட்டில் ஒன்றியவனுக்கு அதன் பொருள் தெரியும். அதாவது பொருள் தெரிந்தும், பாட்டுக்காக வார்த்தைகளைப் பிரிக்க வேண்டி வரும். அதை குறையாகக் கருதுவதில்லை. *ப்ருஹி முகந்தேதி* என்பது, '*ப்ருஹி முகும்... தேதி*' என்று மாறுவது உண்டு. *ராதாரமண ஹரே ராமேதி* என்பதை, *ராதா ரமணஹ... ரே ராமேதி* என்றும் பாடுவது உண்டு. பாட்டின் கட்டுப்பாட்டில் குறைபோல் தோன்றினாலும் உண்மையில் குறைபாடு இல்லை.

எனவே, உச்சரிப்பு சுத்தமில்லை என்றாலும் பாட விடுங்கள். காலப்போக்கில், படிப்படியாக உச்சரிப்பு சரியாகும். பாடுபவரை பயமுறுத்தி அவர்களை விலக்கி விடாதீர்கள். 'பாடலில் உச்சரிப்பு சுத்தம் வேண்டும்!' என்று நீங்கள் விரும்பினால், அவனது மொழியில் சாகித்தியத்தை இயற்றிப் பாட வையுங்கள். தங்களது எண்ணம் ஈடேறும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரட்டை வாழைப்பழங்களை சாப்பிடக் கூடாதா?

தேவி உபாசகர், ஆஞ்சநேயர் உபாசகர் என்கிறார்களே... உபாசனை என்றால் என்ன? உபாசகம் பெறுவது எப்படி?

- புவனா பார்த்தசாரதி, திருச்சி-19.

குறிப்பிட்ட கடவுளின் திருவடிவத்தால் ஈர்க்கப்பட்டு, அந்தத் திருவடிவையே பரம்பொருளாகக் கொண்டு உடல், உள்ளம் மற்றும் சொல்லால் வழிபடுவதே உபாசனை. அதாவது, நம்பிக்கையின் அடிப்படையில் ஓர் இறை உருவத்தை ஒன்றிய மனதுடன் வழிபடுவதற்கு, 'உபாசனை' என்று பெயர்.

தெய்வ உபாசனை, பிறப்பை முழுமையாக்கிக் கொள்ளப் பயன்படும். இதை, பிறவிப் பயனை அடையும் வழியாக சித்திரிப்பர். ஆம்... உபாசகன், 'எல்லாம் அவன் செயல்' என்ற உணர்வில் ஊன்றி, இறைவனின் அருளுக்குப் பாத்திரமாகிறான்.

உபாசனைகளுக்கு ஆதாரம், தந்திர சாஸ்திரம். இது ஒரு தனிப்பிரிவு. வழிபாட்டு முறை, ஜபிக்க வேண்டிய மந்திரம் முதலியவற்றை தந்திர சாஸ்திரம் எடுத்துரைக்கும். தங்களுக்குப் பிடித்த இறை வடிவம் - தெய்வம் எதுவோ, அதற்குரிய மூலமந்திரத்தை, தகுந்த குருவிடம் உபதேசம் பெற்று தந்திர

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சாஸ்திர முறைப்படி வழிபட்டால், தாங்களும் உபாசகர் ஆகலாம்.

ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருக்கும் இரட்டை வாழைப் பழங்களை சாப்பிடக் கூடாதாமே... அப்படியா?

- ஆர்.சௌந்தரராஜன், நங்கநல்லூர்.



ஒட்டிப் பிறந்த குழந்தைகளை ஒதுக்கி விடுகிறோமா? இல்லையே! ஆகவே, பழங்கள் ஒட்டியிருப்பது கெடுதல் அல்ல; உட்கொள்ளலாம்.

எல்லோருக்குமே இரட்டைக் குழந்தைகள் பிறப்பதில்லை. சில பேருக்கு மட்டுமே இரட்டை குழந்தைகள் பிறக்கும். இரண்டு குழந்தைகளை ஒருசேர பராமரிப்பது கடினம். இதை மனதில் கொண்டு, 'இரட்டை பழத்தை சாப்பிடாதே; இரட்டைக் குழந்தைகள் பிறக்கும்!' என்று ஆதாரம் இல்லாத சொல் வழக்கு கிராமங்களில் உண்டு.

'ஒருத்தி தலையில் வைத்த பூவை, மற்றொருத்தி வைத்துக் கொண்டால், அவளுக்குக் கல்யாணமான ஒருவனே கணவனாக வாய்ப்பான்!' என்றொரு சொல் வழக்கும் பாமரர்களிடையே உண்டு. இந்தத் தகவல்களில் தர்ம சாஸ்திரத்துக்கு உடன்பாடு இல்லை.

சிலர், ஒட்டிக்கொண்டிருக்கும் விரல்களுடன் பிறப்பது உண்டு. இன்னும் சிலருக்கு, ஆறாவதாக ஒரு விரல் தென்படும். இதுபோன்ற விஷயங்களை அதிர்ஷ்டமாகவும் துரதிருஷ்ட அம்சங்களாகவும் பேசுவதும் உண்டு.

'மாறு கண்' குறைபாட்டுடன் பிறந்தவர்களை, இகழ்ச்சியாகப் பார்ப்பவர்களும் உண்டு; புகழ்ச்சியாக பேசுபவர்களும் உண்டு. பிறப்பில் ஏற்படும் இதுபோன்ற மாறுதல்களுக்கு எந்தவிதத் தனிப் பயனும் இல்லை. அதுபோலவே இரட்டைப் பழங்களும்! அவற்றை ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்காக... இரட்டை வாழைப்பழத்தைத் தேடி வாங்கிச் சாப்பிடவும் அவசியம் இல்லை!

நீராடிய பிறகு, ஈரத் துண்டைக் கட்டியபடியே (ஒற்றை வஸ்திரத்துடன்) ஸ்வாமிக்கு அபிஷேகம் - அர்ச்சனை செய்யலாமா?

- மாலதி சந்திரசேகர், பெங்களூரு-34.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy





உலர்ந்த உடைகளுக்குத் தட்டுப்பாடு, கடவுள் வழிபாட்டில் அவசரம் மற்றும் பரபரப்பு, தர்ம சாஸ்திரம் எதை விலக்கச் சொல்கிறதோ அதை ஏற்று செயல்படும் பிடிவாதம்... இவை அத்தனையும் தங்கள் மனதை பாதித்திருப்பது, உங்களின் கேள்வியிலேயே தெரிகிறது!

உடை இல்லாமல் குளிப்பது தவறு. குளித்த பிறகு, துடைத்துக் கொள்ள வேறு துணியைப் பயன்படுத்த வேண்டும்; குளிக்கும் போது இடையில் உடுத்தியிருக்கும் துணியாலேயே துடைத்துக் கொள்ளக் கூடாது! குளித்த பிறகு உலர்ந்த ஆடையையே அணிய வேண்டும். ஈர ஆடை அணிவது, சாஸ்திரத்துக்கு மட்டுமல்ல... ஆரோக்கியத்துக்கும் எதிரானதுதானே!

கடவுளை வழிபடும்போது, உடுத்தியிருக்கும் உடையைத் தவிர மற்றோர் ஆடை... இடுப்பிலோ தோளிலோ இருக்க வேண்டும். பூஜையில் ஈடுபடுவோர் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகள் இவை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குளிப்பதும் வழிபடுவதும் அவசரமும் பரபரப்பும் இல்லாமல் இருக்க வேண்டும். உடல் தூய்மை, உள்ளத் தூய்மை இரண்டும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு ஆதாரம். அவற்றை ஒப்புக்குக் கடைப்பிடிக்காமல் முனைப்போடு செயல்படுத்த வேண்டும். எனவே, உலகவியலுக்கு முன்னுரிமை அளித்து, ஆன்மிக வாழ்க்கையை அசட்டை செய்யாதீர்கள். ஆன்மிகத்தோடு கலந்தால் உலகவியல் இனிக்கும்.

எனது சகோதரர் சென்னையிலும், நான் திருக்கோவிலூரிலும் தனித் தனிக் குடும்பமாக வசிக்கிறோம். நான், சென்னைக்குச் சென்று என் சகோதரருடன் சேர்ந்து, எங்கள் பெற்றோருக்குரிய சிராத்தத்தை செய்கிறேன். பெற்றோர் சிராத்தத்தை நாங்கள் இருவரும் சேர்ந்து செய்வது நல்லதா? அல்லது தனித் தனியே செய்ய வேண்டுமா?

- ஆர்.சிவகுமார், திருக்கோவிலூர்.

சமையலும் இருப்பிடமும் தனியானால், நீங்கள் இருவரும் தனித் தனியாகவே சிராத்தம் செய்ய வேண்டும். தாய் - தந்தையர்களின் சொத்தில் மட்டுமல்ல... சிராத்த கடமைகளிலும் சகோதரர்கள் அனைவருக்கும் பங்கு உண்டு. சட்டி இரண்டானால் சிராத்தம் இரண்டு. அதாவது சமையல் தனியாக மாறிவிட்டால் சிராத்தமும் இரண்டாக மாறும். மாற்றுக் கருத்துகளை தர்ம சாஸ்திரம் ஏற்காது.

ருத்ராட்சம் மின்காந்த சக்தி கொண்டது. எனவே, ருத்ராட்சம் ஊற வைத்த நீரைப் பருகினால் உயர் ரத்த அழுத்த நோய் குணமாகும் என்றும், 4, 5 மற்றும் 6 முக ருத்ராட்சங்களை அணிவதால் கல்வி மேம்படும்; ஞாபக சக்தி அதிகரிக்கும் என்றும் கூறுகிறார்களே... உண்மையா?

- மீ.ஞானசம்பந்தன், திருச்சி-6.

ருத்ராட்சம் பற்றி தாங்கள் கூறும் தகவல்கள் மிகைப் படுத்தப்பட்டவை. ரத்த அழுத்தத்தைத் தலை தூக்காமல் செய்வதும், படிப்புத் திறன் மற்றும் ஞாபக சக்தியை மேம்படுத்துவதும் நமது உணவு முறையே! எனவே, இந்த விஷயங்களுக்காக ருத்ராட்சத்தைத் தேடி அலைய வேண்டாம். படிப்புத் திறனும் ஞாபக சக்தியும் எல்லோருக்கும் உண்டு. அவை வெளிப்படும் அளவில் வேண்டுமானால் மாறுபாடு இருக்கலாம்!

தாவர இனம் அனைத்திலும் மருத்துவ குணம் ஒளிந்திருப்பதாக ஆயுர்வேதம் கூறும். படைப்புகள் அனைத்தும் நன்மை-தீமைகளின் கலவை (*குண தோஷ மிச்ரம்*) என்பது ஆயுர்வேதத்தின் கணிப்பு. எப்போதும், தனித்த நிலையில் ஒரு மூலிகை முழுமையானப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பயனை அளிக்காது. அதிலுள்ள நஞ்சை அகற்றவும், குறிப்பிட்ட அந்த மூலிகையின் குணத்தைப் பெருக்கவும் மற்றொரு மூலிகையின் சேர்க்கை தேவை.

உணவு உண்பதுபோல் மருந்துகளையும் அன்றாட பட்டியலில் சேர்க்கக் கூடாது. கட்டுப்பாடான உணவு மற்றும் நல்ல சிந்தனை இருந்தால் நோயாளியாக மாறமாட்டோம்! ஆகவே, குறிப்பிட்ட ஒரு பொருளின் மிகைப்படுத்தப்பட்ட பெருமைகளை அப்படியே எடுத்துக்கொண்டு செயல்படாதீர்கள்!

'மனசாட்சியின்படி நடக்க வேண்டும்' என்று பெரியோர்கள் பலரும் கூறி இருக்கிறார்கள். ஆனால், 'மனம் சொல்வதுபோல் நடக்கக்கூடாது' என்கின்றன சாஸ்திரங்கள். எதை எடுத்துக் கொள்வது?

- கே.என்.மகாலிங்கம், பாண்டிச்சேரி-4.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'**அ**க்ஷம்' என்றால் புலன். பார்க்கும் புலன் அதாவது கண்ணால் பார்த்து அறிவது- சாட்சி; மனக்கண்ணால் உணர்வது- மனசாட்சி.

தத்துவ விளக்கத்தை மனதால் அறிந்த அறிஞர்கள், மனசாட்சிப்படி நடப்பது தவறில்லை. அவர்கள், தர்ம சாஸ்திரங்களின் அதிகார வரம்பை மீறிய விஷயங்களில் மனசாட்சியைப் பயன்படுத்துவர்.

அறத்தைக் காக்கும் அறிஞர்கள் நிரம்பிய கௌரவர்களது அவையில், திரௌபதி துயிலுரிக்கப்பட்டாள். தர்மரின் மனசாட்சி அதைத் தடுக்கவில்லை. கர்ணனை சீடனாக ஏற்க துரோணரின் மனசாட்சி மறுத்தது. திரௌபதியின் மனசாட்சி, பாண்டவர்கள் ஐவரையும் கணவனாக ஏற்றது. இலங்கையில் சீதையை சந்தித்த அனுமன், அவளை அழைத்துச் செல்லத் தயாராக இருந்தான். ஆனால் அதற்கு, சீதையின் மனசாட்சி மறுத்தது. இல்லாத அவதூறிலிருந்து விடுபட, கருவுற்றிருந்த சீதாதேவியை கானகத்தில் விட்டு வருமாறு லட்சுமணனைப் பணித்தார் ஸ்ரீராமன். அவரது மனசாட்சி அதை விரும்பியது.

விஷயங்களை அலசி ஆராய்ந்து, தெளிவு பெற்ற மனமே மனசாட்சியாக செயல்படும்.

நமது விருப்பங்களை ஈடேற்ற, முரண்பாடான முறையில் மனம்போன போக்கில் செயல்படுவதை, மனசாட்சிப்படி நடப்பதாக ஏற்க முடியாது. காட்டில் சகுந்தலையைக் கண்ட துஷ்யந்தன், அவளை விரும்பினான். 'அவள், கண்வ ரிஷியின் மகள்' என்று அறிந்ததும் துஷ்யந்தனின் மனம் கலக்கமுற்றது. 'தகாத இடத்தில் காதல் முளைத்துவிட்டதோ!' என்று எண்ணி வருந்தினான். அதே நேரம்... 'நல்ல கல்வி, அரசு சட்டதிட்டங்கள் மற்றும் உலக வழக்கம் அனைத்தையும் தெரிந்த - தெளிந்த மனம் எப்படித் தவறு செய்யும்?' என்றும் குழம்பினான்! சில நாட்களில், 'சகுந்தலை - விஸ்வாமித்திர முனிவரின் புதல்வி; கண்வ மகரிஷிக்கு வளர்ப்பு மகள்' என்பதை, அவளின் தோழியர் மூலம் அறிந்த துஷ்யந்தன் மகிழ்ந்தான். தனது மனசாட்சி, தவறாக வழிநடத்தவில்லை என்று நிம்மதியடைந்தான்.

தெளிவு பெற்ற மனசாட்சி, ஒருபோதும் தவறிழைக்காது. எனவேதான் மனசாட்சிப்படி நடப்பதைப் பெரியோர்கள் ஏற்றனர். ஆனால், தற்காலச் சூழலில் மனசாட்சியை அளவுகோலாக வைத்து காரியத்தில் இறங்குவது நம்பிக்கைக்கு உகந்ததல்ல!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அம்பாளுக்கு மட்டும் ஒன்பது நாள் கொண்டாட்டம் ஏன்?

முத்தொழில் புரியும் மும்மூர்த்திகளுக்கு ஒரு நாள் கொண்டாட்டத்துடன் நிறுத்திக்கொள்கிறோம். ஆனால், அம்பாளுக்கு மட்டும் ஏன் ஒன்பது நாள்?

- உமா மகேஸ்வரி, சென்னை-20.

மது - கைடபர், மகிஷாசுரன், தூம்ரலோசனை, சண்ட-முண்டன், சும்ப - நிசும்பர், ரக்த பீஜன் - இப்படியோர் அசுரர் கூட்டம் அண்டத்தை ஆட்டிப்படைத்தது.

முப்பத்து முக்கோடி தேவர்கள், மும்மூர்த்திகள், இந்திரன், திக்பாலகர்கள் ஆகிய எவராலும் அசுரர்களை அடக்க முடியவில்லை. உலகைக் காக்கும் பொறுப்பை சுமப்பவர்கள் தேவர்கள். சும்மா இருக்க முடியுமா? சிந்தனையில் ஆழ்ந்தார்கள்!

ஈசன் விழித்துக்கொண்டார். தனது உடலில் ஒன்றியிருக்கும் தேஜஸை அதாவது சக்தியைப் பிரித்து வெளியே எடுத்தார். அதைப் பார்த்து, மற்ற தேவர்களும் தங்களது தேஜஸை-ஆற்றலை வெளியே கொண்டு வந்தார்கள். அனைத்து தேவர்களது சக்தியும் ஒன்றாகத் திரண்டு ஒரு பேரொளியாக மாறியது. அந்தப் பேரொளியின் பெயர் துர்கை! ஆண்மையில் உறைந்திருந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சக்தி, அவசரத்துக்கு உதவவில்லை. எனவே, அந்தப் பேரொளி பெண்மையாகத் தோற்றமளிப்பதையே தேவர்கள் விரும்பினர்.

உண்மையில்... ஆண் - பெண் என்பது வெளித் தோற்றத்தில் தென்படும் மாறுபாடே. உள்ளே உறைந்திருக்கும் ஆற்றல், ஆக்கப் பிறந்ததாக இருக்க வேண்டும். இதை மெய்ப்பிப்பதே துர்கையின் தோற்றம். தேவர்களின் ஆற்றல் மட்டுமின்றி, அவர்களது ஆயுதங்களும் அம்பாளை வந்தடைந்தன. சுருங்கச் சொன்னால், அனைத்துத் தேவர்களின் ஒட்டுமொத்த வடிவமே அம்பாள் என்ற தகவலை 'தேவி மகாத்மியம்' விவரிக்கிறது.

பிரம்மனின் சக்தி இணைந்திருப்பதால் அவள் ப்ராம்மீ. அவளிடம் மகேசனின் பங்கும் உள்ளதை மகேஸ்வரி என்றப் பெயர் சுட்டிக்காட்டுகிறது. இதைப்போல், முருகப்பெருமான்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



விஷ்ணு மற்றும் இந்திரன் ஆகியோரது சக்தியையும் தன்னில் கொண்டவள் என்பதை... கௌமாரீ, வைஷ்ணவி, வாராஹி (வராக மூர்த்தியின் அம்சமானவள் என்பதால்) இந்திராணி என்ற தேவியின் பெயர்கள் சுட்டிக்காட்டுகின்றன.

போரில் ஒவ்வொரு எதிரி விழும்போதும் அந்த வெற்றியைக் குதூகலமாகக் கொண்டாடுவதுண்டு. தேவி, உலகின் எதிரிகளான ஒன்பது அசுரர்களை அழித்தவள். ஆதலால், அவளை ஒன்பது நாட்களாவது கொண்டாடுவோம். அவள் மக்களுக்காகச் செயல் பட்டவள்; மக்களின் துன்பத்தை அகற்றி, இன்பம் சேர்த்தவள்!

பேரொளியின் பூரண மகத்துவம் இரவில் பளிச்சிடும். இரவில், அவளைத் தரிசிப்பது கண்ணுக்கு விருந்து. ஒளிமயமான வாழ்க்கைக்கு ஒளிமயமானவளை வழிபடுவது சிறப்பு. சூரியன், பகலில் ஒளி தருவான். இவள், இருளிலும் ஒளி தருபவள். மனதில் மண்டிக்கிடக்கும் அறியாமை இருளை அகற்ற ஆதவனால் இயலாது; தேவியால் இயலும். மற்றவர்களைவிட அம்பாளிடம் தனித்தகுதி உறைந்திருப்பதை உணர முடிகிறது.

மக்கள் மனதிலிருந்து பயம் அகல வேண்டும். அவர்களை, ஏழ்மை தழுவக்கூடாது. அவர்களது அறியாமை அகன்று, அறிவொளி மிளிர வேண்டும். ஆக... மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு ஆதாரமான வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றையும் எல்லோருக்கும் பகிர்ந்தளிப்பவள் அவள்.

உலகின் தாய் அவள். பிள்ளைகளில் பாகுபாடு பார்க்காது தாயுள்ளம். பிள்ளைகளின் உள்ளத்தில் கெட்ட எண்ணம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தென்படலாம். ஆனால், கெட்ட எண்ணம் கொண்ட தாயுள்ளம் உலகில் இல்லவே இல்லை என்று ஆதிசங்கரர் கூறுவார்!

மனதில் நினைத்தால் போதும்; அவள், மரண பயத்தை அகற்றிவிடுவாள். அவளின் திருவுருவை அலங்கரித்து அடிபணிய வேண்டாம்; உள்ளம் அவளை நினைத்தாலே போதும்... அவளின் அருள் கிடைக்கும்.

இல்வாழ்வில் இன்னல் தோன்றாமல் இருக்க பயம் அகல வேண்டும். உலகையே பயத்தால் நடுங்க வைத்தவர்களையும் அழித்தவள் அவள். பயம் அகன்றவர்களுக்கு சிந்தனை வளம்பெற அறிவூட்டுபவள் அவள். வாழ்க்கையின் அடித்தளத்தையே தகர்க்கும் ஏழ்மை, மக்களை பற்றாமல் பார்த்துக்கொள்பவள் அவள். 'பயம், ஏழ்மை ஆகியவற்றை அகற்றி, அறிவொளி அளிக்க எப்போதும் கருணை உள்ளத்துடன் விழித்துக்கொண்டிருக்கும் தாய் துர்கை'- என்று மார்க்கண்டேய புராணம் கூறுகிறது *(துர்கே ஸ்ம்ரு தாஹரஸி...)*.

பயம் போக்கும் துர்கை வடிவத்துக்கு மூன்று நாள், ஏழ்மையை அகற்றும் லட்சுமி வடிவத்துக்கு மூன்று நாள், அறிவொளி தரும் அறிவு வடிவத்துக்கு மூன்று நாள்... இப்படி ஒன்பது நாட்கள் அம்பாளை வழிபடுவது சிறப்பு! மூன்று தடவை சொன்னால் முற்றுப்பெற்றதாக எண்ணலாம். *'ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி!'* என்று வேதம் மும்முறை சொல்லும். மூன்று நாட்களில் பயம் அகன்றது. அடுத்த மூன்று நாட்களில் ஏழ்மை அகன்றது. கடைசி மூன்று நாட்களில் அறிவொளி நிலைத்தது. ஆகையால், 'அம்பாளுக்கு ஒன்பது நாள் பணிவிடை!' என்கிற மரபு பொருள் படைத்ததே!

தினமும் தெய்வங்களை வழிபடும்போது, சங்கல்பம் சொல்லி பிரார்த்திக்கலாமா?

- விருதகிரி.

சங்கல்பம் சொல்லி தெய்வங்களை வழிபடலாம். மனதில் தோன்றும் எண்ணம், சொல்லில் வெளிப்படும்; செயலில் சிறக்கும். மனதில் தோன்றாதது வார்த்தையில் வராது! 'மனது நினைப்பதை, வாக்கு சொல்லும். அதை, செயல்புலன்கள் நடைமுறைப்படுத்தும்' என்கிறது வேதம் *(யத்திம னஸா த்யாயதி தத்வாசா...)*. 'இன்ன காரியத்தை இப்படிச் செய்ய வேண்டும்; இன்னார் செய்ய வேண்டும்' என்று மனம் தீர்மானிக்கும். அதன்படி நாம் செயல்படுவோம்!

சங்கல்பம் என்பது... அதைச் செய்பவர், செய்யும் வேளை, குறிக்கோள், செயலின் உருவம் ஆகிய நான்கும் சேர்ந்தது. 'இந்த நான்கும் இல்லாமல் செய்வது பலனளிக்காது!' என்கிறது தர்ம

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சாஸ்திரம். மனம் விரும்பியதை, சங்கல்பத்தில் சேர்க்க வேண்டும். அப்படி, விருப்பம் எதுவும் இல்லை என்றாலும்கூட, 'கடவுளை திருப்திப்படுத்த' என்று குறிப்பிட்டு, சங்கல்பிக்க வேண்டும் *(பரமேச்வர ப்ரீத்யர்த்தம்)*.

கர்மாவுக்கு பலன் உண்டு. தேவையில்லை என்றால், பகவானிடம் அளிக்க வேண்டும். நமது கர்மாக்களின் பலனை பகவானுக்கு அளிக்கும் மரபு இன்றும் இருக்கிறது *(மயா அனுஷ்டிதமிதம் கர்ம ஓம் தத் ஸத் ப்ரம்மார்ப்பணம்)*. ஆகவே, சங்கல்பத்துடன் வழிபடுங்கள்.

'மந்திரம் கால்... மதி முக்கால்!' என்று பெரியவர்கள் சொல்வார்கள். எனில், மந்திரங்களை எப்படி நம்புவது?

- கே.எல்.கந்தரூபி, மேலகிருஷ்ணன்புதூர்.

மருந்து, மருத்துவர், நோயாளி மற்றும் நோயாளியைக் கவனிப்பவர்... இந்த நான்கு தரப்பும் சேர்ந்தே நோயாளியின் நோயை அகற்ற வேண்டும்.

நோய்க்கு உரிய மருந்தை மருத்துவர் தேர்வு செய்ய வேண்டும். அது சிறந்த மருந்தாயினும், சரியான வேளையில் கொடுக்க வேண்டும். கொடுத்த மருந்தை நோயாளி உட்கொள்ள வேண்டும். இந்த நான்கில் ஒன்று பிசகினாலும் பலன் கிடைக்காது. இதில், மருத்துவர் மிக முக்கியம். மற்ற மூவரும் சேர்ந்து கால் பங்கு என்றால், மருத்துவர் முக்கால் பங்கு! – இவ்வாறு மருத்துவரின் முக்கியத்துவத்தை, அவரது பொறுப்பைப் பற்றிக் குறிப்பிடுகிறது ஆயுர்வேதம்.

இதுபோலத்தான் நீங்கள் குறிப்பிடும் வாசகமும். மந்திரம் கால் பங்கு எனில், நமது புத்திசாலித்தனமான செயல்பாடு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



முக்கால் பங்கு இருக்க வேண்டும். அப்போது, அந்த காரியம் வெற்றி பெறும். முயற்சிக்கு உதவுவது மந்திரம்!

ஒருவன், ஆசிரியரிடம் கற்ற பாடத்தில் தனது சிந்தனையால் தெளிவு பெறுகிறான். நண்பர்களுடன் ஆலோசித்து சந்தேகங்களைக் களைகிறான். காலப்போக்கில் அவனது அனுபவமாகிய நான்காவது பங்கும் சேர்ந்துகொள்ள முழுமை பெறுகிறான். ஆக, ஆசிரியர் கற்பிப்பது கால் பங்கு எனில், முக்கால் பங்கு நமது முயற்சியால் பெறுவது. அதற்காக ஆசிரியர் தேவையில்லை என்று கூறலாமா?

மந்திரமும் தேவை; புத்திகூர்மையான முயற்சிகளும் தேவை! மந்திரத்தை ஜபிக்கும் மனம் வேறொரு விஷயத்துக்கு தாவாமல் ஒருமுகப்பட்டுத் திகழ்வதால், நமது செயல்பாடுகள் சிறக்கும்.

பிரகலாதனின் மனம் நாராயண நாமத்தை அசை போட்டது. கடவுளில் முனைப்புடன் இணைந்த அவனது செயல்பாடு, பலன் அளித்தது. கால் பங்கு மந்திரமே, அவனை செயல்படத் தூண்டியது; சிந்தனைகளைச் சிதறடிக்காமல் அவன் மனதை ஒருமுகப்படுத்தியது. இதனால் அவனது (முக்கால் பங்கு) செயல்பாடு சிறந்தது!

ஜாதகத்தில் அதிர்ஷ்டம் இருந்தாலும், அது தானாகவே வந்துவிடாது. கால் பங்குதான் அதிர்ஷ்டம். அதை வரவழைக்க முக்கால் பங்கு முயற்சி வேண்டும்.

விதையே பயிராகிறது. ஆனால், நன்றாக உழ வேண்டும், தண்ணீர் பாய்ச்ச வேண்டும், பயிர் வளர வெளிச்சம் வேண்டும். அப்போதுதான் விதை பயிராகும். விதை - கால் பங்கு எனில், மற்றவை - முக்கால் பங்கு!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பாலில் - நெய், எள்ளில் - எண்ணெய் போன்றது மந்திரத்தில் அடங்கியிருக்கும் பலன். மந்திரம் - கால் பங்கு; அதன் பலனைப் பெறுவதற்குத் தேவையான நமது முயற்சி - முக்கால் பங்கு!

ஆக, 'முயற்சியே முழுப் பயனை அளிக்கும்!' என்பதை விளக்கும் உபதேசமே, 'மந்திரம் கால்; மதி முக்கால்' என்ற வாசகம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

சிலர், பூஜை செய்யும்போது மனதை ஒருமுகப்படுத்தாமல் சுற்றுப்புறச் சம்பவங்களில் கவனத்தைச் சிதறவிடுகிறார்கள்! இன்னும் பலர், பூஜையில் அமர்ந்திருக்கும்போதும் மற்றவர்களைத் திட்டுவதைப் பார்த்திருக்கிறேன். இதுபோன்ற அணுகுமுறைகள் சரியானவையா?

- மாலதி சந்திரசேகர், பெங்களூரு-34.

செயலில் கவனம் வேண்டும். அப்போதுதான் அந்த செயல்பாடு சிறக்கும். வழிபாட்டின்போது நம் மனம், இறைவனில் ஊன்றியிருக்க வேண்டும்.

'மற்ற சிந்தனைகளில் இருந்து முற்றிலும் விடுபட்டு, மனதை என்னில் நிறுத்தி விடு. உனது விருப்பத்தை, நான் பூர்த்தி செய்கிறேன்!' என்ற கண்ணனின் வார்த்தையை நினைவில் கொள்ள வேண்டும்.

சபிப்பதற்கும் திட்டுவதற்கும் வேறு தருணங்கள் நிறைய இருக்கும்போது... பூஜையின்போதும் அதைக் கடைப்பிடிப்பது ஏன்? அதற்கு அவரது பலவீனமே காரணம்!

பூஜைக்குப் பிறகு செய்ய வேண்டிய முக்கியமான காரியங்கள் பற்றிய எண்ணமும், பூஜையின்போது அவசரத்தையும் பரபரப்பையும் உண்டுபண்ணும்.

கடமையை நிறைவேற்ற இயலாமை, தாழ்வு மனப்பான்மை, பூஜைப் பொருட்களின் தட்டுப்பாடு, அலுவல்களின் சுமை, விருப்பம் நிறைவேறாததால் ஏற்பட்ட ஆதங்கம்... இப்படி பல மன அழுத்தங்களும் ஒருசேர தலை தூக்கினால் பூஜைவேளையிலும் சபிக்கத் தோன்றும்.

இப்படி சபிப்பவர்களது சாபம் அவர்களின் மனதில் தேங்கியிருக்கும் துயரத்தின் வடிகாலாக எண்ணுங்கள். அமைதியான தருணத்தில் அவர்களின் தவறை சுட்டிக்காட்டினால், உண்மையை உணர்ந்துகொள்வார்கள்.

காலையில் எழுந்ததும் முருங்கை மரத்தில் விழிக்கக்கூடாது என்கிறார்களே, ஏன்?

- ஆர்.வெங்கடேசன், பென்னாகரம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பெரும்பாலும் வீட்டை ஒட்டி மிக அருகில், எவரும் முருங்கை மரம் வளர்ப்பதில்லை. சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு தோட்டத்திலோ அல்லது அடிக்கடி கண்ணில் தென்படாத ஓர் இடத்திலோதான் முருங்கை மரத்தை வளர்ப்பார்கள்.

முருங்கைக்காய் வேண்டும். ஆனால், முருங்கை மரத்தால் ஏற்படும் தொல்லைகளைத் தவிர்க்க வேண்டும். முருங்கை மரம் உள்ள இடங்களில், கம்பளிப் பூச்சி போன்றன அதிகம் தென்படும். இது, ஆரோக்கியத்துக்கு உகந்ததல்ல. எனவே, எச்சரிக்கையாக செயல்பட்டார்கள் நம் முன்னோர்கள்! இருந்தாலும், சில தவிர்க்க முடியாத காரணங்களால்... காலையில் எழும்போது முருங்கை மரத்தைப் பார்க்க நேர்ந்தால், தவறில்லை.

காலையில் எழுந்ததும் உங்களின் உள்ளங்கைகளைப் பாருங்கள். அதன்பிறகு, எதைப் பார்த்தாலும் தவறில்லை. அடிப்படை இல்லாத தகவல்களை நம்பி மனதைக் குழப்பிக் கொள்ளாதீர்கள்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உணவில் பூண்டு, வெங்காயம் கூடாதா?

செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வீட்டைக் கழுவி, சுத்தம் செய்யக்கூடாது என ஜோதிட நூல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் என் தாயார், 'இந்த நாட்களில் கட்டாயம் சுத்தம் செய்ய வேண்டும்' என்கிறார். எது சரி?

- வி.பத்மா, கும்பகோணம்-1.

தினமும் வீட்டை சுத்தம் செய்ய வேண்டும். இல்லையெனில், சுகாதாரம் கெட்டுவிடும்; வீடும் களை இழந்துவிடும். தூசியைக் கூட்டிப் பெருக்கி வீட்டைத் துடைத்துப் பராமரிப்பது, நீண்ட நாள் வாழ்வதற்கான தகுதியைப் பெற்றுத்தரும்.

நூல்களில் சில தவறான தகவல்கள் கண்ணில் படுவது நமது துரதிருஷ்டம். ஒதுக்க வேண்டியவற்றில் இதுவும் ஒன்று. 'உடலுக்கும் உள்ளத்துக்கும் சோர்வு தருவது வேண்டாம்' என்று எவரேனும் சொன்னால், அதை நம்புவது நம் பலவீனம். உழைப்பு, சுகாதாரத்தை தூண்டும். எனவே, வீட்டை தினமும் சுத்தப்படுத்துங்கள்.

'வெங்காயமும் பூண்டும் சபிக்கப்பட்ட ரிஷிகள்; இவற்றை உணவில் (குறிப்பாக அமாவாசை அன்று) சேர்க்கக்கூடாது'

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



என்கிறாள் பாட்டி. இதற்குப் புராண ஆதாரம் ஏதும் உள்ளதா?

- ரா.கிருஷ்ணசாமி, அகரம்.

வெங்காயமும் பூண்டும் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தவை. வெங்காயத்துக்கு, 'ரஸோனம்' என்ற சிறப்பு பெயர் உண்டு. உடல் ஆரோக்கியத்தை நிலைநிறுத்துவதில் அரசன் என்று வெங்காயத்தைப் புகழ்வர் *(நிகில ரஸாயன ராஜோகந்தே நோக்ரேண லசுனஇவ)*.

வெங்காயத்தை, பல மருந்துகளில் மூலப்பொருளாகவும் துணைப் பொருளாகவும் பயன்படுத்துகின்றனர். 'பல பிணிகளைப் போக்க வெங்காயம் பயன்படும்' என்கிறது ஆயுர்வேதம். ஆகவே, உடல் ஆரோக்கியத்தைத் தக்க வைக்கும் மருந்தாக வெங்காயத்தைப் பயன்படுத்தலாம். ஆனால், நமது அன்றாட செயல்பாட்டில் இருக்க வேண்டிய ஈடுபாட்டைத் தடுப்பதால், இவற்றைத் தவிர்க்க வேண்டும் என்கிறது தர்ம சாஸ்திரம்.

தாமஸ உணவுகள், மனதை பாதிப்பதால் சிரத்தை குறையும். இதுவே சோம்பலாக மாறி, கோபதாபங்களில் சிக்கி காரியத்தையே கெடுத்துவிடும். தாமஸ உணவின் குணம் வெங்காயத்திலும் உண்டு. எனவே, 'மனதின் தூய்மையைப் பாதுகாக்க வெங்காயம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மற்றும் பூண்டு ஆகியவற்றை எப்போதும் உணவில் தவிர்ப்பதே நல்லது' என்கிறது தர்ம சாஸ்திரம். இவற்றை உணவில் சேர்த்துப் பழகியவர்கள், உடனே விட்டுவிட முடியாது என்பதால், 'அமாவாசை நாளிலாவது சேர்க்காமல் இருக்கலாம்' என்றொரு நடைமுறை தோன்றியது.

வேதம் ஓதுவோரும், சாஸ்திரங்களைக் கையாளுவோரும் வெங்காயம் மற்றும் பூண்டு ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். அவர்களின் மன ஓட்டம் சுணங்காமல் இருக்க வேண்டும். எனவே, பூண்டு மற்றும் வெங்காயத்தை இவர்கள் சாப்பிடாமல் இருக்குமாறு தர்ம சாஸ்திரம் நிர்பந்திக்கிறது. வங்கதேச அந்தணர்கள், வெங்காயத்தைத் தவிர்ப்பார்கள். தர்க்க சாஸ்திர வல்லுநர்களும் யோக சாஸ்திர ஆராய்ச்சியில் சிறப்பு பெற்றவர்களும் அங்கே உண்டு. ஸ்ரீகிருஷ்ணரும், 'தாமஸ' உணவை விலக்கச் சொல்வார்.

வெங்காயம், ஆராயும் திறனைப் பின்னுக்குத் தள்ளி, ஆசைக்கு உந்துதலாகச் செயல்பட வைத்துவிடும். விபரீதத்தை சந்தித்த பிறகு, 'ஏமாந்துவிட்டோமே' என்று எண்ணத் தோன்றும். ஆகவே, மனத்தூய்மையைப் பராமரிக்க வெங்காயத்தைத் தவிர்ப்பது நல்லது. நன்மையும் தீமையும் எல்லாப் பொருளிலும் கலந்தே இருக்கும். நன்மையை பெரிசுபடுத்திப் புகழ்வதும் தீமையை சுட்டிக்காட்டி இகழ்வதும் சரியல்ல! தீமையை எச்சரிக்கையுடன் தவிர்ப்பதே அழகு. உணவில் முதலிடம் வகிக்கும் வெங்காயத்தை, அகற்றுவது கடினம்; குறைத்துக்கொள்வது சுலபம்.

'எல்லோரும் தங்களது கர்ம பலனை அனுபவித்தே ஆக வேண்டும்' என்கிறார்களே... இது சரியா?

- மீனா ரெங்கநாதன், சென்னை-33.

'முற்பிறவியில், நமது செயல்பாட்டுக்கான பலனைப் பெற வாய்ப்பு இல்லாமல் போய்விட்டால், அந்தப் பலன் இந்தப் பிறவியில் வந்தடையும்' என்கிறது ஜோதிடம்.

'வினைப்பயன் உணராமல் அழியாது' என்கிறது தர்ம சாஸ்திரம். உழைப்பில் விளைந்த தளர்ச்சியை காலப்போக்கில் உணர முடியும். நன்மையில் விளையும் உள்ளக் களிப்பும் அப்படியே. இதுபோன்றே வினைப்பயனும்! 'தன்வினை தன்னைச் சுடும்' 'கொடுத்து வைத்தவன்' போன்ற சொல் வழக்குகள் இதை உறுதிப்படுத்துகின்றன.

'ஞானம் பெற, அதாவது அறிவாளியாகத் திகழ நல்ல விதமான நடைமுறைகளைப் பின்பற்றினேன். ஆனால் ஞானம் வரவில்லை. எனது முயற்சி வீணாயிற்று என்று கவலைப்படாதே! வரும் பிறவியில் எளிதில் அறிவாளி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆவதற்கு அது உதவும். உனது செயல்பாடு வீணாகாது!' என்கிறது தர்ம சாஸ்திரம். ஒருவர், காரணமே தெரியாமல் இன்ப - துன்பத்தை சந்திக்க... அவர்களது முற்பிறவியின் கர்ம வினையே காரணம். இதை அனுபவித்தே ஆக வேண்டும்.

ஏகாதசி திதி அன்று சிராத்தம் வந்தால், விரதம் அனுஷ்டிப்பவர் மற்றும் சிராத்த பிராமணர் ஆகியோரது ஆகார நியமங்கள் என்ன?

- வி.வெங்கட்ராமன், செகந்திராபாத்-9.

ஏகாதசி திதியன்று சிராத்தம் வந்தால், சிராத்தத்தையே நடைமுறைப்படுத்த வேண்டும். எல்லா ஏகாதசியிலும் விடாமல் விரதத்தைக் கடைப்பிடிப்பவருக்கு சிராத்தத்தால் இடையூறு நிகழ்ந்தாலும், விரத பலன் கிடைத்துவிடும். இது ஸ்மார்த்தர்களது நடைமுறை.

வேத கோட்பாடுகளுக்கு இணங்க வரையறுக்கப்பட்ட சட்டதிட்டங்களின் தொகுப்பு 'ஸ்மிருதிகள்'. இதைப் பின்பற்றுவோர் ஸ்மார்த்தர்கள். பின்னர் தோன்றிய மத நூல்களில் தங்களை இணைத்துக்கொள்ளாமல் ஸனாதன தர்ம கோட்பாடுகளில் நிலைத்து நிற்பவர்கள், அவர்கள். தேவ காரியமும், பித்ரு காரியமும் ஒரே வேளையில் செயல்படுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால் பித்ருக்களுக்கு முன்னுரிமை அளிப்பார்கள்.

ஏகாதசி விரதம் பல முறை வரும். ஆனால், வருடத்துக்கு ஒரு முறையே சிராத்தம் வரும். சிராத்தம் இல்லாத ஏகாதசிகளில் விரதம் இருக்க வாய்ப்பு உண்டு. எனவே, சிராத்தம் வரும் ஏகாதசியில் விரதத்தைத் தவிர்க்கலாம். அன்று ஏகாதசி விரதத்துக்கு முன்னுரிமை அளித்தால் சிராத்தம் தடைபடும்.

பல ஏகாதசி நாட்களில் விரதம் செயல்பட்டு தனது உரிமையை நடைமுறைப்படுத்தி இருக்கிறது. சிராத்த திதியிலும் விரதம் செயல்பட்டால், சிராத்தத்தின் உரிமை பறிபோகும். அதன் உரிமையை நிலைநாட்ட ஏகாதசி திதியில் சிராத்தம் வந்தால் சிராத்தத்துக்கு இடமளிப்பதே சிறப்பு! அன்று, சிராத்தம் செய்கிறவனுக்கும் சிராத்தத்தை ஏற்பவனுக்கும் ஒரு வேளை உணவு உண்டு. இரண்டாவது வேளை உணவைத் தவிர்க்க வேண்டும்.

ஸ்ரீசண்டிகேஸ்வரரை, கைகளைத் தட்டி ஓசை எழுப்பி வணங்குவதுதான் வழக்கம். ஆனால், இது தவறு என்கிறார்களே சிலர்?

- ஜி.ஜெயராமன், கூந்தலூர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வழக்கத்தை மாற்ற வேண்டாம், தொடருங்கள். ராம-லட்சுமணர்களது உறக்கத்தைக் கலைத்த விஸ்வாமித்திரர், 'பொழுது புலர்ந்துவிட்டது. எழுந்திருங்கள்' என்றார்.

ஏழுமலையானுக்கு சுப்ரபாதம் பாடி, அவரது உறக்கத்தைக் கலைக்கிறோம். சம்பிரதாய பஜனையில், இறைவனை உறங்க வைத்து, பின்னர் உறக்கத்தைக் கலைப்பது உண்டு. முற்காலத்தில்... துதி பாடகர்கள் பாடல்கள் பாடி அரசர்களை உறக்கத்திலிருந்து விழித்தெழச் செய்வர். உறக்கத்தைக் கலைப்பது என்பது அவர்களது வேலைகளில் ஒன்று. குறிப்பிட்ட ராகத்தில் ஒரு பாடலைப் பாடி இறைவனை உறங்க வைப்பதும், குறிப்பிட்ட ராகத்தில் பாடி உறக்கத்தைக் கலைப்பதும் பக்தர்களது பணிவிடைகளில் ஒன்று.

தவிர, சண்டிகேஸ்வரருக்கு ஏது உறக்கம்? அவர் தியானத்தில் அல்லவா ஆழ்ந்திருக்கிறார். 'சண்டிகேஸ்வரரே! தாங்கள் பாக்கியம் செய்திருக்கிறீர்கள். ஈசனை மனதில் இருத்தி, தியானத்தில் மூழ்கி, மெய்மறந்திருப்பவர் நீர்!' என்று அவரைப் போற்றுவதுண்டு (*சண்டிகேச மஹாபாக சிவ த்யான பராயண*). அவரது கவனத்தை நம் மீது திருப்ப கை தட்டுகிறோம். அதை, அபசாரமாக எடுத்துக்கொள்ளாத மனமும் உண்டு.

'பயணிகளின் கவனத்துக்கு, வண்டி எண்...' என்று ரயில்கள் கிளம்பும் நேரத்துக்கான அறிவிப்பு, ஒருவரது உறக்கத்தை கலைப்பதாகக் கூற முடியுமா?



சங்கடத்தின்போது சாமியைக் கூப்பிடுவது பக்தனின் இயல்பு. அவர் உறங்கும் வேளையில் நமக்கு இன்னல் வராது என்று கூற முடியுமா? தவளையை பாம்பு விழுங்க முற்படுகிறது. தவளையைக் காப்பாற்ற முற்பட்டால், பாம்பின் உணவைப் பறித்த பாவம் வரும். முற்படாமல் இருந்தால் காப்பாற்றத் தவறிய பாபம் வரும்!

அதுபோல, கைகளைத் தட்டினால் சண்டிகேஸ்வரரது உறக்கம் கலையும். தட்டாமல் இருந்தால் அவரின் கவனம் நம் பக்கம் திரும்பாது. எனவே, நம் முன்னோர் கடைப்பிடித்த 'கைதட்டலை' செயல்படுத்தலாம்; தவறில்லை.

Sri Vedanta Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நரக சதுர்த்தசிக்கும் தீபாவளிக்கும் என்ன சம்பந்தம்?

- ப.குணவதி, திருச்செங்கோடு.

ஐப்பசி மாதம், அமாவாசைக்கு முந்தைய நாளான 'சதுர்த்தசி'க்கு சிறப்பு உண்டு. இதை 'நரக சதுர்த்தசி' என்பர். அன்று அதிகாலையில் எண்ணெய் தேய்த்து மங்கள ஸ்நானம் செய்ய வேண்டும். அன்று, எண்ணெயில் அலைமகளும் நீரில் கங்கையும் உறைந்திருப்பர். 'இந்த நாளில் எண்ணெய் தேய்த்து நீராடினால் ஏழ்மை அகலும்; தூய்மை சேரும்' என்கிறது தர்ம சாஸ்திரம்.

சாதாரண நாளில், அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதை ஏற்காத தர்ம சாஸ்திரம், இந்த சதுர்த்தசியில் மட்டும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதைக் கட்டாயப்படுத்துகிறது.



CC-0. Zamindar... Sarma Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நீராடிய பிறகு எமதர்மராஜனை வழிபட வேண்டும். எமனது பதினான்கு பெயர்களையும் பதினான்கு முறை குறிப்பிட்டு, கைகளால் நீரை அள்ளி அளித்தாலே போதுமானது. 'சதுர்த்தசி' என்றால் பதினான்கு. சந்திரன் ஒவ்வொரு கலையாகத் தேய்ந்து தேய்ந்து அன்று 14-வது கலையோடு மிஞ்சி இருப்பான். முன்னோர் ஆராதனைக்கு, சந்திரனின் கலையை வைத்து சிராத்த நாளை நிர்ணயம் செய்வோம். சந்திரனும் எமனும் முன்னோர்களோடு இணைந்திருப்பவர்கள். முன்னோர்களை வழிபடும்போது இவர்களையும் சேர்த்துக்கொள்வது வழக்கம் *(ஸோம: பித்ருமான் யமோ அங்கிரஸ்வான்...)*

அறிவுப் புலன்கள் ஐந்து; செயல் புலன்கள் ஐந்து. இவற்றுடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவற்றையும் சேர்த்தால் பதினான்கு. இந்த பதினான்கு குணங்களுடன் திகழ்பவனே மனிதன்.

சந்திரனின் பதினான்காவது கலையே நீராடும் வேளை. பதினான்கு வடிவில் தென்படுபவன் எமன். ஐப்பசி மாத சதுர்த்தசியில் (14-வது திதி), அதிகாலையில்... எண்ணெயில் அலைமகளும், நீரில் கங்கையும் அவர்களுடன் எமதர்மராஜனும் பிரசன்னமாவர். இந்த மூன்றும் ஒன்று சேரும் சிறப்பு வேளை அது.

'நரகம்' என்றால் துயரம். நீராடலும் எம வழிபாடும் துயரத்திலிருந்து விடுபட வைக்கும். பதினான்கு குணங்களுடன் இணைந்த ஆன்மாவை விலக்கி, உடல் இயக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பவன் எமன். 'உடல், அதில் தென்படும் புலன்கள், மனம், ஆன்மா - இவற்றின் இணைப்பின் தொடர்ச்சியே வாழ்க்கை' என்கிறது ஆயுர்வேதம்.

வாழ்க்கை செழிக்க, பொருளாதாரம் தேவை; இதற்கு அலைமகளின் அருள் வேண்டும். வாழ்க்கையை சுவைக்க

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தூய்மையான மனம் தேவை; இதற்கு கங்கையின் அருள் வேண்டும். நரக வேதனையில் இருந்து விடுபட, ஏழைகளுக்கு தீபத்தை கொடையாக அளித்து, அவர்களையும் எம வழிபாட்டில் சேர்க்க வேண்டும். புத்தாடை அணிந்து எமனுக்கு தீபம் ஏற்ற ·வேண்டும். ஒளிமயமான வாழ்க்கையைப் பெற அது உதவும். தீபத்தை ஏற்றினால் அறியாமை அகன்றுவிடும். 'நரக வேதனையில் இருந்து விடுபட, தீபங்களை வரிசையாக ஏற்ற வேண்டும்' என்கிறது தர்ம சாஸ்திரம். *(நரகாய ப்ரதாத வ்யோ தீப:...)*

மக்களுக்கு நரக வேதனையை அளித்து வந்த நரகாசுரனை, நரக சதுர்த்தசி அன்று அழித்தார் கடவுள். அன்று அவனது அழிவு நிகழ்ந்து துயரம் அகன்றதால், 'நரக சதுர்த்தசி நீராடல் துயரத்தை அகற்றும்' என்பது உறுதியாகிவிட்டது.

நரகாசுரன் துயரத்திலிருந்து விடுபட்டு, மோட்சத்தை அடைந்த நாள் அது. அன்று, துன்பம் விலகியதில் மக்களிடம் மகிழ்ச்சி பொங்கியது; சாஸ்திரமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

'*சாஸ்த்ராயச சுகாயச*' என்பார்கள் முன்னோர்கள். ஸனாதன தர்மத்தின் சதுர்த்தசி நீராடல் நரகாசுர வதத்தோடு இணைந்து இரு மடங்கு சிறப்பைப் பெற்றுவிட்டது. தங்களது இருப்பிடத்திலிருந்து மஹாளய பட்சத்தில் உலாவ வந்த நமது முன்னோர்களின் வழியனுப்பு விழாவாகவும் செயல்படுகிறது தீபாவளி. அன்று அவர்களுக்கு வழிகாட்ட தீவட்டி ஏந்த வேண்டும். ஆலயங்களிலும் குடியிருப்புகளிலும் தீபங்கள் மிளிர வேண்டும் என்று பிரம்ம புராணம் கூறும்.



செயலில் ஈடுபாடும், கடவுளில் பக்தியும் வேண்டும். அந்த இரண்டும் தீபாவளியில் - அதாவது நரக சதுர்த்தசியில் செயல்படுகிறது. சாஸ்திரத்தோடு இணைந்த தீபாவளியை மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும். உலகவியலோடு ஆன்மிகமும் கலந்திருப்பது அந்தப் பண்டிகையின் தனிச்சிறப்பு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சிசுவையே கொல்ல முயன்றவனுக்கு சிரஞ்ஜீவி பட்டமா?

பகவான் மகாவிஷ்ணு தனது பத்தாவது அவதாரத்தை இன்னும் எடுக்கவே இல்லை. அதற்குள் 'தசாவதாரம்' என்று கூறுவது சரியா?

- எஸ்.கோபாலன், சென்னை-61.

தற்போது பிரம்மன் ஆயுளின் இரண்டாவது பகுதியில், 28-வது சதுர் யுகத்தைச் (நான்கு யுகங்கள் சேர்ந்தது ஒரு சதுர் யுகம்) சார்ந்த கலியுகம் நடைபெறுகிறது. இது முடியும் தருணத்தில், அவதாரம் நிகழும்.

இதற்கு முன்பு, 27 சதுர் யுகங்களிலும்... கலியின் முடிவில் கல்கி அவதாரம் நிகழ்ந்திருக்கிறது. ஆகவே, கல்கி அவதாரத்தையும் சேர்த்து தசாவதாரம் என்று சொல்வதில் தவறில்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அபிமன்யுவின் மனைவியான உத்தரையின் வயிற்றில் இருந்த சிசுவையே கொல்ல முயன்றவன் அஸ்வத்தாமா. இப்படியொரு குணம் கொண்டவனுக்கு 'சிரஞ்ஜீவி' பட்டம் எப்படிக் கிடைத்தது?

- வி.ஷியாம், குடந்தை.

வெகு நாள் புகழோடு வாழ்பவனை 'சிரஞ்ஜீவி' எனலாம். திருவள்ளுவர், காளிதாசன் ஆகியோரும் சிரஞ்ஜீவிகளே. இவர்கள், இன்றும் உலகம் தழுவிய புகழுடன் திகழ்பவர்கள். ஆம், மூப்பு - இறப்பு இல்லாத புகழுடன், மக்கள் நினைவில் நிற்பவர்களை சிரஞ்ஜீவிகள் என்பர் *(நாஸ்தி தேஷாம் யச: காயே ஜராமர ணஜம் பயம்).*

ஆக, சிரஞ்ஜீவி என்பது பட்டமோ பட்டப்படிப்போ அல்ல. தூய்மையான வாழ்க்கையைக் கையாண்டு, கடமைகளை நிறைவேற்றுவதில் அக்கறையுடன் வாழ்பவர்கள், நீண்ட நாள் வாழும் பாக்கியத்தைப் பெறுவர். 'இந்தப் பேற்றை, வேறு எவரும் அவர்களுக்கு அளிப்பதில்லை; சுயமாக சம்பாதித்துக் கொண்டனர்!' என்கிறது தர்ம சாஸ்திரம் *(ரிஷயோ தீர்க்க சந்த்யத்வாத் தீர்க்க மாயுர வாப்னுயு:).* தவிர, உலக இயக்கத்துக்கு உறுதுணையாக செயல்படுபவர்களது தேவையைக் கருதி, கடவுளும் சிலருக்கு, 'சிரஞ்ஜீவி' பாக்கியத்தை அருளியது உண்டு. ஆனால், அஸ்வத்தாமா விஷயத்தில்... குழந்தைகளைக் கொல்ல முயன்றதற்கும் சிரஞ்ஜீவி பட்டத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

போரில், எதிரியின் தலையை வெட்டி வீழ்த்துவது பாவம் இல்லை. அந்த இடத்தில் செயல்படாமல் இருந்தால், எதிரிகள் நம்மை சாய்த்துவிடுவார்கள்! தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எதிரியை வீழ்த்துவது அவசியம். கொலைக் குற்றம் சுமத்தப்பட்டவனுக்காக வாதாடும் வக்கீல்களுக்கு, நீதிபதி பதவி அளிக்கக்கூடாது என்று கூற முடியுமா?

கௌரவர்களை பூண்டோடு அழிக்க முனைந்தனர் பாண்டவர்கள். கௌரவர்களும் அப்படியே நடந்துகொண்டனர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அவர்களுக்கு உதவ முன்வந்தான் அஸ்வத்தாமா. அவன் ஒரு போர் வீரன். பாண்டவர்கள் மடிந்த பிறகு, அவர்களின் வாரிசுகளும் தலை தூக்காமல் இருக்க வேண்டும் என்று எண்ணினான். எனவே, அவர்களை கருவிலேயே கொல்லத் துணிந்தான். அவன் நிலையில் அது சரிதான். அவன் குற்றம் இழைக்கவில்லை!

அவனது பண்பு மற்றும் வீரம் முதலியவற்றின் சிறப்பே அவனை சிரஞ்ஜீவியாக்கியது. தகுதி உடையவர்களே சிரஞ்ஜீவி ஆவார்கள். அஸ்வத்தாமாவின் சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். நீங்களே அவனுக்குப் பட்டமளிக்க பரிந்துரைப்பீர்கள்.

ருக் உபாகர்மம், யஜுஸ் உபாகர்மம் என்றால் என்ன?

- பெருந்தேவிபாலா, ஃபிரான்ஸ்.

'ருக்' என்றால் ரிக் வேதம்; 'யஜுஸ்' என்றால் யஜுர் வேதம். உபாகர்மம் என்றால் வேதம் கற்பது. கற்பதை புதுப்பித்தலும் இதில் அடங்கும்.

உபாகர்மாவில், 'வேதாரம்பம்' என்று ஒரு பகுதி உண்டு. உபநயனம் ஆன மாணவனுக்கு வேத ஆரம்பம். அதாவது, வேதம் பயிலுவதற்கான துவக்க விழா. வேதம் கற்றவர்களுக்கு, அதைப் புதுப்பிக்கும் தருணம்!



வேதத்தைக் கற்றால் மட்டும் போதாது. தினமும் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லிச் சொல்லி, பழசான வேதத்தைப் புதுப்பிக்க வேண்டும்.

வேதம் எப்போதும் புதுப் பொலிவுடன் மிளிர வேண்டும். இதையொட்டி, வேதம் அறிவுறுத்தும் சிறப்புச் சடங்கே... 'உபாகர்மம்'. வேதம், வாய்மொழியாகக் காப்பாற்றப்பட வேண்டியது. எனவே, 'உபாகர்மா' திருநாளில், வாய்மொழியாக குரு சொல்ல... சீடன் திருப்பிச் சொல்ல வேண்டும் என வலியுறுத்துகிறது.

மனதில் பதிந்த ஒலி வடிவ வேதத்தை எழுத்து வடிவில்... புத்தகத்தில் பதிய வைப்பது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சிறப்பல்ல. புத்தகம் மறைந்தால், அதோடு சேர்ந்து வேதமும் மறைந்துவிடும். எனவே, கல்வியை மூளையில் சேமிக்க வேண்டும்.

வேதம் பொலிவு குறையாமல் திகழ, வாய்மொழிக் கல்வி உதவுகிறது. இதற்கு மாறாக... வேதம், ஏட்டுக் கல்வியாக இருந்திருந்தால், மற்ற கல்விகளைப் போலவே தனது இயல்பான சிறப்புகளைப் படிப்படியாக இழந்துவிட்டிருக்கும்! ஆக... நமது பண்புக்கும் கலாசாரத்துக்கும் ஆதாரமான வேதத்தைக் காப்பாற்றும் விழாவே 'உபாகர்மா.'

சுமார் 40 வருடங்களுக்கு முன் குடும்பத்தைப் பிரிந்து சென்ற ஒருவர், தற்போது இருக்கிறாரா இல்லையா என்று தெரியாத நிலையில், அவரின் வாரிசுகள் பிதுர் காரியங்கள், சிராத்தம் முதலானவற்றை எப்படிச் செய்ய வேண்டும்? திதி, மாதம் ஆகியவற்றைக் கணக்கிடுவது எப்படி?

- கி.ரா.கோபால், விசாகப்பட்டினம்-2.

'**வீ**ட்டை விட்டு வெளியேறிய ஒருவர், உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்ற தகவல் 12 வருடங்களாகத் தெரியவில்லை எனும் பட்சத்தில், அந்த நபர் இறந்ததாகக் கருதி ஈமச் சடங்குகளைச் செய்யலாம்' என்கிறது தர்ம சாஸ்திரம். 'ஒருவேளை அவர் திரும்பி வந்தாலும்... அவரை புதுப் பிறவியாக எண்ணி, ஜாதகர்மம் முதலான சடங்குகளை முறைப்படி நடத்தி சேர்த்துக் கொள்ளலாம்' என்றும் தர்ம சாஸ்திரம் அறிவுறுத்துகிறது.

நீங்கள் குறிப்பிடும் நபர், குடும்பத்தைப் பிரிந்து 40 ஆண்டுகள் ஆகின்றன என்கிறீர்கள். எனவே, தகவல் ஏதும் தெரியாத நிலையில், ஈமச்சடங்கில் ஈடுபடலாம்.

ஒரு சிலருக்கு, 'பிரிந்து சென்ற நபர் பற்றி எந்தத் தகவலும் இல்லாத பட்சத்தில், அவர் இறந்துபோனதாக எப்படி உறுதியாகக் கூற முடியும்? ஒருவேளை, அவர் உயிருடன் இருந்தால்?' என்றொரு கேள்வி எழலாம்!

இந்த நெருடலின் காரணமாக குறிப்பிட்ட நபருக்கு கர்மா செய்யாமல் விட்டுவிடுவோம் எனில், முன்னோர் சிராத்தம், நாந்தீ சிராத்தம் முதலான காரியங்களில் குறைபாடுகள் ஏற்படும். எப்படி?

ஒருவேளை நமது எதிர்பார்ப்புக்கு மாறாக... உண்மையில் அவர் இறந்துவிட்டிருந்தால், உரிய கர்ம காரியங்கள் செய்யாத வரையில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிரேத சரீரத்துடன்தான் இருப்பார்! முன்னோருக்கு உரிய சிராத்த காரியங்களில் அவரை அழைக்க முடியாது. அவரை (தந்தையை) அழைக்காமல் மற்ற முன்னோருக்கும் (பாட்டனார், முப்பாட்டனாருக்கு) வாரிசுகள் சிராத்தம் செய்ய முடியாது; வீண் மன நெருடல் ஏற்படும். இதனால் பலன் கிடையாது! தவிர, நம் வீட்டில் நடக்கும் திருமணம் முதலான விஷயங்களில், நாந்தீ சிராத்தத்திலும் அவரை சேர்க்க இயலாது. அப்படி சேர்ப்பதாக பாசாங்கு செய்தாலும் பலன் கிடையாது!

சிராத்தத்துக்கான முக்கிய தேவை... சிரத்தை. ஆனால், நமக்குள் ஏற்படும் வீண் சந்தேகம், சிரத்தையை சிதைத்துவிடும். எனவே, சந்தேகத்தை அகற்ற வேண்டும்.

தவிர... குடும்பத்தைப் பிரிந்து காணாமல் போனவரின் மகன், 'தந்தை எங்காவது உயிருடன் இருக்கலாம்' என்ற எண்ணத்தில், தனது தந்தைக்கு கர்மா செய்யாமல் விட்டு விட்டால் இன்னுமொரு சிக்கலும் உண்டு. பிற்காலத்தில் இவரின் மகன் (காணாமல் போனவரின் பேரன்) சிராத்த காரியங்களில், தன் தாத்தாவின் பெயரைச் சொல்ல முடியாத நிலை ஏற்படும்; சிராத்த காரியம் முழுமை பெறாது. ஆகவே, கர்மாவை செயல்படுத்துவதே சிறப்பு.

இந்தச் சூழலில், கிருஷ்ண பட்ச ஏகாதசி அல்லது அமாவாசை ஆகிய நாளில் ஒன்றை அவரது இறந்த நாளாக பாவிக்கலாம்.

'சுகினோ பவந்து' என்பதன் விளக்கம் என்ன?

- வி.ஜி.சத்தியநாராயணன், சென்னை-61.

'**அ**னைத்தும் (எல்லோரும்) மகிழ்ச்சியோடு விளங்கட்டும்' எனும் வாழ்த்துரை அது!

வியாழக்கிழமை அன்றே வீடு - வாசல் கழுவி சுத்தப்படுத்தி, பூஜை பாத்திரங்களையும் கழுவி, பொட்டு வைத்து, வெள்ளிக்கிழமை காலையில் விளக்கேற்றி வழிபடலாமா? அல்லது வெள்ளிக்கிழமை அன்று வீடு மற்றும் பூஜை பாத்திரங்களைக் கழுவி மாலையில் விளக்கேற்றுவது சரியா?

- எம்.ஜெயலக்ஷ்மி, திருமுல்லைவாயில்.

வீடு வாசல் கழுவுவதும், பாத்திரங்கள் துலக்குவதும், பொட்டு வைப்பதும், விளக்கேற்றுவதும் தினசரி வேலைகள். தினமும் காலையிலும் மாலையிலும் வீட்டில் விளக்கேற்ற வேண்டும்.

தாங்கள், 'வியாழக்கிழமை இரவு வீட்டு அலுவல்களை முடித்துக் கொண்டால், வெள்ளிக்கிழமை காலையில் விளக்கேற்றுவேன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



வெள்ளிக்கிழமை காலையில் வீட்டு அலுவல்கள் செய்ய நேர்ந்தால், அன்று மாலையில் விளக்கேற்றுவேன்!' என்கிறீர்கள். ஒருவேளை மட்டும்தான் விளக்கேற்றுவேன் என்று அடம்பிடிக்காதீர்கள். தினமும் காலை - மாலை இரு வேளையும் விளக்கேற்றுங்கள். ஆரம்பத்தில் மலைப்பாக இருக்கும். காலப்போக்கில் சுலபமாகி விடும்.

வசதி வாய்ப்புகள் பெருகிவிட்ட இந்தக் காலகட்டத்தில், அலுவல்களைப் பெரிதுப்படுத்திக் காட்டுவது தவறு.

'வாழைப்பழமா... ஐயோ! தோலை உரிக்க வேண்டும், கையால் கிள்ள வேண்டும், வாயில் போட்டு மெல்ல வேண்டும்; முழுங்க வேண்டும்... எத்தனை சிரமங்கள்? வாழைப்பழத்தை முதல் நாளே உரித்து வைத்து, மறுநாள் சாப்பிடலாமா?' என்று கேட்பதுண்டா?!

சுறுசுறுப்பாக வேலை செய்வது, சுகாதாரத்துக்கு உதவும். ஆகையால், அக்கறையுடன் சுமையை ஏற்றுக்கொள்ளுங்கள்.

முழு நிலவு ஒளி வீசும் நன்னாள் பௌர்ணமி. ஆனால், அமாவாசையையும் 'நல்ல நாள்' என்று முடிவு செய்து இருக்கிறோமே... ஏன்?

- வி.ஜி.எஸ்., மடிப்பாக்கம்.

தங்களது முடிவை சாஸ்திரம் ஏற்காது. அன்று முகூர்த்தம் செயல்படாது. பௌர்ணமியில் விரதமும் அமாவாசையில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முன்னோர்களின் ஆராதனையும் உண்டு. இந்த நாட்களில், மற்ற அலுவல்களில் இருந்து விடுபட்டு முறையாக விரதத்தையும் ஆராதனையையும் நடைமுறைப்படுத்தும்படி பரிந்துரைக்கிறது தர்ம சாஸ்திரம். சம்பிரதாயமாக உருவெடுத்த நல்ல நாளை, சாஸ்திரத்தில் நுழைப்பது தவறு.

மனைவியானவள் தன் கணவனுக்குத் தெரியாமல், தானதருமங்கள் செய்யலாமா? இதனால் பலன் உண்டா?

- கே.அருணாசலம், கேரளா.

தர்மத்தை செயல்படுத்து' என்கிறது வேதம். 'அறம் செய்ய விரும்பு' என்றாள் ஔவை. இவற்றை எல்லோரும் நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டனர்.

பலரோடு சேர்ந்து வாழும் மனிதனுக்கு, அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நிர்பந்தம் உண்டு. 'தனியாக உணவு உட்கொள்ளாதே! பிறருக்கு அளித்து உண்ண வேண்டும். அதுவே பண்பாடு; அறம்' என்கிறது வேதம். வாழ்க்கையின் அமைதிக்கு அறமும், அதன் மீதான நம்பிக்கையும் வேண்டும். இந்த நம்பிக்கையை கணவருக்கு ஏற்படுத்தி, அறத்தின் சிறப்புகளை அவருக்கு உணர்த்தி, அவருக்குத் தெரிந்து அறத்தைச் செயல்படுத்துவதே சிறப்பு!

பஞ்சபூதத் தலம் திருவாரூரா... காஞ்சிபுரமா?

- எஸ்.ராம்கோபால்.

எல்லா இறை உருவங்களும் பஞ்சபூதங்களில் அடக்கம். அருவம், உருவம் ஆவதற்கு பஞ்சபூதங்களின் கலவை வேண்டும். மூலவரைக் குடியிருத்தும் தறுவாயில் பஞ்சபூதங்கள் அடங்கிய ஐம்புலன்களை நிறைவு செய்வார்கள். குறிப்பிட்ட இறை உருவம், ஐம்பூதங்களுள் ஒன்றில் சிறப்பு பெற்றிருக்கும். அதில் காஞ்சியும் ஒன்று.



CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திருஷ்டிக்கு ஏன் பூசணிக்காய்?

சந்தியாவந்தன வேளையில், அலுவலகத்தில் இருக்க நேர்ந்தால்... அங்கேயே கை - கால் கழுவிக்கொண்டு, பேன்ட்-சர்ட் அணிந்தபடியே காயத்ரி ஜபம் செய்யலாமா?

- *அ.குப்பாச்சார், சென்னை-70.*

பத்து நிமிட நேரம் ஒதுக்க வேண்டிய சந்தியாவந்தனத்துக்கு அலுவலக நேரம் ஒரு தடையே அல்ல. மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. பிற மதத்தவர்கள், அலுவலக நேரங்களில் தங்கள் கடமைகளைப் புறக்கணிப்பதில்லை.

சீக்கியர்களை முகச் சவரம் செய்யும்படி நிர்பந்திப்பதில்லை. தங்களது வழிபாடு சார்ந்த கடமைகளை நிறைவேற்ற எல்லோருக்கும் சுதந்திரம் இருக்கிறது. தனிப்பட்ட எண்ணத்தை எழுதவும் பேசவும் சுதந்திரம் அளித்த நாடு, பிறப்புரிமையை ஒருநாளும் புறக்கணிக்காது.

ஆகவே, அலுவல் நேரங்களில் அனுமதி பெற்று வழிபாடுகளை செயல்படுத்தலாம். சந்தர்ப்பவசத்தால் பேன்ட்- சர்ட் அணிந்து சந்தியாவந்தனம் செய்ய நேர்ந்தாலும் தவறில்லை. ஒரே விஷயம்.. எந்தக் காரணம் கொண்டும் சந்தியாவந்தனத்தை இழக்கக் கூடாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பூசணிக்காயை மட்டும் திருஷ்டிக்காகப் பயன்படுத்துவது ஏன்?

- எஸ்.முரளி, ஸ்ரீரங்கம்.



பழங்களில் வாழைப் பழத்துக்கும், ஆடைகளில் நூலாடைகளுக்கும் தனிச்சிறப்பு உண்டு. இப்படி, சுகாதாரம் மற்றும் பொருளாதார நோக்கில் பல பொருட்களுக்குச் சிறப்பு உண்டு.

திருஷ்டி மற்றும் தோஷம் விலக பூசணிக்காய் சிறந்தது. இதில் சதைப்பற்று அதிகம். இது, மஞ்சள் மற்றும் சுண்ணாம்பு கலந்த நீரை ஏற்று சிவப்பு நிறமாகிவிடும் (உடைக்கும்போது) இதன் சதைப் பற்று, பார்க்கும் கண்களுக்குப் பிடிக்காமல் போய்விடும். இதனால் திருஷ்டி தோஷம் ஒட்டாது. அருவருப்பான காட்சியைப் பார்க்கும் மனம், 'இவனுக்கு இப்படியொரு பொருள் கிடைத்து விட்டதே!' என்ற பொறாமை எண்ணத்தைப் பின்னுக்குத் தள்ளிவிடும். தோஷம் தோன்றாது!

காவல் தெய்வங்களுக்கு தோஷம் விலக உயிரினங்களை பலிகொடுக்கும் நடைமுறை இருந்தது. உயிரினங்களை அழிப்பது அறம் அல்ல என்று எண்ணியவர்கள், பூசணிக்காயை உயிரினமாக பாவித்து, அதை உடைத்து மஞ்சள் சுண்ணாம்பு சேர்த்து, தெய்வத்தின் முன்னே வைப்பது மரபு. திருஷ்டியும் தோஷமும் விலகியதாக எண்ணுவோம்; சஞ்சலத்தில் இருந்து விடுபடுவோம். ஆக... தடுமாற்றமின்றி செயல்பட பூசணிக்காய் பலி பயன்படுகிறது.

தலைவரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்கிறோம். நினைவுநாளில் அவரது படத்துக்கு முன் விளக்கேற்றி, ஊதுவத்தி வைத்து வணங்குகிறோம். துக்கத்தைக் கொண்டாட கறுப்பு உடை உடுத்துகிறோம். இதற்கெல்லாம் அறிவியல் சான்றுகளைத் தேடுவது இல்லை. நம் மனம், ஒன்றை விரும்பிவிட்டால் சான்றைத் தேடாது. விரும்பாததை அகற்றவே ஆதாரங்களையும் சான்றுகளையும் தேடுகிறோம்.

சிந்தனைக்கு எட்டாத விஷயங்கள் ஏராளம். குறுகிய சிந்தனை வட்டத்தில் இருந்து நாம் வெளிவர வேண்டும். அறிவுப் புலன்களால் தெரிந்தவை, நம்பிக்கைக்கு உகந்ததாக இருக்காது. விண்வெளியில் தென்படும் சந்திரன்... இங்கிருந்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பார்க்கும்போது ஓர் அப்பளம் அளவிலேயே தெரியும். ஆனால், அதன் வடிவம் மிகப் பெரியது! எனவே, சிந்தனையில் தெளிவு பெறுவது அவசியம்.

மனம் சார்ந்த சிந்தனையில் தெளிவு பெறுவது ஆன்மிகம். அறிவுச் சான்று ஆன்மிகத்துடன் இணைந்தது. அறிவுப் புலன்கள் அளித்த தகவலை, ஆன்மாவுடன் இணைந்த மனம் ஆராய்ந்து முடிவு தரும். அந்த அறிவுச் சான்று பூசணிக்காய் விஷயத்திலும் உண்டு.

அந்தக் காலத்தில், மனது பக்குவம் அடைய பல நடைமுறைகள் இருந்தன. அவற்றை, மேலோட்டமாகப் பார்த்தால் வெகுளித்தனமாகக்கூடத் தோன்றும். சான்றைத் தேடும் பணியில் இறங்காமல், அவற்றை நம்பிக் கடைப்பிடித்தால் விருப்பம் ஈடேறும்; மனம் திருப்திப்படும். எனவே, பெரியோர்களது நடைமுறைகளைப் பின்பற்றுங்கள். நிச்சயம் பலன் உண்டு.

ஆலயத்தூண்களில் சிற்பங்களாக ரதி - மன்மதன் உருவங்கள் உள்ளனவே... இதன் தாத்பரியம் என்ன?

- ஆர்.கே.லிங்கேசன்,
மேலகிருஷ்ணன்புதூர்.

ஆலயங்களில் உள்ள சிற்பங்கள், ஆன்மிகத்தின் செயல் விளக்கங்கள். ரதி - மன்மதன் இணைபிரியா தம்பதி. மன்மதன் என்றால் ஆசை; ரதி என்றால் அன்பு. அமைதியான மனதைச் செயல்படத் தூண்டுபவன் மன்மதன் இவர்களின் சிற்பங்கள், மனம் அன்பில் உறைவதை உணர்த்துகிறது. மன்மதன் மட்டுமல்ல, ஆலயத்தின் உள்ளே உறைந்திருக்கும் இறை வடிவங்களும் தேவியருடனேயே காட்சி தருகின்றன.

படைப்புக்காக... கடவுள், தன்னை ஆண் - பெண் என இருகூறாக்கிக் கொண்டார். 'கடவுளின் மனம், படைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டது. ஆசையை நிறைவேற்ற பெண்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வடிவம் தேவைப்பட்டது. அது, அன்பு வடிவம் *(ஸோகாமய தபஹுஸ்யாம் ப்ரஜாயேய)* என்கிறது உபநிடதம். 'செயலுக்காக இருவர்; உண்மையில் ஒருவர்' என்பதை, ஆவுடையுடன் இணைந்த லிங்க உருவம் நமக்கு அறிவுறுத்துகிறது. தம்பதியாக இணைந்த பிறகு பிரியக்கூடாது எனும் பண்பாட்டின் விளக்கம் அது. அப்பன், பாட்டன், முப்பாட்டன்... பிள்ளை, பேரன், கொள்ளுப்பேரன் என்கிற குல பரம்பரை நிலைக்க, தம்பதி இணைந்திருப்பதே சிறப்பு என்ற தகவலும் இதில் அடக்கம்.

சில்ப சாஸ்திரம், மயமதம் போன்ற நூல்கள் ஆலயத்தில் அமைக்கும் சிற்பங்களுடன் ரதி-மன்மத சிற்பத்தையும் சேர்க்க வேண்டும் என பரிந்துரைக்கின்றன.

சில கோயில்களில், பிராகாரத்தில் இருக்கும் ஸ்ரீதட்சிணாமூர்த்தி, துர்கை, மகாலட்சுமி மற்றும் சரஸ்வதிதேவி சிலைகளின் சிரசில் (சிலைகளை தொடாதீர்கள் என்று அறிவிப்பு இருந்தும்) தங்கள் கைகளாலேயே பூ வைத்தும் வணங்குகின்றனரே... ஏன் இப்படிச் செய்கின்றனர்?

- டி.எம்.பானுமதி, சென்னை-88.

பண்பாட்டை வளர்க்கவும், மக்கள் மனதில் நல்ல எண்ணங்களை விதைக்கவும் கோயில்கள் உதவுகின்றன. அவற்றின் பாதுகாப்புக்காக சில சட்டதிட்டங்கள் இருக்கலாம். சிலைகளின் புனிதம் குறையாமல் இருக்க, சூழலுக்கு உகந்தவாறு நல்ல நடைமுறைகளும் முளைக்கலாம்.

மக்களுக்காக எழுப்பப்பட்ட கோயில்களுக்கு, பாதுகாவலாக இருக்க வேண்டியது மக்களின் பொறுப்பு. பொறுப்புடன் பாதுகாத்து, வருங்கால சந்ததியினரிடம் கோயிலை ஒப்படைக்க வேண்டும். வரையறைக்கப்படாத சுதந்திரத்தை விரும்பக்கூடாது. பக்தி மேலிட, வரையறையை மீறுவது பாமரர்களிடம் இருக்கிறது! கதாகாலட்சேபம் மற்றும் சொற்பொழிவுகள் மூலம் வழிபாட்டு நெறிமுறைகளை, கோயிலில் பக்தர்கள் அனுசரிக்க வேண்டிய சட்டதிட்டங்களை மக்கள் மனதில் பதிய வைக்க வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



உரிமையைப் பெற ஆர்வம் உள்ளவர்களுக்கு பொறுப்பிலும் அக்கறை வேண்டும். நீதிமன்றங்களும் காவல் நிலையங்களும் விழிப்புடன் இருந்தும், சட்டத்தை மீறுபவர்களது எண்ணிக்கை வளர்ந்துகொண்டே இருக்கிறது. 'கலியுகத்தில் அதர்மம் ஓங்கி நிற்கும்' என்கிறது புராணம். சட்டத்தைப் பொருட்படுத்துவதற்கான எண்ணம் வளர அறக்கல்வி அவசியம். இதன் குறைபாடுதான் சகல சட்டமீறல்களுக்கும் காரணம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எங்களது குலதெய்வங்களின் சிலைகள் பின்னம் அடைந்துவிட்டதால், வேறு சிலைகளைச் செய்து வைத்து வணங்கி வருகிறோம். பின்னம் அடைந்த சிலைகளை அகற்றுவது எப்படி?

- கா.தங்கப்பன், கோம்பை.

பின்னம் அடைந்த சிலைகள், பூஜைக்கு உதவாது. அவற்றை அகற்றுவதில் தவறில்லை. பின்னம் அடைந்த சிலைகளை விருப்பப்படி அப்புறப்படுத்தலாம்.



இதுவரை தெய்வம் குடியிருந்த சிலை என்கிற எண்ணம் மனதில் நெருடலை ஏற்படுத்தினால், அந்தச் சிலைகளை நீர்நிலைகளில் (ஆறு, குளம்) சேர்க்கலாம். அல்லது வேறு வடிவங்களாக மாற்றி அமைத்தும் பாதுகாத்து வரலாம்.

பின்னம் அடைந்த சிலை, இறை வடிவத் தகுதியையும் சாந்நித்யத்தையும் இழந்துவிடுகிறது. எனவே, இந்தச் சிலையை என்ன செய்தாலும் தவறில்லை. இதற்கு மனோதிடம் வேண்டும், அவ்வளவுதான்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திருமணமான பெண்கள், தாய் வீட்டு குலதெய்வத்தை வணங்க வேண்டுமா அல்லது கணவர் வீட்டு குலதெய்வத்தை வணங்க வேண்டுமா?

- ஆர்.சேதுராமன், திருவள்ளூர்.

'சிறு வயதில் பெண் குழந்தைக்குக் காப்பாளன் அவளின் தந்தை. வயது வந்த பிறகு, கணவனே அவளுக்குக் காப்பாளன். முதுமையில், அவளின் பிள்ளையே காப்பாளன்' என்கிறார் மனு.

பெண்ணினத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து பாதுகாக்கும் பொறுப்பை ஆண் இனத்திடம் சுமத்தியது தர்ம சாஸ்திரம். தந்தையால், குறிப்பிட்ட வயதுக்கு மேல் பெண்ணின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாது. ஆகையால், அவளுக்கு மணமுடித்து, அவளது கணவனிடம் பாதுகாக்கும் பொறுப்பை ஒப்படைக்கிறார் தந்தை. இப்போது, தந்தையை விட்டு கணவனுடன் சேர்ந்துவிட்டாள் அவள். அவனின் வீடே அவளது வீடு.

திருமணமாகாத நாள்வரை தன் பெயரோடு தந்தையின் பெயரை இணைத்துக்கொள்வது உண்டு. திருமணமான பிறகு, அந்த இணைப்பில் கணவன் பெயர் ஒட்டிக்கொண்டுவிடும். தந்தையின் பெயர் விடுபடும். அவர் பெயரை அகற்றிய பிறகு, அவர் வணங்கும் குலதெய்வம் மட்டும் எப்படி ஒட்டிக்கொள்ளும்! ஆகவே, திருமணமான பெண்கள், கணவரின் குலதெய்வத்தையே வணங்க வேண்டும்!

சமஷ்டி உபநயனம் நடைபெற இருக்கும் சுபமுகூர்த்த நாள், ஒரு வடுவின் (குழந்தையின்) நட்சத்திரத்துக்கு மட்டும் பொருந்தாவிட்டால் என்ன செய்வது?

- வி.வெங்கட்ராமன், செகந்திராபாத்-9.

சமஷ்டி உபநயனம், தர்ம சாஸ்திரத்துக்கு உடன்பாடானது அல்ல. புதிய நடைமுறை ஒன்றை அறிமுகம் செய்து, அதற்கு முகூர்த்த விளக்கமும் கேட்பது விந்தையாக இருக்கிறது!

இரட்டைக் குழந்தைகளுக்கு ஒரே நேரத்தில் உபநயனம் செய்யலாம். அந்தக் குழந்தைகளுக்கு உரிய காலம்... அதாவது, உபநயனம் செய்விக்க வேண்டிய தருணம் ஒன்றாகவே வரும். ஆகவே, இதற்கு தர்ம சாஸ்திரம் சம்மதிக்கிறது. ஆனால், தனித் தனியே பிறந்தவர்களுக்கு... அவர்கள் சகோதரர்களாக இருந்தாலும்கூட, தனித் தனியாகத்தான் உபநயனம் செய்ய வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஒரு குழந்தை, தன் அன்னையின் கர்ப்பத்தில் இருந்த பத்து மாதங்களையும் சேர்த்து கணக்கிட்டு, அவனுக்கு எட்டு வயது ஆனதும் நடத்த வேண்டிய சிறப்பான நிகழ்வே உபநயனம். அறத்தை செயல்படுத்துவதற்கான அடிப்படைத் தகுதியை கொடுக்கும் இந்த வைபவம், உரிய காலத்தில் நடைபெற வேண்டும்.

உரிய வயதைத் தொட்டுவிட்டால் வாக்களிக்கும் உரிமையையும், முதுமை பருவத்தில் அதற்கே உரிய சலுகைகளையும் முயன்று பெறுகிறோம். இந்த விஷயங்களில் காட்டும் அக்கறை, உரிய காலகட்டத்தில் உபநயனம் போன்ற வைபவங்களை நிகழ்த்துவதிலும் இருக்க வேண்டும். சிறுவனது பிறப்புரிமை உபநயனம். பெரியவர்களது அலட்சியம், குழந்தைகளின் உரிமையைப் பறித்துவிடக் கூடாது.

உபநயனம் நிகழ்த்த வேண்டிய காலத்தைத் தவறவிட்டதால்தான் சமஷ்டி உபநயனத்தில் செய்கிறீர்கள். 'வ்யஸ்டி'யாக இருக்க வேண்டிய ஒன்றை, 'சமஷ்டி'யாக செய்வது, உரிய பலனைத் தராது. உங்களது இயலாமையைக் காரணம் காட்டி, சமஷ்டியைப் புகுத்துவது சிறப்பல்ல.

'உபநயன காலம் தாண்டிப் போவதைத் தடுக்க சமஷ்டியாகவாவது உபநயனம் நடந்தேறட்டும்' எனும் பரிவு ஏற்புடையது அல்ல. இது, சிரத்தை இல்லாதவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக அமைந்துவிடும். காலப்போக்கில் எல்லா உபநயனங்களும் சமஷ்டியில் ஒன்றிவிடும்.

சிரத்தை இல்லாதவர்கள், எப்போதும் தங்களது தவறை உணரமாட்டார்கள். ஆகவே, அங்கும் இங்குமாக... ஓரிருவர் செய்வதை சுட்டிக்காட்டி, சீர்திருத்தத்தில் பெருமை அடைந்ததாக மகிழக்கூடாது. சிரத்தையானவர்களும்கூட தற்போது சமஷ்டி உபநயனத்தை ஏற்றுக்கொண்டு விட்டனர்!

சமஷ்டியை ஏற்றால், முகூர்த்த நாளைப் பற்றிக் கவலைப்படக் கூடாது. முற்காலத்தில், நான்கு நாட்கள் நடைபெற்ற திருமண வைபவம் ஒரு நாளாகக் குறைந்தது. காலப்போக்கில் ஒரு வேளையாக மாறினாலும் ஆச்சரியம் இல்லை. மணமகன் வீட்டில் நடக்க வேண்டிய 'சாந்திக் கல்யாணம்' நிகழ்வை, அவசர அவசரமாக திருமணத்தன்று இரவே நடைமுறைப்படுத்துகிறோம். முன்னோர்கள் நினைத்தது ஒன்று; நடந்தது வேறு.

இந்த நிலை உபநயனத்துக்கும் வர வேண்டுமா? சிந்தியுங்கள்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இந்தியாவில் மட்டும் சித்தர்கள் ஏன் அதிகம்?

உலகில் பல்வேறு நாடுகள் இருந்தும் இந்தியாவில் மட்டும் அதிக அளவில் சித்தர்களும், ஞானிகளும், அவதாரப் புருஷர்களும் தோன்றக் காரணம் என்ன?

- கூந்தலூர் வி.சந்திரசேகரன்,
கும்பகோணம்-1.

முதலில் தோன்றிய அறிவுநூல் மறை. அதை 'எழுதாக்கிளவி' என்பார்கள். இதை, வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களும் ஆமோதிக்கிறார்கள். 'உலகில், நாகரிகம் பல இடங்களில் பரவி, வளர்ந்து இருந்தாலும் முழுமை பெற்ற நாகரிகத்தின் உருவம், வேதத்தில் தென்படுகிறது!' என்றார் மாக்ஸ்முல்லர் (இவர், நமது வேதத்தை அணுஅணுவாக ஆராய்ந்தவர்). இதை, கீத், ப்ளூம் பீல்ட், மாக்டனல், வின்டர்நிட்ஸ் போன்றவர்கள் ஆமோதித்தும் பாராட்டியும் உள்ளனர். இவர்களது நூல்கள், ஜெர்மனியிலும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



இங்கிலாந்தின் 'இன்டியா ஆபீஸ்' லைப்ரரியிலும் பாதுகாப்பாக இருக்கின்றன.

ஆம், அப்பழுக்கில்லாத அறத்தின் ஊற்று நம் இந்திய மண்ணில் தென்பட்டது. 'இந்தியாவில் பிறந்த முதல் மனிதனிடம் இருந்து உலகில் வாழும் மற்றவர்கள், தங்களது அறநெறிகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்!' என்று மனு கூறுவார் (*ஏதத்தேச ப்ரஸூதஸ்ய ஸகாசாத்...*).

எல்லா மண்ணிலும் எண்ணெய் கிடைக்குமா? எல்லா மண்ணிலும் தங்கம் கிடைக்குமா? மலை வாழைப்பழத்தை எல்லா இடங்களிலும் பயிரிட முடியுமா? முடியாது அல்லவா... இப்படி, மண்வளம் மட்டுமல்ல... தேசத்துக்கு தேசம் உயிரினங்களிலும் மாறுபாடுகள் தென்படும். பூமியின் ஒவ்வொரு பகுதிக்கும் இயற்கை அளித்த தனித்தன்மை என்று ஒன்று உண்டு.

நம் பாரதத்தின் தனித்தன்மை அது. அறம் போற்றும் நாடு; ஆன்மிகம் வளர்க்கும் தேசம்! அக்னி வழிபாட்டை அறிமுகம் செய்த வேதம், 'பாரத' என்ற அக்னியின் பெயரை நம் தேசத்துக்குச் சூட்டியது.

உடலோடு இணைந்த ஆன்மாவுக்கு முக்கியத்துவம் தராமல், மற்ற புலன்களின் தாகத்தைத் தணிப்பதே வாழ்க்கையின் குறிக்கோள் என்ற சிந்தனை, பலரிடம் உண்டு. ஆத்மாவை அறிந்துகொள்ளும் ஆர்வம் சிலருக்கு மட்டுமே உண்டு. 'ஆன்மாவை அறிவதே சிந்தனையின் எல்லை; பிறப்பின் குறிக்கோள்'

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



என்கிறது வேதம் *(பிரம்மைவ வாச: பரம் வ்யோம)*.

'உலகவியலுடன் மனிதன் இணைந்தால் போதாது; ஆன்மிகமும் இணைய வேண்டும். அதுவே, முழு ஆனந்தத்தை தரும்' என்பதே, நம் சித்தர்கள் மற்றும் ஞானிகளது கருத்து. ஆம், 'ஆன்மாவை அறிவதே அறிவு!' என்பதுதான் அவர்களது கணிப்பு.

ஆராய்ச்சி எப்போது முற்றுப்பெறும்? புலன்களையோ மனதையோ ஆராய்ந்தால் மட்டும் போதாது. உடலில் இருக்கும் ஆன்மாவையும் ஆராய வேண்டும். அதற்கு மேலும் ஆராய்வதற்கு ஒன்றும் இல்லை; ஆராய்ச்சி முற்று பெற்றுவிடும்.

இப்படிப்பட்ட ஆன்ம ஆராய்ச்சியில் தங்களை அர்ப்பணித்தவர்கள் நம் ஞானியர். நம் சிந்தனைக்கு எட்டாத பல விஷயங்களை... மறையின் துணையுடன், தாங்கள் அனுபவித்ததோடு, மற்றவருக்கும் பகிர்ந்தளித்தவர்கள் அவர்கள். இந்த மண்ணில் பிறந்தவர்களுக்கு ஆன்மிக சிந்தனை இயல்பு. ஆகையால், அவர்கள் இங்கு தோன்றுவதே பொருந்தும்!

என் மாமனார் இறந்து 65 வருடங்கள் ஆகின்றன. மாமியார் இறந்து 3 வருடங்கள் ஆகின்றன. அவர்களது போட்டோக்களை ஸ்வாமி படத்துக்கு அருகில் மாட்டி வைத்திருக்கிறேன். இது சரியா? என் மாமியாரின் போட்டோவுக்கு பொட்டு வைக்கலாமா?

- லட்சுமி ராமஸ்வாமி, சென்னை-83.

மனதில் இருக்க வேண்டிய மாமியாரை, படத்தில் இறக்கி வைத்துவிட்டீர்கள். அது எப்படி பக்தியின் அடையாளம் ஆகும்? இறந்து தெய்வம் ஆனவர்களை, பரம்பொருளுக்கு ஒப்பாக நினைக்கும் தங்களது சிந்தனை விசித்திரமானது!

செல்வந்தர்களது வீட்டில், தாய் - தந்தையரின் படங்கள் சுவரில் தொங்கவிடப்பட்டிருக்கும். பண்டைய நாட்களில், முன்னோர் படங்களை தெய்வத்துக்கு நிகராக மாட்டிவைக்க மாட்டார்கள். இந்த சம்பிரதாயம், இடையில் முளைத்ததே. இது, உண்மையான பக்திக்கு ஊக்கம் அளிக்காது. பூஜையறையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் மாமியாரின் படம்... அவர் மீது நீங்கள் வைத்திருக்கும் மரியாதையை, மற்றவர்களுக்கு வெளிக்காட்ட உதவும்; அவ்வளவுதான்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



'பக்தி' என்பது நம்முள் இருக்க வேண்டிய ஒன்று. அதை, மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. மனிதர்களாகப் பிறந்து நம்மிடையே வாழ்ந்து மறைந்தவரை மனதில் இருத்த வேண்டும். படமாக மாட்டி வைத்துவிட்டு, நம் மனதில் இருந்து அவரை ஒதுக்கிவிடக் கூடாது.

படமாக மாட்டுவது உங்கள் விருப்பம் எனில், வேறு ஓர் இடத்தில் சுவரில் மாட்டி வையுங்கள். சாமி ப்டங்களுடன் சேர்த்து வைக்காதீர்கள்.

கடவுளை எல்லாவற்றுக்கும் உயர்வாகப் பாருங்கள். அதுவே நல்ல மரபு!

சிவபெருமானை, துளசி இலைகளால் பூஜிக்கலாமா?

- க.சு.மணியன், பெரணமல்லூர்.

'பக்தியுடன் இலை, பூ, பழம், நீர் ஆகியவற்றை அளித்தாலும் ஏற்றுக்கொள்வேன்' என்கிறார் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா. குறிப்பிட்ட இந்த இலைதான் வேண்டும்; பழம்தான் வேண்டும் என்று குறிப்பாக எதையும் கூறவில்லை. அதை, பக்தர்களது விருப்பத்துக்கு விட்டுவிட்டார்!

பூரணத்துவம் அடையாதவர்களிடமே விருப்பு - வெறுப்பு இருக்கும். இறைவன் பரிபூரணமானவர். ஆகையால், அவருக்கு அர்ப்பணிக்கும் பொருட்களைத் தங்களது விருப்பப்படி தேர்வு செய்யலாம். சிவபெருமானுக்கு துளசியையும் அளிக்கலாம்.

குறிப்பிட்ட இறை உருவத்துக்கு, குறிப்பிட்ட இலை சிறந்தது என்று புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும். உதாரணமாக... வில்வம் - சிவனுக்குச் சிறப்பு; துளசி - நாராயணனுக்கு உரியது என்று கூறப்பட்டிருக்கும். குறிப்பிட்ட ஒன்றின் சிறப்பை உணர்த்த புராணக் கதைகள் அவ்வாறு கூறும். உடனே, மற்றவற்றுக்கு சிறப்பு இல்லை என்று நாம் கருதக்கூடாது.

'பிள்ளையாருக்கு 20 இலைகள் சிறப்பானவை' என்று புராணம் கூறும். அவற்றில் மாவிலையும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஒன்று. அதற்காக, அன்றாடம் மாவிலையால் அவருக்கு அர்ச்சனை செய்வது உண்டா?

'ஈசனுக்குத் தாழம்பூ கூடாது!' என்றொரு தகவலும் உண்டு. அதற்கான ஒரு கதையும் இருக்கும். அதே நேரம் ஈசனின் தேவியான அம்பாளுக்கு தாழம்பூ அர்ப்பணிக்கலாம் என்றும் சொல்லும். 'எனில், ஸ்ரீஅர்த்தநாரீஸ்வரரை தாழம்பூவால் அர்ச்சிக்கலாமா?' என்றொரு கேள்வி பிறக்கும்! தாழம்பூ நறுமணத்துடன் திகழும் உமையை ஏற்கும் சிவனார், நறுமணத்தை எப்படி நுகராமல் இருப்பார்?!

எனவே, இறை வடிவங்களுக்கு அர்ப்பணிக்கும் பொருட்களில் உகந்தது, ஆகாதது என்று விருப்பு - வெறுப்புகளை அலசுவது வீண்.

சபரி, தான் ருசித்து - ருசியாக உணர்ந்த பழங்களை ஸ்ரீராமனுக்கு அளித்தாள். வேடனான கண்ணப்பர் தனக்குப் பிடித்த உணவையே இறைவனுக்கு வழங்கினார். தான் சூடிய மாலையை, ஆண்டவனுக்கு அர்ப்பணித்தாள் ஆண்டாள்!

துளசிக்கென்று ஒரு நறுமணம் உண்டு. அது, உடலுக்கும் உள்ளத்துக்கும் உகந்தது. உகந்த பொருளை தன் பிரியமான இறை உருவத்துக்கு அளிக்கலாம். நறுமணம் கமழும் புஷ்பங்களும், இலைகளும் ஆண்டவனின் படைப்புகள். அவன் படைத்ததை அவனுக்கு அர்ப்பணித்து மகிழலாம்.

சாஸ்திரிகள், கனபாடிகள், தீட்சிதர்கள்... இவர்களுக்கு இடையேயான வேறுபாடு என்ன?

- கே.ஆர்.மகாலிங்கம், சென்னை-26.

தர்ம சாஸ்திரங்களைக் கற்றறிந்தவர் சாஸ்திரிகள். தரிசனங்களை நன்கு அறிந்த வேதம் ஓதுபவர்களும் இதில் அடங்குவர்.

வேதத்தைக் காப்பாற்ற ஏற்பட்ட வழிமுறைகளில் ஒன்று 'கனம்'. வேதத்தின் மூன்று பதங்களை, ஸ்வரத்துடன் குறிப்பிட்ட வரிசைக் கிரமத்தில் ஓதுவதில் தேர்ச்சி பெற்றவர் கனபாடிகள்.

வேதத்தில் இருக்கும் மூன்று சொற்களை எடுத்துக்கொள்ள வேண்டும் (நீங்கள் எளிதாகப் புரிந்துகொள்ள, மூன்று சொற்களுக்கும் 1, 2, 3 ஆகிய எண்களை குறியீடாக வைத்துக் கொள்ளுங்களேன்). முதல் சொல்லை - ஒரு முறையும், 2-வது சொல்லை - இரண்டு முறையும் சொல்ல வேண்டும். பிறகு, முதல் சொல்லை இரண்டு முறையும், 2-வது சொல்லை ஒரு முறையும் சொல்ல வேண்டும். தொடர்ந்து, 3-வது சொல்லை - இரண்டு முறையும் 2-வது சொல்லை ஒரு முறையும் முதல் சொல்லை இரண்டு முறையும் சொல்ல வேண்டும். 2 மற்றும் 3-வது சொல்லை வரிசையாக ஒரு முறை சொல்ல வேண்டும். இப்படிச் சொன்னால் அது 'கனம்' என்ற பாடமாக மாறிவிடும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உதாரணமாக... மதுரைக்கு போகலாம் மல்லிகைப்பூ ஆகிய மூன்று சொற்களை எடுத்துக்கொள்வோம்.

மதுரைக்கு போகலாம் போகலாம்

மதுரைக்கு மதுரைக்கு போகலாம்

மல்லிகைப்பூ மல்லிகைப்பூ போகலாம் மதுரைக்கு மதுரைக்கு

போகலாம் மல்லிகைப்பூ

– இப்படி வேதத்தின் மூன்று சொற்களைப் படிப்பதே கனம். இதைக் கற்று சிறந்தவர் கனபாடிகள் ஆவார்.

வேள்வி செய்பவர் தீட்சிதர்!

ஒரு கோயிலில், துர்கைக்கு அபிஷேகம் நடைபெற்றது. 'சொர்ணாபிஷேகம் செய்யப்போகிறேன்... ஆபரணங்கள் தருபவர்கள் தரலாம்' என்று குருக்கள் சொன்னதும், இளம்பெண் ஒருத்தி தனது திருமாங்கல்யத்தைக் கொடியுடன் கழற்றிக் கொடுத்தாள். அபிஷேகம் முடிந்து குருக்கள் திருப்பித் தர, மீண்டும் கழுத்தில் அணிந்துகொண்டாள். இது சரியா?

- லலிதா ஜெயராமன், சென்னை-30.





அந்தப் பெண் திருமாங்கல்யத்தைக் கழட்டிக் கொடுத்ததும் தவறு. குருக்கள் அதை ஏற்றுச் செயல்படுத்தியதும் தவறு. அறியாமையால், இருவரும் புதிய நடைமுறையை அறிமுகம் செய்திருக்கிறார்கள்!

சுமங்கலிகளுக்கு, திருமாங்கல்யம் எப்போதும் கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்க வேண்டும். 'அம்பாளின் திருமாங்கல்யம் கழுத்தில் ஒட்டிக்கொண்டு கோடாகத் தெரிகிறது!' என்கிறார் ஆதிசங்கரர். பெரியோர்கள், 'நீண்ட நாள் திருமாங்கல்யத்துடன் மிளிர வேண்டும்' என்று வாழ்த்துவர். குருக்கள்... திருமாங்கல்யத்தைத் தவிர்த்து வேறொரு ஆபரணத்தைத் தரும்படி கேட்டிருக்க வேண்டும். அந்தப் பெண்ணும் வேறோர் ஆபரணத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

சூரிய வம்சத்தின் குலவிளக்கான ரகு என்பவன், ஒரு வேள்வியைத் துவங்கினான். வேள்வியில், தான் சேமித்த - தனக்குச் சொந்தமான அனைத்தையும் கொடையாக அளிக்க வேண்டும் என்பது நியதி. ஆனால் ரகு, சிம்மாசனத்தையும் வெண்சாமரத்தையும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அளிக்கவில்லை. 'அவை, அவனது தனித்தன்மையைக் காப்பாற்றுபவை' என்று ரகு வம்சத்தில் விவரிக்கிறார் காளிதாசன். அதுபோல, சுமங்கலி என்ற தகுதிக்கு அடையாளமானது திருமாங்கல்யம். அதைக் கொடுக்கக்கூடாது என்பதும் நியதி. பூணூலைக் கழற்றினால், வேதம் ஓதும் தகுதி இழக்கப்பட்டுவிடும். மிகவும் நைந்து பழசானாலும்கூட... புது பூணூல் அணிந்த பிறகே பழைய பூணூலை கழற்றுவர்.

கறுப்பு அங்கியுடன் இருக்கும்போதுதான் வக்கீலை அடையாளம் தெரியும்! வெள்ளையர் ஆட்சிக் காலத்தில், பணியில் இருக்கும் போலீஸ்காரர் ஒருவரது தொப்பியைப் பறித்துவிட்டால், அவர் தகுதி இழந்தவராகவே கருதப்படுவார்!

அம்பாளுக்கு *'ஸர்வ மங்களா'* என்று பெயர் உண்டு. ஈசன் அணிவித்த திருமாங்கல்யமே அவளுக்கு அந்தச் சிறப்பை அளித்தது. அதுபோல பெண் ஒருத்திக்கு அவளின் கணவன் அணிவித்த திருமாங்கல்யமே, அவளை சுமங்கலியாக்குகிறது. சாதாரண இளம்பெண், மங்கள நாயகியாக உயர்ந்துவிட்டாள் என்பதை திருமாங்கல்யமே சொல்லும். எனவே, திருமாங்கல்யத்தை வெறும் அணிகலனாக மட்டுமே பார்க்கக்கூடாது. அபிஷேக நீரை சிறப்பிக்க தங்கத்தின் சேர்க்கைப் பயன்படும். ஆனால் அதற்கு, திருமாங்கல்யம்தான் வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை.

மணமகளை சிறப்பிக்க, தங்கம் கலந்த நீரை நுகத்தடி வாயிலாக அவளின் தலையில் சேர்த்து புனித நீராடலை நடைமுறைப்படுத்துவான் கணவன். பெண்களின் காதிலும் மூக்கிலும் அணிகலன்கள் இடம்பெறும். தினமும் நிகழும் குளியலின்போது, தங்கத்தின் சேர்க்கையால் அந்த நீர் சிறப்பு பெறும். ஆடவர்களும் காதில் கடுக்கனும், கையில் மோதிரமும் அணிவார்கள். இந்த அணிகலன்கள், அவர்களது நீராடலைச் சிறப்பிக்கும். 'தங்கத்தின் சேர்க்கை வேண்டும்' என்று அறிவுறுத்தும் தர்ம சாஸ்திரம், தங்கத்தால் ஆன பவித்ரம் (மோதிரம்) அணிந்து கடமைகளை நிறைவேற்றச் சொல்கிறது.

ஆக... செல்வச் செழிப்பை வெளிப்படுத்தவோ அல்லது மற்றவர்கள் பார்த்து மகிழ்வதற்காகவோ அணிகலன்களை அணியச் சொல்லவில்லை தர்ம சாஸ்திரம். செயல்பாடு சிறக்க, தூய்மையை வலியுறுத்தும் நோக்கத்தைக் கொண்டது அது. பண்டைய பண்புகள், பொருள் படைத்தது.

எத்தனையோ வகைகளில் கடவுளுக்குப் பணிவிடை செய்ய வாய்ப்பு இருக்கும்போது, திருமாங்கல்யத்தைக் கழட்டிக் கொடுக்கும் எண்ணம் முளைக்கக்கூடாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மூலத்தில் பிறந்தால் நிர்மூலமா?

கல்விக் கடவுள் சரஸ்வதி தேவியே மூல நட்சத்திரத்தில் பிறந்தவள்தானே? அப்படியிருக்க, 'பெண் மூலம் நிர்மூலம்' என்பது சரியா?

- வி.ஜி.சத்தியநாராயணன், சென்னை-61.

மூல நட்சத்திரத்தில் பிறப்பதால், பெண்ணுக்கு எந்தக் குறையும் தகுதி இழப்பும் இல்லை. ரிஷிகளும் வராஹமிஹிரர் முதலான ஜோதிட மேதைகள் இயற்றிய நூல்களில், 'பெண் மூலம் நிர்மூலம்' என்பதற்கான சான்றுகள் இல்லை. பிற்காலத்தில் வந்த நூல்களில்... எவரோ சொல்லி வைத்த வாசகம் இது!

மனிதர்கள் அனைவரும், 27 நட்சத்திரங்களில் ஏதேனும் ஒன்றில்தான் பிறந்தாக வேண்டும். காலத்தின் இணைப்பை மனிதனுக்கு அளிப்பதே நட்சத்திரங்களின் வேலை (*நக்ஷத்ரேண யுக்த: கால:*). அதன் இயல்புகள் மனிதனிடம் ஒட்டிக்கொள்ளாது. ஒருவனது இயல்புக்கு அவனது கர்ம வினைகளே ஆதாரம்.

ஆகவே, பாமரர்களை நம்ப வைப்பதற்காக சொல்லி வைக்கப்பட்ட இதுபோன்ற வாசகங்களை ஏற்கக்கூடாது. நாமே ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'மூல நட்சத்திரத்தில் பிறந்தவளை மணந்ததால், தன் தகப்பனை இழந்தான்; அவனது செயல்பாடுகள் நிர்மூலமானது' என்று கூறி, 'பெண் மூலம் நிர்மூலம்' எனும் வார்த்தையை தேவையில்லாமல் உறுதிப்படுத்துகிறவர்களும் உள்ளனர்!

அது மட்டுமா..? இந்த நட்சத்திரம்... இது பொருந்தாது... என்று ஓர் அட்டவணையை நம்பி, அவதிப்படும் பெற்றோர் அதிக அளவில் உள்ளனர்!

'ஒருவரது ஆயுள், அறிவு, செயல்பாடு மற்றும் பொருளாதாரம் ஆகிய அனைத்தும், அவர் கருவறையில் இருக்கும்போதே நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன!' என்று பலதீபிகை எனும் நூலில் விளக்குகிறார் மந்த்ரேச்வரர் *(ஆயு: கர்மச)*. ஆக, கர்ப்பத்தில் இருக்கும்போதே தீர்மானிக்கப்பட்டுவிட்ட ஒருவரது ஆயுள்... பிற்காலத்தில், மூல நட்சத்திரத்தில் பிறந்த பெண் ஒருத்தி, மருமகளாக வருவதால், எப்படி பாதிக்கப்படும்?

தவிர... அவள் பிறந்த மூல நட்சத்திரம், கணவனையோ மாமியாரையோ பாதிக்காமல், மாமனாரை மட்டும் எப்படி பாதிக்கும்? இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைத்தால் நம்பலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மரணம், பொருள் இழப்பு மற்றும் காரியத் தடைகள் ஆகியவற்றுக்கு நேரடிக் காரணங்கள் பல இருக்க... நட்சத்திரத்தைக் காரணம் காட்டுவது தவறு. பரணிப் பெண் தரணி ஆள்வாள், சித்திரை அப்பன் தெருவிலே, கேட்டை ஜ்யேஷ்டனுக்கு ஆகாது... இதுபோன்ற சொல்வழக்குகள் ஏற்புடையவை அல்ல. வரும் தலைமுறையினர் புத்திசாலிகள். அவர்களை, இதில் சிக்க வைக்காமல் காப்பாற்றும் பொறுப்பு நமக்கு உண்டு.

இன்னொரு விஷயம்... சரஸ்வதி தேவிக்கு ஏது பிறப்பு?! 'மூல நட்சத்திரத்தில் ஸ்ரீசரஸ்வதி தேவியின் ஆராதனை ஆரம்பம் ஆகட்டும்' என்கிறது தர்ம சாஸ்திரம் *(மூலேன ஆவாஹயேத் தேவீம்)*.

'மூல நட்சத்திர தேவதையை வணங்க வேண்டும் படைப்புக் கடவுள் அதன் தேவதை. சுறுசுறுப்பான, வீரம் மிக்க குழந்தைகளை அளிக்க வேண்டும். எதிரிகளை வென்று, இன்னல்களை அகற்ற வேண்டும். குடிமக்களுக்கும் எனக்கும் மங்களத்தை அளிக்க வேண்டும்' என்ற தகவல் வேதத்தில் உண்டு. ஆக, மூல நட்சத்திரத்தை நன்மை தரும் நட்சத்திரமாகவே சொல்கிறது வேதம் *(மூலம் ப்ர ஜாம் வீரவதீ...)*. எனவே, மூல நட்சத்திரம் குறித்து தவறான எண்ணம் வேண்டாம்!

ஆதாரம் இல்லாத பல தகவல்கள் ஜோதிட நூல்களில் உண்டு. எந்தவித உதாரணங்களும் இன்றி, 'முன்னோர்கள் சொன்னதை சொல்கிறேன்' என்பவர்களையும் அவர்களது சொற்களையும் பின்பற்றக்கூடாது.

தேங்காயை உடைத்து, அதில் தீபம் ஏற்றுவது சரியா?

- என்.காளிதாஸ், சிதம்பரம்-2.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தீபம் ஏற்ற தேங்காய் எதற்கு? தூய்மை மற்றும் பொருளாதார நோக்கில்... மண்ணால் ஆன அகல் விளக்குகளே சிறந்தவை. எவரோ ஒருவர், தற்செயலாக தேங்காயை உடைத்து தீபம் ஏற்ற... மற்றவர்களும் அதைப் பின்பற்றத் தொடங்கிவிட்டனர்!

அது மட்டுமா? எலுமிச்சம் பழத்தில் விளக்கேற்றும் சம்பிரதாயமும் இப்போது வலுத்துவிட்டது. 'இந்த தெய்வத்துக்கு எலுமிச்சம்பழ விளக்கு விசேஷம். இந்தக் கடவுளுக்கு தேங்காய் தீபம் சிறப்பு' எனும் பிரசாரமும் கிளம்பிவிட்டது!

இலக்கணம் மற்றும் நடைமுறைகள் எல்லாம் விளக்கேற்றும் விஷயத்திலும் உண்டு. எதில் வேண்டுமானாலும் விளக்கேற்றலாம் என்பதை தர்ம சாஸ்திரம் அனுமதிக்கவில்லை.

சில கிராமங்களில், இறந்தவரது இல்லத்தில் தேங்காய் விளக்கைப் பயன்படுத்துவர். அம்மனை நெய் தீபமேற்றி வழிபட, தேங்காய் விளக்கைப் பயன்படுத்துபவர்களும் உண்டு. இவையெல்லாம் நம்பிக்கையில் விளைந்தவை. நம் பண்பாட்டில் விளைந்த விளக்குகளைப் பயன்படுத்துவதே அழகு. இடையே வந்த புதிய தகவல்கள் மற்றும் முறைகளை தாராளமாக புறக்கணிக்கலாம்.

பழைமை வாய்ந்த கோயில்களைப் புதுப்பிக்கும்போதோ, கும்பாபிஷேகம் செய்யும்போதோ, கருவறை மற்றும் வெளிப் பிராகாரங்களில் கிரானைட் கல் மற்றும் டைல்ஸ் பதிக்கிறார்கள். இது ஆலயத்தின் சாந்நித்தியத்தை குலைத்து விடாதா?

- அவினாசி முருகேசன், காரமடை.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கருங்கல்லில் அமைந்திருக்கும் கருவறை, நீண்ட காலம் திடமாக இருக்கும். பராமரிப்பதும் சுலபம். காலத்தின் மாறுபாடு கிரானைட்டைக் கொண்டு வந்திருக்கிறது. இது சாந்நித்தியத்தைக் கெடுக்காது. இறை உருவத்தில் சாந்நித்தியமானது அப்படியே இருக்கும்.

வட மாநிலங்களில் மார்பிள் கருவறை உண்டு. இறையுருவமும் மார்பிளில் தென்படும். மரத்தால் ஆன கருவறை மற்றும் இறையுருவமும் செய்திருப்பர்.

எளிதில் சுத்தப்படுத்துவதற்கு ஏதுவாக உள்ளது கிரானைட். வேலையாட்களுக்கு தட்டுப்பாடு இருக்கும் இப்போதைய சூழலில், இந்த மாறுபாடு பேருதவியாக இருக்கும். அர்ச்சகரது வேலை அதிகரிக்கும்போது... சுத்தம் செய்யவும் பராமரிப்புச் செலவைக் குறைக்கவும் பொருளாதார அடிப்படையில் இந்தப் புதிய நடைமுறை சிறந்ததாக இருக்கிறது.

ஆடை - அணிகலன்களில் எத்தனையோ மாறுதல்களை ஏற்றுக்கொண்டோம். இதனால் நமது இயல்பு மாறிவிடவில்லையே..! இன்னும் பல மாற்றங்களையும் எதிர் நோக்கியுள்ளோம். ஆக, மாற்றம் என்பது காலத்தின் கட்டாயம். இந்த மாற்றங்கள், இறை சாந்நித்தியத்தை ஒருபோதும் அழித்துவிடாது; அழிக்கவும் முடியாது.

அமாவாசை போன்ற நாட்களில் தர்ப்பணம் செய்யும் நீரை துளசி உள்ளிட்ட எந்தச் செடியிலும் ஊற்றக் கூடாதாமே? ஆனால், சந்தியாவந்தன ஜபம் செய்துவிட்டு, அந்த நீரை துளசிச் செடியில் ஊற்றுகின்றனரே?

- டி.எம்.பானுமதி, சென்னை-88.

வீட்டில் தர்ப்பணம் செய்யும்போது, அந்த நீர் தரையில் விழாமல் இருக்க கீழே பாத்திரம் ஒன்றை வைத்துக்கொள்வோம். பின்னர் பாத்திரத்தில் விழுந்த நீரை, நீர்நிலைகளில் சேர்த்துவிடுவோம். கால மாற்றத்தால், நீர்நிலைகள் இல்லாத இடங்களில் குடியிருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளதால், தர்ப்பணத்துக்கு பயன்படுத்தப்படும் நீரை, சுத்தமான இடத்தில் அதாவது தென்னை மரத்தடி அல்லது ஏதேனும் செடி-கொடிகளில் சேர்ப்பதில் தவறேதும் இல்லை. நீரில் கலந்திருக்கும் எள்ளை மண்ணில் சேர்த்துவிட வேண்டும். அதே நேரம், எள் முளைப்பதற்கு இடம் தரக்கூடாது.

சந்தியாவந்தனம் செய்த நீரை சேமிக்க வேண்டிய அவசியம் இல்லை. வீட்டுக்கு வெளியே தரையில் நீர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விழும்படி ஜபம் செய்யலாம். வீட்டுக்கு உள்ளேயே, பாத்திரத்தை கீழே வைத்துக்கொண்டு சந்தியாவந்தனம் செய்வது புதிய நடைமுறை. தங்களது புதிய நடைமுறைக்காக சாஸ்திரத்தைத் தேடி அலையாதீர்கள். விருப்பப்படி செயல்பட்டு, அதன்பின் சாஸ்திர விளக்கம் தேடுவது சிறுபிள்ளைத்தனம்.

சமீபத்தில் இறந்துபோன என் சித்தப்பாவுக்காக, குண்ட தர்ப்பணம் செய்தேன். இதன் தாத்பரியம் என்ன?

- வி.ராமமூர்த்தி, செகந்திராபாத்-26.

உடலைத் துறந்தவர் சூட்சும உருவில் உலாவுவார். அவரை மந்திரம் மூலம் குண்டத்தில் உள்ள கற்களில் குடியிருத்துவது உண்டு. அப்படி குடி வைக்கும் வேளையில், அவருக்கு தினமும் உணவளிக்க வேண்டும். பத்து நாளில் வளர்ந்த அந்த சூட்சும உருவம், அடங்காத பசியால் அவதிப்படும். இதனால் ஏகப்பட்ட தின்பண்டங்களைப் படைப்பார்கள். இதற்கு 'ப்ரபூத பலி' என்று பெயர்.

இறந்தவரது குடும்பத்தாருக்கு அதாவது பங்காளிகளுக்கு சூட்சும வடிவில் அவரை தரிசிக்கவும் பணிவிடை செய்யவும் வாய்ப்பு கிடைக்கிறது. இதை வீணாக்காமல் அவருக்கு நீரை அளித்து வணங்கி, பணிவிடை செய்வதே சிறப்பு.

இறந்தவரின் ஜீவ அணுக்களது பங்கு சிறிதளவேனும் பங்காளிகளில் ஒட்டிக்கொண்டிருக்கும். எனவே, இறந்தவருக்கு நீர் இறைத்து பணிவிடை செய்வது கடமை என்கிறது தர்ம சாஸ்திரம்.

ஸ்ரீ ஆஞ்சநேயரைப் போலவே ஸ்ரீகால பைரவருக்கும் வடை மாலை சாத்துவது ஏன்?

- பா.செளந்திரபாண்டி, மதுரை-1.

புஷ்பம், முத்து, தங்கம், வைரம், பவளம், துளசி, ருத்ராட்சம் ஆகியவற்றைக் கொண்டு இறை உருவங்களுக்கு மாலையாக அணிவிப்பது உண்டு. மாலை என்ற சொல் புஷ்ப மாலை, முத்து மாலை போன்றவற்றைக் குறிக்கும்.

தலைவர்களது வரவேற்பிலும் புஷ்பம் பயன்படுத்துவர். இறை உருவ உபசாரங்களில் புஷ்ப மாலைக்கு இடம் உண்டு. பொன் வைக்க வேண்டிய இடத்தில் புஷ்பத்தை வைப்பர். ஸ்வர்ண புஷ்ப உபசாரத்தில், தங்கத்துக்கு மாற்றாக புஷ்பத்தைப் பயன்படுத்துவோம்.

இயற்கையின் செல்வமான புஷ்பம், வாசனையுடனும் மென்மையாகவும் இருக்கும். எனவே இதை, கழுத்தில் மாலையாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அணிவது, அர்த்தம் நிறைந்த விஷயமே! மாலை அணிவிப்பதிலும் ஓர் இலக்கணம் உண்டு. சுயம்வரத்தில் புஷ்ப மாலை பயன்படும்.

சீதை, திரௌபதி, இந்துமதி, தமயந்தி ஆகிய அரசிளங்குமரிகள் மாலையும் கையுமாக, கைப்பிடிக்கும் கணவனை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

இறை உருவங்களுக்குரிய பணிவிடைகளில், மற்ற மாலைகளை அணிவித்தாலும் புஷ்ப மாலையைத் தவிர்க்க இயலாது. காலப்போக்கில் நடைமுறையை மீறி பலவித மாலைகள் பயன்படுத்தப்படுகின்றன. வடை, வெற்றிலை, பழம், தேங்காய், கொண்டைக் கடலை, அருகம்புல் மற்றும் ரூபாய்நோட்டு ஆகியவற்றால் ஆன மாலைகளும் கடவுள் சிலைகளுக்கு அணிவிக்கப்படுகின்றன.

புதிய நடைமுறையை ஊர்ஜிதம் செய்ய, தல புராணம், பக்தனது செயல்பாடு ஆகியவற்றை எடுத்துக் கூறி ஊக்குவிப்பர்! ஆஞ்சநேயருக்கு மட்டுமின்றி எந்தக் கடவுளுக்கும் வடை மாலையை சாத்தலாம். பக்தனின் விருப்பப்படி உபசாரங்கள் மாறும்போது பாகுபாடு இடையூறாக இருக்காது.

நம் முன்னோர்கள் பக்தியை வெளிப்படுத்தினார்கள். அமைதி, பண்பு, நாகரிகம் மற்றும் வரையறையோடு செயல்பட்டனர். இந்த நடைமுறையை நாமும் பின்பற்றலாம். ஆனால், இன்றையச் சூழலில் புதிது புதிதாக மாலைகளை உருவாக்கி, அவற்றுக்கு முதலிடம் அளித்து செயல்படுவதால், பக்தர்களும் இதை வரவேற்கின்றனர். அளவுகோல் என்பது பக்தர்களது விருப்பத்துக்குத் தக்கபடி மாறி வருகிறது.

புதுப்புது சிந்தனைகளை இறை உருவங்களில் புகுத்தாமல், இத்துடன் நிறுத்திக்கொள்வதே அழகு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பாத யாத்திரை சென்றால் பலன் அதிகம் உண்டா?

ஆதிசங்கரர் எப்போது தோன்றினார். அவரது அதிஷ்டானம் (ஜீவ சமாதி) எங்குள்ளது? காஞ்சி காமகோடி மடத்தை ஆதிசங்கரர் நிறுவவில்லை என்றும், சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் அவர் நிறுவியது 4 மடங்கள் மட்டுமே என்றும் கூறுகிறார்கள் சிலர். ஆனால், காஞ்சி மடம் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாக ஒரு வரலாறு உள்ளது. இதுகுறித்து விளக்குங்களேன்!

- மு.ஆறுமுகம், பாளையங்கோட்டை.



பாரதத்தில் தோன்றிய சிந்தனையாளர்களில் சிறந்தவர் ஆதிசங்கரர். ஆன்மிகத்தின் எல்லையைச் சுட்டிக்காட்டியவர். பாரதத்துக்குப் பெருமை சேர்த்தவர். 'இருப்பது ஒன்று' என்ற அத்வைத தத்துவத்தை போதித்தவர்.

ஆதிசங்கரரை பற்றி ஆராய்வதை விட்டுவிட்டு, அவரது சிந்தனையை ஏற்றுக்கொள்வது நம் வாழ்வுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பயன் அளிக்கும். ஆதிசங்கரர் குறித்து முதலில் ஆராய்ந்தவர்கள் வெளிநாட்டினரே. அவர்களது முடிவையே வேதவாக்காக ஏற்றுக்கொண்டவர்கள் நம்மவர்கள்! வெளிநாட்டவரின் முடிவுக்கு எதிரான... நம் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் சிலர் தந்த தகவல்களுக்கும் மவுசு இல்லாமல் போய்விட்டது.

பிற்காலத்தில் வந்த ஆராய்ச்சியாளர்களில் சிலர், உள்நோக்கத்துடன் அணுகியதும் உண்டு! உண்மையை ஒதுக்கி, தனது முடிவுக்கு வலுசேர்க்கும் தகவல்களைத் தேடும் ஆராய்ச்சியாளர்களும் உண்டு. உண்மை, நேர்மை ஆகியவற்றை ஏற்கும் பக்குவம் குறைந்துவரும் இந்த நாளில், ஆராய்ச்சியால் சந்தேகம் விலகாது; சங்கடங்களே முளைக்கும்!

ஆதிசங்கரரின் வாழ்க்கை வரலாறைத் தெரிந்துகொள்வதில் தவறில்லை. ஆனால், அவரது சிந்தனைகளிலும் கவனம் செலுத்துவது அவசியம். உங்களது கேள்விக்கு ஓரிரு வரிகளில் பதிலளிக்க இயலாது. தவிர, இதற்கான விளக்கம், கேள்வி - பதிலில் இடம்பெற வேண்டிய ஒன்றல்ல. பெரியோர்களை அணுகி, வாய்மொழியாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

பயனுள்ள முயற்சியில் ஈடுபடுவது சிறப்பு. தனிமனித வழிபாடு தலைதூக்கும்போது, ஆராய்ச்சி தலைகுனிந்துவிடும்.

பாத யாத்திரையாகச் சென்று பகவானை வழிபடுவதால், அதிக பலன் கிட்டுமா?

- க.சு.மணியன், பெரணமல்லூர்.

மாட்டுவண்டி அல்லது கார் ஆகியவற்றைப் பயன்படுத்தினாலும், கோயில் வாசல் வரை செல்லலாம். உள்ளே பாத யாத்திரையாகவே செல்ல வேண்டும்.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நடக்க இயலாத முதியோர்கள் வாகனத்தில் வருவது தவறு இல்லை. தவிர, பாத யாத்திரையாக சென்றால்தான் அதிக பலன் கிடைக்கும் என்பதெல்லாம் இல்லை!

பாத யாத்திரையாகச் செல்லும்போது அடக்கம் இருக்கும்; அகங்காரம் நீங்கிவிடும். கடவுள் அளித்த கால்கள், அவனைத் தரிசிக்கச் செல்வதற்காக பயன்படுவது தனிச்சிறப்பு. உடம்பில் தெம்பு இருப்பவர்கள் பாத யாத்திரையாக செல்லலாம்.

கிராமப்புறங்களில், நடந்து செல்லும் தூரத்திலேயே கோயில்கள் அமைந்திருக்கும். அங்குள்ளவர்கள் கோயிலுக்குச் செல்லும்போது, மற்ற அலுவல்களைக் கவனத்தில் கொள்ள மாட்டார்கள். எனவே அவசரம் இல்லாமல், பாத யாத்திரையாகவே செல்ல விரும்புவர்.

தற்போது, கால மாற்றம் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. அருகிலுள்ள கோயிலுக்கும் காரில் செல்பவர்கள் ஏராளம். காரில் சென்றாலும் பரவாயில்லை... கோயில் செல்லும் பழக்கம் வளரட்டும். தாங்கள் விரும்பினால், பாத யாத்திரையாக செல்லுங்கள்.

பவளமல்லி மலர்களை மட்டும் செடியில் இருந்து பறிக்காமல், பூமியில் விழுந்த பின்னரே சேகரிக்க வேண்டும் என்கிறார்களே... அப்படியா?

- எம்.சுப்பிரமணியன், சென்னை-82.

செடியில் இருந்தும் பறிக்கலாம்; கீழே விழுந்து கிடப்பதையும் சேகரிக்கலாம்!

உருவத்தில் சிறிய பூக்களைப் பறிப்பதில் ஏற்படும் சிரமத்தைக் கருத்தில் கொண்டு, செடியை அசைத்து பூக்களை கீழே விழச் செய்வர். அப்படி விழுந்த பூக்களை சேகரித்துப் பயன்படுத்தலாம்; தவறில்லை!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நான் வணங்கும் கோயிலில் இருந்து மண் எடுத்து வந்து பூஜிக்கிறேன். பெரியவர்கள் சிலர், 'இது தவறு' என்கிறார்களே... அப்படியா?!

- ப.கருணாகரன், புதுச்சேரி-14.

கோயில் சொத்தை தனதாக்கிக்கொள்ள எவருக்கும் உரிமை இல்லை. திருக்கோயிலை நிர்மாணித்து ஆண்டவனுக்கு



உரிமையாக்கிய பிறகு, கோயிலில் உள்ள எதையும் நாம் சொந்தம் கொண்டாடக் கூடாது. அடுத்தவர் வீட்டு வளாகத்தில் இருக்கும் மண்ணை, அவரது அனுமதி இல்லாமல் எடுத்து வருவோமா? இல்லையே! ஆகவே நீங்கள், நீர்நிலைகளின் கரையில் இருந்து மண் எடுத்து வந்து வழிபடுங்கள்; நன்மை உண்டு!

தேவர்கள், 'சோமபானம்' அருந்தியதாகச் சொல்கின்றன புராணங்கள். தற்காலத்திலும் பலபேர், காபி - டீ போன்ற பானங்களுக்கு அடிமையாக உள்ளனர். காபி - டீ குடிப்பது நல்லதா? இதுகுறித்து, ஆயுர்வேதம் என்ன சொல்கிறது?

- ஆர்.பாலா, பொன்மலை.

தேவர்களை மகிழ்விப்பதற்காக வேள்வியில், சோமபானம் சமர்ப்பிப்பது உண்டு. சோமபானம் தயாரிப்பதற்கான 'சோமலதை', விண்ணுலகில் கிடையாது. மருத்துவ குணம் நிறைந்த - கொடி வகையைச் சார்ந்த சோமலதை, இமயமலைச் சாரலில் கிடைக்கும். மண்ணுலகை வாழவைக்கும் நோக்கத்துடன் தேவர்களுக்கு, வேள்வியின் மூலம் சோமபானத்தை அளித்தனர் வேதம் ஓதும் நம் முன்னோர்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சோமபானம் என்பது, கள் மற்றும் சாராயம் போன்ற போதைப் பொருளல்ல; திரும்பத் திரும்ப பருகத் தூண்டுவதும் இல்லை. மனதுக்கு மகிழ்ச்சி தரும் இந்த பானம், உடலுக்கும் உள்ளத்துக்கும் எந்தவித பாதிப்பையும் விளைவிக்காது. காபி - டீ போன்ற பானங்கள் உடம்புக்கு நல்லதல்ல. பருகும்போது மகிழ்ச்சியை- உற்சாகத்தைத் தருவதுபோல் தோன்றினாலும் காலப்போக்கில் இந்த பானங்கள், தீராத வியாதிகளைத் தோற்றுவிக்கும்.

உண்ட உணவு நன்றாக ஜீரணமாக உதவுவது பித்தநீர். ஆயுர்வேதத்தில் இதற்கு, 'ஜாடராக்னி' என்ற பெயரும் உண்டு. இதன் செயல்பாட்டுக்கு, காபி - டீ போன்ற பானங்கள் முட்டுக்கட்டை போடும். சாப்பாட்டுக்கு சற்று நேரம் ஆகும் என்று தெரிந்தால், அருந்துவதற்கு காபி தருவர். காபி அருந்தியவரும் பசி சற்று தணிந்ததாக உணர்வர். இதுபோன்ற காரணங்களால் அடிக்கடி காபி அருந்த நேரும்போது, பித்தநீரின் செயல்பாடுகள் தடுக்கப்பட்டு ஒரு கட்டத்தில் அது, தனது தகுதியை இழந்து பயனற்றுப் போகும். காபியைப் போன்றே டீயும் பின்விளைவுகளை ஏற்படுத்தும். ஆதலால் அதையும் தவிர்க்க வேண்டும். ஆனால் இதற்கு, இன்றையச் சூழல் இடம் தராது!

பூஜையின்போது ஸ்ரீருத்ரம், புருஷ ஸூக்தம், ஸ்ரீஸூக்தம் போன்ற வேத மந்திரங்களை, புத்தகத்தைப் பார்த்துப் படிப்பதால் பலன் உண்டா?

- ஜி.ஜெயராமன், கூந்தலூர்-1.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேத மந்திரங்களை, புத்தகத்தைப் பார்த்துப் படிப்பது கூடாது; மனதில் பதிய வைக்க வேண்டும். இயலாத பட்சத்தில்... அவற்றைச் சொல்லித்தான் வழிபட வேண்டும் என்கிற கட்டாயம் கிடையாது.

காயத்ரி மந்திரம் சொல்லி வழிபடலாம். அல்லது '*ஓம் நமோ நாராயணாய*' என்றோ, '*ஓம் நமசிவாய*' என்றோ இறை நாமத்தை மந்திரமாக ஜபித்து வழிபடலாம். 'முறைப்படி வேதம் சொல்ல இயலாது. உன்னை நினைத்து பூஜிக்கிறேன். அருள் புரிய வேண்டும்' என்று பிரார்த்தித்தாலும் போதும்; வேதம் ஓதி வழிபடுவதற்கு உண்டான பலன் கிடைத்துவிடும்.

குருவானவர் சொல்ல... செவிமடுக்கும் சீடர்கள், தாங்களும் திரும்பச் சொல்லி மந்திரங்களை மனதில் பதியவைக்கும் முறை காலம்காலமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. வேத பாடசாலைகளில்... புத்தகம் இல்லாமல் வேதம் கற்பதும், கற்பிப்பதும் சரிவர நிறைவேற்றப்படுகிறது.

எட்டு வயதைத் தொடும் சிறுவன், எட்டு வருடங்கள்... வாய்மொழியாகக் கற்பிக்கப்படும் வேத மந்திரங்களை ஏற்று, மனதில் பதியவைத்துக் கொள்கிறான். இந்த நடைமுறையை மீறக்கூடாது. தர்ம சாஸ்திரத்தின் சட்டதிட்டங்களைக் குலைத்தாலும் பலன் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு!

திருப்பதி ஸ்ரீவேங்கடாசலபதிக்கு கௌஸ்துப மாலை அணிவிப்பது ஏன்? கௌஸ்துப மாலை என்பது என்ன?

- டாக்டர் கோமதி, தஞ்சாவூர்.

பாற்கடலைக் கடைந்தபோது கிடைத்த பொக்கிஷங்களில் ஒன்று 'கௌஸ்துபம்' என்கிற ரத்தினம்.

திருமாலை, 'அலங்காரப் பிரியன்' என்றும் போற்றுவர். அணிகலன்கள் அணிவதில் மகிழ்பவரான திருமால், கௌஸ்துபத்தை ஏற்றுக்கொண்டார். அவருக்கு, நாம் அணிவிக்க விரும்பும் மாலைகள் பல இருந்தாலும் அவர் விரும்பும் மாலைக்கு தனிச்சிறப்பு உண்டு. கௌஸ்துப மாலையும் அப்படியே!

பாற்கடலில்... நாம் விரும்பும் பொக்கிஷங்களும் உண்டு, ஒட்டுமொத்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உலகை அழிக்கும் விஷமும் இருந்தது. ஆனால், திருமால், 'கௌஸ்துபம்' என்கிற ரத்தினத்தை தேர்ந்தெடுத்தார். நாம் வாழும் உலகமும் பாற்கடல் போன்றதே. அதிலிருந்து, நம்மை உயர்த்தும் நன்னடத்தைகளை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும். திருமாலுக்கு கௌஸ்துப மாலை அணிவிக்கப்படும்போது இந்தக் கருத்தே நம் மனிதில் பளிச்சிட வேண்டும்!

என் மாமனார் இறந்து நான்கு வருடங்கள் ஆகின்றன. என் கணவர்தான் மூத்த பிள்ளை. ஆனால், திவசம் போன்ற காரியங்களை அவர் செய்வது இல்லை; அவரின் தம்பியே செய்கிறார். அமாவாசை போன்ற நாட்களிலும் என் கணவர் குடித்துவிட்டு வீட்டுக்கு வருகிறார்! அவரது செயல்களாலும், பிதுர்க்காரியங்கள் முறையாக நடைபெறாததாலும் என் மகளுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா? எனில், அதற்கான பரிகாரம் என்ன?

- பெயர் சொல்ல விரும்பாத வாசகி.

தங்களின் கணவர் தெளிவு பெற்று, தர்ம சாஸ்திரம் சொல்லும் பரிகாரத்தை நடைமுறைப்படுத்தினால், தவறு மறைந்து தூய்மை பெறுவார். அதற்கு, தர்ம சாஸ்திரத்தில் இடம் உண்டு.

ஒருவேளை, தனது செயல்பாட்டில் இருந்து அவர் வெளிவர விரும்பாவிட்டால்... அவரது தவறுகள் குழந்தையை பாதிக்கும் என்கிறது தர்ம சாஸ்திரம் *(தத்தன்வயே பிச)*. அந்த பாதிப்புகளுக்கும் பரிகாரம் மூலம் நாமே தீர்வு காணலாம். அதற்கும் இடம் உண்டு. எனவே, தகுந்தவர்களை அணுகி, பரிகாரத்தை நடைமுறைப் படுத்துங்கள்.

இன்றையச் சூழலில், தெரிந்து செய்யும் தவறுகளும், அவற்றை நியாயப்படுத்தும் முயற்சிகளும் அதிகம்! எதிலும் சுதந்திரத்தை விரும்பும் சிந்தனை, அறநெறிகளைப் புறக்கணிக்கத் துணிந்துவிடும். சுயநலம் ஓங்கும்போது அறநெறிகள் அறவே அகன்றுவிடும். இப்படியும் சில தவறுகள் கலியுகத்தில் நிகழ வாய்ப்பு உண்டு என்பதை உணர்ந்து, தகுந்த பரிகாரங்களையும் பரிந்துரைத்துள்ளது தர்ம சாஸ்திரம்.

தங்களின் கணவர் தெளிவு பெறாவிட்டாலும்... நீங்களும் உங்கள் மகளும் சட்டதிட்டத்தையும் நாகரிகத்தையும் கடைப்பிடிக்கலாம். அதுவே, அவரைத் திருத்த உதவும். 'நாம் எப்படி வேண்டுமானாலும் செயல்படுவோம்; தர்ம சாஸ்திரம் அதை ஏற்றுக்கொண்டு நமக்கு நன்மை அளிக்க வேண்டும்' என்று எண்ணக்கூடாது. செயலுக்கு உகந்த பலன் உண்டு என்ற முதுமொழியை மறக்கக்கூடாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



முருகனுக்கு ஏன் இரு மனைவியர் உள்ளனர்? இதன் தத்துவம் என்ன?

- காவ்யா, உடையார்பாளையம்.

நெருப்பிலிருந்து உருப்பெற்ற முருகப்பெருமான் ஞானப்ரகாசமாகத் திகழ்பவர்.

அசுரர்களை வென்று தேவர்களைக் காப்பாற்றியதால், இந்திரனின் புதல்வியான தேவசேனாவை வெகுமதியாகப் பெற்றார். அவருக்கு, மண்ணுலகில் கிடைத்த பொக்கிஷம்-வள்ளி. தேவசேனா, முருகனைத் தேடி வந்தாள். மானில் இருந்து உருவான லவலியை (வள்ளியை) தானே தேடிச் சென்று ஆட்கொண்டார் முருகன்.

பலன் கருதாது கடமையை நிறைவேற்றும்போது, நன்மைகள் தானாக நம்மை வந்தடையும். அப்படி, முருகப்பெருமானுக்குக் கிடைத்தவள் தேவசேனா. விருப்பத்தை அடைய முயற்சிக்க வேண்டும். முருகக் கடவுளின் முயற்சியால் கிடைத்தவள் வள்ளி. ஒன்று அதிர்ஷ்டம். மற்றது முயற்சியால் கிடைத்த பலன்! ஆம்... கடமையும் முயற்சியும் வாழ்க்கையின் ஆதாரம் என்பதை சொல்லாமல் சொல்கிறான் ஸ்ரீசுவாமிநாதன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கோயில்களுக்குள் தரும் தானத்தை ஏற்கலாமா?

சாமிக்கு அபிஷேகித்த பாலை, வீட்டு உபயோகத்துக்கு பயன்படுத்தலாமா?

- டி.முருகேசன், திருவாரூர்-1.

இறைவனுக்கு அளிக்கப்படும் பொருட்கள், அவருக்கு சொந்தமாகிவிடும். பிறர் பொருளைக் கவர்வது அழகல்ல. சுண்டல், பஞ்சாமிர்தம் போன்றவற்றை ஸ்வாமிக்கு நிவேதனம் செய்தபிறகு, பிரசாதமாக விநியோகிப்பார்கள். அதுபோல், அபிஷேக பாலையும் தீர்த்தமாக பக்தர்களுக்கு விநியோகிக்கலாம்.

மாறாக அபிஷேகம் செய்த பாலை, தங்களது தனி உடைமையாக்கி காய்ச்சிப் பயன்படுத்தக் கூடாது. இறைவனின் திருவுருவம் பேசாமடந்தையாக இருப்பதால், அவரது பொருளை எவர் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்று அர்த்தம் இல்லை! இறைவனுக்குத் தன்னையே அர்ப்பணிக்கும் பக்குவம் ஒவ்வொரு பக்தனுக்கும் வர வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



வெல்லத்தை, பிள்ளையாராக பாவித்துபூஜைசெய்ய ஆரம்பித்தான் ஒருவன். பிள்ளையாருக்கு நிவேதனம் படைக்க வேண்டுமே? நிவேதனத்துக்கு பழம் வாங்கி வர அவனுக்கு மனம் இல்லை. என்ன செய்தான் தெரியுமா? அந்த வெல்ல பிள்ளையாரையே கிள்ளி, சிறிதளவு வெல்லம் எடுத்து, நிவேதனம் செய்தானாம்!

உள்ளத் தூய்மையுடனும் ஆத்மார்த்தமான பக்தியுடனும் இறைவனுக்குப் பாலபிஷேகம் செய்யுங்கள். அவர், தங்களின் ஏழ்மையை அகற்றுவார்; அபிஷேக பாலை, சொந்த உபயோகத்துக்குப் பயன்படுத்தும் அவசியமும் ஆசையும் வராமல் பார்த்துக்கொள்வார். நீங்கள், உள்ளத்தளவிலும் உயர்வீர்கள்.

எனவே, 'காணும் பொருட்கள் அத்தனையும் உமது படைப்பு. எனக்கு எதுவும் சொந்தமில்லை. உமது உடைமையையே உமக்கு அளிக்கிறேன். என்னை வாழ வையுங்கள்' என்று வேண்டிக் கொள்ளுங்கள். வாழ்க்கை நிறைவுபெறும்.

'ஒரு காலால் மற்றொரு காலைத் தேய்த்துக் குளிக்கக் கூடாது. இது, லட்சுமிதேவியை அவமதிப்பது போல!' என்கிறார்கள் சிலர். இது சரியா?

- வியாக்கிரமன், ஆற்காடு.

'ஒரு காலை, மற்றொரு காலால் தேய்த்து சுத்தம் செய்யக்கூடாது. இதனால் பொருளாதார வீழ்ச்சியும் சுகாதாரக் கேடும் ஏற்படும்' என்கிறது தர்ம சாஸ்திரம்.

பாதத்தின் அடிப்பகுதியில் உள்ள அழுக்குகள் மற்றொரு காலின் மேல்பாகத்தில் சேர்ந்துவிடும். இது, சுகாதாரத்தைக் கெடுக்கும். நம் உடலை, நம் காலால் மிதிக்கக்கூடாது. காலின் மேல் பாகத்தை அடுத்த காலின் பாதத்தால் தேய்ப்பது அபசாரம்.

நடந்து நடந்து அசுத்தத்துடன் இணைந்த காலை, மற்றொரு காலில் வைப்பது தவறு. கைகளைக் கொண்டே சுத்தம் செய்ய வேண்டும். உடலின் வலுவைத் தாங்கிக்கொண்டு நடப்பது கால்கள்தான். அவற்றின் சுகாதாரத்தில் தனிக் கவனம் தேவை. எனவே, தவறான நடைமுறையைத் தவிர்ப்பதே நல்லது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கோயிலுக்குள் சிலர், புடவை-ரவிக்கை மற்றும் தாம்பூலம் போன்றவற்றை தானம் தருகிறார்களே... இவற்றை வாங்கலாமா?

- கீதா, கீழ்ப்பாக்கம்.

கோயிலில் அன்னதானம் நடைபெறும். சர்க்கரைப் பொங்கல் போன்றவற்றையும் விநியோகிப்பர். இவற்றை, இறை பிரசாதமாக ஏற்று மகிழ்வோம்.

ஆலயத்தில் ஆண்டவனை வழிபட்டு, அவனை மகிழ்விக்க கொடை வழங்குவது சிறப்பு. அதைப் பெற்றுக் கொள்வதும் சிறப்பு. தானத்தின் வாயிலாக அறம் செயல்படும்போது, ஆண்டவன் மகிழ்கிறான். எனவே, ஒருவர் தானம் அளிக்கும்போது அதைப் பெற்றுக்கொண்டு, அறம் செயல்பட நாமும் ஒத்துழைக்க வேண்டும்.

தற்காலத்தில், வீட்டுக்கு வரவழைத்து கொடை வழங்குவது சாத்தியம் அல்ல. கோயிலில்... இறை திருவுருவங்களின் பார்வையால் பரிசுத்தமாகும் பொருட்கள், கொடையாக மாறுகின்றன. அவற்றை ஏற்பவனும் இறை தரிசனத்தால் - வழிபாட்டால், பரிசுத்தமாகத் தென்படுகிறான். எனவே, அங்கு வழங்கப்படும் கொடை- தானம் சிறப்பு பெறும்.

பாத்திரம் அறிந்து செயல்பட வேண்டும் என்பர். கொடை, அதை அளிப்பவன், பெறுபவன்... அத்தனையும் ஆலய வளாகத்தில் இறை சந்நிதியில் பரிசுத்தமாக்கப் படுவதால் உயர்ந்த கொடையாக மாறிவிடுகிறது!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பஞ்ச யக்ஞும் என்றால் என்ன?

- வி.வெங்கட்ராமன், செகந்திராபாத்-9.

தேவ யக்ஞும், பித்ரு யக்ஞும், பூத யக்ஞும், மனுஷ்ய யக்ஞும் மற்றும் பிரம்ம யக்ஞும் ஆகிய ஐந்தும் பஞ்ச யக்ஞுங்கள்.

அக்னியில் சமித்துகளை அளிப்பது - தேவ யக்ஞும்; இறந்த முன்னோர்களுக்கு, ஆதரவோடு நீர் அளிப்பது - பித்ரு யக்ஞும்; உயிரினங்களுக்கு உணவு அளிப்பது - பூத யக்ஞும்; வீடு தேடி வருபவர்களுக்கு உணவு அளித்து உபசரிப்பது - மனுஷ்ய யக்ஞும்; வேதம் ஓதுவது - பிரம்ம யக்ஞும்.

இல்லறத்தில் இருப்பவர்கள், தினமும் இந்த ஐந்தையும் கடைப்பிடிப்பார்கள்.

வேதங்களில், மாங்கல்யம் பற்றி எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. மாங்கல்யம் அணிவிக்கும் சடங்கின் அவசியம் குறித்து தங்களது கருத்து என்ன?

- அவினாசி முருகேசன், காரமடை.

பிறந்த குழந்தைக்கு, தேன் - நெய் கலந்து, அதில் தங்கம் தோய்த்து ஊட்டுவது உண்டு. இது, குழந்தையின் கபத்தைக் கட்டுப்படுத்தவும் ஜீரண சக்தியை வலுப்படுத்தவும் உதவும்.

குழந்தை பிறந்த 7-வது நாளில் அதன் கைகளுக்கு தங்கக் காப்பும், கால்களுக்கு வெள்ளிக் காப்பும் அணிவிப்பர். மேலும், குழந்தை வளர வளர தங்கத்தாலான அணிகலன்கள் சேர்ந்து கொண்டே வரும்.

காது குத்தி தங்க அணிகலன்கள் மாட்டுவர். கைகளில் மோதிரம்; மூக்கில் மூக்குத்தி; அரையில் தங்க அரைஞாண்; காலில் வெள்ளிக் கொலுசு ஆகியன அலங்கரிக்கும். வயது வந்த பிறகு, மூக்கில் புல்லாக்கு; கைகளில் வங்கி எனும் ஆபரணம்; இடையில் ஒட்டியாணம் ஆகியவற்றை அணிவர். இவை தங்கத்தாலானவை.

குறிப்பாக, பெண் குழந்தைகளுக்கு தங்க அணிகலன்களை அணிவிக்கச் சொல்கிறது தர்ம சாஸ்திரம். 'தங்கத்தை தரித்துக் கொள்ள வேண்டும்' என்று வேதமும் அறிவுறுத்துகிறது *(தஸ்மாக் சுவர்ணம் ஹிரண்யம் தார்யம்)*. அதன்படி அணிவிக்கப்படுவதே தாலி.

தங்கம், மங்களப் பொருட்களில் ஒன்று. தங்கத்தாலான தாலியும் மங்களகரமானது. மங்களம் அளிப்பதால் அதற்கு, 'திருமாங்கல்யம்' என்று பெயர். வேதம் அறிமுகம் செய்ததை ஏற்பது சிறப்பு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கோயிலில் விளக்கேற்றுவதற்காக வீட்டில் இருந்து எடுத்துச் செல்லும் எண்ணெய்... விளக்கேற்றியது போக மீதம் இருந்தால், மீண்டும் வீட்டுக்கு எடுத்து வரலாமா?

- கிருஷ்ணகுமார், சென்னை-10.

காசி, ராமேஸ்வரம் போன்ற புனிதத் தலங்களுக்கு வழிபடச் செல்கிறோம். அதற்காக ஆகும் செலவு போக மீதமிருக்கும் பணத்தை, வீட்டுக்குக் கொண்டு வந்துவிடுவோம். பொதுவாக வெளியே கிளம்பும்போது, 'எதிர்பாராத செலவுகள் நேர்ந்தால்... எதற்கும் இருக்கட்டுமே!' என்று கூடுதலாக பணத்தை எடுத்துச் செல்வது இயல்பு. அதில், மீதமிருப்பதைத் திரும்ப கொண்டு வருவதில் தவறு ஒன்றும் இல்லையே!



அதுபோல், கோயிலில் விளக்கேற்றவும் கூடுதலாக எண்ணெய் எடுத்துச் செல்லலாம். விளக்கேற்றியது போக எண்ணெய் மீதம் இருந்தால், தாராளமாக வீட்டுக்குக் கொண்டு வந்து இஷ்டம்போல் பயன்படுத்தலாம்.

ஒரு காரியத்தில் மன நிறைவுடன் செயல்பட, அதற்கு உதவும் பொருளை தேவைக்கு அதிகமாக வைத்திருப்பதில் தவறு இல்லை. அளவாகக் கொண்டு சென்று பற்றாக்குறை நேர்ந்தால், வீண் மன நெருடல் ஏற்படும்.

வீட்டு விலக்கான நாட்களில் எந்தெந்த தெய்வங்களை வணங்கலாம்? இதுபோன்ற தருணங்களில் இறைவனை மனதில் நினைத்து வணங்கலாமா? தலைக்குக் குளித்த அன்றே கோயிலுக்குப் போகலாமா?

- ஆண்டாள் நாராயணன், முகப்பேர்.

உடலும் உள்ளமும் சுத்தமாக இருக்கும் வேளையில், ஐந்து நிமிடம் கடவுளை முனைப்போடு நினைத்தாலே போதுமானது. ஆனால், பெண்களின் உடல் - உள்ளம் இரண்டும் அசௌகரியமாக இருக்கும் 'அந்த' நாட்களில் கடவுளை வழிபட வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர்க்க வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மருந்து சாப்பிடும்போது, 'குரங்கை நினைக்காதே; கடவுளை நினை' என்றால், நம் மனம் குரங்கைதான் நினைக்கும்; கடவுளை நினைக்காது! அதுபோல, 'அந்த நாட்களில் கடவுளை நினைக்காதே' என்றாலும் நிச்சயம் கடவுளை நினைக்கத்தான் செய்யும். அதை தவிர்க்க இயலாது.

பொதுவாக, 'அந்த' நாட்களில் பெண்களுக்கு, உடலில் அசதி இருக்கும்; உள்ளமும் உற்சாகமாக இருக்காது. இந்த நேரத்தில் அவர்களுக்குத் தேவை ஓய்வு மட்டுமே. 'இறை வழிபாடு உட்பட எல்லா அலுவல்களில் இருந்தும் விடுபட்டு, அவள் மனம் ஓய்வில் ஒன்றி இருக்க வேண்டும்' என்கிறது தர்ம சாஸ்திரம். ஆயுர்வேதமும், 'அந்த நாட்களில் ஓய்வு அவசியம்' என்றே வலியுறுத்துகிறது. எனவே, அந்த நாட்களில் கடவுள் வழிபாடு கூடாது. தலைக்குக் குளித்த பிறகு வழிபாட்டைத் தொடரலாம். அதுவே உடலுக்கும் உள்ளத்துக்கும் உகந்தது.

சுகாதாரம், உள்ளத்தூய்மை ஆகியவற்றை வலியுறுத்தும் சட்டதிட்டங்களின் தொகுப்பே தர்ம சாஸ்திரம். ஆனால், தமது விருப்பப்படி செயல்படும் எண்ணம் கொண்டவர்களுக்கு, தர்ம சாஸ்திரத்தின் கட்டுப்பாடு தேவையில்லைதான்! ஆனால், நாம் அப்படி இருக்கக்கூடாது. தர்ம சாஸ்திரத்தின் சட்டதிட்டங்களை மதித்து, 'அந்த' நாட்களில், மனதுக்கும் உடலுக்கும் ஓய்வு அளிப்பதே ஆரோக்கியத்துக்கு உகந்தது.

ஓய்வு முடிந்து, நீராடிய பிறகு சாவகாசமாக ஒருநாள் கோயிலுக்குச் சென்று மனம் குளிர தரிசனம் செய்து வழிபட்டு வரலாம்; அவசரமில்லை!

வேற்று மதத்தைச் சார்ந்த எனது கனவில், இந்து மதக் கடவுள்கள் தோன்றுகிறார்கள். அதன்படி நானும் பல இந்து கோயில்களுக்குச் சென்று வழிபட்டு வருகிறேன். இத்தகைய தரிசனங்கள், எனக்கு ஒருவித அமைதியைத் தருவதாக உணர்கிறேன். இதுபோல், இந்து மதக் கடவுள்களை நான் தொடர்ந்து வழிபடலாமா?

- பெயர் சொல்ல விரும்பாத ஒரு வாசகி, சென்னை.

மனதின் போக்கு அலாதியானது. சட்டம் அதைக் கட்டுப்படுத்தாது. தங்களின் மனம் விரும்பும் கடவுளை ஏற்கலாம். பயன் உண்டு. மனதின் அடித்தளத்தில் பல்வேறு விஷயங்கள் ஒளிந்திருக்கும். அவை, முற்பிறவி சம்பந்தப்பட்டவையாகவும் இருக்கும். வாய்ப்பு கிடைக்கும்போது வெளிப்படும்.

உடல் உறுப்புகள் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும்போது, மனம் விழித்துக்கொண்டு, தான் சேமித்து வைத்திருக்கும் எண்ணங்களை-நிகழ்வுகளை அசைபோடும். இதுவே கனவாக விரியும்! நமக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அறிமுகம் இல்லாதவர்களும் சந்தித்திராத நிகழ்வுகளும்கூட கனவில் வரலாம். (அத்தனையும் முற்பிறவி தொடர்பானவை).

பண்பான வாழ்க்கையில், பேரின்பத்தை சுவைப்பதற்கான வழிவகைகளைச் சொல்வதே மதங்கள். பரம்பரையாகக் கடைப்பிடித்து வரும் மதக் கோட்பாடுகளில்தான் நம் மனம் ஒன்றி இருக்கும். சில தருணங்களில், முற்பிறவி வாசனை, வேறு சிந்தனைகளையும் தோற்றுவிப்பது உண்டு. தாங்கள் விருப்பப்படி வழிபடலாம்!

வீட்டின் எதிரில் கோயில் இருந்தால், வாஸ்து சாஸ்திரப்படி ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டுமா?

- நாராயணன், மயிலாடுதுறை.

வீட்டுக்கு எதிரில் கோயில் இருப்பது, தங்களுக்கு எந்த பாதிப்பையும் விளைவிக்காது. வாஸ்து சாஸ்திரமும் அதை எதிர்க்காது.

அதே நேரம், கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்களது வீடு இடையூறாக இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் தங்களது முன்னேற்றம் தடைபடும். கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு ஒத்துழைப்பு கொடுங்கள். நன்மைகள் நாடி வரும்.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஒரே கோத்திரத்தில் திருமணம் கூடாதா?

குழந்தைகள் இல்லாத நான், கயா அல்லது காசிக்குச் சென்று, எனக்கு நானே பித்ரு கடன்களைச் செய்து கொள்ளலாமா?

- சுரேஷ் ராம்சந்திரன்.

'**பி**ண்டம் போட புதல்வன் இல்லை. எனவே, எனக்கு வேறு கதி இல்லை!' என்று நீங்கள் நினைப்பது தவறு. பீஷ்மர் பிரம்மசாரி; அவருக்குக் குழந்தைகள் இல்லை. ஆனால், எல்லோரும் அவருக்குத் தர்ப்பணம் செய்வது உண்டு. புத்திரன் இல்லாமல் இறந்தவர்களுக்கு, மற்றவர்கள் தர்ப்பணம் கொடுப்பார்கள். எப்படி?

முன்னோர் ஆராதனையின் போது, தன் குலத்தில் பிறந்தவர்களுக்கு பிண்டம் வைப்பதுண்டு. அப்படி...

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தங்கள் குலத்தில் பிறந்த எவரேனும் ஒருவர், முன்னோர் ஆராதனையின்போது, தங்களையும் சேர்த்துக் கொள்வார் *(யே அக்னி தக்தா: யே அனக்னி தக்தா:)* தர்ப்பணத்தின்போது, 'தாய்-தந்தை, பந்துக்கள், குழந்தைகள் ஆகியோரை இழந்து தனிமரமாக அநாதையாக இறந்தவர்களுக்கு, இந்த நீரை அளிக்கிறேன்' என்று சொல்வதுண்டு. இதில் வாரிசு இல்லாத நீங்களும் அடங்குவீர்கள்.

எனவே, மரணத்துக்குப் பிறகு செய்ய வேண்டிய சடங்குகளை இப்போதே செய்யத் தேவையில்லை. இறந்துபோன நம் முன்னோர்களைத் திருப்திப்படுத்த கயா, காசி போன்ற தீர்த்தத் தலங்களை அணுகுவோம். முற்காலத்தில்... 'காசியில்தான் உயிர் பிரிய வேண்டும்' என்பதற்காகவே அந்தத் தலத்துக்குச் செல்வார்கள் முதியோர்கள். ஆனால் அவர்கள், தனக்குத்தானே பிண்டம் போட்டுக்கொள்ள மாட்டார்கள்!

'ஒருவன் புத்திரனைப் பெறுவது... தான் இறந்தபிறகு பிண்டம் போடுவதற்கே!' என்கிறது தர்ம சாஸ்திரம். நீங்கள் சொல்வதுபோல், உயிருடன் இருக்கும்போதே தனக்குத்தானே பிண்டம் போட்டுக் கொள்ளலாம் என்றால், புத்திரன் வேண்டும் என்று எவரும் கவலைப்படமாட்டார்களே! தவிர, தர்ம சாஸ்திரத்தின் அறிவுரையும் அர்த்தமற்றதாகிவிடும்.

எனவே, தாங்கள் மனதைக் குழப்பிக் கொள்ளாமல் நிம்மதியாக வாழ்க்கையை நடத்துங்கள். இயன்ற வரையிலும் நல்ல காரியங்களைச் செய்து வாழுங்கள். தங்களுக்கு மோட்சம் கிடைக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



கருட புராணம் படிப்பது, இறந்துபோனவரின் ஆன்ம சாந்திக்கு நல்லது என்பதால் படிக்க ஆரம்பித்தேன். அதில், பிள்ளை (ஆண்) இல்லாதவர்கள் மரணத்துக்குப் பின் அனுபவிக்க நேரிடும் தண்டனைகளையும், அவர்கள் புத் நரகத்தில் (புத்திரர்கள் இல்லாததால் இறந்தபின் சேரும் நரகம்) சேர்வர் என்பதையும் படித்தபோது, மனதில் கவலை சூழ்ந்தது.

காரணம் - என் பெற்றோருக்கு நாங்கள் ஐந்து பெண்கள்; ஆண் வாரிசு இல்லை. கருட புராணத்தின்படி, என் பெற்றோருக்கும் நரகம்தான் முடிவா? இத்தனைக்கும், தனது நேர்மையான உழைப்பால் எங்கள் அனைவரையும் நல்ல நிலைக்குக் கொண்டு வந்த பெற்றோருக்கு, புண்ணியம் அல்லவா கிடைக்க வேண்டும்?!

இதனால், தொடர்ந்து கருட புராணம் படிக்க எனக்கு மனம் வரவில்லை. என் மன நெருடலைப் போக்க வழிகாட்ட வேண்டும்!

- எஸ்.ஜானகி, உடுமலை.

கருட புராணம் படிப்பது, இறந்தவரின் ஆன்மா சாந்தி அளிப்பதுடன், நம் மன அமைதிக்கும் குடும்ப செழிப்புக்கும் வழி வகுக்கும்! துக்க வீட்டில் கருட புராணம் படிக்கும்போது, ஸ்ரீமந் நாராயணன் - ஸ்ரீகருடாழ்வார் ஆகியோரது உரையாடலை ஆழ்ந்து கேட்கும் மனம், துயரத்தில் இருந்து விடுபட்டு, இறந்தவருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவர நிறைவேற்ற உதவும்.

'புத்' எனும் துயரில் இருந்து கரையேற்றுபவன் 'புத்திரன்' என்றே கருட புராணம் விளக்கம் தருகிறது. ஆனால் தங்களின் மனம், 'புத்திரர் இல்லாதவர்களுக்கு நற்கதி இல்லை' என்று ஏற்றுக்கொண்டது போலும். இது தவறு. புத்திரன் இல்லை என்றால் மோட்சமும் இல்லை என்று தர்ம சாஸ்திரம் சொல்லாது. மோட்சத்துக்கும் புத்திரனுக்கும் சம்பந்தம் இல்லை.

'இறந்தவரின் அறம் அவரைக் கரையேற்றிவிடும். ஆனாலும் அவரிடமிருந்து வந்த நாம், அவருக்குச் செய்யும் கடமைகளில் இருந்து நழுவக்கூடாது' என்கிறது சாஸ்திரம். அவரின் ஜீவ அணுக்களால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நம் உடல் தோன்றியது. ஆக... அவரின் ஜீவ அணுக்களில் ஒரு பகுதி நம்மிலும் உண்டு. இந்தத் தொடர்பை அறிந்து, இறப்பு தீட்டைக் கடைப்பிடிக்கிறோம். மரணம் தவிர்க்க முடியாதது. துயரம் ஒருபுறம் இருந்தாலும் அதிலேயே ஆழ்ந்துவிடாமல், ஈமச் சடங்குகளை முறையாக நிறைவேற்ற வேண்டும். 'அவர் கரையேறிவிட்டார்' என்ற எண்ணம் நம் மனதில் பதியும்போது, நமது செயல்பாடுகள் சிறப்பு பெறும்.

'காசியில் உயிர் துறந்தால் மோட்சம்' என்கிறது புராணம். நம் முன்னோர்கள் இதற்காகவே காசிக்குச் செல்வர். அவர்களில், புத்திர பாக்கியம் வாய்த்தவர்களும் உண்டு; வாய்க்காதவர்களும் உண்டு.

புராண விளக்கங்களைத் தெரிந்துகொள்ள குறிப்பிட்ட அணுகுமுறை தேவை. குறிப்பிட்ட ஒரு விஷயத்தை அப்படியே எடுத்துக்கொள்ளாமல், அதற்கு முன்னும் பின்னும் சொல்லப்பட்டிருக்கும் தகவல்களையும் ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

வம்ச விருத்திக்குப் புத்திரன் வேண்டும். புத்திரனைப் பெற்றுக்கொள்வது சிறப்பு என்பதை அறிவுறுத்துவதே சாஸ்திரத்தின் நோக்கம்.

'புத்திரர் இல்லாதவர்களுக்கு, மகள் வயிற்றுப் பேரன் மூலம் ஈமச் சடங்கை நிகழ்த்தலாம். பேரனும் இல்லையெனில், மகள் ஈமச் சடங்கைச் செய்யலாம்' என்கிறது சாஸ்திரம். இப்படி புத்திரரில் இருந்து ஆரம்பித்து, படிப்படியாக ஒவ்வொருவராக குறிப்பிடும் சாஸ்திரம்... உறவுகள் எவரும் இல்லையெனில், தொடர்பு இல்லாத ஒருவனும் ஈமச் சடங்கு செய்யலாம் என்றும் ஒரு வாய்ப்பு தருகிறது! இந்த மண்ணில் தோன்றியவன் ஈமச் சடங்கை இழக்கக்கூடாது என்பதே சாஸ்திரத்தின் நோக்கம். அநாதைகளுக்கும் ஈமச் சடங்கை நிறைவேற்ற வற்புறுத்துகிறது அது!

ஆக, புத்திரர் இல்லாத தந்தையின் ஈமச் சடங்குகளை, மகள்களே ஏற்று அவருக்கு சாந்தியளிக்க இயலும். ஆகையால், மனக் குழப்பத்திலிருந்து வெளிவந்து நடக்க வேண்டியதைக் கவனியுங்கள்.

ஒரே கோத்திரத்தில் திருமணம் செய்யலாமா? செய்து கொள்ள நேர்ந்தால் என்ன பரிகாரம்..?

- டி.நாகராஜன், கோவா.

ஒரே கோத்திரத்தில் பிறந்த ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்வதை தர்ம சாஸ்திரம் ஏற்காது. அவர்களின் உறவை, சகோதர உறவாகவே பார்க்கிறது அது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தன் குடும்பத்தாருக்கும் பங்காளிகளுக்கும் கொடை அளிப்பதில் சாஸ்திரத்துக்கு உடன்பாடில்லை. 'ஒருவன்... கன்றோடு பசுவை கொடை அளிக்க விரும்புகிறான் எனில், அந்த தானத்தைப் பெறுபவன், மாற்று கோத்திரத்தைச் சார்ந்தவனாக இருக்க வேண்டும்' என்கிறது தர்ம சாஸ்திரம். அதுபோல், முன்னோர் ஆராதனையில் பங்கு பெறுபவனும், மாற்று கோத்திரத்தில் இருக்க வேண்டும். 'தனது கோத்திரத்தைச் சார்ந்தவன் மரணமடைந்தால், அவனுக்காக 'நீராடல்' வேண்டும்' என்கிறது தர்ம சாஸ்திரம்.

இந்த நடைமுறை தோன்றியது எப்போது என்று நமக்குத் தெரியாது. நம் முன்னோர், இவற்றை அலட்சியப்படுத்த முற்படவில்லை. அவர்களது சிந்தனையில் குறை காண்பது தவறு! இரு சகோதரிகளுக்குப் பிறந்த ஆணும் பெண்ணும் மணம் புரிந்து கொள்வதில்லை; 'உடன்பிறப்பு' என்ற எண்ணம், மன நெருடலை அளிக்கும்! வம்ச பரம்பரை என்பது, 'ஆண்' வழி நிர்ணயிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட ரிஷி வம்சத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு, அதே ரிஷி வம்சத்தில் பிறக்கும் பெண், சகோதரி ஆவாள். ஆகவே, அவன் மணக்கும் பெண், மாற்று கோத்திரமாக இருக்க வேண்டும்.

பெண்ணை, கன்னிகாதானமாக ஏற்க வேண்டும். ஒரே கோத்திரத்தைச் சார்ந்தவன் தானம் பெற தகுதியற்றவன். எனவே, திருமணம் புரிய முடியாது. தவிர, எல்லா கோத்திரங்களும் செழித்து வளர, மாற்று கோத்திரத் திருமணம் கைகொடுக்கும். ஒரே கோத்திரத்தில் மணம் செய்யும் நடைமுறையை ஏற்றால், அந்தக் கோத்திரம் காலப்போக்கில் எண்ணிக்கையில் சிறுத்து, கடைசியில் மறைந்தும் போக வாய்ப்பு உண்டு.

கோத்திரங்கள் ஒன்றுக்கொன்று இணைந்து வளரவே இந்த ஏற்பாடு என்பதைக் கவனிக்க வேண்டும். மேலும், ஒரே கோத்திரத்தில் மணம் செய்வதை ஆயுர்வேதமும் ஏற்க மறுக்கிறது. இதுகுறித்து, 'அதுல்ய கோத்திரா த்யாயம்' என்ற தலைப்பில் விவரிக்கிறது ஆயுர்வேதம். மாமன் மகன், அத்தை மகன், மாமன் மகள், அத்தை மகள்... இவர்கள் திருமணத்தில் இணைவதையும் தர்ம சாஸ்திரம் ஏற்காது. அதையும் மீறி 'தேசாசாரம்' என்ற நோக்கில் மணம் செய்பவர்களும் இருக்கிறார்கள்!

பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, தற்போது மருத்துவத்தின் பரிந்துரையை ஏற்று, உறவு முறையில் திருமணம் புரிவதைத் தவிர்க்கிறார்கள் இன்றைய இளைஞர்கள். ஒரே கோத்திரத் திருமணத்தையும் விஞ்ஞானம் தவிர்க்கச் சொல்லும் காலம் வெகுதொலைவில் இல்லை!

ஒரே கோத்திரத்தில் திருமணம் நடந்துவிட்டால் 'சாந்திராயணம்' எனும் விரதத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சாஸ்திர சம்மதமான கடமைகளை ஆற்ற, கோத்திரம் மாறிய மற்றொருவளை மணக்க வேண்டும். ஏற்கெனவே மணந்தவளை, வாழ்நாள் முழுவதும் காப்பாற்ற வேண்டும் *(மாதுலஸ்ய...)*.

திருமணத்தில், 'ஸப்தபதி' நிறைவு பெற்றால், தனது கோத்திரத்தில் இருந்து பிரிந்து, கணவன் கோத்திரத்துடன் இணைந்துவிடுவாள் பெண்!

வெறும் உடலுறவை மட்டுமே இலக்காக கொண்டதல்ல திருமணம். அறத்தைச் செயல்படுத்த மனைவி வேண்டும். இதற்காக திருமண பந்தத்தில் இணையும்போது, ஆசையும் தானாக நிறைவேறும்! ஆகவே, ஆசைக்காக இல்லாமல் அறத்தைச் செயல்படுத்தும் கண்ணோட்டத்துடன், திருமணத்தை நிறைவேற்ற வேண்டும்!

என் வயது 63. சிறு வயது முதல் எனக்குப் பெரிதும் உதவியவர் என் சகோதரியின் கணவர். இவர் இறந்ததையொட்டி, சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோயிலின் நான்கு கோபுரங்களில் மோட்ச தீபமும், சந்நிதியில் நெய் தீபமும் ஏற்றி என் நன்றிக்கடனைச் செலுத்தினேன். இதைக் கண்ட உறவினர்கள் கேலி செய்தனர். நான் மோட்ச தீபம் ஏற்றியது தவறா?

- ஜி.லலிதா ஜெயசீலன், சிதம்பரம்-1.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



இறந்தவருக்காக மோட்ச தீபம் ஏற்றுவது நல்ல நடைமுறை. நல்லதைச் செய்யும்போது மற்றவர்களது கேலி-கிண்டல்களை பொருட்படுத்தக் கூடாது. எதைச் செய்தாலும் அதற்கு எதிர்ப்புகள் இருக்கத்தான் செய்யும். அறிஞர்கள் கிண்டல் செய்யமாட்டார்கள்.

மற்றவர்களைப் பற்றி தாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? அவர்களின் கேலிச் சொற்களுக்குச் செவி சாய்த்து, அதுகுறித்து ஆராய்வது... நீங்கள் ஏற்றிய மோட்ச தீபத்துக்குக் களங்கத்தை உண்டாக்கும்.

தாங்கள் மோட்ச தீபம் ஏற்றி, பெருமை பெற்றுவிட்டதை பொறுக்காதவர்கள் கிண்டல்தான் செய்வார்கள். 'நம்மால் இப்படிச் செய்ய இயலவில்லையே!' என்ற அவர்களது தாழ்வு மனப்பான்மையும் இதற்கு ஒரு காரணம். எனவே, கேலி பேச்சுகளைக் கண்டுகொள்ள வேண்டாம்.

பகவானின் பரசுராம அவதாரம், துவாபர யுகம் அதாவது கிருஷ்ணாவதாரம் வரை நீடித்தது என்கிறார்களே... இதுகுறித்து தங்களின் கருத்து?

- கீதா, சென்னை-10.

கிருஷ்ணாவதாரத்தின்போது (துவாபர யுகம்) ஸ்ரீபரசுராமரும் இருந்தார்; இவரிடம் கர்ணன் வில்வித்தை கற்றார் என்ற தகவல் உண்டு. அது மட்டுமா..? ராமாயண காலத்தில் (திரேதா யுகம்), ஸ்ரீராமனும் பரசுராமனும் சந்தித்த சம்பவமும் உண்டு. சிரஞ்ஜீவியான ஸ்ரீபரசுராமர் இப்போதும் இருக்கிறார்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பரசுராமர் தவிர இன்னோர் உதாரணம் அனுமன். ஆம், ராமாயண அனுமன், மகாபாரதத்தில் பீமனுடன் உரையாடுகிறார். இவரும் சிரஞ்ஜீவியே!

தெய்வ அவதாரங்கள்... தங்களின் அவதார நோக்கம் முடிந்த பிறகும் மக்கள் மனதில் இருக்கிறார்கள். எங்கும் நிறைந்த கடவுளின் அவதாரங்களுக்கு மறைவு இல்லை. மனதில் பதிய வேண்டிய கதாபாத்திரங்கள், மறையக்கூடாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காவி வஸ்திரத்தை எப்போது அணிய வேண்டும்?

தர்ம சாஸ்திரப்படி, காவி வஸ்திரத்தை யார் யார்... எந்தெந்தத் தருணங்களில் அணியலாம்?

– ராமச்சந்திரன், தானே மேற்கு.

காவி வஸ்திரத்துக்கு 'காஷாயம்' என்றும் பெயர் உண்டு. துறவிகள் அணிய வேண்டிய வஸ்திரம் இது. ஆசாபாசங்களை விட்டவர்கள், விருப்பு-வெறுப்புகளைக் கடந்தவர்கள் காவி வஸ்திரம் அணியலாம்.

ஆசாபாசத்தைத் துறந்தவரை, *'மிருதித கஷாய:'* என்பர். தங்களது இயல்புக்கு உகந்த உடையாகத் திகழ்வதால் காவி வஸ்திரத்துக்கு துறவிகளிடம் சிறப்பு உண்டு.

மற்றவர்கள் காவி வஸ்திரத்தைத் தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தும் தர்ம சாஸ்திரம், அவர்களுக்கு வெள்ளை வஸ்திரத்தைப் பரிந்துரைக்கும். வெள்ளை நிற வேட்டி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உகந்தது என்று வேதம் கூறும் *(வாஸ: ச க்ஷௌமம், அன்யத்வா சுக்லம்)*. பருத்தியில் இருந்து நூல் எடுத்து வஸ்திரமாக்கி உடுத்த வேண்டும் *(கார்பாஸம் வா விகிருதம்)*.

தேவர்கள் மற்றும் முன்னோர் ஆராதனையின் போதும், தர்ம சாஸ்திரக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தும்போதும் வெள்ளை நிற ஆடைகளை அணிய வேண்டும். வெள்ளை நிறம் ஸத்வ குணத்தை அடையாளம் காட்டுவது! சிவப்பு, காவி, நீலம் மற்றும் மஞ்சள் நிற வஸ்திரங்களை அணிந்து தர்ம சாஸ்திரக் கடமைகளில் ஈடுபட்டால், தகுந்த பரிகாரம் செய்ய வேண்டும் என்று தர்ம சாஸ்திரம் வலியுறுத்தும். *(நீலபீதாதி வஸ்திர தாரண...)* கடவுள் வழிபாடுகளில் காவி வஸ்திரம் ஏற்பதில், தர்ம சாஸ்திரத்துக்கு உடன்பாடில்லை. ரஜோ மற்றும் தமோ குணங்களுக்குரிய நிறங்களை அது தவிர்க்கச் சொல்லும்!

'பருவகால மாற்றத்துக்கு ஏற்ப பல வண்ண வஸ்திரங்களை அணியலாம்!' என்று கூறும் ஆயுர்வேதம். 'கோடை காலத்தில், சுகாதார நோக்கில் காவி உடை அணியலாம். அது, மெல்லியதாக இருக்க வேண்டும்' *(தத்தார யேத் உஷ்ணகாலே...)* என்று அறிவுறுத்தும்.

தந்திர சாஸ்திர வழிபாடுகளில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிற வஸ்திரங்கள் அணிவதைக் காணலாம். அங்கு, காஷாய (காவி) வஸ்திரம் ஏற்புடையது அல்ல!

நம் வசதிக்காக நாம் வகுத்துக் கொண்ட புதிய நடைமுறைகளை, சாஸ்திரத்துடன் தொடர்புபடுத்தக் கூடாது. துறவறம் ஏற்றால் காவி உடுத்தலாம். இல்லையேல் தவிர்க்க வேண்டும்.

ராமாயணம், மகாபாரதம் போன்றவை வைணவத்துடன் தொடர்புடையன. இதுபோல், சைவம் தொடர்பான இதிகாசங்கள் ஏதேனும் உண்டா?

— கே.ஏ.மாதவன், சிவகாசி.



சிவ புராணம், லிங்க புராணம், ஸ்கந்த புராணம், அக்னி புராணம், கூர்ம புராணம் ஆகியவையும், சிவ லீலார்ணவம், நீலகண்ட விஜயசம்பு போன்ற காவியங்களும் சைவத்தை விளக்கும். தவிர, திரிபுர சம்ஹாரம் போன்றும் நிறைய நூல்கள் உண்டு.

ராமாயணம் மற்றும் மகாபாரதத்திலும் சைவத்தின் நிழல் ஆடும்! ஸ்ரீராமர், ராமேஸ்வரத்தில் ஈசனை வழிபட்டார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அர்ஜுனன், சிவபெருமானுடன் போரிட்டதுடன், அவர் அருளால் பாசுபதாஸ்திரம் பெற்றான் போன்ற தகவல்களை அறிந்திருப்பீர்கள். புராணங்களில்... பக்தன் விரும்பும் இறை உருவத்தை உயர்த்திக் காட்டுவது மரபு. புராணத்தில் மனம் ஒன்றச் செய்யவும், அதன் நீதிநெறிகளைக் கடைப்பிடித்து பலன் பெறவும் இது உதவும்!

மரணத்துக்குப் பிறகு உயிர் மற்றோர் உடலை அடைவதாகக் கூறுகின்றனர். எனில், பித்ரு வழிபாடுகள் தேவையா? அவர்களுக்கு திதி - தர்ப்பணம் செய்வதால் பலன் உண்டா?

– சுப்ரமணியன், திருத்துறைப்பூண்டி.

இறந்துபோன பெற்றோரது படத்துக்கு பொட்டு வைத்து, மாலை அணிவித்து தினமும் வணங்குகிறோம். அவர்களது நினைவு நாளில் சிறப்பாக வழிபடுகிறோம்.

திருமணச் சடங்கில்... மூன்று தலைமுறைகளைச் சொல்லி மணமகளை, மணமகனிடம் ஒப்படைப்பர். சிலர், மணமேடையில் முன்னோர்களது படத்தை அலங்கரித்து வைத்திருப்பர். இதுபோன்ற தருணங்களில் 'இறந்தவர்கள் வருவார்களா? ஆசீர்வதிப்பார்களா?' என்று சிந்திப்பது இல்லை. ஆனால், திதி - தர்ப்பண விஷயங்களில் சந்தேகம் தலை தூக்குகிறது! இப்படி, நமது சிந்தனைக்கு ஏற்புடையதை மட்டும் அப்படியே கடைப்பிடிப்பதும் மற்றவற்றைத் தவிர்ப்பதும் தவறு.

'கர்மம் முற்றிலும் தொலைந்து, பரம்பொருளில் ஒன்றியவர்களைத் தவிர, ஏனைய ஆத்மாக்கள்... மீதமுள்ள கர்மத்தை அனுபவிக்க மறு உடலைத் தேடுவர்' என்கிறது தர்ம சாஸ்திரம். மறுபிறவி இல்லாதவரோ, மறுபிறவியை ஏற்பவரோ... நம்மைப் பொறுத்தவரை, அவர்கள் நமக்கு பித்ருக்கள்தானே?!

மறுபிறவி இல்லாதவருக்கும் ஆராதனை உண்டு. இறந்து போனவர்(முன்னோர்)களது தொடர்பு நம்மிலும் ஒட்டிக் கொண்டிருக்கும்; நாம் மறையும்போது அந்தத் தொடர்பு அற்றுப் போகும் என்கிறது வேதம். *(ஏதாவத்வை புருஷ ஸ்ய ஸ்வம் யாவ த்ப்ராணா:)*

ஆண் - பெண் என்ற பாகுபாடுகள், உடலோடு உயிருக்குத் தொடர்பு இருக்கும் வரை மட்டுமே. உடல் அழிந்ததும், பாகுபாடுகள் தானாகவே கழன்றுவிடும். எனவேதான், முன்னோர் ஆராதனையில் இறந்தவரின் பெயரைச் சொல்லி அக்னியில் உணவை சேர்க்கிறோம். பொருந்தாத ஒன்றை நம் முன்னோர்கள் பரிந்துரைக்கமாட்டார்கள்!

தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் - அனைவருக்கும் பொதுவான பித்ருக்களை, 'திவ்ய பித்ருக்கள்' என்பர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



இவர்களை, தன் மனதால் படைத்தார் பிரம்மன். (இதில் மரீச்யாதி பித்ருக்களும் உண்டு). எல்லோருக்கும் முன்னதாகத் தோன்றியதால், ரிஷிகள், தேவர்கள், மனிதர்கள் உட்பட அனைவருக்கும் மூதாதையர்கள் இந்த திவ்ய பித்ருக்கள். இவர்களுக்குப் பிறகே ரிஷிகள், தேவர்கள், மனிதர்கள்... என்ற வரிசையில் படைப்பு நிகழ்ந்தது. திவ்ய பித்ருக்களை நாமும் ஆராதனை செய்வதுண்டு. *(ஸோம: பித்ருமான் யமோ...)*

வசு,ருத்திரன் மற்றும் ஆதித்யன் ஆகியோர் பித்ருக்களின் அதிஷ்டானமாக விளங்குபவர்கள். இவர்களுள் ஐக்கியமாகி... இறந்துபோன நம் முன்னோர்களும் வழிபாட்டுக்கு உரிய பித்ருக்களாக உயர்வார்கள். இப்படி, ஏற்கெனவே வசுக்களுடன் இணைந்துவிட்ட மூதாதையருடன், புதிதாக இறந்தவரையும் சேர்க்கும் நிகழ்வே, 'சபிண்டீகரணம்'. வசு, ருத்ரன், ஆதித்யன் ஆகியோரைத் திருப்திபடுத்தும்போது, நம் பித்ருக்களும் மகிழ்வர்.

மனிதனும் தெய்வமாகலாம் இல்லையா! இறந்தவரின் பூத உடல் மறைந்தாலும், நம் நினைவை விட்டு அவர் அகலமாட்டார்.

அடுப்பில் எரியும் நெருப்பின் வெம்மை, வெண்கலப் பானையை ஊடுருவி, அதனுள் இருக்கும் நீரிலும் கலந்து கொதிக்க வைத்து அரிசியை வேகச் செய்யும். அடுப்பின் நெருப்பை அணைத்தாலும் அதன் வெப்பம்... பானை, நீர் மற்றும் சாதம் ஆகியவற்றில் உறைந்திருக்கும். அதுபோல், ஒருவர் இறந்துபோனாலும் நம்மில் அவருக்கு உண்டான பந்தம், தொடர்பு முற்றிலுமாக அறுந்துவிடாது. 'இறந்தவர்- 'பித்ருத்வம்' அடைய வேண்டும்' என்பதற்காக நடத்தப்படும் சடங்கில், அவரின் சூட்சும உருவம் தங்குவதற்கு வாய்ப்பு உண்டு. 'நான் உடலெடுக்க எந்த பிந்து காரணமானதோ, அந்த பிந்துவின் உரிமையாளனுக்கு (தகப்பனுக்கு), இந்த உணவு சேரட்டும்!' என்ற (வேதத்தின்) வாசகம், இறந்துபோன தகப்பனாரைக் குறிப்பதைக் கவனிக்க வேண்டும்.

பித்ருக்கள், உடலும் உறுப்புகளும் இல்லாதவர்கள். எனவே, அவர்கள் உணவை உண்ணுவதில்லை; பார்த்து திருப்திப்படுகிறவர்கள் *(த்ருஷ்ட்வா த்ரு ப்யந்தி)*. பித்ருக்களுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உணவு தேவையில்லை என்றாலும், முன்னோர் ஆராதனையில் பலவகை உணவுகளை நிரம்ப அளிக்கிறோம்.

'தேவர்கள், பித்ருக்கள், வேதம் ஓதுபவர்கள், அக்னி பகவான் ஆகியோரை ஆராதிப்பவன், பரம்பொருளையே ஆராதித்த பலனை அடைகிறான்' என்பது தர்ம சாஸ்திரத்தின் அறிவுரை. *(தேவான் பித்ருன்... விஷ்ணுமே வயஜந்திதே)* இதற்கேற்ப, முன்னோர் ஆராதனையில் - முன்னோர் வடிவில் பரம்பொருளையே அழைத்து உணவளிப்பதாகக் கருதி செயல்படுகிறோம். *(பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹ ஸ்வரூபி...)*

வசுக்களுடன் ஐக்கியமான நம் முன்னோர், திதி - தர்ப்பணத்தில் மட்டுமல்ல, நாம் நினைக்கும்போதெல்லாம் நமக்குப் பரிச்சயமான உருவில் நம் மனதில் தோன்றுவர். ஆகவே, அவர்களை அழைக்க வேண்டியதில்லை; நினைத்தாலே போதும். எனினும்... நம் மனம், முன்னோர்களை பூத உடலோடு சேர்த்தே பார்ப்பதால், வேதம் அவர்களை அழைக்கச் சொல்லும். *(ஆகந்த பிதர:...)*

அப்படி நமது அழைப்பை ஏற்று வருபவர்களை வரவேற்று, திதி - தர்ப்பணங்கள் முறைப்படி அளித்து வழிபட வேண்டும். இது, தர்ம சாஸ்திரம் சொல்வதுபோல பரம்பொருளையே வழிபட்டதற்குச் சமமாகும்.

கோயில் கும்பாபிஷேக வைபவம் ஒன்றில், கோபுரக் கலசங்களின் அருகில் நின்று தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். கும்பாபிஷேகம் முடிந்ததும், எல்லோரையும் போல நானும் கலசத்தைத் தொட்டு வணங்கினேன். 'இது தவறு' என்கிறார்கள் நண்பர்கள். அப்படியா? எனில், பரிகாரம் ஏதேனும் செய்ய வேண்டுமா?

– எம்.மோகன், மும்பை-86.

கும்பாபிஷேகத்தைப் பார்த்து மகிழ்ந்தாலே போதும் இறையருள் கிடைக்கும்! கும்பாபிஷேகம் முடிந்ததும் கலசங்களைத் தொட்டு வணங்குவதால், அதிக பலன் கிடைக்கும் என்பது இல்லை. தங்களின் மனமே இதைச் சிறப்பாகவும் உயர்வாகவும் கருதுகிறது; மனதின் பலவீனமே இதற்குக் காரணம். அதே நேரம்... கலசங்களைத் தொட்டதால், அபசாரம் ஏதும் இல்லை!



ஒருவர் செய்வதை ஆராயாமல் பின்பற்றுவது பாமரர்களது இயல்பு. எவரோ ஒருவர் கலசத்தைத் தொட்டு வணங்கியதைப் பார்த்து, நாமும் அதற்கு முயற்சிக்கும்போது தடங்கல் ஏற்பட்டால், 'அடடா... முழுமையாக

Sri Vaidyachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வழிபட முடியவில்லையே!' என்று மனம் சஞ்சலம் அடையும். அறியாமை நம்மை சங்கடத்தில் ஆழ்த்தும். ஆராய்ந்து செயல்பட்டால் அமைதியுண்டு.

தெய்வ உபாசனைகள் குறித்த உபதேசம் பெற அந்தணர்களை மட்டும்தான் நாட வேண்டுமா?

– கே.எஸ்.முருகன், தேவிகாபுரம்.

மறை (வேதம்) சம்பந்தப்பட்ட மந்திரோபதேசம் பெற அந்தணரை அணுகுவது சிறப்பு. மறை அல்லாத தந்திர சாஸ்திரம் குறித்த மந்திரோபதேசத்துக்கு, அதில் தேர்ச்சி பெற்று விளங்குபவரை நாடலாம்.

'சௌந்தர்ய லஹரி'க்கு விரிவுரை எழுதினார் ஒருவர். அதில், அம்பாளின் மூலமந்திரத்தை முழுமையாக விளக்கியிருந்தார். 'மறைவாக இருக்க வேண்டிய மந்திரத்தைப் பிரகடனப்படுத்தி விட்டீர்களே! குரு-சிஷ்ய வழியில் - வாய்மொழியாக உபதேசிக்க வேண்டிய மரபை, கொச்சைப்படுத்திவிட்டீர்களே' என்று சர்ச்சை எழுந்தது. உடனே நம்மவர், 'எனது விரிவுரையை பக்தியுடன் படிக்கும் ஒவ்வொருவனும் என் சிஷ்யனே. நான் அவனுக்கு குரு; எழுத்து வடிவில் அவனுக்கு ஓதிவிட்டேன். ஆகையால், மரபு ஒன்றும் கெட்டுவிடவில்லை!' என்று பதிலளித்தாராம்!

தகுதியானவரை அணுகி உபதேசம் பெறுவது சிறப்பு. உபதேசம் செய்யும் பணியை அந்தணரிடம் ஒப்படைத்திருக்கிறது தர்ம சாஸ்திரம்!

அர்ஜுனன், துரோணரிடம் வில் வித்தையைக் கற்றான். கர்ணன், பரசுராமரை அணுகினான். ஸ்ரீகிருஷ்ணர், சாந்தீபினி மகரிஷியை அணுகினார். நாமும் இவர்களைப் பின்பற்றலாமே!

கோயில்களில் உள்ள பலிபீடங்களைத் தொட்டு வணங்கினால், பாவங்கள் விலகும் என்கிறார்களே... உண்மையா?

– சைலேந்திரன், கோவில்பட்டி.

அர்ச்சகர், 'பலி'யை வைக்கும் இடம் பலிபீடம். இது, கடவுள் உபசாரங்களில் ஒன்றை நிறைவேற்றும் பொருட்டு உருவானது; பக்தர்கள் வணங்கும் இடமல்ல.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பலிபீடத்தைத் தொட்டு வணங்குவது தேவையற்றது. ஆர்வக்கோளாறால் இதுபோன்ற செயல்களைச் செய்ய மனம் தூண்டும். கோயில்களில் அருள்பாலிக்கும் இறை உருவங்களை வணங்கினால் போதும். மற்றவற்றைத் தவிர்த்துவிடுங்கள். பலிபீடத்துக்கும் பாவம் விலகுவதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை!

'அக்காள் மகள்' போன்ற நெருங்கிய உறவுகளில் திருமணம் செய்து கொள்ளலாமா? இதற்கு சாஸ்திரம் என்ன சொல்கிறது?

– சேகர், நாகர்கோவில்.

அக்காள் மகளை மணம் புரிவதில் சாஸ்திரத்துக்கு உடன்பாடில்லை. சகோதரியின் மகளை தன் மகளாகவே பாவிக்கச் சொல்கிறது அது.

சாஸ்திரத்துக்கு உடன்பாடில்லை என்று தெரிந்தும் தென்னாட்டில் வாழ்ந்த முன்னோர்கள் 'தேசாசாரம்' என்ற போர்வையில், அக்காள் மகளை மணப்பதை ஏற்றுக்கொண்டனர். தேசாசாரமாக ஏற்பதால், தென்னாட்டவருக்கு மட்டும் விதிவிலக்கு. வட நாட்டவர், இந்த உறவு முறை (சகோதரியின் மகளை மணப்பதை) திருமணத்தை கட்டாயம் விலக்க வேண்டும் என்று தர்ம சாஸ்திர நூல்களில் தகவல் உண்டு. தற்காலத்தில் மருத்துவமும், உறவில் திருமணம் செய்து கொள்வதைத் தவிர்க்கச் சொல்கிறது. எனவே, நாமும் இதைத் தவிர்ப்பது நல்லது.

சகோதரிக்கு உதவி செய்ய வேறு வழிகளில் முற்படலாம். வேறு இடத்தில் பெண் எடுக்கலாம்.

உறவு முறை இல்லாத பெண்ணைத் திருமணம் செய்யும்போது, பிறக்கும் வாரிசுகள் சிறப்பாக இருக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ரீதட்சிணாமூர்த்திக்கு கொண்டக்கடலை மாலை அணிவிக்கலாமா?

ஸ்ரீதட்சிணாமூர்த்திக்கு வியாழன் தோறும் 108 கொண்டக் கடலைகளைக் கோத்து மாலை அணிவிக்கிறோம். 'உயிருள்ள விதைப் பொருளான கொண்டக்கடலையை ஊசியில் கோப்பது அதை வதைப்பதற்கு சமம்' என்கின்றனர் சிலர். பகவானுக்கு கொண்டக்கடலை மாலை அணிவிக்கலாமா, கூடாதா?

- எஸ்.பி.இந்திராணி பாலசுப்ரமணியன், திருப்பூர்-7.

'**இ**யற்கையின் அன்பளிப்பான புஷ்பங்கள் நிறைந்த நாடு' என்று வந்தே மாதரம் எனும் பாடல் தெரிவிக்கிறது. *(புல்லகுஸுமித)* 'இலை, பூ, நீர், பழம் - இவற்றில் ஒன்றை எனக்கு அளித்தால் போதும்' என்கிறார் கண்ணன். மாலைக்கு உகந்தது புஷ்பம். ஆதாரமில்லாத தகவல்களைக் காட்டி விருப்பப்படி மாலை அணிவிப்பது தவறு. ஈசன் நஞ்சை உண்டார் என்பதால், அவருக்கு விஷத்தை நிவேதனம் செய்யலாமா? 'அசைவது, அசையாதது - அத்தனையிலும் நான் உறைந்திருக்கிறேன்' என்கிறார் கண்ணன். அதற்காக கல்லையும் மண்ணையும் அவருக்குப் படைக்கலாமா?

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உலகத்தில் தென்படும் அத்தனை பொருட்களிலும் நவக்கோள்களின் சாந்நித்தியம் உண்டு என்கிறது ஜோதிடம். பூவில் ஒன்று, காயில் ஒன்று, பழத்தில் ஒன்று என்பதாக விளக்கப்பட்டிருக்கும். அத்தனையும் அவர்களின் பெருமையை உயர்த்திக்காட்ட பயன்படுத்தப்பட்டவை. அனைத்துக்கும் ஒரு வரையறை உண்டு. மாலையாகப் போடுவதற்கு புஷ்பத்துக்கு இருக்கும் தகுதி மற்றவற்றில் இல்லை.

கொண்டக்கடலையை குத்தினால் வலிக்கும் என்கிறீர்கள். கோழி, ஆடு, மாடு இவற்றைக் குத்தினாலும் வலிக்கும். அதுவும் உயிர்தானே? காய்கனிகளை மாலையாக மாற்றுவதைவிட, புஷ்பத்தைப் பயன்படுத்துங்கள். அது மாலையாவதற்கென்றே வடிவெடுத்திருக்கிறது. கொண்டக்கடலை, சாப்பிடுவதற்கு பயன்படுபவை. சிந்தனையோடு செயல்படுவதே சிறப்பு.

ஏழு பிறவி, ஈரேழு பிறவி என்கிறோம். எனில், மறுபிறவி என்பது உண்டா? எத்தனை பிறவிகள் உள்ளன?

- சி.என்.ரமாதேவி, சென்னை-86.

'பல பிறவிகளைச் சந்தித்து ஆன்மிக அறிவை எட்டியவன் என்னோடு இணைகிறான்' என்கிறான் கண்ணன். *(பஹூனாம் ஜன்மனாமந்தை...)* 'அம்பாளை ஆராதனம் செய்யும் பேறு பெற்றவனுக்கு அந்தப் பிறவியே கடைசிப் பிறவி' என்று பாஸ்கரராயர் தனது நூலில் விளக்குகிறார். 'ஜய - விஜயர்கள் பல பிறவிகளில் அரக்கர்களாகத் தோன்றினார்கள். அவர்களை அழிக்க அவதாரம் எடுத்தார் கடவுள் எனும் புராணத் தகவல் உண்டு. ராமாவதாரத்தில் லட்சுமணனாகத் தோன்றியவன் கிருஷ்ணாவதாரத்தில் பலராமனாக விளங்கினான்' என்பர்.

'முற்பிறவியில் செய்த செயல்பாடு, என்னைத் தாயாரின் கருவறையில் சிக்கவைத்து வாட்டி எடுக்கிறது. திரும்பவும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கருவறையை சந்திக்க வைத்து என்னை வதைக்காதே! உன்னோடு இணைத்துக் கொண்டு கருவறை சந்திப்பை அடியோடு அறுத்துவிடு' என்று பரம்பொருளை வேண்டுகிறார் ஆதிசங்கரர். *(ஆனதள கர்ம ப்ரசங்காத்...)*

'அறியாமையில் விளைந்த மாறுபட்ட செயல்பாடுகளுக்கு இணங்க, மாறுபட்ட உயிரினங்களில் வடிவெடுத்து, தற்போது சிந்திக்கும் திறன் பெற்ற மனித வடிவில் தோன்றியிருக்கிறேன். துயரத்தில் தோய்ந்த சங்கிலித்தொடர் போன்ற பிறவி வரிசைகளில் இருந்து விடுபட எனக்குத் தருணம் கிடைத்துவிட்டது' என்ற சிந்தனையாளர்களின் தகவல் தர்ம சாஸ்திரத்தில் உண்டு. *(அனாத்யவித்யா வாசனையா...)*

'உலக இயக்கத்துக்கு உறுதுணையாகச் செயல்பட்டேன். உயிரினங்களுக்கு உற்ற நண்பனாக இருந்தேன். தவத்தை மேற்கொண்டு ஆண்டவனை அடைய எண்ணினேன். ஆனால், தற்போது உயிர் பிரியும் தருணத்தில் இருக்கிறேன். எனது செயல்பாடு வீணானது' என்று கவலைப்பட்டான் ஒருவன். செயல்பாடு வீணாகாது. அடுத்தப் பிறவியில் இலக்கை சந்திக்கும் தருணம் முயற்சியின்றி கிடைத்துவிடும். இதற்கு இந்தச் செயல்பாடு உதவும் என்று சமாதானம் கூறும் தகவல் சாஸ்திரத்தில் உண்டு. பிறந்தவுடன் அறிவாளியாகத் தோன்றிய திருஞானசம்பந்தரும் சுகப்ரம்மமும் இதற்கு எடுத்துக்காட்டு.

பிறந்தக் குழந்தைக்குத் தாய்ப்பாலை சுவைக்கும் தகுதி எப்படி வந்தது? பிறந்த நான்கு குழந்தைகளில் ஒருவன் அறிவாளி, மற்றவன் முட்டாள், வேறொருவன் போக்கிரி, மற்றொருவன் சோம்பேறி. இந்த மாறுதலுக்கு என்ன காரணம்? 'முற்பிறவியில் படைத்த படைப்பை மறுபிறவியில் அப்படியே தொடர்கிறார் பிரம்மன்' என்கிறது வேதம். *(தாதா யதாபூர்வ மகல்பயத்)*

'கிழிந்த சட்டையைத் தூக்கியெறிந்து புதுச் சட்டையை ஏற்பதுபோல், நஞ்சிபோன பூத உடலைத் துறந்து, புது உடலில் புகுந்துவிடுகிறான் மனிதன்' என்கிறார் பகவான் கிருஷ்ணர். *(வசாம்சி ஜீர்ணானி...)* கணவனை இழந்த காரிகை துயரத்தில் துவண்டு போனாலும், சுதாரித்துக் கொண்டு, 'அடுத்தப் பிறவியில் நீயே எனக்குக் கணவனாக வாய்க்க வேண்டும்' என்று கடவுளை வேண்டுவாள் என்ற தகவல் புராணங்களில் உண்டு.

நோய்வாய்ப்பட்டு அவதிப்படுகிறான் ஒருவன். நோயின் காரணத்தை அலசிப் பார்த்தும் மருத்துவரால் அறிய முடியவில்லை. காரணம் இல்லாமல் காரியம் இல்லை. கடைசியில்... இவனது முற்பிறவி செயல்பாடே காரணம் என்று முடிவுக்கு வருகிறார் மருத்துவர். இந்தத் தகவல் ஆயுர்வேதத்தில் உண்டு. *(பாபம் கர்மச குர்வதாம்...)*

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவை அனைத்துமே மறுபிறவியை ஊர்ஜிதம் செய்கிறது. பிறவியைத் தொடர்வதும், அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதும் அவனவன் கையில் இருக்கிறது. 'ஈரேழு பிறவி என்ன? எண்ணிலடங்காதப் பிறவியைச் சந்திக்கலாம். ஒரு பிறவியோடு முற்றுப்புள்ளியும் வைக்கலாம்' என்பது ஆதிசங்கரர் முதலான சிந்தனையாளர்களின் கருத்து. தொடரும் பிறவிக்குத்தான் முற்றுப்புள்ளி வைக்க இயலும். ஆகவே, பிறவிகள் தொடரும் என்று நம்பலாம்.

என்னுடைய தாயார், பழுத்த சுமங்கலியாக வாழ்ந்து சிவலோகப் பிராப்தி அடைந்துவிட்டார். 20 வருடங்களாக அவரது திருமாங்கல்யம் என்னிடம் உள்ளது. இதை ஆபரணமாக மாற்றி அணிந்து கொள்ளலாமா?

- கணேஷ், சென்னை-17.

தங்கம் எப்போதும் தூய்மை உடையது. அணிந்து கொண்டாலும் தூய்மை அகலாது. இதற்கு 'பர்யுஷிதம்' - பயன்படுத்திய மாசு இல்லை. இதை ஆபரணமாக மாற்றுவதில் தவறில்லை. அறுபதாம் கல்யாணத்தில், மனைவிக்குப் புதுத் தாலி அணிவித்து மகிழ்வான் கணவன். காலப்போக்கில் தனக்குப் பிறந்தப் பேத்திக்கு, தனது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திருமாங்கல்யத்தை அழித்து மாலையாக மாற்றி அணிவிப்பது உண்டு.

பிறந்த குழந்தைக்கு அணிவித்த பொன் காப்பு, வெள்ளிக் காப்பு - இவற்றை அடுத்தடுத்து பிறந்த குழந்தைகளுக்கும் அணிவிப்பர். 'ஆகி வந்தது' என்ற பெருமையும் இதற்கு வந்துவிடும். துரதிருஷ்டவசமாக முதல் மனைவி இறந்தபிறகு, அவள் அணிந்த திருமாங்கல்யத்தை இரண்டாவது மனைவிக்கு அணிவிக்கும் சம்பிரதாயமும் உண்டு. மகள் திருமணத்துக்காக, தனது திருமாங்கல்யத்தைப் பயன்படுத்திய தாய்மார்களும் உண்டு. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் 'தங்கப் பொட்டு' ஒன்று அணிந்துகொண்டு திருமாங்கல்யத்தை மகளுக்கு அளிப்பதும் உண்டு. ஆகவே, தயக்கம் இன்றி தாராளமாக பயன்படுத்தலாம்.

கல்வி, குடிநீர் மற்றும் உணவு ஆகியவை வியாபாரமாகி விட்டன. இவை குறித்து தர்ம சாஸ்திரம் என்ன கூறுகிறது?

- கே.வி.நாகராஜன், சென்னை-39.



வேதம் போதிக்கும் ஆசான், அதற்குக் கூலியாகப் பணம் பெற்றுக்கொள்ள மாட்டான். கடமை என்று எண்ணி சேவை செய்வான். ஆனால், அவரை செல்வந்தர்கள் பராமரிப்பார்கள். 'பணம் பெற்றுக் கொண்டு கல்வி கற்பிப்பது தவறு' என்கிறது தர்ம சாஸ்திரம். *(பிருதகாத்யாபனம்...)* தனது பிழைப்புக்குக் கல்வியைப் பயன்படுத்துவதை தர்ம சாஸ்திரம் ஏற்கவில்லை. முதல் அறிவு நூல் - வேதம். ரிஷிகள் அதை வெகுமதியாக அடுத்தப் பரம்பரைக்கு அளித்தனர். 'கல்வி என்பது பொதுச் சொத்து. இதை விற்க, தனிமனிதனுக்கு உரிமை இல்லை' என்கிறது தர்ம சாஸ்திரம். குருகுலத்தில் படிக்கும் அத்தனை மாணவர்களும் குருவின் முழு பராமரிப்பில் கல்வி கற்றுத் திகழ்வார்கள். குலபதி என்கிற தகுதி அவர்களுக்கு உண்டு. குருகுலம், வியாபார நோக்கில் செயல்படாது.

இயற்கையின் உடைமை நீர். பிரம்மனின் முதல் படைப்பு அது! அத்தனை ஜீவராசிகளுக்கும் பொதுச் சொத்து இது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தனிமனிதன் அதில் உரிமை கொண்டாட முடியாது. *(ப்ரம்மணா ப்ரதமம் ஸ்ருஷ்டா:...)* இதையும் வியாபாரமாக்க தர்ம சாஸ்திரம் விரும்பாது. கிணறு, ஏரி மற்றும் குளங்கள் வெட்டுவதும், கரையில் படிக்கட்டுகள் அமைத்து சீர்படுத்துவதும், தண்ணீர்ப் பந்தல் வைத்துப் பராமரிப்பதும் பொதுச் சேவையாகக் கையாள்வர். இதை 'கடைச் சரக்காக மாற்றுவதை பாபம்!' என்கிறது தர்ம சாஸ்திரம். மேலும், 'தண்ணீரை தானமாக, அதாவது இலவசமாக அளிக்கச் சொல்கிறது' தர்ம சாஸ்திரம்.

'அன்ன விக்கிரயம் பாபம்!' என்கிறது சாஸ்திரம். விருந்தோம்பல், அன்றாடப் பணிகளில் ஒன்றாக இருந்தது. உணவளிப்பது பண்பின் அடையாளம். அன்னதானத்துக்கு ஈடான தானம் வேறில்லை என்று அறிவுறுத்துகிறது சாஸ்திரம். அரசர்கள் அன்னச் சத்திரங்களை ஏற்படுத்தினார்கள். பசியைப் போக்குவது பரமனின் பணிவிடை என்று முன்னோர்கள் எண்ணினர். இன்றும் தர்மஸ்தலா உட்பட பல ஆலயங்களில் அன்னதானம் நடைபெற்று வருகிறது.

கல்வி, நீர், உணவு - இவை கடைச் சரக்காக மாறக்கூடாது என்கிற எண்ணம் மலர வேண்டும்.

அமாவாசையன்று நல்ல காரியங்களைத் துவங்குவது வழக்கம். ஆனால், பஞ்சாங்கத்தில் 'அமாவாசை-நல்ல காரியங்கள் தவிர்க்கவும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. விளக்கம் தேவை.

- கூந்தலூர் வி.சந்திரசேகரன், கும்பகோணம்.

ஜோதிடக் கண்ணோட்டத்தில் அமாவாசை நல்ல காரியங்களுக்கு உகந்தது அல்ல. சந்திர பலம் முற்றிலும் இல்லாத அன்று, வளர்ச்சி பெறுவதற்கான காரியங்களுக்கு உகந்தது அல்ல!

நம்மில் பலர் தேய்பிறையைப் புறக்கணிப்போம். பிறை கண்ணுக்குப் புலப்படாத நாளை எப்படி ஏற்க முடியும்? திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் - இந்த ஐந்தை வைத்து நல்லநேரம் நிர்ணயிக்கப்படுகின்றன. அமாவாசையன்று நல்லவற்றுக்கு இடம் அளிக்கவில்லை. முன்னோரை வழிபடும் நாளில் மற்றொரு வேலையைச் செய்வது சாஸ்திரத்துக்கு உடன்பாடு இல்லை.

தலைவர்களின் நினைவு நாளில், வேலையில் இருந்து விலகி, தலைவரின் நினைவிலேயே இருக்க வேண்டும் என்கிறோம். அன்று நல்ல நாள் என்பது ஆதாரமில்லாத நம்பிக்கையில் விளைந்தது. ஆதாரம் இருக்கும்போது நம்பிக்கையைப் புறக்கணிக்கலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அமாவாசையன்று பூசணிக்காய் உடைப்பது நல்லதாமே! இதுகுறித்து விளக்குங்களேன்?

- ராஜேஸ்வரி வெங்கட், சென்னை-82.

அமாவாசைக்கும் பூசணிக்காய்க்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. அமாவாசை... முன்னோர்களின் ஆராதனை தினம். ஆகவே, ஆராதனைக்கு உகந்த காய்கனிகளுக்கு மட்டுமே சிறப்பு. பூசணிக்காயைப் பயன்படுத்துவதில் தவறில்லை. அதே நேரம், பூசணி விசேஷம் என்று எண்ணி, தேடி அலைந்து சாப்பிட வேண்டியது இல்லை. திருஷ்டி, தோஷம் விலக பூசணிக்காய் உடைப்பது உண்டு. பித்ருக்கள் வரும் நாளில் இந்த தோஷம் தலை காட்டாது.

தினமும் பிராணாயாமம் செய்து வருகிறேன். 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தின் அர்த்தம் என்ன? விளக்குங்களேன்?

- டி.ராஜேஷ்.

அகர உகர மகரங்கள் சேர்ந்தது ஓம்காரம். மும்மூர்த்திகளை அது சுட்டிக்காட்டும். வேதத்தின் ஆதியில் இருப்பதே ஓம். மூன்று குணங்களைக் குறிக்கும். வேதத்தின் சாரம்; பிரம்ம பீஜம்; பிரம்மனின் கண்டத்திலிருந்து வெளிவந்த முதல் எழுத்து. அத்தனை தத்துவங்களும் பிரணவத்தில் அடக்கம். அகில பிரபஞ்சமும் இதில் அடங்கியிருக்கிறது. எல்லாமாக இருப்பதும் வேதத்தின் ஆரம்பமும்... ஓம்! முடிவும் இதுவே! அர்ச்சனையில் கடவுள் பெயர்களுக்கு முன்னால் 'ஓம்' என்று சேர்ப்பர். எல்லாமாகத் தென்படும் கடவுளை ஓம்காரத்தோடு சேர்த்துச் சொல்வதே சிறப்பு.



'ஓம்' என்கிற பிரணவத்தின் விளக்கவுரையைத் தெரிந்து கொள்ள ப்ரணவார்த்த தீபிகா, ப்ரணவார்த்த மஞ்சரீ முதலான நூல்களைப் படியுங்கள். கேள்வி-பதில் பகுதியில் இதைச் சேர்க்க வேண்டாம். இதற்கான விரிவுரை மிகப் பெரிது. அறிஞர்களை அணுகி தெளிவு பெறுங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திதியை எங்கே கொடுப்பது சிறப்பு? வீட்டிலா... வெளியிலா?

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பர். நானும் நூற்றுக்கணக்கான கோயில் கோபுரங்களை தரிசித்துவிட்டேன். ஆனால், புண்ணியம்தான் கிடைத்ததாக தெரியவில்லை?!

- எஸ்.ஆதிநாராயண வடிவு, மேலகிருஷ்ணன்புதூர்.

வியாபாரமயமாகிவிட்டது இன்றைய உலகம். இதில் ஆன்மிகம் மட்டும் விதிவிலக்கா என்ன? இந்த வழிபாட்டுக்கு இவ்வளவு புண்ணியம் என்கிற அட்டவணை எல்லாம் கிடையாது! மனம் சார்ந்த விஷயத்தில் அணுகுமுறை மாறுபாடும். தங்களின் மனம் புண்ணியத்தின் அளவை எதிர்பார்த்தே செயல்படுகிறது. இதுபோன்ற எதிர்பார்ப்புகள், பக்தியின் தரத்தைக் குறைத்துவிடும். வெறும் செயல்பாடு பக்தியாகாது. ஆத்மார்த்தமான செயல்பாட்டில், பலன் குறித்த சிந்தனை இருக்காது.

பலனை மனதில் கொண்டு, லட்சக்கணக்கான... ஏன், கோடிக்கணக்கான கோபுரங்களை தரிசித்தாலும் புண்ணியம் கிடைக்காது. புண்ணியம் என்பது வியாபாரப் பொருள் அல்ல! நற்செயலில் ஆழ்ந்திருந்தால் நல்லதையே சந்திப்போம். இதைத்தான் 'புண்ணியம்' என்கிறோம். 'மனதில் என்னை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



மட்டும் நினைத்து வழிபட்டால், நான் அருள்வேன்' என்கிறார் ஸ்ரீகிருஷ்ணர். இறைவனை நினைத்த மனம், வேறு எவரையும் எதையும் எண்ணாது. தாங்கள், புண்ணியத்தை மட்டுமே மனதில் கொண்டு, பகவானை மறந்துவிட்டீர்கள்.

கடவுளின் நினைவை மனதில் தக்க வைப்பது, அவ்வளவு சுலபமல்ல. ஆனால், இந்த நிலையை அடைந்துவிட்டால்... அதுவே உங்களுக்கு கோடி புண்ணியத்தை நிச்சயமாகத் தந்துவிடும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குளக்கரை மற்றும் ஆற்றங்கரையில் திதி கொடுக்கலாமா? அல்லது வீட்டில் வைத்துதான் திதி கொடுக்க வேண்டுமா?

- வி.ராதாகிருஷ்ணன், சென்னை-92.



'இறை உருவ வழிபாடு, வேள்வி, ஜப ஹோமங்கள் மற்றும் முன்னோர் ஆராதனை ஆகியவற்றை, மேற்கூரை உள்ள இடத்தில் செய்வதே சிறப்பு' என்கிறது தர்ம சாஸ்திரம். முதல் வேள்வியை அறிமுகம் செய்த வேதம், கூரையுடன் அமைந்த இடத்தையே பரிந்துரைத்தது. *(அந்தர்ஹி தோஹி தேவலோகோ...)*

நாமும் கூரையின் கீழ்தானே வாழ்கிறோம்?! வெட்டவெளியிலா வசிக்கிறோம்? எனவே, வீட்டில் கொடுக்கும் திதிக்குத் தனிச்சிறப்பு உண்டு. புண்ணிய நதிகள், புண்ணிய தீர்த்தங்களுக்குச் சென்று அங்கு நீராடி தீர்த்த சிராத்தங்கள் நிகழ்த்தலாம். இதற்கென தனியே நேரம் - காலம் இருப்பதால், அந்த இடங்களில் திதி கொடுப்பது தவறில்லை. ஆனால், வீட்டில் கொடுக்க வேண்டிய திதியை நதி மற்றும் குளக்கரைகளில் கொடுப்பது தவறு. அது வேறு; இது வேறு! அதாவது... ஆடி அமாவாசை, தை அமாவாசை போன்ற விசேஷ நாட்களில் நதி, குளங்களில் நீராடி, அங்கு திதி கொடுப்பதில் தவறு இல்லை.

முன்னோர்களை வழிபட வீட்டைப் பயன்படுத்தலாம். வீடு சிறியது அல்லது பொருளாதார வசதி இல்லாதவர்கள், ஆற்றங்கரையில் திதி கொடுக்கலாம். இருப்பினும் கூடியவரை வீட்டில் திதி கொடுக்க முயற்சியுங்கள். இதனால், அடுத்த தலைமுறையினருக்கும் திதி கொடுக்கும் முறை பரிச்சயமாகும்!

தேரோட்டத்தின்போது வேண்டுதல் எனும் பெயரில் சிலர் பழம், மலர்கள், பிரசாதப் பொருட்கள் போன்றவற்றைத் தேருக்கு முன்பாக வாரி இறைக்கின்றனர். இதில் வழுக்கி விழுந்து விபத்து ஏற்படும் அபாயமும் உள்ளது. மாறாக, இத்தகைய பொருட்களை, ஓரிடத்தில் இருந்தபடி அனைவருக்கும் வழங்கலாமே?

- என்.சீத்தாலட்சுமி, சென்னை-40.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தாங்கள் விரும்பியதைச் செயல்படுத்தும்போதுதான் பக்தர்களின் மனம் நிறைவு பெறுகிறது. பக்தனின் மனப்போக்கு, சூழலையே மறக்கச் செய்யும்.

தேரையே கடவுளாக பாவிப்பவன் பக்தன். சக்கரத்தைத் தொட்டு ஒற்றிக்கொள்வான். சக்கரம் பதிந்த மண்ணையும் நெற்றியில் இட்டுக்கொள்வான். தேர் இழுப்பவர்கள் வழுக்கி விழமாட்டார்கள். சுதாரித்துவிடுவர். அவர்களும் பக்தர்கள்தானே?!

ஆண்டவனை விட்டு விலகிய மனம், எதையும் வேறு விதமாகவே பார்க்கும். வீதியுலாவின்போது, 'ஸ்வாமிக்கு முன்னே எடுத்துச் செல்லப்படும் தீப்பந்தங்கள் மற்றும் வாணவேடிக்கைகளால்கூட ஆபத்து நேருமோ' என்று பயம் ஏற்படலாம். சிதறுகாய் உடைக்கும்போது, அருகில் நிற்பவர்களுக்கு விபத்து நேருமோ என்றும், புண்ணிய நதிகளில் நீராடும்போது, திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்றும் எதிரிடையான எண்ணங்களும் நமக்குள் எழலாம்.

எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக்கொள்வார் என்று நம்பிக்கையுடன் இருங்கள். எந்த பாதிப்பும் நேராது!

அமாவாசையன்று நாள், நட்சத்திரம் சரியில்லை என்றாலும், நல்ல காரியங்களை ஆரம்பிக்கலாம் என்கின்றனர் சிலர். இது சரியா?

- என்.காளிதாஸ், சிதம்பரம்-2.



தவறு. நாள் - நட்சத்திரம் பார்த்துதான் துவங்க வேண்டும். பொதுவாகவே நல்ல காரியங்களைத் துவங்குவதற்கு, அமாவாசையைத் தவிர்க்க வேண்டும்.

'சுப காரியங்களை ஆரம்பிக்கும் நாள் நல்ல நாளாக, சுப வேளையாக (லக்னம்) இருக்க வேண்டும். தாரா பலன் பொருந்த வேண்டும். கூடவே, சந்திரனின் பலமும் (வளர்பிறை) வேண்டும்' என்கிறது சாஸ்திரம். (*ததேவ லக்னம் சுதினம் ததேவ...*) ஆனால், அமாவாசையன்று சந்திர பலம் இருக்காது. சந்திரனுக்கும் நம் மனதுக்கும் தொடர்பு உண்டு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மனம் ஒன்றிச் செயல்பட சந்திர பலம் உதவும். இதை இழப்பது தவறு. தவிர... தாரா பலம், யோகம் மற்றும் கரணம் ஆகியவற்றின் பங்கும் முக்கியம். இவை அனைத்தையும் புறக்கணித்துவிட்டு அமாவாசையன்று செயல்பட்டால், அதற்கு பலன் உண்டு என்பது சரியல்ல.

அப்படி, அமாவாசையில் துவங்கி பலன் பெற்றவர்கள் உண்டு என்று எவரையேனும் உதாரணம் காட்டுவதால், பொய் உண்மையாகிவிடுமா என்ன?

ஒரு பலனுக்குப் பல காரணங்கள் இருக்கலாம். காரணத்தை வைத்து பலனைச் சொல்ல வேண்டும். அதுவே முழு நம்பிக்கையை அளிக்கும். அத்துடன் ஜோதிடச் சான்றும் அவசியம்.

முன்னோர்களை வழிபடும் நாளான அமாவாசையில், அவர்களது வாழ்த்துகளைப் பெற்றுவிட்டுக் காரியத்தைத் துவக்கினால், வெற்றி கிடைக்கும் என நினைப்பது நம்பிக்கை. அதே நேரம்... சாஸ்திரத்தை ஒதுக்கிவிட்டு, ஒருசில அனுபவங்களை மட்டும் முன்னுதாரணமாகக் கொண்டு செயல்படுவது தவறு.

பக்தி என்பது, உடல் சம்பந்தப்பட்டதா... மனம் சம்பந்தப்பட்டதா? அலகு குத்திக்கொள்வது, தீ மிதிப்பது, முடி காணிக்கை... ஆகியவை உடல் சம்பந்தப்பட்டதுதானே?

- எஸ்.கோபாலன், சென்னை-61.

மனதில் ஆண்டவனை நினைத்து, அதில் மூழ்குவதே பக்தி. இறைவனை அடைவதில் மனமானது அலாதி ஆனந்தத்தை அடையும். ஆனால், மனதில் இருக்கும் இறைப்பற்று உடலுறுப்புகள் வாயிலாகவே வெளிப்படும். கைகள் புஷ்பத்தை அள்ளி அர்ச்சித்து, மனதின் விருப்பத்தை பூர்த்தி செய்கின்றன. கால்கள் ஆலயத்துக்கு அழைத்துச் செல்கின்றன. ஆக, மனதின் விருப்பத்தையும் அதை நிறைவேற்றுவதற்கான ஆணையையும் உடல் உறுப்புகளே நிறைவேற்றுகின்றன.

'உடல், பொருள், ஆவி - அனைத்தும் உனக்கே அர்ப்பணம்' என்கிறோமே?! தீ மிதித்தலும் முடி இறக்குதலும் மன எண்ணத்தையே புரிய வைக்கின்றன. கடவுள் மீதான பக்தனது விருப்பங்கள் ஒருபோதும் வெறுக்கத் தக்கவை ஆகாது!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வெளியில் கிளம்பும்போது, 'எங்கே போகிறாய்?' எனக் கேட்பது அபசகுனமா?

- ஜி.ஜெயராமன், கூந்தலூர்.

குறிக்கோளுடன் செயல்படத் துவங்கும் வேளையில், எதிரிடையான கேள்விகள் மனதை பாதிக்கும். இந்த பாதிப்பு, செயலில் சுணக்கத்தை ஏற்படுத்தி, வெற்றியை நழுவச் செய்யும். ஆகவே, எதிரிடையான விஷயத்தை காதில் கேட்பது அபசகுனம்தான்!

தவிர, மனம் சம்பந்தப்பட்டது சகுனம்! நல்ல காரியம் செய்யக் கிளம்பும் வேளையில், எதிரே விறகு கட்டையும் மண்ணெண்ணெயும் ஏந்தியபடி ஒருவர் தென்பட்டால்... சம்பந்தப்பட்டவரின் மனம், எதிரிடையான விளைவுகளை சிந்திக்கும்; இதனால் கலக்கமுற்று, நற்காரியத்தில் ஈடுபட மறுக்கும். திடமான மனம் எந்தச் சொல்லையும் தாங்கிக்கொள்ளும். பலவீனமான மனம் பாதிப்புக்கு உள்ளாகும்!

'ச்ரவண விரதம்' என்றால் என்ன? இந்த விரதத்தை அனுஷ்டிப்பது எப்படி?

- வி.கீதா.

திருவோணம் நட்சத்திரத்தை, 'ச்ரவணம்' என்பர். இதன் தேவதை 'விஷ்ணு' என்கிறது வேதம். *(ச்ரோணா நட்சத்திரம் விஷ்ணுர் தேவதா)* எனவே, விஷ்ணுவை வழிபடுவது சிறப்பு. ஆவணி மாதம் வளர்பிறை துவாதசியுடன் வரும் திருவோணம் விசேஷமானது! இந்த நாளை, 'ச்ரவண துவாதசி' என்றும் அழைப்பர்.

இந்த நன்னாளில் உண்ணா நோன்பு இருந்து வாசுதேவனை வழிபட்டால், நமக்குள் இருக்கும் தவறுகள் முழுவதும் நம்மை விட்டு அகன்றுவிடும் *(கருட புராணம் - 141-வது அத்தியாயம்).* இந்த வழிபாட்டு முறையை கருட புராணம் விவரித்துள்ளது. எனவே, எளிய முறையைக் கொண்ட ச்ரவண விரதத்தை அனுஷ்டித்து, வாசுதேவனை வழிபட்டுப் பயன்பெறுங்கள்.

ஆனி மாதத்தில் வேறு வீட்டுக்குக் குடி புகுவது தவறாமே? இதற்கு பரிகாரம் ஏதேனும் உள்ளதா?

- எஸ்.சேதுபாண்டியன்.

'இந்த வீடு தற்காலிகம்தான். பின்னர் வேறு வீட்டுக்குக் குடி போய்விடுவோம்' என்று மாறுகிறீர்களா? எனில், ஆனி மாதத்தில் தாராளமாகக் குடிபோகலாம். 'இல்லையில்லை... சொந்த வீடு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



கட்டி இருக்கிறோம். அதில் குடிபுகப் போகிறோம்' என்றால்... ஆனி மாதத்தைத் தவிர்க்கப் பாருங்கள்.

கிரகப்பிரவேசம் எனப்படும் புதுமனைப் புகுவிழா நடத்தி, சொந்த வீட்டில் குடியிருக்க எண்ணுபவர்கள் மாதம், நாள், திதி மற்றும் நேரம் ஆகியவற்றைக் கணக்கிட்டு குடிபுக வேண்டும். அதுவே சிறப்பு தரும்; வளமையைப் பெருக்கும்.

'வேறு ஊருக்கு டிரான்ஸ்ஃபர். எனவே, அந்த ஊரில் வீடு பார்த்துக் குடியேற வேண்டும்' எனும் நிலையில், பொருளாதாரச் சூழலைக் கருத்தில் கொண்டு ஆனியைக் கவனிக்கத் தேவை இல்லை.

மந்திரத்தில் உள்ள 'ஸ்ரீம்' எனும் சொல்லின் சிறப்பு என்ன?

- கோவை கிரிதர்.

ஸ்ரீ (ச்ரீ) என்றால், 'லட்சுமிதேவி' என்று பொருள். தவிர, களை (பொலிவு), செல்வம், வில்வம், புகழ், தாமரைப்பூ... இப்படி நிறைய அர்த்தங்களும் உண்டு. அழியாப் புகழ்பெற்ற மறையின் 'களை'யை, 'ஸ்ரீ' என்று குறிப்பிடுகிறது வேதம். தேவர்கள், குருமார்கள், பெரியோர்கள், கோயிலில் உறைந்திருக்கும் இறை மூர்த்திகள் ஆகியோரது பெயருக்கு முன்னால், 'ஸ்ரீ' சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது தர்ம சாஸ்திரம்.

எதனுடன் 'ஸ்ரீ' சேருகிறதோ... அதனை, அதைச் சார்ந்தவற்றை செழிக்கச் செய்யும் வல்லமை இதற்கு உண்டு. ஸ்ரீமான், ஸ்ரீமதி என்றும், தமிழில் திரு, திருமதி என்றும் பெயருக்கு முன்னே சேர்ப்பதன் நோக்கமும் இதுவே! செல்வம் என்பதில் காசு-பணம் மட்டுமின்றி, வாழ்க்கைக்கான சகல வளங்களும் அடங்கும்! 'ஸ்ரீ'யுடன் சேர்ந்தவை, அனைத்து வளங்களும் பெற்றுச் செழிக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

புராண காலத்திலும் விவாகரத்து இருந்ததா?

'தினமும் அதிதி ஒருவருக்கு போஜனம் அளித்த பிறகே, நாம் சாப்பிட வேண்டும்' என்று காஞ்சி மகாபெரியவாள் உட்பட பலரும் கூறியுள்ளனர். இன்றையச் சூழலில், இதை செயல்படுத்துவது சாத்தியமா?

– ரமேஷ், பெங்களூரு.

'அதிதிக்கு அன்னம் அளிக்க வேண்டும்' என்று பரிந்துரைக்கும் வேதம், இன்னும் ஒருபடி மேலே சென்று, 'பிறருக்கு உணவு அளிக்காமல், தான் மட்டும் உண்பவன் பாபத்தை உட்கொள்கிறான்' என்றும் எச்சரிக்கிறது. *(கேவலாகோபவதி கேவலாதி)*

அதிதி உபசாரம் என்பது, நம் பாரதத்தின் பண்பாடு. இயற்கை வளங்கள் அனைத்தும் அத்தனை உயிர்களுக்கும் உடைமை. நமக்குக் கிடைக்கும் உணவிலும் பிறரது பங்கு உண்டு. ஆகவே, பிறருக்கு... அதாவது, அதிதிக்கு உணவளிக்க வேண்டும் என்பது வேதத்தின் அறிவுரை.

இன்றைய நாகரிக வளர்ச்சி, அதிதியின் வருகைக்கு முட்டுக்கட்டை போடவில்லை. உணவு உண்டு என்பது தெரிந்தால், அதிதிகள் நிறைய கிடைப்பார்கள்! அன்னதானம் நடைபெறும் இடங்களில் அதிதிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தர்மஸ்தலா போன்ற இடங்களில், அதிதிகளுக்கு பஞ்சம் இல்லை. (*போஜன ஸ்யாதரோ ரஸ:*).

ஒருவேளை, அதிதி கிடைக்காத போது... அதற்கும் ஒரு வழி சொல்கிறது தர்ம சாஸ்திரம். அரிசியை உலையில் சேர்ப்பதற்கு முன், சிறிதளவு எடுத்து அடுப்பில் உள்ள நெருப்பில் சேர்த்து விடுங்கள். அது, தேவர்களின் பிரதிநிதியான அக்னிக்கு அளித்ததாக ஆகிவிடும். சாதம் வடித்ததும்... சிறிதளவு அன்னத்தை காக்கைக்கு அளியுங்கள். மற்ற உயிரினங்களின் பிரதிநிதியாகக் கருதி, காகத்துக்கு அன்னம் இடுவதால் மிகுந்த பலன் உண்டு.

அடுப்பும் இல்லை; உலை நீரும் இல்லை; காகமும் வராது.... இப்படியோர் இக்கட்டான சூழலில், 'கடமையைச் செயல்படுத்த முடியாமல், சூழல் என்னைத் தடுக்கிறது' என்று மனம் உருக கடவுளை வணங்குங்கள்; அதிதி போஜனம் செய்வித்த பலன் கிடைத்துவிடும்.

திருமண பந்தத்தை சட்டத்தால் (விவாகரத்து) பிரிக்கின்றனர். புராண காலத்திலும் விவாகரத்து இருந்ததா?

- கே.வி.நாகராஜ சர்மா,
சென்னை-39.

விவாகத்தை ரத்து செய்வது சட்டமாகவே வந்துவிட்ட பிறகு, அதை விமர்சிப்பது அழகல்ல. இருப்பினும், தங்களது சந்தேகத்தைப் போக்க சில வார்த்தைகள்...

'திருமண பந்தம் பிரிக்க முடியாத ஒன்று' என்பதே தர்ம சாஸ்திரத்தின் கணிப்பு.

தர்ம சாஸ்திரத்தின் கண்ணோட்டம் வேறு; சமூகக் கண்ணோட்டம் வேறு. அந்தக் காலத்தில் விவாகரத்து என்பதே இல்லை. ஏனெனில், குலம்-கோத்திரம், சொந்த-பந்தம், பரம்பரை, பண்பு ஆகியவற்றுக்கு தீங்கிழைப்பதை தர்ம சாஸ்திரம் ஏற்கவில்லை. வீடு-வாகனம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முதலான நுகர்பொருட்களைப் போல், ஆண்-பெண் இணைப்பைப் பார்க்கவில்லை தர்ம சாஸ்திரம்!

ஆதிகாலத்திலிருந்து தொடரும் அர்த்தமுள்ள மரபுகளை வரவேற்கும் தர்ம சாஸ்திரம், பிறப்புரிமைக்கும் மதிப்பு அளிக்கும். ஆனால் சமூகக் கண்ணோட்டம், மக்களது விருப்பத்துக்கே முன்னுரிமை அளிக்கிறது.

இன்னொரு விஷயம்... குழந்தையுள்ள பெண், விவாகரத்து பெற்று வேறொரு புதிய ஆடவனை கணவனாக ஏற்று வாழும் நிலையில்... முதல் கணவன் இறந்தால், அவள் விதவையாகி விடுகிறாள். அவனது இறுதிச் சடங்கை அந்தக் குழந்தை செய்ய வேண்டியிருக்கும். அதே நேரம்... இரண்டாவது கணவன் இறந்தால், கணவனை இழந்தவளாக அவள் கருதப்பட மாட்டாள்!

தர்ம சாஸ்திரம்... விவாகரத்து பெற்று, புதிய இணையுடன் சேர்ந்து வாழ்பவர்களை, மாற்றுப் புருஷன் அல்லது மாற்றுப் பெண்ணுடன் குடும்பம் நடத்துபவர்களாகவே பார்க்கும். விவாகரத்தில் கிடைக்கும் நன்மையைவிட தீமையே அதிகம் என்பது அனுபவஸ்தர்களது கருத்து.

விவாகரத்து பெற்றவர்களின் குழந்தைகள், பெற்றோர் இருந்தும் அநாந்தகளாக நிற்கும் அவலம் வேதனை அளிக்கிறது!

சிந்தனைகளின் மாறுபாடு சட்டத்திலும் இருக்கும். பழைய சிந்தனையில் ஊறிய மனம், புதிய சிந்தனையை வரவேற்காது. ஆனாலும், என்ன செய்ய... உலகில் மாறுபாடுகள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கும்!

மலேஷியாவில் வசிப்பவள் நான். இங்குள்ள பெருமாள் கோயிலில், இரவு வேளையில் அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. இது சரியா?

- உமா முரளி, மலேஷியா.

ஆகமம், தர்ம சாஸ்திரம், ஸ்தல புராணம், வரலாற்று நிகழ்வுகள், சம்பிரதாயம், மரபு ஆகியவற்றின் அடிப்படையில் இறைவனுக்கான பணிவிடைகளில் மாறுதல் இருக்கலாம். குறிப்பிட்ட சில கோயில்களில் இருக்கும் மரத்தாலான இறை உருவத்துக்கு அபிஷேகம் இருக்காது. இன்னும் சில கோயில்களில் அபிஷேகத்துக்கு முன்னுரிமை அளிக்காமல், விசேஷ நாட்களில் மட்டும் அதை (அபிஷேகம்) நடைமுறைப்படுத்துவர். காலையில் மட்டும் அபிஷேகம் நடைபெறும் கோயில்களும் உண்டு.

விதிகளுக்கு மாறாக, பக்தர்களின் விருப்பப்படி அபிஷேக-ஆராதனைகள் நடைபெறுவதும் உண்டு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சிந்தனை மாற்றத்தால், வியாபார நிறுவனங்களாகிவிட்டன சில கோயில்கள்! உண்டியல், விசேஷ பூஜைகள், சிறப்பு ஆராதனைகள் என்று பொருளாதாரத்தைப் பெருக்கிக்கொண்டு, பலருக்கு வேலைவாய்ப்பும் அளிக்கின்றன. வியாபாரமாகி விட்டால், அதற்குத் தகுந்தாற்போல் அலுவல்கள் மாறுவதும் இயல்பு. ஆக, இரவில் அபிஷேகம் நடப்பதில் தவறு இல்லை!

தெய்வத்தின் தீர்ப்பு, நீதிபதியின் தீர்ப்பு... இரண்டுக்கும் என்ன வேறுபாடு?

- ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி.



நீதிபதியின் தீர்ப்பு அரசியல் சாசனத்துக்குக் கட்டுப்பட்டது. சில தருணங்களில்... வக்கீல்களின் வாதாடும் திறன், சாட்சிகளின் சாமர்த்தியம், பொய்யான வாக்குமூலம் ஆகியன நீதிபதிகளை ஏமாற்றிவிடக்கூடும்.

தெய்வத்தின் தீர்ப்பு அப்படி இல்லை! எவராலும் இறைவனது தீர்ப்பை மாற்றி அமைக்க முடியாது. குற்றவாளியின் குணமும் அவனது மனநிலையும் இறைவனுக்கு நன்கு தெரியும். அரசன் முதல் ஆண்டி வரை எவராக இருப்பினும் தயவு தாட்சண்யமின்றி தண்டனை கிடைக்கும். மேல் முறையீடுகளும் கிடையாது! அது மட்டுமா..? இறைவனின் கோர்ட்டில் நிரபராதிகள் ஒருபோதும் தண்டிக்கப்படுவதில்லை.

நல்லோரைக் காப்பதும் பொல்லாதவரை ஒடுக்குவதும் இறைவனது வேலை *(துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம்)* தனது வேலையை செவ்வனே செய்பவர் கடவுள். *'பரித்ராணாய சாதூனாம் விநாசாய சதுஷ்க்ருதாம்'* என்பதே கடவுளின் வாக்குறுதி!

ஆலயங்களில் யானைகளை வளர்ப்பதற்கு விசேஷ காரணங்கள் ஏதும் உண்டா?

- எஸ்.ப்ரியதர்ஷினி, திருநெல்வேலி-7.



ஆலயம் என்பது, உயிரினங்களைப் பராமரிக்கும் இடம் அல்ல! ஆனால், இறை அபிஷேகத்துக்கு தட்டுப்பாடின்றி பால் வேண்டும் என்பதற்காக பசுக்களையும்; விழாக் காலங்களில் இறை பவனிக்குத் தேவைப்படுமே என்று யானைகளையும் பராமரிப்பது உண்டு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



உற்ஸவ - விழாக்களுக்குத் தட்டுப்பாடின்றி கிடைக்கும் பட்சத்தில், யானைகளைக் கோயிலில் வைத்து வளர்க்கத் தேவையில்லை. கோயில் நிர்வாகத்தில் தேவையற்ற சுமையைத் திணிக்காமல், தேவைப்படும் தருணங்களில் யானையை வரவழைத்துக் கொள்வதே உத்தமம்.

வீட்டில் உள்ள கிணற்றை மூடிய பிறகு, அங்கு குடியிருந்தால் பாதிப்பு ஏற்படும் என்கின்றனரே... இது உண்மையா?

- பெ.ரா.லெக்ஷ்மி நாராயணன், பெரியகுளம்.

சில இடங்களில் ஆறடி தோண்டினாலே நீர் கிடைக்கும். சில நிலங்களில், பல அடிகள் தோண்ட வேண்டியிருக்கும். பருவம் தவறாமல் மழை பொழிந்தால், எல்லா இடங்களிலும் நிலத்தடி நீர் குறையாமல் இருக்கும்.

பாலைவனத்திலேயே நிலத்தடி நீர் உண்டு எனும்போது, நாம் வீடு கட்டியிருக்கும் நிலத்தில் இல்லாமல் இருக்குமா என்ன? கிணற்றை மூடிவிட்டால்... அதில் இருக்கும் நீரும் நிலத்தடி நீராகிவிடும். ஆகவே, கிணற்றை மூடிய இடத்தில்கூட வீடு கட்டிக் குடியிருக்கலாம். பாதிப்பு ஏதுமில்லை. தர்ம சாஸ்திரம் இதை எதிர்க்கவில்லை.

ஆனால், கிணறு முழுமையாக மூடப்பட்டிருக்க வேண்டும். ஒருவேளை... கிணற்றை மூடுவதற்காக கொட்டப்படும் மண், சரிவர இறுகாமல் இருந்தால் ஆபத்து. இடைவெளி வழியே மழைநீர் இறங்கி, மண்ணின் இறுக்கம் மேலும் தளர்ந்து, கட்டடத்துக்கு பாதிப்பு நேரலாம். மற்றபடி, கிணறு மூடப்பட்ட வீட்டில் குடியிருப்பதாலோ, அந்த இடத்தில் வீடு கட்டுவதாலோ எந்த பாதிப்பும் இல்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தர்ப்பையால் ஆன கூர்ச்சம் - பவித்ரம் அணிந்து யக்ஞங்கள் செய்கிறோமே... இதன் சிறப்பு என்ன?

– வி.ராமகிருஷ்ணன்.

தர்ம சாஸ்திரத்தை செயல்படுத்தும்போது, கையில் தர்ப்பை (பவித்ரம்) அணிய வேண்டும். 'பவித்ரம் என்றால் தூய்மை! இயல்பாகவே தர்ப்பை தூய்மையானது. ஆகவே, பவித்ரம் என்பதே தர்ப்பையின் பெயராக விளங்குகிறது' என்கிறது வேதம். *(பவித்ரம் வை தர்பா:)*

ஜபம் மற்றும் தானம் செய்யும்போது தர்ப்பபாணியாக இருக்க வேண்டும். 'தாமரை இலையில் தண்ணீர் எப்படி ஒட்டாமல் இருக்கிறதோ, அதேபோல் தர்ப்பை அணிந்திருப்பவனிடம் பாவம் ஒட்டாது' என்கிறது தர்ம சாஸ்திரம்.

(லிப்யதே நஸபாபேன பத்ம பத்ர மிவாம்பஸா) ஜபம் மற்றும் வேள்வியை செய்யவிடாமல் தடுக்கும் கண்ணுக்குப் புலப்படாத அரக்கர்கள், நம் கையில் உள்ள தர்ப்பையைப் பார்த்ததும் விலகி ஓடுவர். முன்னோர் ஆராதனையில் – அரக்கர்களை விரட்ட, விருந்து படைக்கும் இடத்தை தர்ப்பையால் துடைப்பது உண்டு.

சங்கரனுக்கு சூலம், விஷ்ணுவுக்கு சக்கரம்... இதுபோல், சாஸ்திரம் பரிந்துரைக்கும் கடமைகளில் ஈடுபடுபவனுக்கான ஆயுதம் 'பவித்ரம்'. பூதம், பிசாசு, பிரம்மரக்ஷஸ் ஆகியவை விரலில் தர்ப்பையைப் பார்த்ததும் மிரண்டு ஓடிவிடுமாம்! ஆகவே, தூய்மை வேண்டியும் இடையூறுகளை அகற்றவும் தர்ப்பை அணிய வேண்டும். தர்ப்பை அணியும் விரலை, 'பவித்ர விரல்' என்கிறோம்.

பூமியின் ஆகர்ஷண சக்தியைத் தடுக்க தர்ப்பையால் ஆன ஆசனத்தில் அமருவது உண்டு. ஆகாயத்தில் இருக்கும் இடையூறைத் தடுக்க விரலில் தர்ப்பை வேண்டும். *(தர்பேஷ்ு ஆஸுன:)* கடமையைச் செய்வதற்கான பொருட்களைத் தூய்மைப்படுத்தவும் தர்ப்பையைப் பயன்படுத்துவர். அக்னி பரிசுத்தமானது என்றாலும் அதன் தூய்மையை வலுப்படுத்த தர்ப்பை உதவும்.

தேவதைகளின் இருக்கையான கும்பத்தில் கூர்ச்சம் இருக்கும். பித்ருக்களுக்கு அளிக்கும் அர்க்யமும் கூர்ச்சத்துடன் இணைந்திருக்கும். தர்ப்பையுடன் சேரும்போது பொருளின் தூய்மை மேம்படும். மின்சாரம் பாயாத பொருட்களில் தர்ப்பையும் ஒன்று. ஆனால், மின்சாரத்தைவிட பலமடங்கு செயல்திறன் கொண்டது.

ஸ்ரீராமன் வீசிய தர்ப்பை, காகாசுரனை ஓட ஓட விரட்டிய கதை நாம் அறிந்ததே! 'தர்ப்பையில் சிந்திய நெய்யை நக்கியது பாம்பு. அதன் நாவை இரண்டாகப் பிளந்து தண்டனை அளித்தது தர்ப்பை...' என்கிறது புராணம். 'தர்ப்பை வளர்ந்த இடத்தில் நல்ல நீர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கிடைக்கும்; கிணறு தோண்ட தகுந்த இடமாக அமையும்' என்கிறார் வராஹமிஹிரர்.

மொத்தத்தில் தர்ப்பை... இயற்கையின் அன்பளிப்பு! அதன் பெருமையை அறிய தர்ம சாஸ்திர நூல்களைப் படியுங்கள்; அசந்து போவீர்கள்!

வீட்டுக்குள் பருந்து நுழைவதுபோல் கனவு கண்டேன். பறவைகள் - விலங்குகளைக் கனவில் காண்பது நல்லதா?

- எம்.எல்.ஏ.நாராயணன், மயிலாடுதுறை-2.

எங்கள் வீட்டுக்குள் ஒன்பது புலிகள் நுழைவதாக கனவு கண்டேன். குறிப்பிட்ட எண்ணிக்கையில் புலிகளை கனவில் காண்பது, எதை குறிக்கும்? இதனால் ஏற்படும் பலன்கள் என்ன?

- ராணி பொன்னுசாமி, சென்னை-32.

கனவு என்பது நிஜம் அல்ல; மின்னல் போல மனதில் தோன்றி மறைவது!

'உடல்நலம் குன்றியதற்கான அறிகுறியே கனவு' என்பது ஆயுர்வேதத்தின் கருத்து. 'தளர்ச்சியுற்ற மனதின் வெளிப்பாடே கனவு' என்கிறது மனோதத்துவம்.

'வருங்கால விளைவுகளைச் சுட்டிக்காட்டுவதே கனவு' என்கிறது தர்ம சாஸ்திரம் ('சொப்பன சாஸ்திரம்' என்ற தலைப்பில் விளக்கியுள்ளது).

ஜோதிடம், 'கர்மவினைச் செயல்பாட்டின் ஆரம்பம்' என்று கனவு பற்றி சொல்கிறது. இல்லாத ஒன்று, இருப்பதை தோற்றி வைக்காது; அசத்தில் இருந்து சத்து முளைக்காது; நிழல் நிஜமாகாது!

விடிந்ததும் நீராடி இறைவனை வணங்குங்கள். எதிரிடையான பலன்கள் விலகும். கனவை நிஜமாக எண்ணி, அதையே அடிக்கடி அசை போட்டுக்கொண்டிருந்தால், சிந்தனை திசை மாறி இன்னல்களைச் சந்திக்க நேரும்.

உடல் ஓய்வெடுக்கும்போது மனமும் உறங்க வேண்டும். அப்படி மனம் உறங்கினால், கனவு வராது. இதற்கான வழியைத் தேடுங்கள்; நிம்மதி நிச்சயம்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எந்தெந்த நாட்களில் முகச் சவரம் கூடாது?

சிதம்பரம் ஸ்ரீநடராஜருக்கு ஏழு கால பூஜைகளாமே? அவை என்னென்ன? பூஜை காலத்தை வரையறுப்பது எப்படி?

- என்.சீதாலட்சுமி, சென்னை-40.

கோயில்களில் காலை, உச்சி, அந்தி, அர்த்தஜாமம் என்று நான்கு கால பூஜைகள் நடைபெறும். காலை பூஜையுடன் நிறுத்திக்கொள்ளும் (ஒரு வேளை மட்டும்) கோயில்களும் உண்டு!

ஒரு நாளைக்கு... பகலில் நான்கு; இரவில் நான்கு என எட்டு யாமங்கள் (ஒரு யாமம் = மூன்று மணி நேரம்). பகல் நான்கு யாமங்களை வைத்து உதயாஸ்தமன பூஜை வழிபாடுகள் செய்வர். சிவராத்திரி போன்ற சிறப்பு நாளில், இரவு நான்கு யாமங்களில் நான்கு கால பூஜைகள் நடைபெறும்.

ரிஷிபஞ்சமி, பிரதோஷம் முதலான விரத நாட்களில் நான்கு கால பூஜைகள் நிகழும்.

ஆகமம் மற்றும் சம்பிரதாயத்தை இணைத்து கோயில் வழிபாட்டுக் காலங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. இவற்றில் பூஜா கால எண்ணிக்கையில் மாறுபாடுகள் கொண்ட கோயில்களும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சில உண்டு. அவற்றில் சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோயிலும் ஒன்று. சில கோயில்கள் பொது விதிக்கு மாறுபட்டு, தனிச் சம்பிரதாயத்துடன் திகழ்ந்தாலும் அவற்றையும் ஏற்கலாம்.

சூரிய உதயம் முதல் அஸ்தமனம் வரையிலான காலத்தை... ப்ராத: காலம் (காலை), ஸங்கவம் (முற்பகல்), மத்தியானம் (மதியம்), அபரான்னம் (பிற்பகல்), சாயம் (சாயங்காலம்) என்று ஐந்தாகப் பிரித்து வைத்தும் வழிபாடுகள் செய்வர்.

மார்கழி மாதங்களில் அதிகாலையில் விசேஷ பூஜைகள் நிகழும். அன்னாபிஷேகம், ஆருத்ரா தரிசனம், வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி உள்ளிட்ட நாட்களில் இரவு வழிபாடுகளுக்கு சிறப்பு உண்டு. ராம நவமி நாளில் உச்சி கால வழிபாடு நிகழும். பண்டிகையின் வேளை, ஆகமத்தின் பரிந்துரை- இவற்றையொட்டியே பூஜைக்கான காலம் வரையறுக்கப்படுகின்றன.

எந்தெந்த நாட்களில் முகச் சவரம் செய்யக் கூடாது?

- த.சத்தியநாராயணன், அயன்புரம்.

முகச் சவரம் என்பது வெளிநாட்டவரிடம் இருந்து பெற்றுக் கொண்டது. தர்ம சாஸ்திரத்தில் இதுகுறித்து இடம்பெற வாய்ப்பு இல்லை. சிகை அலங்காரத்துடன் இணைந்த முகச் சவரத்தை ஏற்றுக்கொள்ளும். *(அத ச்மச்ருணீ அதகேசான்)*

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



வெள்ளைக்காரன் நம் நாட்டை ஆட்சி செய்த காலத்தில் தினமும் முகச் சவரம் உண்டு. அப்போதெல்லாம் சவரத்துக்குக் கால-நேரம் பார்க்கவில்லை. திருமணத்தின்போது, காலையில் எழுந்ததும் முகச் சவரம் செய்து கொள்வான் மணமகன்!

காபி அருந்துவது, சந்தியாவந்தனம் செய்வதுபோல், முகச் சவரம் என்பதை நித்ய கர்மாவாகவே ஏற்றுக்கொண்டு விட்டோம். இதில், சாஸ்திரத்தை அணுகுவது அழகல்ல!

தர்ம சாஸ்திரம் 'முழுச் சவரம்' பற்றிக் குறிப்பிடுகிறதே தவிர, முகச் சவரம் குறித்துக் கூறவில்லை. முதலில் மீசை-தாடியையும் பிறகு, தலைமுடியையும் அகற்றலாம் என்று சவரத்தின் நடைமுறையைச் சொல்கிறது அது. முதலில் தலைமுடி; பிறகு மீசை- தாடியை சவரம் செய்யலாம். வேதம் அதை ஏற்கும் என்றும் எதிர்வாதம் உண்டு.

தர்ம சாஸ்திரத்தில் முகச் சவரம் வராது; முழுச் சவரம் பற்றிதான் இருக்கும். கேள்வி கேட்டிருந்த அன்பரோ முகச் சவரத்துக்கான நல்ல நாட்களை அறிய விரும்பினார். இதில், தர்ம சாஸ்திரத்துக்கு உடன்பாடில்லை.

முனிவர்கள் ஜடாமுடியோடும், தாடி-மீசையோடும் இருப்பார்கள். துறவிகள் முழுச் சவரம் செய்து காட்சி தருவார்கள். இறை உருவங்களின் சிகை அலங்காரமும், நமது சிகை அலங்காரமும் முற்றிலும் மாறுபட்டது. ஈமச்சடங்கில் ஈடுபட்டவன் முழுச் சவரம் ஏற்பான். தண்டனை அளிக்கப்பட்டவனும் முழுச் சவரம் செய்யப்படுவான். மருத்துவர்களுக்கு முழுச் சவரத்துக்கு விதிவிலக்கு உண்டு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சுகாதாரத்துடன் அணுக வேண்டியவனுக்கு அது வேண்டும். தவிர்க்க முடியாத சில நேரங்களிலும் ஆபத்து காலத்திலும் ஒன்றை விட்டு ஒன்றை ஏற்க வேண்டி வரும். வேத காலத்தில் அரசர்களும் வணிகர்களும் முழுச் சவரத்தைப் பின்பற்றினர்! நாகரிக வளர்ச்சியில் ஒன்றை விட்டு ஒன்றை ஏற்றுக்கொண்டு விட்டோம். வெள்ளையர்களைப் பின்பற்றி முகச் சவரத்தை விருப்பத்துடன் கடைப்பிடிக்க ஆரம்பித்துவிட்டோம். அதை சம்பிரதாயமாகப் பின்பற்றலாம்.

வாசகர் ஒருவர், 'தர்ம சாஸ்திரத்தில் இல்லாவிட்டாலும் நம் முன்னோர் கூறிய நல்லவற்றைப் பின்பற்றுவதில் தவறில்லை என்று நினைக்கிறேன்' என எழுதி இருக்கிறார்.

மாறிக்கொண்டே இருக்கும் நமது விருப்பங்கள் அத்தனையையும் தர்ம சாஸ்திரம் ஏற்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை. 'முழு சுதந்திரம் இருக்கும் நமக்கு அதை மாற்றவும் உரிமை உண்டு' என்ற எண்ணத்தில், நமது விருப்பங்களை சட்டமாக்க முயன்றால், வருங்கால சந்ததியினருக்கு முழுமையான- உண்மையான தர்ம சாஸ்திரம் போய்ச் சேராது! மேலும், நட்சத்திரம், கிழமை, திதி ஆகியவற்றைப் பார்த்து முழுச் சவரம் செய்ய வேண்டும். அதன் ஒரு பகுதியை மட்டும் ஏற்பது (அதாவது சனி, செவ்வாய், அமாவாசை கிருத்திகை ஆகியவற்றை) முழுப் பலன் அளிக்காது. சாஸ்திரத்தை பின்பற்ற வேண்டும் என்று ஆவல் இருந்தால், முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

திருவிளையாடல்கள் நிகழ்த்துவதை கடவுள் குறைத்துக் கொண்டு விட்டாரே, ஏன்?

- கே.பரத்குமார், சென்னை-20.

சத்யம், தர்மம், நியாயம், பண்பு - இவற்றை கடைப்பிடித்துப் பழக்கப்பட்ட அன்றைய உலகில், அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தென்படும் சில தவறுகளை சரி செய்வதற்கு, இதுவரை கடவுள் நிகழ்த்திய திருவிளையாடல்கள் போதுமானவை. ஆனால், அறத்தை விட்டு விலகி அவல நிலையை சந்திக்கும் இன்றைய சமுதாயத்துக்கு அவரது திருவிளையாடல் போதாது. அக்கிரமம் உச்ச கட்டத்தை அடையும்போது, கல்கியாகத் தோன்றி சீர்திருத்தம் செய்வார்; பொறுத்திருங்கள்.

வீட்டுக்கு வர்ணம் தீட்டுவது, தண்ணீர் குழாயை சீர் செய்வது, கதவுகளை சரி செய்வது போன்ற வேலைகளை உரிய வேலையாட்களை அணுகி செய்து முடிப்போம். ஆனால், ஒட்டுமொத்த வீடே பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் இருந்தால்... அந்த வீட்டை இடித்துவிட்டு புதிதாக வீடு கட்ட இன்ஜினீயரை அணுகுவோம் அல்லவா! அதுபோல், உலகம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஒட்டுமொத்தமாக சீரழியும் வேளையில், கல்கி வருவார்; அருள் புரிவார்.

மடம் போன்ற இடங்களில் நடைபெறும் ஸ்ரீசத்யநாராயண பூஜையின்போது, அங்கு தரப்படும் கலச தீர்த்தத்தைக் குடும்பத்தாருக்கு வழங்கிய பிறகு, நமது வீட்டிலும் தெளிக்கலாமா?

- உமா மோகன்தாஸ், திண்டுக்கல்.



தாராளமாகத் தெளிக்கலாம். ஆனால், ஸ்ரீசத்யநாராயண பூஜையை வீட்டில் செய்வதே சிறப்பு. பூஜை நடைபெற்ற வீட்டில் தீர்த்தம் தெளிப்பதே பொருந்தும்.

பூஜை ஓர் இடம்; தெளிப்பது ஓர் இடம் என்பது சரியல்ல. வீட்டிலேயே செயல்படுத்தும் தகுதியை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். சந்தர்ப்ப சூழ்நிலையால் பூஜையை மடத்தில் செய்வதைவிட, சந்தர்ப்பம் வாய்க்கும்போது வீட்டிலேயே செய்யலாமே? பூஜையை வீட்டில் செய்வதால், வளம் பெருகும்; ஐஸ்வர்யம் செழிக்கும்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஒரு கோயிலில், கருவறையில் இருக்கும் மூலவர் (அம்மன்) விக்கிரகம் சிதிலம் அடைந்துள்ளது. அதற்கு பதிலாக பஞ்சலோக விக்கிரகத்தை வைத்து பூஜிக்கின்றனர். இது சரியா?

- கே.எஸ்.சம்பத்குமார், பெங்களூரு-21.

சிலை பின்னம் அடைந்திருந்தால்... அந்தக் குறையை அகற்றி கும்பாபிஷேகம் செய்ய வேண்டும்.

பஞ்சலோக விக்கிரகத்திலும் சாந்நித்தியம் உண்டு. எனவே, கருவறையில் வைத்து பூஜிப்பதில் தவறில்லை. ஆனால், பின்னம் அடைந்த மூலவர் விக்கிரகத்தை அப்படியே விட்டுவிட்டு, பஞ்சலோக விக்கிரகத்துக்கு பூஜையைத் தொடர்வது சரியல்ல.

பாலாலயம் வைத்து, சிதைந்த சிலையை சரி செய்வதோடு, கும்பாபிஷேகம் செய்து சாந்நித்தியத்தை மீண்டும் இருத்த வேண்டும். அதுவரை, பஞ்சலோக விக்கிரகத்துக்கு பூஜை செய்யலாம். சிலையை மாற்றுவதற்காக வருஷக்கணக்கில் காலம் கடத்தக்கூடாது. சிவாச்சாரியரை அணுகி, அவரது பரிந்துரைப்படி செயல்பட வேண்டும்; நன்மை உண்டு.

எப்போதும் யோகத்தில் இருப்பவர் சிவபெருமான். அவர், மன்மதனையே எரித்தவர் என்கிறது புராணம். அப்படியிருக்க, சிற்சில புராணச் சம்பவங்களில் சாதாரண மனிதரைப் போன்ற அவரது செயல்பாடுகளை ஏற்க முடியவில்லையே! மனதைக் கட்டுப்படுத்த முடியாதவரா ஈசன்?

- வி.எல்.ஐயர், மும்பை-55.

கதாபாத்திரத்தை ஏற்று நடிப்பவர்கள், தனது சொந்த இயல்பை வெளிப்படுத்த மாட்டார்கள். நாடகத்தில் இருந்து விடுபட்டவன், சொந்த வாழ்வில் நடிகனாக மாறமாட்டான்.

சிவபெருமான் நடிகனாக இருக்கும்போது, பிட்டுக்கு மண் சுமந்தார். ஸ்வயமாக (இயல்பாக) இருக்கும்போது ஆலகால விஷம் உண்டு மக்களைக் காப்பாற்றினார். நடிகனாக இருக்கும்போது மாடு மேய்த்தார் கண்ணபிரான்; இயல்பாக இருக்கும்போது, கீதையை அருளினார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ரீமந் நாராயணன், ராமனாகத் தோன்றியபோது சீதையின் பிரிவால் துயரத்தில் ஆழ்ந்தார். யாதவ குலத்தில் உதித்த கண்ணன், யசோதைக்குக் கட்டுப்பட்டார்; சிசுபாலனின் இழிசொற்களையும் ஏற்றார். இப்படி, கடவுளின் தன்மை அவரது விருப்பப்படி செயல்படும்.

மனிதனிடம் இல்லாத ஒன்று தன்னிடம் இருப்பதால், இறைவனால் எப்படியும் நடந்துகொள்ள முடிகிறது. இது, அவருக்கு இழுக்கு அல்ல; சிறப்பு!

பெண்கள் சந்தனம் அரைப்பதும் பூஜைக்கு மணியடிப்பதும் சரியா?

- வி.வெங்கட்ராமன், செகந்திராபாத்-9.

கடவுளுக்குரிய பணிவிடைகளில் பெண்களுக்கு முன்னுரிமை உண்டு. இந்த பணிவிடைகள், அவர்களுக்கு ஆன்ம லாபத்தை அளிக்கும். கோபதாபம் இல்லாமல் பொறுமையாக பணிவிடை செய்யும் பாங்கு பெண்களிடம் உண்டு. சேவை செய்வதற்கும், பணிவிடை செய்வதற்கும் பெண்களுக்கு முன்னுரிமை அளிப்பவர்கள் இப்போதும் இருக்கின்றனர். நோய்வாய்ப்பட்டவர்களை பராமரிப்பதிலும், சிறுவர்களை பாதுகாப்பதிலும் பெண்களின் பங்கு அதிகம் என்பதை உணரலாம். எனவே, அவர்களும் பங்கு பெறலாம்.

சந்தனம் அரைப்பதும், மணியடிப்பதும் பூஜை செய்பவரின் வேலை. இதைச் செய்ய இயலாதவனுக்கு, மனமுவந்து உதவி செய்ய முற்படும் பெண்களை வரவேற்க வேண்டும். அதுவே பண்பு.

மகா சிவராத்திரிக்கு மறுநாள், எனது வீட்டுக்குள் புகுந்த நல்ல பாம்பை அடித்துக் கொன்றுவிட்டேன். (பரிகாரமாக இறந்துபோன பாம்புக்கு கற்பூரம் ஏற்றி பால் ஊற்றி வணங்கவும் செய்தேன்). இதனால் தோஷம் ஏதும் விளையுமா? வேறு ஏதேனும் பரிகாரம் செய்ய வேண்டுமா?

- கே.வெங்கட்டரமணி.

தங்களையோ தங்கள் குடும்பத்தையோ எந்த தோஷமும் பாதிக்காது. கற்பூரம் ஏற்றி, பால் ஊற்றியதே பரிகாரம்தான்! நிம்மதியாக இருங்கள்.

ஒரு விஷயம்... எந்த உயிரினங்களையும் நாம் துன்புறுத்தக் கூடாது. இறைவன், பாம்பிடம் விஷத்தை வைத்தது அதன் தற்காப்புக்காக! எந்தப் பாம்பும் மற்றவர்களைத் துன்புறுத்தாது. பயத்தாலும் தற்காப்புக்காகவுமே அது மற்றவர்களை கடிக்கிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அந்தக் காலத்தில், பாம்பைப் பிடித்து காட்டில் விட்டு விடுவர். இதை, தெய்வமாக வழிபடுவோரும் உண்டு. 'பாம்பு கடித்துவிடுமோ' என்று பயத்தில் அதை அழிக்கிறோம் நாம். இதுவும் தற்காப்புக்காகவே நிகழ்ந்தது. எனவே, பாவம் ஒட்டாது.

முருகப்பெருமான், ஒரு பழத்துக்காகக் கோபித்துக் கொண்டு குன்றின் மேல் அமர்ந்ததாகச் சொல்கிறது புராணம். இதன் உட்பொருள் என்ன?

- வி.ஸ்ரீபதி.

உருவமற்ற இறைவனின் உருவம்... இந்த உலகம். ஆறு, கடல், மலை... என அனைத்தும் இறைவனின் உடல் உறுப்புகள். மலையில் ஈசனும், கடலில் ஆதி நாராயணனும் நித்யவாசம் செய்கின்றனர். 'காணப்படும் பொருட்களில் எனது சைதன்யம் மிளிர்கிறது' என்கிறார் பகவான் கிருஷ்ணர். இதை, தனது விஸ்வரூப தரிசனத்தால் புரிய வைத்தும் இருக்கிறார்.

புலன் அடக்கத்துடன் திகழும் ஞானக் குழந்தையை அறிமுகம் செய்ய, பழக் கதை பயன்படுத்தப்பட்டது.

முருகப்பெருமான் பிரணவத்துக்குப் பொருள் சொன்னவர்; அதே நேரம், இரண்டு மனைவியருடன் இணைந்து தாம்பத்தியத்தின் சிறப்பை எடுத்துரைத்தவர். அறுபடை வீடுகளில் அமர்ந்து பக்தர்களது ஐயப்பாடுகளை அகற்றுபவர்; எதிரிகளை அடக்கி ஆட்கொள்பவர்; அழகுக்கு உருவ விளக்கமாகத் திகழ்பவர்; என்றும் பிரம்மசாரியாக விளங்குபவர்!

கயிலாயத்தில் இருந்து வெளியேறவும், முருகப்பெருமானின் அத்தனை பெருமைகளையும் வெளிக் கொணரவும் பழத்தை பயன்படுத்தினார் ஈசன்; பக்தர்களை ஆட்கொள்ள தனது விளையாட்டைப் பயன்படுத்தினார் முருகப்பெருமான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிரசாத எலுமிச்சையை ஊறுகாய் போடலாமா?

கோயில்களில் பிரசாதமாகத் தரப்படும் எலுமிச்சம் பழத்தை ஊறுகாய், ஜூஸ் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்துகிறார்களே... இது சரியா?

- பா.சௌந்திரபாண்டி, மதுரை-1.

தங்களது விருப்பப்படி தாராளமாகப் பயன்படுத்தலாம். பிரசாதப் பொருட்களை விரயமாக்காமல், பயன்படுத்த வேண்டும். அதுவே முக்கியம்! ஆனால், பல கோயில்களில் பிரசாதப் பொருட்கள் வியாபாரப் பொருட்களாக மாறிவிட்டன. மக்கள் விருப்பம், வியாபாரத்தை வளர்த்தது.

பிரசாதமாக வந்ததைத் தாராளமாகப் பயன்படுத்தலாம். அதில் தவறில்லை.

தினமும் விளக்கேற்றி, ஸ்லோகங்கள் சொல்லி வழிபடுபவள் நான். பித்ரு தினமான அமாவாசையன்று கடவுள் ஸ்லோகங்களைச் சொல்லலாமா?

- மீனாட்சி, திருவள்ளூர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அமாவாசை அன்று முன்னோர் ஆராதனை முடிந்த பிறகு ஸ்லோகம் சொல்லி வழிபடலாம். 'தேவர்கள் மற்றும் பித்ருக்கள் ஆகியோருக்கான வழிபாடுகளை ஒரே நேரத்தில் செய்ய வேண்டி வந்தால், முதலில் முன்னோர்களையே வழிபட வேண்டும். பிறகு, தேவர்களை வணங்கலாம்' என்கிறது தர்ம சாஸ்திரம்.

முன்னோர்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்பது சாஸ்திரத்தின் கருத்து. அதே நேரம், தினம் தினம் செய்யும் கடமைகளையும் நிறுத்தக்கூடாது.

கணவனை இழந்த பெண்ணிடம், துக்கம் விசாரிக்கச் செல்லும் சுமங்கலிகள், சேலை முந்தானையில் மஞ்சள் கிழங்கை முடிந்து வைத்துச் செல்கின்றனர். இப்படி எடுத்துச் செல்லவில்லையெனில், துக்கம் கேட்பவரது வீட்டிலும் இதேபோல் அசம்பாவிதம் நிகழும் என்கின்றனரே..?

- என்.சீதாலட்சுமி, சென்னை-40.

துக்கம் விசாரித்துவிட்டு வரும் சுமங்கலிகள், நீராடிய பிறகே தங்களது வீட்டுக்குள் நுழைய வேண்டும். குளிப்பதற்கு மஞ்சள் தேவை. வீட்டுக்குள் சென்று மஞ்சள் எடுக்க முடியாது என்பதால், துக்கம் கேட்கச் செல்லும்போதே மஞ்சளை எடுத்துச் செல்வது நடைமுறையில் உண்டு. மற்றபடி... மஞ்சள் கிழங்கு மடியில் இல்லையெனில் அசம்பாவிதம் நிகழும் என்பதெல்லாம் தவறு.

கணவனை இழந்து தவிக்கும் பெண்ணைப் பார்க்கும்போது, 'இப்படியொரு துயரம் எனக்கு நேரக்கூடாது' என்று துக்கம் விசாரிக்க வந்த பெண்ணுக்குத் தோன்றலாம். இந்த சிந்தனைக்கு மருந்தாக சுமங்கலியின் அடையாளமான மஞ்சள் கிழங்கைக் கையில் வைத்திருக்கச் சொல்கின்றனர்.

அசம்பாவிதம் என்பது, நமது கர்ம வினையால் மட்டுமே நேரும். பொருந்தாதது போல் தோன்றினாலும் மஞ்சள் கிழங்கை மடியில் வைத்துக்கொண்டு துக்கம் கேட்கச் செல்வதில் தவறு இல்லையே?!

செவ்வாய், வெள்ளிகளில் விளக்கு பூஜை செய்பவள் நான். சமீபகாலமாகக் குடும்பப் பிரச்னைகளை நினைத்து அழுதபடி பூஜிக்கிறேன். இதனால் பலன் உண்டா?

- சாந்திகுமார், திருநெல்வேலி-1.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கவலையில் ஆழ்ந்திருக்கும்போது எந்தச் செயலையும் சிறப்புற செய்ய முடியாது. அழுதுகொண்டே பூஜிக்கும்போது, மனம் பூஜையில் லயிக்காது. பிரச்னைகள் இல்லாமல் வாழ்பவர் யார்? சொல்லப்போனால், வாழ்க்கையின் சுவாரஸ்யமே பிரச்னைகள்தான்!

சீடன் ஒருவன் தன் குருவை அணுகி, "தங்கள் அருளால் ஜோதிடத்தில் தேர்ச்சி பெற்றிருப்பினும், ஒன்று மட்டும் எனக்குப் புரிபடவே இல்லை. அதாவது, வாழ்க்கையில் பிரச்னைகள் வந்துகொண்டே இருக்கின்றன; அலைக்கழிக்கின்றன. அவற்றில் இருந்து மீள வழி தெரியவில்லை" என்றான்.

இதைக் கேட்ட குரு, "நாம் பிறக்கும்போதே பிரச்னைகளும் நம்முடன் பிறந்துவிடுகின்றன. சிறு வயதில் உனது பிரச்னையை பெற்றோர் பார்த்துக் கொள்வார்கள். பருவ வயதில், பிரச்னைகளை நாமே எதிர்கொண்டு வெல்வோம். ஆனால், ஒரு பிரச்னையின் முடிவு மற்றொரு பிரச்னையின் துவக்கம்! பிரச்னைகளைக் களைய களைய ஒன்றன் பின் ஒன்றாக... புதிது புதிதாக பிரச்னைகள் உருவாகிக் கொண்டே இருக்கும். ஒருவன் இறக்கும் வரை பிரச்னைகளும் இருக்கும்! அவற்றில் இருந்து விடுபட இரண்டு வழிகள் உண்டு.

பிரச்னைகளை லேசாக எடுத்துக்கொண்டு அவற்றை அலட்சியப்படுத்துவது முதல் வழி. அடுத்து... பிரச்னையைத் தலை தூக்க விடாமல் அழித்துவிட வேண்டும். இதற்கு உறுதியான மனம் அவசியம். தர்ம சாஸ்திரத்தை நடைமுறைப்படுத்தினால், மனம் உறுதி பெறும்.

இன்னொரு விஷயம்... கடமையை எப்படி நிறைவேற்றலாம் என்பது குறித்துக் கவலைப்படலாம். ஆனால், அதன் பலன் குறித்துக் கவலைப்படக் கூடாது. பலனை எதிர்பார்த்தால், பிரச்னைகளை சந்திக்கும் வலு இருக்காது; துயரத்தில் துவண்டு விடுவோம். எனவே, எது வந்தாலும் ஏற்றுக்கொள்!" என்று அறிவுரை கூறினார்.

இது உங்களுக்கும் பொருந்தும்!

அமாவாசைக்கு அடுத்து வரும் மூன்றாம் பிறையை வழிபடுபவள் நான். அதற்கான பூஜை மற்றும் விரத முறைகள் குறித்து விளக்குங்களேன்?

- த.பதாகை, தாராபுரம்.

மூன்றாம் பிறையை தரிசிப்பதுதான் வழிபாடு. பூஜை, விரதம் என்று தரிசனத்தை சுமையாக்கிக் கொள்ளாதீர்கள். கோயில்களில் நடைபெறும் விஸ்வரூப தரிசனத்துக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இணையானது இது! அமாவாசையில் சூரியனுடன் ஒன்றி கண்ணுக்குப் புலப்படாமல் இருந்த சந்திரன், கண்ணுக்குப் புலப்படும் அளவுக்கு வளர்ந்து தரும் இந்த தரிசனம், மிகுந்த புண்ணியம் அளிக்கும்.

குறிப்பாக... வளர்பிறை சந்திரனை தரிசிக்கும் வேளையில், 'உன்னைப்போல் நாங்களும் வளர்ச்சியை அடைய வேண்டும்' என்ற எண்ணமும் வளர்ச்சி பெறுவோம் எனும் நம்பிக்கையும் மனதில் தோன்றும். தரிசித்து மகிழுங்கள்!

'சஞ்சீவி மலையை ஒரு கையால் தூக்கினார் அனுமன்' என்கிறது இதிகாசம். அவர், அவ்வளவு பலசாலியா?

- வ.பெரியசாமி, சேலம்-10.

ஒற்றை விரலால் கோவர்த்தனகிரியைத் தூக்கினார் ஸ்ரீகிருஷ்ணர். இமயத்தைத் தன் முதுகில் சுமந்தான் ராவணன். தன் திருவடிகளால் உலகையே அளந்தார் வாமனன். ஓர் அம்பினால், ஏழு மரங்களைத் துளைத்தார் ஸ்ரீராமன். காளியனை அடக்கினான் வாயுவின் மைந்தன் அனுமன்!

இந்திரன், பால அனுமனைத் தாக்கியதால் உலகையே ஸ்தம்பிக்க வைத்தான் வாயு. அதிர்ந்துபோன தேவர்கள், வாயு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பகவானை சமாதானப்படுத்தி, அவன் மகனான அனுமனுக்கு ஏகத்துக்கும் வரங்கள் வழங்கி, மிகுந்த பலசாலியாக்கினர். இப்படியிருக்க... அனுமன், ஒரு கரத்தால் சஞ்சீவி பர்வதத்தைத் தூக்கியதில் ஆச்சரியம் இல்லை. அந்த மலையைத் தூக்க ஒற்றை விரல் போதும் அவருக்கு!

புத்தி நல்லபடி செயல்பட ஸ்ரீசரஸ்வதிதேவி; புகழ் பெற - அம்பாள்; தைரியம் பெற - ஸ்ரீதத்தாத்ரேயர்; பயம் நீங்க - அபயங்கரன் (ஈசன்); உடல் நலத்துடன் வாழ - தன்வந்திரி; ஜாட்யம் (சுணக்கம் சோம்பல்) விலக - ஸ்ரீஹயக்ரீவர்; செல்வாக்கு பெற - முருகப்பெருமான்; உடல் வலிமையைத் தக்க வைக்க இந்திரன் முதலான தேவர்களை வழிபட வேண்டும். இப்படி, பல தெய்வங்களிடம் பெற வேண்டிய திறமைகள் மொத்தத்தையும் அனுமனை வழிபட்டு அவரிடம் பெற்று விடலாம். நம் நினைவில் அவர் தோன்றினாலே... அத்தனை தேவைகளும் நமக்கு வந்துவிடும்!

•

பிள்ளையாருக்கு மூஞ்சுறு, முருகனுக்கு மயில், திருமாலுக்கு கருடன் என்று வாகனங்கள் உள்ளன. இதுபோல், பிரம்மன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



மற்றும் சிவபெருமானுக்கு வாகனங்கள் உண்டா? மூஞ்சுறுவால் பிள்ளையாரை சுமக்க முடியுமா? இதில் உள்ள இறை தத்துவம் என்ன?

- பூ.சீனிவாசன், சென்னை-26.

வேதம் அறிமுகம் செய்த விலங்குகளும் பறவைகளும் இறை உருவங்களுக்கு வாகனமாக விளங்குகின்றன.

ஸ்ரீவிநாயகருக்கு மூஞ்சுறு *(ஆகுஸ்தே ருத்ரபசு)*; முருகப் பெருமானுக்கு மயில் *(ஸௌரீ பலா கர்ச்யோ மயூர...)*; திருமாலுக்கு கருடன் *(ஸுபர்ணோஸி கருத்மான்)*; பிரம்மனுக்கு அன்னம் *(ஸுபர்ண பார்ஜன்யோ ஹம்ஸோ)*, சிவபெருமானுக்கு காளைமாடு *(உன்னதரிஷபோ...)* என இறை வாகனங்கள் அமைந்துள்ளன.

ஸத்வம், ரஜோ, தமோ ஆகிய மூன்று இயல்புகளும் இந்த இறை வாகனங்களில் தென்படும்.

மூஞ்சுறு, பொருட்களை அழித்து குப்பையாக மாற்றும் இயல்புடையது. தண்ணீர் கலந்த பாலைப் பிரித்தெடுக்கும் பகுத்தறிவு அன்னப் பறவைக்கு உண்டு. விஷக் கிருமிகளை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அழித்து, சுற்றுச்சூழலை சுத்தமாக்கும் திறன் மயிலுக்கு உண்டு.

கருடன், தொலைவில் இருக்கும் எதிரியையும் அடையாளம் கண்டு அழிக்கும் வல்லமை பெற்றது. கழிவுப் பொருளாக நாம் ஒதுக்கும் வைக்கோலை உண்டு, பொறுமையுடன் நமக்காக பாரத்தை சுமப்பது காளைமாடு.

இப்படி... வாழ்க்கைக்குத் தேவையான நற்பண்புகளை நமக்குச் சுட்டிக் காட்டுபவையாகத் திகழ்கின்றன கடவுளரின் வாகனங்கள்!

இறை உருவத்தின் சாந்நித்யம், இறை வாகனங்களுக்கு பலம் அளிக்கிறது. 'உருவில் சிறிய சுண்டெலி மலையையே குடைந்துவிடும்' என்பார்கள். இதுபோல் இறை வாகனங்கள் அனைத்துக்கும் தனிப் பெருமை உண்டு. தவிர, இறைவனுடன் இணையும்போது துரும்பும் அம்பாக மாறிவிடும்!

'வீட்டில் பஞ்சாங்கம் இருக்கக்கூடாது' என்று ஸ்தபதி ஒருவர் கூறியதாக என் நண்பர் தெரிவித்தார். இது சரியா?

- அனந்தலட்சுமி ஜெயராம், சென்னை-23.

வீட்டில் டி.வி. இருக்கக்கூடாது; ஏ.சி. அறையில் தூங்கக் கூடாது என்று எவரேனும் சொன்னால், அதை காது கொடுத்துக் கேட்க மாட்டோம். ஆனால், பஞ்சாங்கத்தைத் தவிர்க்க தருணம் பார்த்து கொண்டிருக்கும்போது, உங்களுக்கு நண்பனும்... அவருக்கு ஸ்தபதியும் கிடைத்துவிட்டனர். உடனே உங்களுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விகடன் பிரசுரம்

சந்தேகம் எழுந்துவிட்டது. முதலில் தெளிவாக சிந்திக்கப் பழகுங்கள்!

ஸ்ரீதட்சிணாமூர்த்தி திருமணம் ஆனவரா? ஆந்திர மாநிலம் சுருட்டப்பள்ளியில், மனைவி சமேத ஸ்ரீதட்சிணாமூர்த்தி அருள்பாலிப்பதாகப் படித்தேன். அவர் மனைவியின் பெயர் என்ன?

- ஒரு வாசகர்.

மௌனமாக, தெற்கு நோக்கி இருப்பவர் ஸ்ரீதட்சிணாமூர்த்தி. இவருக்குள்ளே ஒளிந்திருக்கும் தாயுருவம், வெளியே வந்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



இவரின் தேவியாக காட்சி தருவதாக எண்ணிய பக்தனின் மனம், ஸ்ரீதட்சிணாமூர்த்தியை திருமணம் ஆனவராக மாற்றியது.

பிள்ளையாருக்கு ஸித்தி-புத்தி என்று இரு மனைவிகளைச் சேர்த்து வைத்தது புராணம். நல்ல புத்தியையும் நம் எண்ணத்தை நிறைவேற்றும் ஸித்தியையும் தரும் சக்திகள் ஸ்ரீவிநாயகரிடம் உறைந்திருக்கின்றன. இந்த சக்திகளை இறைவனின் தேவியராகவே கருதுகிறான் பக்தன்.

ருக்மிணி - சத்யபாமாவுடன் இணைந்த கோபாலகிருஷ்ணன், நித்ய பிரமச்சாரியாக திகழ்கிறார். தினமும் உண்டு களிக்கும் துர்வாசர், நித்ய உபவாசியாக திகழ்கிறார்! நாம் குடும்பத்துடன் வாழ்பவர்கள். எனவே, நாம் வணங்கும் தெய்வங்களையும் குடும்பஸ்தர்களாகப் பார்ப்பதில் ஆனந்தம் கொள்கிறோம். சும்மா இருக்கும் சிவத்தை, சோமாஸ்கந்த பரமேஸ்வரராகப் பார்க்கிறோம். அதாவது, நம்மோடும் நமது இயல்புகளுடனும் இறை திருவுருவங்களை பொருத்திப் பார்க்கிறோம். நமக்கு எது மகிழ்ச்சி தருகிறதோ, அது இறைவனுக்கும் மகிழ்ச்சி தரும் என்று எண்ணுகிறோம்.

ஆண்மையும் பெண்மையும் அரச மரத்தில் உறைந்திருக்கிறது. ஆனால், கணவன் - மனைவி உறவு மரங்களுக்கு இல்லை. இருப்பினும் வேப்பமரத்தை அரசமரத்தின் மனைவியாக்கினோம். இந்த விளையாட்டை செய்வது பக்தர்களே!

பேரறிவில் சிற்றறிவின் நடைமுறைகள் பொருந்தாது. எனினும், பேரறிவை எட்டுவதற்கு இந்தக் கற்பனைகள் பயன்படும்.

சிவபெருமானின் அம்சம் ஸ்ரீதட்சிணாமூர்த்தி. எனில், இவரின் மனைவி சாட்சாத் அந்த அம்பாள்தானே!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வாசலில்... ஸ்டிக்கர் கோலம் ஒட்டலாமா?

திருவிளக்கில் மீதமாகும் எண்ணெயை, மீண்டும் விளக்கேற்றப் பயன்படுத்தலாமா?

- பி.இந்திராணி, சென்னை-32.

இயற்கை அளித்த பொருட்களை வீணாக்குவது தவறு. இவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதே சரி!

எண்ணெய்க்கு 'பர்யுஷாதம்' (பயன்படுத்திய மாசு) கிடையாது. எனவே, அதைத் திரும்பவும் பயன்படுத்தலாம். முதல் நாள் எண்ணெயில் பொரித்த வறுவல்களை மறுநாள் பயன்படுத்துவது உண்டு. எண்ணெயில் கசடு மண்டி, தூய்மை இழந்திருந்தால் மாற்றிவிட வேண்டும்.

அபார்ட்மென்ட்களில் வசிக்கும் சிலர், வீட்டு வாசலில் ஸ்டிக்கர் கோலம் ஒட்டியுள்ளனரே, இது சரியா?

- மீனா ரெங்கனாதன், சென்னை-33.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பழைய ஒண்டிக்குடித்தனமே தற்போது அபார்ட்மென்ட் கலாசாரமாகி இருக்கிறது. ஒண்டிக்குடித்தனத்தில் 'மெய்ன்டனன்ஸ்' பணம் கட்ட வேண்டாம்! அபார்ட்மென்ட்டில் வசிப்போர்களைப் பொறுத்தவரையில், சுவர்கள்கூட அவர்களுக்கு சொந்தம் கிடையாது; அறைகளில் இருக்கும் இடைவெளி (ஆகாசம்) மட்டுமே சொந்தம்!

பண்பு, பழைமை, பெருமை ஆகியவற்றின் அடையாளமான தனி வீட்டில் வசிக்கும் வாய்ப்பை இழந்த பிறகு, வாசலில் உள்ள கோலத்தை மட்டும் பிடித்துக்கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. தாராளமாக ஸ்டிக்கர் கோலத்தைப் பயன்படுத்தலாம். நெற்றிக்கு ஸ்டிக்கர் பொட்டைப் பயன்படுத்தும் நமக்கு, ஸ்டிக்கர் கோலத்தைப் பயன்படுத்துவதில் மன நெருடல் ஏன்? தேவையே இல்லை! இதெல்லாம் சாஸ்திரத்துக்கு உட்படாத விஷயம்தான், எனினும் தன்னிச்சையாக செயல்படலாம்.

நோய்களும் துன்பங்களும் விலக மந்திரம் ஜபிப்பதும் ஹோமங்கள் செய்வதும் வழக்கம். ஆனால், இவற்றைக் கடைப்பிடிக்க இயலாதவர்கள் என்ன செய்வது?

- ஜி.ஜெயராமன், கூந்தலூர்.

முற்பிறவியின் கர்ம வினைகள், இந்தப் பிறவியில் நோயாக மாறி துயரம் தர வாய்ப்பு உண்டு! 'இந்த துன்பம் நீங்குவதற்கு மருந்து, கொடை, ஜபம், ஹோமம் மற்றும் அர்ச்சனை ஆகியன உதவும்' என்கிறது கர்ம விபாகம் எனும் நூல். 'மருந்துக்குக் கட்டுப்படாத சில பிணிகளுக்கு, முன்ஜன்ம வினைகளே காரணம்' என்கிறது ஆயுர்வேதம். *(பாபம் கர்மசகுர்வதாம்...)* 'முற்பிறவி வினைகள், நோயாக உடலில் பற்றிக்கொள்ளும்' என்கிறது வேதம். *(அங்கே அங்கே வை புருஷஸ்ய...)*

வழிபாடுகள் செய்ய முடியாத அளவுக்கு உடல் நலிவுற்று இருந்தால், இறைவன் நாமத்தை மனதில் தியானிக்கலாம். அச்யுத, அனந்த, கோவிந்த ஆகிய நாமங்களை மனதுக்குள் சொல்லி வழிபடலாம். அப்படி மனதாலும் வழிபட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இயலாத நிலையில் உள்ளவர்களுக்காக, அவர்களது நலம் விரும்பிகள் பிரார்த்தனை செய்யலாம். வாய் பேச முடியாதவருக்கு பதிலாக மற்றொருவர் மந்திரம் சொல்லலாம். அதே நேரம்... பொருளாதாரச் சூழலைக் காரணம் காட்டி வழிபாடுகளைத் தவிர்ப்பது சரியல்ல!

'எண்ணெய் தேய்த்து குளிக்கும் நாளில், அகத்திக்கீரை சாப்பிடக் கூடாது' என்றும், 'சமைப்பதற்கு முதல் நாளே இந்தக் கீரையை வாங்கி வைக்கக்கூடாது' என்றும் கூறுகிறார் என் பாட்டி. இதுகுறித்து சாஸ்திரம் என்ன கூறுகிறது?

- பி.இந்திராணி, சென்னை-32.

செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பெண்களும், புதன் மற்றும் சனிக்கிழமைகளில் ஆண்களும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பார்கள். இந்த நாட்களில் உடல் உறுப்புகள் சற்று அசதியை சந்திக்கும். அப்போது, அகத்திக்கீரை முதலானவை உடல் நலனுக்கு ஏற்புடையதாக இருக்காது. எனவே, இதுபோன்ற நாட்களில் அகத்திக்கீரையைத் தவிர்க்கச் சொல்கிறது ஆயுர்வேதம்.

தவிர... கிழமைகள், கிரகங்களின் பெயரில் அமைந்திருக்கின்றன. அந்தந்தக் கிழமைகளில் அந்தந்தக் கிரகங்களின் தன்மை புலப்படும். ஆராயாமல் எதிர்ப்பது செவ்வாயின் இயல்பு; உறங்கிக் கிடக்கும் ஆசையைத் தூண்டுவது வெள்ளியின் இயல்பு; சுணக்கமுறுவது சனியின் தன்மை.

உணவுகளின் மூலம் இவற்றின் தன்மைகள் மேலும் தூண்டப்படலாம். இதைத் தவிர்க்க, குறிப்பிட்ட நாட்களில் கீரையைத் தவிர்க்கலாம். இது ஜோதிடத்தின் அறிவுரை. உங்கள் பாட்டி சொல்வதிலும் பொருள் இருக்கிறது!

என் கணவர் இறந்துவிட்டார். குழந்தை இல்லாததால், என் சகோதரரின் மகனே இறுதிக் காரியங்கள் செய்ததுடன், திதியும் கொடுத்து வருகிறான். ஒருவேளை... திதி கொடுப்பதை அவன் நிறுத்திவிட்டால், நான் என்ன செய்வது? (என் கணவர் உயிருடன் இருக்கும்போதே கயை சென்று ஆத்ம பிண்டம் போட்டுள்ளார்!)

- எம்.சரோஜா, திருப்பாலை.

உங்கள் சகோதரரின் மகன் திதி கொடுப்பதை நிறுத்திவிட்டால், தாங்களே திதி கொடுக்கலாம். இறுதிச் சடங்கை சகோதரரின் மகன் செய்திருந்தாலும், வருடந்தோறும் கணவரின் நினைவு நாளில் நீங்கள் திதி கொடுப்பது சிறப்பு. 'அவன் தொடருவானா? நிறுத்திவிடுவானா?' என்ற சிந்தனை தேவையற்றது. அதேபோல், உங்கள் கணவர் கயையில் தனக்காக ஆத்ம பிண்டம் போட்டுக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொண்டுவிட்டார் என்பதை ஆராய்வதும் வீண்.

திதி கொடுப்பதுடன் அன்று அன்னதானமும் செய்யுங்கள். குழந்தை இல்லாத நிலையில் தாங்கள், உங்கள் கணவரது நினைவு நாளில் அன்னதானம் செய்வது சிறப்பு.

என் தங்கையின் வீட்டில் வரலட்சுமி பூஜை செய்யும் வழக்கம் இல்லை. சமீபத்தில்தான் அவளின் மகனுக்குத் திருமணம் நடந்தது. இனி, அவளின் மருமகள் வரலட்சுமி பூஜை செய்யலாமா?

- சி.ராமமூர்த்தி, மதுரை-2.

புகுந்த வீட்டில் உள்ள சம்பிரதாயத்தையே அந்த வீட்டின் மருமகளும் பின்பற்ற வேண்டும். இனி அதுவே அவளின் வீடு; குடும்பம்! திருமணத்துக்குப் பிறகு... பிறந்த கோத்திரத்தைத் துறந்து, கணவன் கோத்திரத்துடன் இணைந்துவிடுகிறாள், பெண். பிறந்த வீட்டு சம்பிரதாயத்தை அவள் தவிர்க்கலாம்.

பற்றுதலுடன் ஒரு சம்பிரதாயத்தை ஏற்பதே சிறப்பு. புராணங்கள் நிறைய விரதங்களை ஏற்கச் சொல்லும். நமக்குப் பிடித்தமானதைத் தேர்ந்தெடுக்கலாம். அலுவல்கள் பல நிறைந்த இன்றைய குடும்ப வாழ்க்கையில், ஆர்வக் கோளாறினால் எண்ணிக்கைக்கு அதிகமான விரதங்களை ஏற்று, சுமையாக்கிக் கொள்ளக்கூடாது.

'உறவினர்கள் இறந்துவிட்டால் ஒரு வருடத்துக்கு மலைக்கோயில் மற்றும் கொடிமரம் உள்ள கோயிலுக்கு செல்லக்கூடாது; குலதெய்வக் கோயிலுக்குச் செல்லலாம்' என்கிறார்கள். ஏன் இப்படி?

- எம்.ராம்குமார், திருவில்லிப்புத்தூர்.



ஈமச்சடங்கில் நேரடித் தொடர்பு கொண்டவர்கள் ஒரு வருடம் வரை கோயிலுக்குச் செல்வதில்லை. இறந்த பெற்றோரின் நினைவு மற்ற அலுவல்களால் தடைபட்டுவிடும் என்பதால் இதனை தவிர்த்தனர். பெற்றோர் அல்லாத உறவுகள் இறந்தால், கோயிலுக்குச் செல்ல தடையேதும் இல்லை. வழிபடுவதற்காக கோயிலுக்குச் செல்லலாம். அதேநேரம், நேர்த்திக்கடன் மற்றும் சிறப்பு பூஜை ஆகியவற்றுக்காக கோயிலுக்குச் செல்வது சரியில்லை. க்ஷேத்ராடம் மற்றும் விசேஷ பூஜைகளை ஓராண்டு நிறைவுற்றதும் செய்யலாம்; துக்கத்துடன் செய்ய வேண்டிய கட்டாயமில்லையே..? இறந்தவரது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



துக்கம் ஒரு வருடகாலம் இருப்பதால், அந்த வருடத்தில் நீங்கள் கோயிலுக்குச் சென்றதாகவே எடுத்துக்கொள்கிறது சாஸ்திரம்.

அரசியல் தலைவர்கள் மறைந்ததும், ஏழு நாட்கள் வரை அலுவல்களைத் தள்ளிப் போடுகிறோம். இறந்த நாளுக்கு விடுமுறை அளிப்பதும் உண்டு. ஆக, எந்த சம்பந்தமும் இல்லாதவர்கள் இறந்து போனதற்காக துக்கம் கொண்டாடுகிறபோது, நம் பிறப்புக்கு ஆதாரமான பெற்றோர் இறந்துவிட... ஒரு வருடத்துக்கு துக்கம் மேற்கொள்வதில் தவறில்லையே! பெற்றோரின் நினைவில் மூழ்கிய மனம், பிற விஷயங்களில் அக்கறையுடன் ஈடுபடாது. ஆகவே, கோயில் ஆராதனையை அந்த ஆண்டு தவிர்ப்பதே மரபு.

இறந்தவரின் இறுதிச்சடங்கினை ஓராண்டு பூர்த்தியாகும் நாளில்தான் செய்ய வேண்டும். ஆண்டின் முடிவில் வருகிற சிராத்தம்தான் இறுதிச்சடங்கு! (ஆனால் 12-ம் நாளிலேயே, பலகாரங்களை வைத்து இறுதிச்சடங்கு செய்வதற்கு பரிந்துரைத்தது தர்ம சாஸ்திரம்). எனவே, ஓராண்டு வரை தீக்ஷை வேண்டும் என்பர்.

அம்மன் கோயில்களில் பெண்கள் சிலர் திடீரென சாமி வந்து ஆடுகின்றனரே, ஏன்?

- தி.க.வேல்முருகன், திட்டக்குடி.

பாட்டு, அத்துடன் இணைந்த பக்கவாத்திய ஒலி ஆகியவை காதில் விழும்போது மனம் சற்று நிலை தடுமாறும்.

ரயில் வண்டி எழுப்பும் ஒலி, அருகில் இருக்கும் பொருட்களில் அதிர்வை ஏற்படுத்துவது போல, வாத்தியங்களின் ஓசை மனதை பாதிப்பது உண்டு. இதை, மனதின் பலவீனமாகக் கருதுகிறது ஆயுர்வேதம். மனோதிடம் இருப்பவரிடம் எந்த பாதிப்பும் இருக்காது!

அன்னபூரணி வைத்து வழிபடுவதற்குப் பயன்படுத்திய அரிசியை என்ன செய்வது?

- எஸ்.சுந்தர், திருநெல்வேலி-7.

அன்னபூரணி வழிபாட்டில் தினம் தினம் புது அரிசியை பயன்படுத்த வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



முதல் நாள் உபயோகித்த அரிசியை மறுநாள் உணவுக்குப் பயன்படுத்தலாம். அன்னபூரணியை குடியிருத்திய அரிசி என்பதால், அதற்கு தனிச் சிறப்பு உண்டு. இதை உணவாக உட்கொள்ளும்போது மன நிறைவு ஏற்படும். 'அன்னமே ஆண்டவன்' என்கிறது வேதம். *(அன்னம் பிரம்மேதி...)* பசியாற்றுகிற அரிசியை அலட்சியப்படுத்தக்கூடாது.

ஸ்ரீருத்ரம் முதலான வேத ஸ்லோகங்கள் அடங்கிய சி.டி-க்களை எல்லா நாளிலும் வீட்டில் ஒலிக்கவிட்டு கேட்கலாமா? அல்லது விசேஷ நாளில் மட்டுமே கேட்க வேண்டுமா?

– என்.காயத்ரி.

சி.டி-க்கள் மூலம் வேத ஸ்லோகங்களை ஒலிக்கச் செய்வதிலும் கேட்பதிலும் தர்ம சாஸ்திரத்துக்கு உடன்பாடு இல்லை. புனிதமான ஸ்லோகங்கள், நம் வாய்மொழியாக... வேத கோஷமாக வெளிவர வேண்டும்.

தேசியகீதம் இசைக்கப்படும்போது... எந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலும் அதிலிருந்து விடுபட்டு, நம் மனம் தேசியகீதத்தில் ஒன்றிவிடும். காரணம், உயிரினும் மேலாக தேசியகீதத்தை நாம் மதிக்கிறோம். அதுபோல, எழுதாக் கிளவியாகிய வேதத்தின் ஸ்லோகங்களையும் நாம் போற்ற வேண்டும். 'வேத'கோஷத்தில்... வேத ஸ்லோகங்களை உச்சரிக்கும்போது, எத்தனை எழுத்துகள் வெளிப்படுகின்றனவோ, அத்தனை முறை பரம்பொருளின் திருநாமத்தை (ஹரி நாமத்தை) சொன்ன பலன் கிடைக்கும்' என்கிறது தர்ம சாஸ்திரம். *(யாவந்தி வேதாக்ஷராணி...)*

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சங்கீதக் கச்சேரி, காலக்ஷேபம் மற்றும் திரைப்பாடல்கள் முதலானவற்றை டேப் ரெக்கார்டர் அல்லது சி.டி., பிளேயரில் ஒலிக்க விட்டு, அவற்றைக் கேட்டுக்கொண்டே வேலையில் ஈடுபடுவது உண்டு. ஆனால், வேத ஸ்லோகங்களைக் கேட்பதில், இந்த அணுகுமுறை கூடாது. வேதம் கற்பதற்கும், வேத ஸ்லோகங்களை உச்சரிப்பதற்கும் கடும் கட்டுப்பாடுகளை வேதமே விதித்திருக்கிறது. இதை, கடைச் சரக்காக மாற்றுவதில் தர்ம சாஸ்திரத்துக்கு உடன்பாடில்லை.

அதே நேரம்... தங்களின் ஆதங்கமும் புரிகிறது. வேதம் கற்க இயலவில்லை; வேதம் ஓதுவோரை அழைத்து வேதம் ஓதச் செய்து கேட்கலாம் எனில்... அதற்கு பொருளாதாரச் சூழல் இடம் தரவில்லை. ஆகவே, ஸ்லோகங்களை சி.டி-க்கள் மூலம் கேட்க ஆசைப்படுகிறீர்கள். உங்களின் ஆர்வம், 'விஞ்ஞானத்தின் உதவியால் வேதம் கேட்கும் வாய்ப்பை பயன்படுத்துவதில் தவறில்லை' என்பதாக எண்ணி இப்படி செயல்பட வைக்கிறது.

தங்களின் ஆர்வத்தின் பொருட்டு, இறைவனின் திருநாமங்கள் அடங்கிய சி.டி-க்களைப் பயன்படுத்துங்கள். பயன் உண்டு!

குழந்தை இல்லாத நிலையில்... இறந்துபோன மனைவிக்கு கணவன் சிராத்தம் செய்ய வேண்டுமா?

– பரமேஸ்வரன்.

இறந்தவருக்கு நெருங்கிய தொடர்பு உடையவர் சிராத்தம் செய்ய வேண்டும். பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கு முதலிடம். அவர்கள் இல்லை என்றால், கணவனை செய்யச் சொல்கிறது சாஸ்திரம். பிள்ளைகள் ஏற்றால், அந்த சிராத்தம் நீண்ட நாட்கள் செயல்படுத்தப்படும். கணவன் ஏற்றால், அவர் ஆயுள் உள்ள வரை மட்டுமே நீடிக்கும். எனவே, பிள்ளைகளுக்கு முன்னுரிமை!

இறந்தவருக்குத் தொடர்பு உடைய எவரேனும் சிராத்தம் செய்தே ஆக வேண்டும் என்று சாஸ்திரம் நிர்பந்திக்கிறது. இறை வழிபாட்டுக்கு இணையானது முன்னோர் ஆராதனை!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கயாவில் பிண்டம் போட்டால் சிராத்தம் செய்ய வேண்டாமா?

என் தந்தை இறந்ததும் காசி, கயா மற்றும் பத்ரிநாத் ஆகிய தலங்களுக்குச் சென்று பித்ரு காரியம் செய்தேன். கயாவில் காரியம் செய்து வைத்தவர், 'விஷ்ணு பாதத்தை சாட்சியாக வைத்து பித்ரு காரியம் செய்துவிட்டபடியால், இனி வருஷ சிராத்தம் செய்யாவிட்டாலும் பரவாயில்லை' என்றார்.

இதேபோல் பத்ரிநாத்தில் பிரம்ம கபாலத்தில் பிண்டம் போட்டபோது... அங்கு காரியம் செய்து வைத்தவர், 'இங்கே பிண்டம் போட்டுவிட்ட பிறகு, வேறு எங்கும் போடக்கூடாது. எனவே, காசி - கயாவுக்கு சென்று பிண்டம் போடவில்லை என்றால், அந்தத் தலங்களுக்குப் போய் பித்ரு காரியங்களை முடித்துவிட்டு வாருங்கள்!' என்றார்.

இதுகுறித்து தங்களின் விளக்கத்தை எதிர்பார்க்கிறேன். இப்போது, என் தாயாரும் இறந்துவிட்டார். நான் மேற்சொன்ன தலங்களுக்குச் சென்று காரியம் செய்யலாமா?

- கே.சுப்பிரமணியன், புதுடெல்லி-21.

கயாவில் காரியம் செய்து வைத்தவர் சொன்ன விளக்கம் தவறானது; தர்ம சாஸ்திரத்துக்கு உடன்பாடு இல்லாதது. உயிருடன் இருக்கும் வரை பெற்றோர் விருப்பத்தைக் குறைவின்றி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



நிறைவேற்ற வேண்டும்; அவர்கள் மறைந்ததும், வருடாந்திர சிராத்தங்களை தவறாமல் நிறைவேற்ற வேண்டும்.

'முன்னோருக்கு காசி, கயை முதலான புண்ணிய க்ஷேத்திரங்களில் பிண்டம் போட வேண்டும்' என்கிறது சாஸ்திரம். *(ஜீவதோர் வாக்ய கரணாத்...)* வருஷ சிராத்தத்தை, வருடம் தவறாமல் வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டும். நாம் மறையும்போது சிராத்தமும் மறைந்துவிடும். *(சர்த்ருநாசே கர்மனாச:)*

வருஷ சிராத்தத்தின்போது, 'சிராத்தம் நடக்கும் இடம் கயை; உணவை ஏற்பவர் கதாதரன்; அளிப்பது விஷ்ணு பாதத்தில்' என்று கயை, கதாதரர், விஷ்ணு பாதம் - என அனைத்தும் நாம் இருக்கும் இடத்துக்கே வந்துவிட்டதாக பாவித்து ஆராதனை செய்ய வேண்டும். இதன் மூலம்... வருஷ சிராத்தம், 'கயை' தலத்தில் வைத்து நடத்தப்பட்டதற்கான நிறைவைத் தரும்.

வருஷ சிராத்தம் நமது கடமை; புண்ணிய க்ஷேத்திரங்களில் முன்னோர்க்கு செய்யப்படும் காரியங்கள் சிறப்பு வழிபாடு. இரண்டும் ஒன்றாகாது. சிறப்பு வழிபாட்டை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால், நமது கடமையாகிய வருஷ சிராத்தத்தைத் தவறவிட்டால், அது பெரும் இழப்பாகிவிடும். எனவே, நீங்கள் எங்கு போய் பிண்டம் போட்டாலும் வருஷ சிராத்தத்தை நடைமுறைப் படுத்தியே ஆக வேண்டும்.

எனவே, தாயாருக்கு செய்ய வேண்டிய கடமையை சரிவர நிறைவேற்றுங்கள். அவர்களது அருளால் நீங்கள் மன நிம்மதி அடைவீர்கள்.

எங்களின் குலதெய்வம் அகோர வீரபத்திரர். வருடம் தவறாமல், இவரது கோயிலுக்குச் சென்று அபிஷேக - ஆராதனைகள் செய்து வருவோம். ஆனால், அங்கு சென்று வந்ததும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வியாபாரத்தில் சரிவும் கடனும் ஏற்படுகிறது. 'எவரேனும் செய்வினை வைத்திருப்பர். எனவே, வீட்டுக்கு வர குலதெய்வம் மறுக்கிறது' என்கின்றனர் சிலர். இதற்கு ஏதேனும் பரிகாரம் உள்ளதா?

- என்.அப்பாவு, மன்னார்குடி.

குலதெய்வ வழிபாட்டுக்குப் பிறகு, வியாபாரத்தில் சரிவு; கடன் பிரச்னை என்கிறீர்கள். இது தவறு. உங்களது சிந்தனையிலும் செயல்பாட்டிலும் உள்ள தடுமாற்றங்கள், வியாபார சரிவுக்குக் காரணமாகி இருக்கலாம். தொலைநோக்கு சிந்தனை இல்லாமையே பெரும்பாலோரது கடன் பிரச்னைக்கும் காரணமாகும்.

காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதையாக... குலதெய்வக் கோயிலுக்குச் சென்று வந்த நிலையில், வியாபார நஷ்டமும் கடனும் உங்கள் கவனத்துக்கு வர... இரண்டையும் முடிச்சுப் போட்டுக் குழம்புகிறீர்கள்.

'செய்வினை'யைக் காரணம் காட்டினால், வியாபார சரிவுக்கான உண்மைக் காரணத்தை எப்படி கண்டுபிடிக்க இயலும்? குலதெய்வம், நம் மனதில் குடியிருப்பது! அப்படியிருக்க, அது வீட்டுக்கு வர மறுக்கிறது என்றால் எப்படி?! ஒருபோதும் குலதெய்வம் நம்மை தண்டிக்காது.

எந்தவொரு சறுக்கலுக்கும் நமது கவனக்குறைவே முதல் காரணம். இதனால், தேவையே இல்லாமல் பிரச்னையை சந்திக்க நேரும். பிறகு, பிரச்னைக்கான காரணத்தைக் குலதெய்வத்தின் தலையில் போட்டு விடுகிறோம். இப்படி குறைகளை அடுத்தவர் மீது சுமத்துவது நமது பலவீனம்! குலதெய்வத்தைவிட நம்மை அதிகம் பாதுகாக்கக் கூடியவர் வேறு யார் உண்டு? எனவே, குலதெய்வத்தை வணங்குங்கள்; தொல்லைகள் மறையும்!

சின்முத்திரை - வலது ஆள்காட்டி விரல் நுனியை, பெருவிரல் நுனியுடன் சேர்த்து வைத்திருப்பதா? அல்லது வலது ஆள்காட்டி விரல் நுனியை, பெருவிரல் அடிபாகத்துடன் சேர்த்து வைத்திருப்பதா?

- பி.வி.குப்புஸ்வாமி, திருச்சி.

ஆள்காட்டி விரல் நுனியும் பெருவிரல் நுனியும் சேர்ந்திருந்தால் அதுவே சின்முத்திரை!

இரவில் தாம்பத்திய உறவு வைத்துக்கொண்ட நிலையில், மறுநாள் கோயிலுக்குச் செல்லலாமா? வீட்டில் பூஜைகள் செய்யலாமா?

- ஒரு வாசகி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதிகாலையில் எழுந்து நீராடி, காலைக் கடன்களை நிறைவேற்றிய பிறகு, கோயிலுக்கு செல்லலாம். வீட்டிலும் பூஜைகள் செய்யலாம்.

என் கணவரது செல்போன் திருடுபோனது; மறுநாள், முகம் பார்க்கும் கண்ணாடி கை தவறி விழுந்து உடைந்தது. மறு வாரமே என் கணவர் இறந்துவிட்டார். எனவே, மேற்சொன்ன விஷயங்களை அபசகுனமாக எண்ணுகிறேன். சரியா?

- மீனாட்சி விஸ்வநாதன், ஊட்டி.

இவற்றை அபசகுனமாக எண்ணுவது தவறு. செல்போன் திருடு போனதும், கண்ணாடி உடைந்ததும் நமது கவனக்குறைவால் நிகழ்ந்தவை. மனிதன் பிறக்கும்போதே அவனது இறப்பும் நிச்சயிக்கப்பட்டு விடும். ஆனால், மரணம் எப்போது என்பதை நம்மால் கணிக்க இயலாது. ஆகவே, நீங்கள் குறிப்பிட்ட விஷயங்களை அபசகுனங்களாகக் கருத வேண்டியதில்லை. அப்படி நிகழாமல் இருந்திருந்தாலும் மரணம் நேர்ந்திருக்கும்.

எச்சரிக்கையாக இருந்தாலும் காரணம் இல்லாமலும், எதிர்பாராமல் நிகழ்வதுமான சம்பவங்கள் அபசகுனத்தில் சேரும்! சகுனம் என்ற சொல்லுக்கு 'பறவை' என்று அர்த்தம் உண்டு. 'வெளியே கிளம்பும்போது, எதிர்பாராமல் கருடன் தென்பட்டால், செல்லும் காரியத்தில் வெற்றி உண்டு' என்று முன்னோர் தெரிவித்தனர். ஆனால், காலப்போக்கில் எதிரில் தென்பட்டவை அனைத்தையும் சகுனமாக்கி, அவற்றுக்கு பலனையும் பிரித்து வைத்து விரிவுபடுத்தினர். பிறகு, நல்ல சகுனம்- கெட்ட சகுனம் என நிறையவே சேர்த்தனர். இதுவரை, இவர்கள் சிருஷ்டித்த சகுனங்களை சரிவர தெளிவுபடுத்தவில்லை என்பதே உண்மை. எனவே, முடிந்தவரை சகுனத்தைத் தவிர்ப்பதே நல்லது என்பது என் கருத்து!

திருவிளக்கு பூஜைக்காக தனியே விளக்கு வைத்து வழிபடுகிறேன். நவராத்திரியின்போது இந்த விளக்கை துர்கா, லட்சுமி, சரஸ்வதிதேவியாக பாவித்து வழிபடுவது வழக்கம். ஆனால், 'அம்மனைப் போல் அலங்கரித்த விளக்கில் தீபம் ஏற்றுவது தவறு' என்கிறார் என் சித்தி. அப்படியா?

- உஷா சுப்ரமணியன், கும்பகோணம்.

அம்மனைப் போல் அலங்கரித்த விளக்கில் தீபம் ஏற்றலாம். வரலட்சுமி பூஜையின்போது, லட்சுமியின் (அம்மனின்) உருவம் பதித்த கலசம் வைத்து பூஜிப்பர். யானை விளக்கு, திருமகள் விளக்கு ஆகியவற்றை கார்த்திகை தீபத்தில் பயன்படுத்துவர். லட்சுமியின் உருவம் பதித்த அகல்விளக்குகளும் உண்டு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



குத்துவிளக்கின் அடித்தளம் - தேவியின் பாதம்; தண்டு - உடல்; தீபம் - திருமுகம்... என்று எண்ணி பூஜைகள் செய்வர். தீபத்தின் நாளத்தில் பொட்டு வைப்பதும் மலர் சுற்றுவதும்... திருவிளக்கில் அம்பாள் உறைகிறாள் என்ற நம்பிக்கையை பலப்படுத்தும்.

கும்பத்தில் குறிப்பிட்ட தேவனை (வருணன், அக்னி என்று) குடியிருத்தும்போது, அதில் அந்த தெய்வத்தின் உருவத்தை வைப்பது உண்டு. அதற்கு தக்கபடி தேவனின் உருவத்தில் (பிரதிமை) வழிபாடு நடக்கும். இவையெல்லாம் இறை உருவத்தை நம் மனதில் நிலைநிறுத்த உதவும்.

பூஜையின்போது வெற்றிலை மற்றும் வாழைப்பழம் ஆகியவற்றின் காம்பு எந்தத் திசையில் இருக்குமாறு வைக்க வேண்டும்?



- எம்.கீதா, திண்டிவனம்.

நம்மைப் (பூஜை செய்பவரைப்) பார்த்து... இருக்க வேண்டும். இரண்டிலும், உபயோகமற்ற - கிள்ளி எறியப்படும் பாகம் காம்பு. இது நம்மை நோக்கியும், உட்கொள்ளப்படும் பாகம் ஸ்வாமியை நோக்கியும் இருக்க வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சென்னையில், பெட்டிக்கடை வைத்திருக்கும் நான், அதிகாலை 4:00 மணிக்கு கடையைத் திறக்க வேண்டிவரும். அப்போது, குளித்துவிட்டுச் செல்ல இயலவில்லை. இதனால், செய்யும் தொழிலுக்கு பாதிப்பு வருமா?

- எஸ்.புஷ்பராஜ்.

அதிகாலை என்பது குளிக்கும் வேளை! உடல் சுகாதாரத்துக்கும் உள்ளத் தெளிவுக்கும் நீராடுவது அவசியம். உறக்கத்தில் உடலுறுப்புகளும் உறங்கிப்போவதால், உடலில் உஷ்ணம் சற்று அதிகமாகவே இருக்கும்.

தவிர, உறங்கும்போது... ரோமக்கால்கள் உட்பட ஒன்பது ஓட்டைகளில் இருந்தும் உடலில் இருந்து கழிவுப் பொருட்கள் வெளியேறும். நீராடும்போது, இந்தக் கழிவுகள் அகன்றுவிடும்; உடலின் உஷ்ணமும் தணியும். உடல் சுகாதாரம், செயலை சிறக்க வைக்கும். குளிக்காமல் வேலையைத் தொடர்ந்தால்... அதனால் ஏற்படும் சோர்வும் சேர்ந்து, ஏற்கெனவே உஷ்ணமாக இருக்கும் உடலில் பாதிப்பை ஏற்படுத்தும்.

நேரம்-காலம் பார்க்காமல் தேவைக்குத் தக்கபடி வரும் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தும் நோக்கில் தங்களது தாகம், பசி, சிறுநீர், பெருநீர் ஆகியவற்றை தள்ளிப் போடுகிற வியாபாரிகள் உண்டு!

ஒரு விஷயம்... வியாபாரம் செய்வதற்காகவா வாழ்கிறோம்? வாழ்வதற்காகத்தானே வியாபாரம் செய்கிறோம்?! உடலை வருத்தி வியாபாரம் செய்து, பணம் சம்பாதித்து, லாபத்தை சுவைப்பதற்கும் உடலில் தெம்பு வேண்டும்தானே? சுவர் இருந்தால்தான் சித்திரம் என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

பெட்டிக்கடைகளில் வருமானம் குறைவு; ஆனால், நம் தேவைகளோ அதிகம். எனவே, அதிக லாபத்தை எட்டிப் பிடிக்கும் நோக்கில், மனதையும் உடலையும் வருத்திக்கொள்ளக் கூடாது. போதும் என்ற மனதுடன் பொறுமையுடன் செயல்பட வேண்டும். கடையைக் கவனிப்பதுபோல் உடம்பையும் கவனியுங்கள்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விரத நாட்களில் கோயில் பிரசாதம் சாப்பிடலாமா?

ஏகாதசி திருநாளில் பெருமாளும் விரதம் இருப்பதாக ஐதிகம். இந்த நாளில், ஸ்ரீமத்வ பிருந்தாவனங்களில் நிவேத பூஜை கிடையாது. ஆனால், பெருமாள் கோயில்களில், அன்னம் நைவேத்தியம் செய்து பிரசாதமாக வழங்குவர். இந்தப் பிரசாதத்தை சாப்பிட்டால் விரதம் பூர்த்தியடைந்து விடாதா?

- ஆனந்த், டி.என்.பாளையம்.



ஏகாதசி வழிபாட்டு நியதிகளில் மதப் பிரிவுகளுக்கு ஏற்ப வேறுபாடுகள் உண்டு. தாங்கள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர் என்பதைப் பொறுத்து, அதற்கேற்றவாறு இந்த விரதத்தைக் கடைப்பிடியுங்கள்.

ஏகாதசி திருநாளில்... உண்ணா நோன்பு, உறங்காமை, இறை சிந்தனை ஆகிய மூன்றையும் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால், நீராகாரம், இறைப் பிரசாதம் ஆகியவற்றை ஏற்கலாம் என்று ஸ்மிருதிகள் விதிவிலக்கு அளித்துள்ளன. ஏகாதசி நாளில் இறை சிந்தனைக்கு முக்கியத்துவம் தர வேண்டும். விழித்திருந்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கடவுளை வழிபட உடலில் தெம்பு இல்லையெனில், கொஞ்சமே கொஞ்சம் உண்ணலாம். அதிலும் குறிப்பாக, வழக்கமான உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும் (அரிசி உணவு சாப்பிடுபவராக இருந்தால் கோதுமையைப் பயன்படுத்தலாம். புளி- காரம் இல்லாத உணவை ஏற்கலாம்). முழுவதுமாக உணவைத் தவிர்ப்பதன் மூலம் உடல் வலிமை குன்றிவிட்டால், கடவுள் வழிபாட்டை எப்படிச் செய்ய இயலும்? அதே நேரம்... திடகாத்திரமாக இருப்பவர்கள், இந்த தினத்தில் உண்ணாமல் இருப்பது அவசியம்.

தர்ம சாஸ்திரத்தின் அறிவுரையை ஏற்றால், கடவுள் பிரசாதத்தை ஏற்கலாம். இதனால் விரதம், ஒருபோதும் கெட்டுவிடாது.

சிவபெருமானிடம் இருந்து, தான் பெற்ற பாசுபத அஸ்திரத்தை அர்ஜுனன் பயன்படுத்தியிருந்தால் பீஷ்மர், துரோணர், கர்ணன் ஆகியோரை அதர்ம வழியில் கொல்ல வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது! போரிலும் எளிதாக வென்றிருக்கலாம். ஆனால், அர்ஜுனன் ஏன் இந்த அஸ்திரத்தைப் பிரயோகிக்கவில்லை?

- கே.எஸ்.பொன்னம்பலம், சென்னை-40.



மகாபாரத யுத்தத்தை 'தர்ம யுத்தம்' என்று அழைப்பர். தர்மத்துக்குக் கட்டுப்பட்டு அனைத்து இன்னல்களையும் ஏற்றார் தருமர். போர் நிகழ்ந்த இடம் - தர்ம க்ஷேத்திரம்.

பீஷ்மரை எவராலும் அழிக்க இயலாது; அவராகவே இறந்தால்தான் உண்டு. அவரின் மறைவுக்குக் காரணமான அர்ஜுனன், தர்மத்தில் இருந்து நழுவவில்லை. துரோணரும், தானாகவே ஆயுதங்களைக் கீழே போட்டார். அவரது மரணத்திலும் அதர்மம் இல்லை!

போர் புரியும் எண்ணத்தில் உள்ளவன் நிராயுதபாணியாகி விட்டால், அவனுக்குப் போர்க்கருவிகளை அளித்த பிறகே போர் புரிய வேண்டும். ஆனால்... முற்பிறவியில் 'சகஸ்ர கவசன்' எனும் அசுரனாக இருந்தான் கர்ணன். இவனுக்குத் தற்காப்பாக ஆயிரம் கவசங்கள் உடலில் இருந்தன. இதுவே, அவனது பெயராயிற்று!

தவம் - போர் இரண்டிலும் ஈடுபடும் ஒருவனால் மட்டுமே, தனக்கு அழிவு நேர வேண்டும் என்று வரம் பெற்றவன் சகஸ்ரகவசன். எனவே, இவனை அழிக்க

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நர-நாராயணராக வந்தார் ஸ்ரீமந் நாராயணன். நரன் தவத்தில் இருக்கும்போது நாராயணன் போரிடுவான். சகஸ்ரகவசனின் ஒரு கவசம் தகர்ந்ததும் நாராயணன் தவத்தில் மூழ்க, நரன் போருக்கு வருவான். இப்படியே மாறி மாறி போரிட்டு, சகஸ்ரகவசனின் 999 கவசங்களையும் அழித்தனர்.

ஆனால், மீதமிருந்த ஒரு கவசத்துடன் மறைந்த சகஸ்ரகவசன், மறுபிறவியில் கர்ணனாகப் பிறந்தான். அதே நேரம்... நரன் - அர்ஜுனனாகவும்; நாராயணன் - ஸ்ரீகிருஷ்ணராகவும் அவதரித்தனர். பாரதப் போரில்... முன்பு போலவே இருவரும் இணைந்து கர்ணனை அழித்தனர். இதுவும் அதர்மம் ஆகாது. கர்ணனை அழிக்க இதுவே வழி!

கதாயுதத்தால் இடுப்புக்குக் கீழே தாக்கக்கூடாது என்று விதியுண்டு. ஆனால்... 'துச்சாதனனின் தொடையைப் பிளந்து, அவன் ரத்தத்தை உறிஞ்சுவேன். துரியோதனனின் தொடையை கதையால் சுக்குநூறாக்குவேன்' என்று சபதம் செய்த பீமன் அதை நிறைவேற்றவும் செய்தான். வாக்குறுதியைக் காப்பாற்றும் எண்ணத்தில் செயல்பட்டதால் இதுவும் அதர்மம் ஆகாது.

'தர்மத்துக்குப் புறம்பாக திரௌபதியை மானபங்கம் செய்தவர்கள் கௌரவர்கள். அவர்களை அவர்கள் வழியில் எதிர்ப்பது தவறாகாது' என்பார் சாணக்கியன். *(சடே சாட்யம் சமாசரேத்)* ராணுவத்தில் பணிபுரியச் செல்பவர்களில் ஒரு சிலருக்கு, போர்முனைக்குச் செல்லும் வாய்ப்பே கிடைத்திருக்காது. ஒருமுறைகூட போரை சந்திக்காமல் இவர்கள் ஓய்வு பெற்றாலும்... இவர்கள் ராணுவத்தில் சேர்ந்தது வீண் என்று கருத முடியாது! தீயணைப்பு வீரர்களுக்கு சில நாட்கள்தான் வேலை இருக்கும். அதற்காக அவர்களின் பணி தேவையற்றது; வீணானது என்று கருத முடியுமா?

எல்லையைக் காக்க ராணுவமும்; தீ விபத்து நேர்ந்தால் நம்மைக் காக்க தீயணைப்பு வீரர்களும் இருக்கிறார்கள் என்ற எண்ணமே நமக்கு தைரியத்தையும் நம்பிக்கையையும் தரும். இதுபோலவே அர்ஜுனனின் பாசுபதாஸ்திரமும். அதை அவன் பயன்படுத்தவில்லை என்றாலும் அந்த அஸ்திரம் தன்னிடம் இருக்கும் தைரியத்தில் போரிட்டான்; வெற்றி பெற்றான். எனவே, அந்த அஸ்திரத்தை தவம் இருந்து பெற்றது வீணல்ல!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பூமியில் மனிதனாகப் பிறப்பது, பூர்வ ஜென்ம பாவங்களுக்கான தண்டனையை அனுபவிக்கத்தான் என்கிறார்களே... உண்மையா?

- வி.ஜி.சத்தியநாராயணன், சென்னை-61.

புண்ணியத்தை சுவைக்கவும் மனிதனாகப் பிறப்பதுண்டு. எத்தனையோ மகான்கள் தோன்றி இருக்கிறார்கள். அவர்கள் பாவம் செய்தவர்கள் அல்ல. புகழுடன் இன்றும் நம் மனதில் விளங்குகிறார்கள்.

முற்பிறவியில் நாம் செய்த தவறுகளுக்கான வினையை அனுபவிக்கும் முன் இறந்துவிட்டால், மறுபிறவியில் அதைச் சந்திப்பது அவசியமாகிறது. தவறு இழைத்தவன் தண்டனையில் இருந்து விடுபட இயலுமா? அவன் செய்த தவறு அவனைப் பற்றிக் கொண்டு துன்பத்தில் ஆழ்த்துகிறது.

புண்ணியம் செய்தவன் மறுபிறவியில் பெயரோடும் புகழோடும் விளங்குகிறான். ஆகையால், மனிதப் பிறவி என்பது, பாவத்துக்கான தண்டனையை அனுபவிக்க மட்டுமே ஏற்பட்டது அல்ல. பூமியில் பிறந்தவர்கள் அனைவரும் பாவிகளின் வரிசையில் அடங்குவர் என்று எண்ணுவதும் தவறு. புண்ணியத்தைப் பெருக்கி, தன்னை உயர்த்திக்கொள்ளும் ஒரு வாய்ப்பாகவே இந்த ஜென்மத்தைக் கருத வேண்டும்.

அரக்கர்களில் பலர், சிவபக்தர்களாக இருந்துள்ளனரே... என்ன காரணம்?

- த.சத்தியநாராயணன், அயனாவரம்.

அரக்கர்களில் விஷ்ணு பக்தனும் உண்டு. விபீஷணன் விஷ்ணு பக்தன். பாணாசுரன், பஸ்மாஸுரன் ஆகியோர் சிவ பக்தர்கள். அவர்களுக்கு வரம் வேண்டும். அதை யார் தருவார்களோ அவர்களை வழிபடுவார்கள். சிறுவனான துருவன், விஷ்ணுவை ஆராதித்தான். பல வருடங்கள் தவம் செய்தபிறகு, வரம் கிடைத்தது. ஆதிமூலத்தைப் பல வருடங்கள் ஆராதித்தது யானை. தாமதமாக பலன் கிடைத்தது. ஸ்ரீவிஷ்ணு, சோதித்துப் பார்த்து வரம் அளிப்பவராகத் திகழ்கிறார்.

சிவபெருமானை ஆசுகோபி, ஆசுதோஷி என்பர். கோபமோ சந்தோஷமோ... சட்டென்று வெளிக்காட்டிவிடுவார் அவர். ஒளிந்திருந்த மன்மதனைக் கோபம் கொண்டு எரித்தார். ராவணனுக்கும் பாணாசுரனுக்கும் பஸ்மாஸுரனுக்கும் தாமதமின்றி மகிழ்ந்து வரமளித்துவிட்டதாக புராணம் கூறும்.

இப்படி, எளிதில் மகிழ்ந்து வரம் அருளும் ஈசனின் மீது அரக்கர்களுக்கு ஈடுபாடு வந்ததில் ஆச்சரியம் இல்லையே!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'நல்ல காரியத்துக்காகச் செல்லும்போது, வாழைப்பழம் கொண்டுபோகக் கூடாது' என்பது எங்கள் பகுதியில் சிலரிடம் இருக்கும் நம்பிக்கை. இது சரியா?

- ஜி.வி.பழனிசாமி, கோவை-6.

மங்களப் பொருட்களில் வாழைப்பழமும் ஒன்று. 'எனக்குக் கனியை சமர்ப்பணம் செய்; உனது விருப்பத்தை நான் நிறைவேற்றுகிறேன்' என்கிறார் கண்ணன். *(பத்ரம் புஷ்பம் பலம்...)* 'மக்களின் விருப்பத்தை முழுமையாக நிறைவேற்றும் வாழைப்பழம்' என்று அதன் பெருமையை விளக்குகிறது தர்ம சாஸ்திரம். *(பலம் மனோதபலம் ப்ரததாதி...)* மணமக்களுக்கு முதன்முதலில் பாலும் பழமும் கொடுப்பதை உயர்ந்த விருந்தாகப் பார்க்கிறோம்.

நீங்கள் குறிப்பிட்டிருப்பது, உங்கள் பகுதியில் சிலர் கடைப்பிடிக்கும் சம்பிரதாயமாக இருக்கலாம். சாஸ்திரத்துக்கு எதிரிடையான சம்பிரதாயத்தைத் தவிர்ப்பதில் தவறே இல்லை!

என் மாமனார் இறந்து ஒருமாதம் கழித்து, அமாவாசை தினத்தில் படையலிட்டு காக்கைக்கு அன்னமிட்டேன். ஆனால், என் உறவினர்கள் சிலர், 'இது தவறு. ஒரு வருடத்துக்கு படையல் கூடாது!' என்கின்றனர். இந்த நிலையில், எங்கள் வீட்டில் அடுத்தடுத்து சுபகாரியங்கள் நடக்கவுள்ளன. இதன் பொருட்டு, குலதெய்வ வழிபாடு நடத்த முடிவு செய்திருக்கிறோம். இது சரியா? அல்லது ஒரு வருடத்துக்கு தள்ளிப்போட வேண்டுமா?

- கே. லதா.

நெருங்கிய உறவினர் இறந்துவிட்டால், கேளிக்கை மற்றும் கொண்டாட்டங்களை தவிர்க்க வேண்டும். கொண்டாட்டத்தில் ஈடுபடும்போது, இறந்தவரின் நினைவு அகன்றுவிடும். இதைத் தவிர்க்கவே பண்டிகை மற்றும் கொண்டாட்டங்கள் வேண்டாம் என்றனர்.

அதே நேரம், தர்ம சாஸ்திரம் கூறும் சடங்குகளுக்கு தடை இல்லை. ஈமச் சடங்கில் ஈடுபட்டவன், இறந்தவரின் தீட்க்ஷையில் இருப்பதால், பண்டிகைகள் உள்ளிட்ட ஆடம்பர விழாக்களில் கலந்துகொள்வதில்லை. உறவினர் இறப்பதற்கு முன்பு நிறைய பண்டிகைகளை, வைபவங்களைக் கொண்டாடியிருப்போம். அடுத்த வருடத்தில் இருந்து மீண்டும் கொண்டாடுவோம். அதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆகவே, இப்படிப்பட்ட காலங்களில் கொண்டாட்டங்களை தவிர்ப்பதே சிறப்பு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதே நேரம்... மகன் அல்லது மகளுக்கு அந்தந்த வயதில் கல்வி, திருமணம் உள்ளிட்ட கடமைகளைச் செய்யலாம். இதற்கு தடையேதும் கிடையாது. அமாவாசை முதலான நாட்களில், இறந்தவர்களுக்கு ஆராதனைகளும் செய்யலாம்.

சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் ஆகிய வைபவங்களை, சைவர்கள் திருக்கடையூரில் நிகழ்த்துவார்கள். இதுபோன்ற வைபவங்களை நிகழ்த்த வைணவர்களுக்கான கோயில் எது?

- த.சாந்தி, திருவாரூர்-1.

பொதுவாக ஒரு விஷயம்! வீட்டில் நிகழ்த்த வேண்டிய தனி மனிதக் கொண்டாட்டங்களைக் கோயில்களுக்குக் கொண்டுபோவது புதிய நடைமுறை!

பொருளாதாரச் சூழல், சோம்பல், வீட்டில் வைத்துக் கொண்டாடுவதை சுமையாகக் கருதும் மனப்பான்மை, 'பரிசுத்தமான இடம் கோயில்' என்ற எண்ணம்... எல்லாவற்றுக்கும் மேலாக கும்பலைத் தவிர்க்கும் நோக்கம் என்று பல காரணங்களால் கோயிலில் வைத்துக் கொண்டாடுகின்றனர். ஆனாலும்... எத்தனையோ பேர், இதுபோன்ற வைபவங்களைத் தங்களது வீட்டிலேயே வைத்துக்கொள்கின்றனர். வைணவர்களும் விரும்பினால் தங்களுக்குப் பிடித்தமான கோயில்களில்.. அங்கிருக்கும் அதிகாரிகளை அணுகி விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். ●

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விகடன் பிரசுரம்



நீங்கள் வாங்கிவிட்டீர்களா?

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Printed Books

சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

கற்றறிந்த அறிஞர்கள் மத்தியில் தலைசிறந்த ஆன்மிக ஞானம் பெற்றவர் ப்ரம்மஸ்ரீ சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்.

சென்னை சம்ஸ்கிருதக் கல்லூரியில் முதல்வராக இருந்தவர். காஞ்சி சங்கர மடத்தின் பஞ்சாங்க கமிட்டி தலைவராக இருக்கிறார். சம்ஸ்கிருத மொழியில் ஆழ்ந்த புலமை பெற்ற இவர், இப்போதும் ஏராளமான மாணவர்களுக்கு சம்ஸ்கிருத உயர்கல்வி போதித்து வருகிறார். ஆயுர்வேத மருத்துவத்திலும் கரைகண்டவர்.

வேதம், புராணம், தர்ம சாஸ்திரம், மன நலம், உடல் நலம், கலாசாரம் போன்ற பல துறைகளிலும் வாசகர்கள் எழுப்பும் ஏராளமான கேள்விகளுக்கு விளக்கமாகவும் ஆணித்தரமாகவும் இவர் கொடுத்து வரும் விளக்கங்கள் சிலிர்க்க வைப்பவை.

மூட நம்பிக்கைக்கு எதிரான விஞ்ஞானமே மெய்ஞானம் என்பது சாஸ்திரிகளின் ஒவ்வொரு விளக்கத்திலும் நமக்குப் புலனாகிறது.

ஐயம் போக்கும் ஆன்மிகம் (பாகம் 5)

* பில்லி-சூனியம் ஏதும் இல்லை என்பதே தங்களின் ரத்தினச் சுருக்கமான பதில்! ஆனால், கந்தசஷ்டி கவசத்தில், ‘பில்லி சூனியம் பெரும் பகை அகல...’ என்றொரு வரி வருகிறதே?!

* ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருக்கும் இரட்டை வாழைப்பழங்களைச் சாப்பிடக் கூடாதாமே... அப்படியா?

* ஸ்ரீசண்டிகேஸ்வரரை, கைகளைத் தட்டி ஓசை எழுப்பி வணங்குவதுதான் வழக்கம். ஆனால், இது தவறு என்கிறார்களே சிலர்?

* கல்விக் கடவுள் சரஸ்வதி தேவியே மூல நட்சத்திரத்தில் பிறந்தவள்தானே..! அப்படியிருக்க, ‘பெண் மூலம் நிர்மூலம்’ என்பது சரியா?

* சிலருக்குத் திருமணம் உரிய காலத்தில் நடக்காமல் தள்ளிப் போகிறதே, ஏன்?

* ‘மந்திரம் கால்... மதி முக்கால்!’ என்று பெரியவர்கள் சொல்வார்கள். எனில், மந்திரங்களை எப்படி நம்புவது?

* தேங்காயை உடைத்து, அதில் தீபம் ஏற்றுவது சரியா?

- இதுபோன்ற எண்ணற்ற சந்தேகங்களுக்கு ஐயம் திரிபற பதில் அளிக்கிறார் ப்ரம்மஸ்ரீ சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்.

IYAM POKKUM ANMIGAM (Volume 5)
Rs. 75

விகடன்
பிரசுரம்

ISBN 978-81-8476-316-4
9788184763164

Sri Vedachalam Sastri Collection, Karaikudi